# தனிநாயகம் அடிகளார்



அமுதன் அடிகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

# தனிநாயகம் அடிகளார்

அமுதன் அடிகள்
முதல்வர், தனிநாயகம் அடிகள் இதழியல் நிறுவனம்
செயலர், தமிழ் இலக்கியக் கழகம், திருச்சி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி.டி.டி.ஐ. (அஞ்சல்), தரமணி, சென்னை-600 113

தவத்திரு தனிநாயகம் அடிகளார்
அறக்கட்டளைச் சொற்பொழிவு--1

(1, 2-12-92)

Fr. Thani Nayagam Adigalar Endowment Lecture No. 1
Endowment Publication No. 39

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | Taṉināyakam Aṭikaḷār |
| Author | : | Fr. D. Amudhan Adigal<br>Principal, Thani Nayagam Adigal Institute of Journalism & Secretary, Tamil Literature Society, Tiruchi-620 001 |
| Publisher & copy right | : | International Institute of Tamil Studies. C I.T. Campus, Taramani, Madras-600 113 |
| Publication No | : | 173 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | July 1993 |
| Edition | : | First |
| Paper used | : | Tamil nadu 16kg |
| Size | : | 21×14 cms |
| Printing types | : | 10 point |
| No. of copies | : | 1200 |
| No. of Pages | : | XXXIV + 224 |
| Price | : | Rs. 40/- |
| Printers | : | Kavinkalai Acchagam, Madras-41, Ph. No. 417141 |
| Artist | : | Sathya |
| Subject | : | Biographical sketch with Literary activities of Rev. Fr. Xavier S. Thani Nayagam |


* அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

INTERNATIONAL SCHOOL OF DRAVIDIAN LINGUISTICS
St. Xavier's College P.O. Tiruvanantapuram-695 586
Kerala-India Tel. 418953

V.I. SUBRAMONIAM, M.A., Ph.D. (Ind, USA)
Hon D.Litt (Jaffna, Sri Lanka)

Hon. Director.
(Former Vice-Chancellor, Tamil University)

# தனிநாயக அடிகள்

1944ஆம் ஆண்டு, கோடைகால விடுமுறையின் பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வகுப்புகள் துவங்கின. நான்காம் தமிழ்ச் சிறப்பு வகுப்பில் பாதிரி உடையணிந்து மிடுக்கான நடையுடைய ஏறத்தாழ முப்பது வயதினர் ஒருவர் என் அருகே அமர்ந்தார். வகுப்பு துவங்கியது. கேள்வியும் விடையும் தொடர்ந்தன. திரு. பூவராகம் பிள்ளை தமக்கே உரிய நகைச் சுவையுடன் தமது வகுப்பை நடத்தினார். வகுப்பின் இறுதியில், 'தாம் தனிநாயகம்' என்றும் தமிழ் படிக்க வந்திருப்பதாகவும் கூறினார். உடனிருந்த மாணவர்களிற் பலர் எதுவும் அவரிடம் பேசவில்லை. சிலர் வணக்கம் கூறி அகன்றனர். நான் அருகி லிருந்ததால் அடுத்த வகுப்பு ஆரம்பமாவது வரை அவருடன் என் பேச்சு தொடர்ந்தது.

'இலக்கண இலக்கியங்களை இனிமேல்தான் நன்கு படித்தறிய வேண்டும்' என்றார். "இங்குள்ள பலரும் அந்த நிலையில்தான் இருக்கிறோம்" என்றேன். "உங்கள் கேள்விகள் அதனைப் பொய்யாக்குகின்றன" என்றார். அவ்வாறு ஆரம்பமான நட்புறவு எங்கள் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தது.

சனி, ஞாயிறுகளில் நான் நூல் நிலையம் சென்று படிப்பது வழக்கம். அதனைக் கவனித்த அடிகள் புதுச் செய்திகளிருப்பின் அவற்றைத் தன்னுடன் விவாதிக்க அழைப்பார். அப்போது பல்கலைக்கழக விருந்தினர் விடுதியில் அவர் தங்கியிருந்தார். ஒரு சிற்றாள் அவருக்கு உதவியாக எடுபிடி வேலை செய்தான். அவன் தான் என் அறைக்கு வந்து ஏதேனும் அவர் குறித்து அனுப்பும் செய்திகளை என்னிடம் கொடுத்துவிட்டுச் செல்வான். ஒருநாள் மதிய உணவிற்கு அழைத்திருந்தார். நான் அறையிற் சென்றதும், 'சுப்பு என்று உங்களை அழைக்கலாமா!' என்றார். 'தாராளமாக'

என்றேன். அன்று ரிக் வேதத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பை அவர் படித்து முடித்திருந்த சமயம்.

"தரமான பாக்கள் ரிக் வேதத்தில் குறைவாகக் காணப்படுகின்றன. அவற்றை நோக்க சங்க இலக்கியப் பாக்கள் எவ்வளவோ மேல்" என்றார். அவற்றின் உண்மையை நான் அப்போது தெரிந்திடவில்லை. பின்னர்தான் ரிக், யஜுர், சாமம், அதர்வணம். ஆகிய நான்கு வேதங்களையும் தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பு வழி படித்தறிந்து கொண்டேன். ஆனால் என் கேள்வியனைத்தும் 'கிறித்துவப்பாதிரியான அவர், இந்து வேதங்களைப் படிக்க அனுமதிக்கப்படுகிறாரே" என்பது பற்றித்தான் இருந்தது. "எல்லா மதங்களின் அடிப்படை நூற்களையும் நாங்கள் படித்துத் தெளிவோம். அது மட்டுமன்றுப் பிரம்மசரியம் மேற்கொள்ளும் நாங்கள் மனிதக் காதல்நிலை பற்றிய பல நூற்களையும் படிக்க வேண்டிய கட்டாயம் உண்டு. பல துறைகளைத் தெரிந்த பின் துறவு பூண்பது, தெரியாமல் துறவு பூண்பது என்ற இரண்டில், முதல் முறையை நாங்கள் கடைபிடிப்போம். தேவார திருவாசக முதலிய நூற்கள் மனதை உருக்குவனவாக இருக்கின்றன. இறைவனை வழிபடும் எந்த மதமும் அந்த நூற்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது" என்றார். தனிநாயக அடிகளின் பரந்த படிப்பையும் பிற மதங்களைப் புறக்கணிக்காத நிலையும் என்னைக் கவர்ந்தன. கிறித்துவ மதத்தில் ஆழமான பற்று உடையவராயினும் தமிழ் மொழி மீதும் தமிழ்க்கலாச்சாரத்தின் மீதும் அளவற்ற மதிப்புடையவராக இருந்தார். அவர் பேச்சிலும் தமிழ் எழுத்திலும் இலங்கை வழக்குப் பளிச்சிடும். ஆங்கில எழுத்து எடுப்பான நடையில் இருக்கும்; அவருடைய பின்னணிக்கும் என் படிப்பிற்கும் எவ்வளவு வேறுபாடு!

வகுப்பறைகளில் பாடம் நடந்த பின்னரும் உடன் உணவு உண்ணும் வேளைகளிலும் அடிகளின் பேச்செல்லாம் தமிழின் இலக்கிய வளத்தை உலகறியச் செய்ய வேண்டும்; தமிழ் ஆசிரியர் களும் மாணவர்களும் சமுதாயத்தில் பிறருடன் ஒன்றாமல் தனித்து நிற்பது நன்றன்று. எல்லாத் துறைகளிலும் முன்னேற வேண்டும். தமிழாய்வின் தரம் உயரவேண்டும். பல நாடு களுக்குத் தமிழ் ஆய்வாளர்கள் சென்று தமிழ் இலக்கியச் செல்வங் களை உலகறியச் செய்திட வேண்டும் என்பன பற்றித்தாம் இருந்தன.

அந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கையிலிருந்து வெளியான சைமன் கேஸி செட்டி ஆங்கிலத்தில் எழுதிய தமிழ் புளுட்டார்க் (Tamil Plutarch) என்ற நூலை (தமிழ் புலவர்களைப் பற்றிய செய்திகளை அகரவரிசைப்படி ஆங்கிலத்தில் தொகுத்து தருவது) பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரைக் கொண்டு கூடுதல் செய்திகளைச் சேர்த்து பிழை களைந்து வெளியிட ஏற்பாடு செய்தார். அதற்கு கணிசமான தொகையொன்றையும் தெ. பொ. மீக்குப் பெற்று அளித்தது நினைவிருக்கிறது.

அடிகள் அண்ணாமலைக்கு வருவதற்கு முன்னர் ரோமில் உள்ள வாடிக்கனில் குருமார்களுக்குரிய வகுப்புகளில் நான்கு ஆண்டுகளுக்கு மேல் பயின்று தெய்வ தத்துவத்தில் முனைவர் பட்டம் (Doctor of Divinity) பெற்றிருந்தார். தமது ஆய்வறிக்கை கிறித்துவத் தொண்டர் பலரைப் பற்றியது. பின்னர் வெளிநாட்டில் வெளியிடப்பட்டது. அதன் படியொன்றையும் பலவாண்டுகள் கழித்து தமது கையெழுத்திட்டு எனக்குத் தந்தார். ஸ்பானிய மொழி, ரோம மொழி, போர்த்துக்கீசியம், பிரெஞ்சு முதலிய மொழிகளில் சரளமாக உரையாடவும் சொற்பொழி வாற்றவும் வல்லவர். உயர்மட்ட மக்களிடம் எளிதில் பழகி அவர் களுடைய நன்மதிப்பைப் பெற்று தமிழிற் காணும் அறக்கருத்துக் களின் உலகளாவிய தன்மையையும் அதன் சங்க இலக்கியச் செல்வத்தையும் அவர்களிடையே விளக்கித் தமிழ் பண்பாட்டில் பற்றுக் கொள்ளுமாறு செய்வதற்கு அவரால் முடிந்தது.

அன்றாடம் நடக்கும் பாடங்களைப் படிப்பதிலும் நூல் நிலையத்திலிருந்து புதிய செய்திகள் பலவற்றைத் திரட்டுவதிலும் நான் அன்று முனைந்து உழைத்தேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் புதிய விடுதியின் அன்று எனக்குத் தங்குவதற்குத் தனியறை கிடைத்திருந்தது. தனிநாயக அடிகள் அடிக்கடி அங்கு வருவார். ஒரு நாள் முற்பகல் பத்துமணி அளவில் எதிர்பாராத விதமாக அறைக்கு வந்தார். என் படுக்கை யில் போர்வை தலையணை முதலியவை உரிய இடத்தில் வைக்காமல் அலங்கோலமாகக் கிடந்தன. உள்ளே வந்த அவர் தாமே அவற்றை ஒழுங்காக அடுக்கி வைத்துப் புன்முறுவல் பூத்தார். அது எனக்கு நல்ல பாடமாகப்பட்டது. வீட்டில் அன்னையால் மிகவும் ஆதரிக்கப்பட்ட என் போன்றோர் அறைகள் அலங்கோலமாகத்தான் இருக்கும். எனினும் ஒழுங்கு, சிட்டை முதலியவற்றை மறைமுகமாகத் தம் செயலால் செய்து காட்டுகின்றவர்கள் எத்தனை பேர்,

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், அன்று தரைப்படை, விமானப்படை முதலியவற்றில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. விமானப்படையின் மேலாளர் அடிகளின் நண்பர். "சுப்பு! ஏன் நீ விமானப்படைப் பயிற்சியில் சேர்ந்து இந்த வேனல் விடுமுறையில் விமானம் ஓட்டக் கற்றுக் கொள்ளக் கூடாது. தமிழ் மாணாக்கர்கள் எல்லாத் துறைகளிலும் பங்கு பெற வேண்டும்; முன்னணியில் நிற்க வேண்டும்" என்றார். அதனை ஒத்துக் கொண்ட் நான் உடற் பரிசோதனைக்குச் சென்றேன். அதில் வெற்றி பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அடிகள் பின்னர் கூறினார். அந்த வேனல் விடுமுறையில் இறுதித் தேர்வு எழுதியதும் என் தந்தையின் உடல் நலம் சீர் கெட்டு விட்டதை அறிந்து ஊர் திரும்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது எனவே பயிற்சியில் சேரவில்லை. எனினும் ஒரு வாய்ப்பை இழந்து விட்டேனே என்ற வருத்தம் இருந்தது. அடிகளிடம், ஊர் திரும்பும் நிர்ப்பந்த நிலையைக் கூறிய பின்னர்தான் புறப் பட்டேன்.

அந்த ஆண்டில் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரின் பதவிக் காலத்தை நீட்டுவதற்கு அடிகள் உருவாக்கிய வரைவும் அதனை இராஜா அண்ணாமலைச் செட்டியாரிடம் நான் கொடுக்க வேண்டிய சூழ்நிலையும் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரைப் பற்றிய கட்டுரையில் சற்று விரிவாக விளக்கப்பட்டுள்ளன. (பார்க்க தெ. பொ. மீ. சிதறிய செய்திகள்.)

1944-46 ஆகிய இரண்டு ஆண்டுகளில் அடிகளுடன் பழகிய நாட்களில் என்னுள் பல மாற்றங்கள் தோன்றுவதற்கு மிகவும் துணை செய்தன. என் பார்வை அகன்றது. மறைந்து கிடந்த என் இலட்சியமும் பெரும் சக்திக் கனலாக மாறியது.

அவர் கிறித்துவப் பாதிரியாயினும் என்னிடம் கிறித்துவ மதத் தின் பெருமையையும் இந்து மதத்தின் குறைபாடுகளையும் என்றும் கூறியதில்லை அதற்கு நேர் மாறாகத் தேவார திருவாசகத்தின் பெருமையைக் கூறிப் பாராட்டியது இன்றும் நினைவிருக்கிறது. அடிகள் தன் சொந்த வாழ்க்கையைப் பற்றிக் கூறிய செய்திகள் மிகக் குறைவு. யாழ்ப்பாணத்தில் பிரபல இந்துக் குடும்பம் ஒன்றில் பிறந்து கிறித்துவக் குருமார் நிலையைத் தாமே தேர்ந்தெடுத்துக் கொண்டார் என்று பிறர் கூறக் கேட்டிருக்கிறேன். யாழ்ப்பாணத் தின் இந்து கிறித்துவ மதக் காழ்ப்பில்லை. இரு மதத்தினரும் மன ஒருமைப்பாட்டுடன் வாழ்க்கை நடத்துகின்றனர்.

கிறித்துவக் குருமார்களுக்கு இருநிலைகளுண்டு. ஒன்று மதத் தளம் (Priestly Order) மற்றொன்று மதச் சார்பற்ற தளம் (Secular Order). இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர்களுக்குக் கட்டுப்பாடு மிகக் குறைவு. பிற நிலையங்களின் பணிசெய்து அந்த வருவாயின் ஒரு பகுதியைத் தன் செலவுக்கும் மீதத்தை கிறித்துவ சபைக்கும் கொடுத்துவிடுவர். வாரம் ஒருநாள் கிராமங்களில் மதப் பிரச்சாரத்திற்குச் செல்வர். படிப்பிற்காக ஈழத்திலிருந்து மேல்நாட்டிற்கோ இந்தியாவிற்கோ செல்லும்போது பயணச் செலவு, தங்கல் செலவு முதலியவற்றைத் திருச்சபை ஏற்கும். எனவே அடிகள் சுதந்திர வாழ்க்கையை விரும்பி இரண்டாவது பிரிவை ஏற்று உழைத்தார் என்று பிறர் கூறக் கேட்டிருக்கிறேன்.

அடிகள் அண்ணாமலையில் சேர்வதற்கு முன்னர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வடக்கன்குளம் கிறித்துவப் பள்ளியில் நாலாண்டு ஆசிரியராகப் பணி செய்தார். அப்போது தமிழில் போதிய அடிப்படை அறிவு பெறும் வாய்ப்புக் கிடைத்த தாகக் கூறினார்.

ஒரு முறை இராஜா முத்தையாச் செட்டியார் அவர்கள் கொழும்பு சென்றிருந்தபோது அவரை அணுகித் தான் தமிழ்ப் படிக்க அண்ணாமலை செல்ல விரும்புவதாகவும் அதற்குத் துணை நிற்கவேண்டுமென்றும் வேண்டிக் கொண்டபோது விதி விலக்காக, மூன்றாம் ஆண்டு சிறப்பு வகுப்பின் சேர அனுமதியும், அந்த ஆண்டு நடக்கும் ஆங்கிலத் தேர்வை அடிகள் எழுத வேண்டாமென்றும், விருந்தினர் விடுதியில் தங்கிப் படித்திட அனுமதியும் அடிகளுக்கு வழங்கப்பட்டது என்று கூறியது நினைவிருக்கிறது. அப்போது துணைவேந்தராக இருந்த இரத்தினசாமி ரோமன் கத்தோலிக்கர். அவர் குடும்பத்தினர் அனைவரும் கடவுள் பக்தி மிக்கவர்கள். எனவே அடிகள் அந்தக் குடும்பத்தின் நெருங்கிப் பழகும் வாய்ப்பு மிகுத்து இருந்தது. எனினும் துணைவேந்தருடன் தாம் கொண் டுள்ள தொடர்பை அளவு மீறிப் பயன்படுத்தியதில்லை. அகலாது அணுகாது அதிகாரிகளுடன் நடந்து கொண்டார். அவர் காலத் தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஒன்றிரண்டு பாதிரிமார் களும் கன்னியாஸ்திரிகளும் படித்து வந்தனர். கிறித்துவக் கோயிலில் ஞாயிற்றுக் கிழமைகளில் கூடுவார்கள். அதன் பின்னர் அவர்கள் ஒன்று சேர்ந்து பழகுவதை நான் கண்டதில்லை. எனவே அடிகளாரின் மதச்சார்பு மிகக் குறைவாக இருந்ததால் இந்து மதத்தில் பற்றுள்ள என் போன்றோர் அடிகளாருடன் நெருங்கிப் பழக தடையேதும் ஏற்படவில்லை.

1946ஆம் ஆண்டு நான் தேர்வு எழுதி வீடு திரும்பிய பின் அடிகளாருடன் கொண்ட தொடர்பு குறைந்து விட்டது. ஆனால் அற்றுவிடவில்லை. அடுத்த ஆண்டு இறுதிச் சிறப்பு வகுப்பில் இரண்டாம் வகுப்புடன் அடிகள் தேறினார். அதன் பின்னர் ஆய்விற்காக எம்.லிட். பட்டத்திற்குப் பதிவு செய்திருந்தார். 'சங்க இலக்கியத்தில் இயற்கை' என்ற தலைப்பில் அவர் படைத்த ஆய்வுக்கட்டுரை பின்னர் அச்சாகி வெளியிடப்பட்டது. அது தமிழ் ஆய்வாளர்களிடையே வரவேற்பைப் பெற்றது.

1948ஆம் ஆண்டு முதல் திருநெல்வேலி ம.தி.த. இந்துக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக நான் பணி செய்தபோது தூத்துக்குடிக்கு வரவேண்டுமென்று அடிகள் தந்தி ஒன்று அனுப்பி யிருந்தார். ஒரு ஞாயிறன்று அங்கு சென்றேன். விசாலமான ஒரு பங்களாவில் தமிழ் ஆய்வுக் கழகம் ஒன்றை உருவாக்கிப் பல நூற்களை அச்சிட்டு வெளியிடும் பணியில் முனைந்து நின்றார். வெளிநாடு சென்று, குருமார் ஒவ்வொருவரும், தமது அறப் பணிக்குப் பொருள் திரட்டலாம் என்றும், அதன்படித் திரட்டிய பொருளால் அந்தப் பெரும் வீட்டைச் சொந்தமாக வாங்கி, பல வெளியீடுகளைக் கொண்டு வரும் தமது திட்டத்தை விரிவாகக் கூறினார். அப்போது பாளையங்கோட்டையில் தமிழாசிரியராகப் பணிசெய்து ஓய்வு பெற்ற திரு. மாசிலாமணி அவருக்குத் துணை யாக நூல்களைச் செப்பனிட்டு வந்தார். 1961ஆம் ஆண்டு வாக்கில் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் (Academy of Tamil Culture) ஒன்று சென்னையில் நிறுவித் 'தமிழ்ப் பண்பாடு' (Tamil Culture) என்ற அரையாண்டு இதழை வெளியிட ஏற்பாடு செய்தார். இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொது மேலாளராகப் பதவி வகித்து ஓய்வு பெற்ற அ. சுப்பையா அந்த அகாதமி நிறுவு வதற்கும், ஆங்கில அரையாண்டு இதழ் ஒன்றை வெளியிடவும் மிகவும் துணை நின்றார். அதன் பதிப்பாசிரியர் குழுவில் நானும் உறுப்பினராக நியமிக்கப்பட்டேன். எனது கட்டுரைகள் சில, அதில் வெளியிடவும் வாய்ப்பு ஏற்பட்டது. கல்வெட்டு பற்றி கட்டுரையொன்றை அடிகள் எழுதுமாறு கூறி, அதன் நகலை அடிகளே செம்மை செய்து என் பெயரில் மட்டும் வெளியிட்டதும் மறக்க இயலாத நிகழ்ச்சி. அந்த சஞ்சிகை வெளியானதும் ஆங்கிலம் அறிந்த தமிழர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

சிலமுறை என்னைச் சந்திக்கத் திருநெல்வேலி இந்துக் கல்லூரிக்கு வருவார். சுருக்கமாக தனது கருத்தைக் கூறி விடை பெற்றுச் சென்று விடுவார். எங்களிருவர் நட்புறவும் நம்பிக்கையும் மேலும் வலுப்பெற்றது.

ஒருமுறை கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையைப் பேட்டி கண்டு அவருடைய கவிதை பிறந்த நிகழ்ச்சியைப் பற்றி எழுதுமாறு அடிகள் கேட்டுக் கொண்டார். அதன் பொருட்டு கவிமணியைச் சந்தித்து செய்தி திரட்டினேன். ஆனால் அந்தக் கட்டுரை பெரும் பாலும் மொழி பெயர்ப்புச் செய்திகளைப் பற்றி அமைந்ததால் எனக்கும் கவிமணிக்கும் அந்த வரைவு மனத்திருப்தி தரவில்லை. எனவே வெளியிட அனுப்பாமல் கோர்ப்பிலேயே தங்கிவிட்டது.

1950ஆம் ஆண்டுவாக்கில் ஒருநாள் திரு. பால்நாடாருடன் அடிகள் பாளையங்கோட்டை எனது இல்லத்திற்கு வந்து குற்றா லத்தில் உறையும் டி.கே.சியைக் காண அழைத்துச் சென்றார். நான் வாழ்ந்த வீடு சிறிது. என் வருவாய்க்குள் வாழ நினைத்த தால் அந்தச் சிறிய வீடுதான் வாடகைக்கு அமர்த்த முடிந்தது. எனினும் அந்தச் சிறிய வீட்டில் திரு. பால்நாடாரும் அடிகளும் மகிழ்ச்சியுடன் சிறிது நேரம் தங்கி, காப்பியருந்திவிட்டு புறப்பட்டனர். அடிகள்தான் கார் ஓட்டினார். தென்காசியில் அப்போது முன்சீப்பாக பணி செய்த திரு. மகாராஜன் வீட்டிற்கு முதலில் சென்றோம். அன்புடன் வரவேற்ற அவர் இரவு அங்கு உண்டுவிட்டுத் தான் செல்லவேண்டும் என்று வற்புறுத்தவே அங்கேயே உண்ட பின்னர் குற்றாலம் சென்றடைந்தோம். திரு. மகாராஜன், டி.கே.சியை மிகவும் மதிப்பவர். அவர் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர். இரவு டி.கே.சியைக் கண்ட போது எடுப்பான தோற்றமும் முறுக்கிய அடர்ந்த மீசையும் குழந்தையின் சிரிப்பும் உடைய ஒரு ஞானியைக் கண்ட உணர்வு என்னுள் ஏற்பட்டது. அடிகளை அன்புடன் வரவேற்றார். அடுத்துத் திரு பால்நாடாரை அதன்பின் வயதில் சிறியவனான என்னை டி.கே.சியிடம் அறிமுகம் செய்யவே அவர் வீட்டில் ஒருவனாக உடனே என்னை ஏற்றுக் கொண்ட உணர்வு என்னுள்ளே தோன்றியது. செட்டி நாட்டு அரசர் பங்களாவில் நாங்கள் இருநாள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முதல்நாள் இரவு தூங்குவதற்கு முன்னர் அடிகள் தந்த தமிழ்க் கல்ச்சரின் கட்டுரைகளைப் படித்து அதிற் காணும் பிழைகளைக் கூறினேன், அச்சடித்த பின்னர்தான் சிலருக்குப் பிழைகள்

கண்ணில்படும். அந்தக் கூட்டத்தைச் சார்ந்தவன் நான். எனவே சற்று வருத்தத்துடன் அடிகள் என் விமர்சனத்தைக் கேட்டுக் கொண்டார். இரண்டு நாள் அங்குத் தங்கினோம். அந்த நாட்களில் டி.கே.சி. கூறிய தமிழ்ப் பாடலின் விளக்கங்கள் சுவையாக இருந்தன. அவரிடம் புலமைச் செருக்கில்லை. இலக்கண நுணுக்க விளக்கமில்லை. ஆனால் அவர் விளக்கம் மனதைத் தொட்டு எழுச்சியூட்டியது. இறுதியில் நாங்கள் பிரியும்போது என்னை நோக்கி 'தமிழ் உலகில் தோன்றிய கோடரிக்காம்பு' என்று சிலாகித்தது நினைவிருக்கிறது. நான் அந்த உவமையைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சப்புச் சவறுகளை அகற்றித் தமிழ் நிலத்தைத் திருத்த வந்திருக்கும் காம்பு என்று டி.கே.சி. கருதுகிறார் என்றார் அடிகள். அந்தத் தகுதி எனக்கு இல்லாததால் அந்தக் கௌரவத்தைப் பற்றிய உணர்வு இல்லாதிருந்தது. ஊர் திரும்பினோம். டி.கே.சி.யுடன் ஏற்பட்ட தொடர்பு அது முதல் நிலைத்தது. இலக்கிய நயமிக்க பல எழுத்துக்களை நான் அவரிடமிருந்து பெற அது வழி செய்தது. அடிகள் அறிமுகம் செய்திராவிட்டால் அந்த வாய்ப்பு கிடைத்திராது.

1951ஆம் ஆண்டு நான் திருவனந்தபுரத்திலுள்ள தமிழ்த் துறையில், எஸ். வையாபுரிப்பிள்ளை பேராசிரியராக நியமிக்கப் பட்டதால் அங்கு ஆய்வு மாணவனாகச் சேர்ந்தேன். அப்போது திருவனந்தபுரத்தில் வாழும் அறிஞர்கள் சிலரிடமிருந்து கட்டுரைகளைப் பெற்று நான் அனுப்பினால் அவை தமிழ்க்கல்ச்சரில் உடனே அடிகள் வெளியிடுவார். ஒரு முறை பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையைக் காண வந்திருந்தார். அப்போது மகிழ்வுந்து ஒன்றை வாங்கியிருந்தார். தூத்துக்குடியிலிருந்து தாமே அதனை ஓட்டி இரவில் திருவனந்தபுரம் இரயிலடியில் வந்து சேர்ந்ததாகவும் அறையெதுவும் அமர்த்தாது காரினுள்ளே தூங்கிப் பக்கத்து கடைகளில் விசாரித்து என் மாமனார் வீட்டை அடையாளங் காண அங்குள்ள ஒரு சிற்றாள் துணையுடன் தேடிப்பிடித்து வந்தார். அவரை அன்று காலையில் காண மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இருவரும் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையைக் காணச் சென்றோம். போகும் வழியில் 'ஏன் உற்சாகமில்லாமல் இருக்கிறாய் சுப்பு' என்றார். "விரிவுரையாளராக இருந்தபோது மாதம் 120 ரூபாய் சம்பளம். இப்போது இங்கே கிடைக்க இருக்கும் தகைமை முப்பது ரூபாய் மட்டும்தான். அதுவும், இதுவரை

கிடைத்திடவில்லை. எனவே பணமுடையின் கடுமை; ஆய்வாளனின் வறுமையின் கூர்மை இப்போது என்ன என்று தெரிய வருகிறது'' என்றேன். அப்போது ஒன்றும் பதில் சொல்ல வில்லை. பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் ஆய்வு முடிவு களை அடிகள் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் அவருடைய ஆய்வுத் திறமையையும் வாதத் திறமையையும் மிகவும் அடிகள் மதித்தார். எனவே அவர்களிடையே நடந்த உரையாடல் மிகவும் மதிப்பைத் தெரிவிப்பதாக இருந்தது. லக்னோவில் நடந்த கீழ்த்திசை மாநாட்டுத் திராவிடப் பிரிவில் நிகழ்த்திய தலைமை உரையை தமிழ்க்கல்ச்சரில் வெளியிடுவதற்கு எஸ். வையாபுரிப்பிள்ளையிடம் அனுமதி பெற்றார்.

அன்று மாலையே நாகர்கோவில் திரும்ப வேண்டியதால், விடைபெறும்போது இருநூறு ரூபாய்க்கு ஒரு காசோலையை அடிகள் எழுதித் தந்தார். பின்னர் திருப்பிக் கொடுத்துவிடலாம் என்ற உறுதியால் அதனைப் பெற்றுக் கொண்டேன். நிலையறிந்து உதவும் மனநிலையை உள்ளூரப் பாராட்டினேன்.

1953ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை திருவாங்கூர்ப் பல்கலைக்சழகத்தில் ஓய்வு பெற்றதால் நான் ஐந்து ஆண்டுகள் சிறப்புத் தமிழ்ப் பேராசிரியராக நியமனம் பெற்றேன். அப்போது டெல்லி அகில இந்திய வானொலி நிலையத்தில் ஏறத்தாழ ஓராண்டு பணி செய்து அதனை விட்டு திருவனந்தபுரம் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. வருவாய் நிலையில் குறைந்த அந்தப் போராசிரியர் பொறுப்பை ஏற்றால் தமிழ் ஆய்வில் பல திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்ற உறுதியால் அதனை ஏற்க முடிவு செய்தேன். எனவே டெல்லியி லிருந்து புறப்பட்டு திருவனந்தபுரம் வந்து பொறுப்பேற்றேன்.

ஒரு சில மாதங்கள் கழிந்ததும் பூனாவிலுள்ள டெக்கான் கல்லூரி இராக்கிப் பெல்லர் நிலையம் வழங்கிய மானியத்தால் மொழியியலுக்குக் குளிர்கால வேனற்காலப் பள்ளிகள், டாக்டர் கத்ரே தலைமையில் நடந்தது. தமிழ் மொழி வரலாறு என்ற பாடத்தைக் கற்பிக்கும் பேராசிரியராக அதற்கு அழைக்கப் பட்டிருந்தேன். அங்கு இராக்கி பெல்லர் நிலையத்தின் துணை மேலாளரான சாட்போர்ன் பாட்ரிக்கைச் சந்தித்தபோது அமெரிக்கா சென்று படிக்கும் வாய்ப்புக் கிடைத்தற்குரிய வழிவகை கூறினார். குறிப்பாக அன்று திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகத்

துணைவேந்தரான சர். இராமசாமி முதலியாரின் பரிந்துரையைப் பெற்று அனுப்புமாறுங் கூறினார். சர். இராமசாமி முதலியாரிடம் அதைக் கூறவே புன்முறுவலுடன் பரிந்துரை ஒன்றைத் தந்தார். இராக்கி பெல்லர் தகமை கிடைத்ததும் ஐக்கிய அமெரிக்காவில் முதலாண்டு கார்னேல் பல்கலைக்கழகத்திலும் இரண்டாவது ஆண்டு இந்தியானாவிலும் படிக்க நேர்ந்தது. இந்தியானாவில் படிக்கும்போது ஒருநாள் எதிர்பாராதவிதமாக தொலைபேசியில் அடிகள் தொடர்பு கொண்டார். 'தாம் நியுயார்க்கு வந்திருப்ப தாகவும் மேலும் இரண்டு வாரம் அங்கே தங்குவதாகவும் இயலு மாயின் எழுபத்தைந்து டாலர் அனுப்புமாறும்' கூறினார். முன்கடன் ஒன்று வட்டியுடன் அப்போது தீர்ந்திட்ட மனநிம்மதி எனக்கு ஏற்பட்டது. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் பயிற்சித் துறையில் அப்போது பணி செய்து வந்த அடிகளார் இலண்டனில் மூன்றாண்டு அந்தத் துறையில் டாக்டர் பட்டம் பெற உழைத்தார். அதன் பின்னர் மலேயாப் பல்கலைக்கழக இந்தியத் துறையின் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார். அந்த வேளையில் என்னுடன் கொண்ட தொடர்பு நலிந்திருந்தது.

1964இல் டெல்லியில் அகில உலக கீழ்த்திசை ஆய்வு மாநாடு நடந்தது (World Conference o' Orientalists). அதற்கு ஏறத்தாழ இரண்டாயிரம் பேராளர்கள் உலகின் பல பகுதிகளிலும் இருந்து வந்திருந்தனர். மாநாடு துவங்குவதற்கு முன்னர் விஞ்ஞான பவன் முகப்பில் பேராளர்கள் பெருங்கூட்டம் கூடியிருந்தது. பலவாண்டு காணாத நண்பர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து மகிழ்ந்து பேசி நின்றனர். அங்குத் தனிநாயக அடிகளை எதிர்பாராத விதமாகக் காண நேர்ந்தது. இருவருக்கும் சொல்ல முடியாத பெருமகிழ்ச்சி. பழைய நட்புறவு மீண்டும் தளிர்விட்டது. அந்த மாநாடு நடந்த நாலைந்து நாளும் அடிக்கடி சந்தித்தோம். முன்னர் சென்னையில் தோற்றுவித்த தமிழ்ப் பண்பாட்டுக் கழகமும் அதன் வெளியீடான 'தமிழ்க் கல்ச்சரும்' மிகவும் செயலிழந்துவிட்டன என்றார். தமிழ்க் கல்ச்சர் பணமுடையால் நிறுத்திவிட அன்று பொறுப்பு வகித்த செயலாளர் தமது அறையில் கூடுமாறு எழுத்து ஒன்றை எழுதி யிருந்ததும் அதற்கு ''எப்பாடுபட்டாவது தொடர்ந்து நடத்திட வேண்டும்'' என்று நான் பதில் எழுதியதும் நினைவிற்கு வந்தன.

''சுப்பு நாம் தமிழுக்கென உலகமாநாடு ஒன்று நடத்த முயல வேண்டாமா? அதற்குரிய கூட்டம் ஒன்றைக் கூட்டி ஒரு நிறுவனம் அமைக்க வேண்டாமா?'' என்றார்.

"செய்ய வேண்டியதுதான், டெல்லியில் ஜீன்பிலயோசா (பிரான்சு) டி. பர்ரோ (இங்கிலாந்து) எல். பி. ஜே. கைப்பர் (நெதர்லாந்து) ஹெர்மன் பெர்கர் (ஜெர்மனி) கமில்ஸ்வலபில் (செக்கோஸ்லோவாகியா) ஆர். ஆஷர் (பிரிட்டன்) முதலிய அயல்நாட்டு ஆய்வாளர்கள் பலரும் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், மு. வரதராஜன், மொ. அ. துரை அரங்கசாமி முதலியவர்களும் மாநாட்டிற்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. அவர்களிடம் எல்லாம் கலந்து கொள்க" என்றேன்.

ஓரிரு நாட்களில் அந்தத் திட்டத்தைப் பற்றிப் பிறரிடம் உசாவிய அடிகள் "தமிழ்நாட்டிலிருந்து வந்த அறிஞர்களுக்குத் திட்டத்தை நிறைவேற்றுவதில் உடன்பாடில்லை. எனவே விண்ணப்பம் ஒன்றில் நீ கையெழுத்திட்டு, கூட்டம் ஒன்றைக் கூட்டுவதற்குரிய அறிவிப்பு ஒன்றை எல்லோருக்கும் அனுப்புவோம்" என்றார். இந்தியாவிலுள்ள தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் அதில் கையெழுத்திட வேண்டுமென்று உறுதியாக நினைத்திருந்தார். ஆனால் மற்றுள்ளவர்கள் அதற்கு ஊக்கமளிக்கவில்லை. மனம் தளர்ந்து அடிகள் அன்று காணப்பட்டார்.

'நீங்கள் மேற்கொள்ளும் எந்த முடிவிற்கும் என் துணையும் ஒத்துழைப்பும் உண்டு. எனவே நீங்கள் முதல் கையெழுத்தாக அந்த விண்ணப்பத்திலிட வேண்டும் அதன் பின்னர் நான் இடுகின்றேன்' என்றேன். அவரும் மறுப்புக் கூறாது ஒப்புக் கொண்டார். விஞ்ஞான பவனில் சுற்றுப்புறத்திலிருக்கும் அறைகளிலுள்ள அலுவலர் பெயர்ப்பலகை ஒவ்வொன்றையும் நடந்து கவனித்தோம். திரு. இராமன் துணைச்செயலாளர் (அந்தப் பெயர் சரியாக இருக்கும் என நம்புகிறேன்) என்ற ஒரு பெயர்ப் பலகையைக் கண்டோம். அவர் தமிழராக இருப்பார். உதவி செய்வார் என்ற எண்ணத்துடன் அவர் அறைக்குச் சென்று, எழுதி வந்த ஒரு விண்ணப்பத்தில் இருநூறு படி எடுத்துத் தருமாறு இருவரும் வேண்டினோம். அவரும் அதற்கு இசைந்து மதியம் பன்னிரண்டு மணிக்குள் தருவதாகக் கூறினார். அவ்வாறே கூறிய படி பன்னிரண்டு மணியளவில் தந்தார். தமிழ் ஆய்வாளர்கள், பற்றாளர்கள், நண்பர்கள் முதலியவர்களுக்கு அந்த அறிவிப்பு வழங்கப்பட்டது. எல்லோரும் குறிப்பிட்ட அறையொன்றில் ஏறத்தாழ மாலை நான்கு மணியளவில் கூடினர். தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரைத் தலைமை ஏற்குமாறு வேண்டிக் கொண்டு உலகளாவிய தமிழ் ஆய்வு மையம் ஒன்றைத் தோற்றுவிக்க

வேண்டிய தேவையை அடிகள் விளக்கினார். கூட்டத்திலுள்ள உறுப்பினர்கள் பலர் அந்தக் கருத்தை வரவேற்றனர். சிலர் மௌனமாக ஒப்புக் கொண்டனர். ஜுன்பிலயோசா (பிரான்சு) தலைவராகவும் தெ. பொ. மீனாட்சி சுந்தரம், டி. பர்ரோவும் எல். பி. ஜே. கைப்பர், எம். பி எமனோ முதலிய நால்வர் துணைத்தலைவர்களாகவும், தனிநாயக அடிகள் செயலாளராகவும் கமில்ஸ்வலபில் துணைச்செயலாளராகவும் இருக்கலாம் என்றார். பின்னர் என்னைச் சந்தித்தபோது "உன் பெயரைக் கூற மறந்து விட்டேனே" என்றார். "அதற்குத் தேவையில்லை நீங்களிருக் கிறீர்கள் அது போதும். யதவியின்றி பிறருக்குத் துணை நிற்பது தான் என் குறிக்கோள்" என்றேன். அந்தக் கூட்டத்தில் கையெழுத்திட்டவர்களின் நிழற்படம் விண்ணபத்தின் நகல் முதலியவற்றை கோலாலம்பூரில் நடந்த முதல் மாநாட்டு நிகழ்ச்சி பதிவின் பின்னிணைப்பாக அச்சிட்டுள்ளார். அந்த நிறுவனம் தோன்றுவதற்குத் தாம்தான் காரணம் என்று பின்னர் உரிமை கொண்டாடியவர்கள் அந்த ஆவணத்தைக் காண முற்படவில்லை.

அந்தக் கூட்டத்தில் எல். பி. ஜே. கைப்பரை முதன்முதலாகக் கண்டேன். அதன் முன்னர், புறநானூற்றுப் பாட பேத அடிப் படையில் அதன் பூர்வ உச்சரிப்பை மீட்டுரு அளித்து எழுதிய என் கட்டுரையொன்றின் உருளச்சுப்படியைப் பார்த்து ஏறத்தாழ பத்து பக்க அளவில் விரிவாகத் தடைகளை எழுப்பி கடிதம் எழுதியிருந் தார். "என் கட்டுரையை ஆழமாகப் படித்தாரே என்ற மகிழ்ச்சி யுணர்வு" மேலோங்கியிருந்தது. அவரெழுப்பிய தடைகள் சில எளிதில் மறுக்கத்தக்கன. பல ஏற்கத்தக்கன. அன்று முதல் அவருடன் கடிதத் தொடர்பு இருந்ததேயொழிய நேர்முகத் தொடர்பில்லை. அம்மகாநாட்டில் அவரைக் கண்டு ஆளவளா வியது பெரும் வாய்ப்பாக அமைந்தது. ஒரு நாள் டி. பர்ரோவை யும் எல். பி. ஜே. கைப்பரையும் என்னையும் அசோகா ஓட்டலில் இரவு விருந்திற்கு அடிகள் அழைத்திருந்தார். கமில்ஸ்வலபில்லும் அதற்கு வந்திருந்தார். அன்று மொழி ஆய்வு பற்றிய பேச்சு விரிவாக நடந்தது. டி. பர்ரோவின் எளிமையான போக்கு அன்று எல்லோருக்கும் தெளிவானது.

மாநாடு முடிந்ததும் அன்றிரவு நான் தங்கியிருந்த லோடி ஓட்டலில் என் அறைக்குரிய வாடகையைக் கொடுத்துவிட்டு ஊர் திரும்பப் பணம் எதுவும் இல்லாமல் கலங்கினேன். விமானச் சீட்டுக் கையிலிருந்ததால் பணமில்லாமை ஒரு தடையாக மாற

வில்லை. டெல்லி விமான தளத்தில் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரைக் கண்டபோது "துணைத்தலைவர்களுக்கு என்ன என்ன பொறுப்பு" என்று வெளிநாட்டுப் பொறுப்பாளர்கள் தம்மிடம் கேட்டதாகக் கூறினார். "புதிதாகத் தோற்றுவித்த ஆய்வுக் கழகத்தைப் பலப்படுத்தும் பெரும் பொறுப்பு அவர்களது" என்று கூறியது நினைவிருக்கிறது.

உலகக் கீழ்த்திசை மாநாடு முடிவடைந்த ஒரு சில மாதங்களுக்குள் முதல் உலகத்தமிழ் மாநாடு கோலாலம்பூரில் நடப்பதாக அறிவிக்கப்பட்டது. மலேயர்களும் சீனர்களும் பெரும்பாலும் வாழும் அந்த நாட்டில் அத்தகைய மகாநாடு நடத்த ஒப்புக் கொண்டது பெரும் வெற்றியாகும். தனிநாயக அடிகள் பிறரிடம் தன் கருத்தை விளக்கும் ஆற்றலும் அவர்களைத் தன் திட்டத்தின் ஈடுபடுத்தும் சக்தியும் எல்லோருக்கும் அப்போது தெளிவாயிற்று. திரு. பக்தவத்சலம் தமிழக முதலமைச்சராக அப்போது இருந்தார். இந்தி எதிர்ப்பு இயக்கம் வலுவாக நடந்து முடிந்த சமயம். தமிழ் ஆசிரியர்கள், எதிர்கட்சிகள் ஆகியவர்களிடையே கசப்பு மனப்பான்மை குறையாத நேரம். எனவே, தென்னகத்திலிருந்து தமிழ் அறிஞர்கள் பலரை மாநாட்டுக்கு அரசுச் செலவில் அனுப்புவது பற்றி முதலமைச்சரிடம் எளிதில் ஒப்புதல் பெறப்பட்டது. அவரும் கலந்து கொள்வதாக ஒப்புக் கொண்டார். அப்போது எதிர்கட்சித் தலைவராக வி. ஆர். நெடுஞ்செழியன் இருந்தார். அவரும் மாநாட்டில் பெருந்தன்மையுடன் பங்கு கொண்டார். மலேசியா செல்லும் பேராளர் குழுவில், மதிப்புறு அரசியல்வாதிகளில் பலர் இடம் பெற்றிருப்பது மாநாட்டிற்குத் துணை செய்யாது என்று நான் அ. சுப்பையாவுக்கு கடிதம் எழுதியது நினைவிருக்கிறது. அதனை அன்று கல்விச் செயலாளராக இருந்த திரு. க. திரவியத்திடம் காட்டி அரசியலாளரின் எண்ணிக்கையைக் குறைக்கக் கேட்டுக் கொண்டதாகப் பின்னர் சுப்பையா தெரிவித்தார். அரசுச் சார்பில் அ. ச. ஞானசம்பந்தன் (தமிழ்ப் பண்பாட்டு இயக்குநர்) கார்த்திகேயன் (தமிழ்ப் பண்பாட்டுத் துறைச் செயலாளர்) கி. வா. ஜகந்நாதன், கல்வி இயக்குநராக இருந்த நெ. து. சுந்தரவடிவேலு முதலியவர்களும் இடம் பெற்றிருந்தனர். இருநூல்கள் : ஒன்று 'பிற நாட்டில் தமிழ்ப் படிப்பு' இரண்டாவது 'தியரி ஆவ் லிட்டரச்சர்' (வாரன்வெல்லா ஆஸ்டினும் இருவரும் சேர்ந்து செய்த தரமான ஆங்கில விமர்சன நூலைத் தமிழாக்கம் செய்தல்) ஆகிய இரண்டு பொறுப்பையும் நான் ஏற்றுக் கொண்டேன். முன் கூறிய நூல் மலேயாவில் அச்சிடப்பட்டது.

பின்னுள்ளதைச் சென்னைப் பாரி நிலையம் வழி அச்சேற்றி ஐந்து படிகளையும் எடுத்துச் செல்லும் பொறுப்பு என்னிடம் விடப் பட்டது. 'சமஸ்கிருத மகாப்பாரதத்தில் தென்னக ஏடுகளில் காணும் பிரதி பேத மாற்றங்களை' பற்றிய என் கட்டுரை ஒன்றை யும் நான் அந்த மகாநாட்டில் படித்திடவும் ஒத்துக் கொண்டேன். நானும் சில நண்பர்களும் மாநாடு துவங்குவதற்கு மூன்று நான்கு நாட்களுக்கு முன்னர் கோலாலம்பூர் போய் சேர்ந்தோம். அப்போது பேராளர்கள் தங்குவதற்குரிய விடுதிகள் தயாராக இராததால் அங்குள்ள ஓட்டலில் இரண்டு நாள் தங்கினோம். அடுத்த நாள் அடிகள் தன் துறைக்கு அழைத்துச் சென்று அங்குள்ள ஆய்வுப் பணியை விளக்கினார். மகாநாட்டு ஏற்பாடுகளையும் கூறி அதிற் காணும் குறைபாடுகளையும் தெரிவித்தார்.

மாநாடு கூடுவதற்கு ஒரு நாள் முன்னர் என்னென்ன ஆய்வுக் கட்டுரைகளை உருளச்சிட்டுள்ளனர். அவை ஒழுங்காக பேராளர் களின் கோர்ப்பில் வைக்கப்பட்டுள்ளனவா என்று பார்த்தபோது பல உருளச்சிடாமல் இருப்பதைக் கண்டேன். தனிநாயக அடிகளிடம் ஆலோசித்தபோது அதன் பொறுப்பாளர் வரலாற்றுத் துறை நண்பர் என்று தெரிந்தது. அவர் இல்லத்திற்குச் சென்று நிலையை விளக்கினேன். கீழ்மட்டத்திலுள்ளவர்கள் செய்திட வில்லை என்று அவர் பொறுப்பைத் தட்டிக் கழித்தார். எனவே மாநாட்டு அலுவலகத்திற்குத் திரும்பிச் சென்று எந்தெந்த ஆய்வுக் கட்டுரை முதல் நாள், இரண்டாம் நாள் படித்திடுவதற்குரியன என்று பிரித்து அவற்றை உருளச்சிட்டு கோர்ப்பில் வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தேன். அந்தப் பணி முடிவதுவரை அந்த அறையினிலேயே இருந்து கவனித்தேன். அடிகள் அகல இருந்து கவனித்து நின்றிருந்தார்.

ஒருவரைப் பற்றி தனிநாயக அடிகள் நேராகக் குறை கூறுவ தில்லை. மற்றுள்ளவர்களிடம் கூறி மாற்றுவழிக் காணக் கேட்டுக் கொள்வார். பல பொழுது அதனால் பணிமுடக்கம் ஏற்பட்டு அவர் தத்தளிப்பதைக் கண்டிருக்கிறேன். "நேராகச் சொல்லுங் களேன்" என்று நான் கூறுவேன். "அது என் பழக்கமில்லை. உன்னைப் போன்றவர்களிடம் சொன்னால் மனஆறுதலும் மாற்று வழியும் பிறக்கும் என்று கருதித்தான் சொல்கிறேன்" என்றார்.

அடுத்த நாள் காலை மலேசியப் பிரதமர் மாண்புமிகு துங்கு அப்துர் ரஹ்மான் மாநாட்டைத் திறக்க ஒப்புக் கொண்டிருந்தார். பேராளர்கள் எல்லோரும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள

காலை ஒன்பதரை மணிக்கு, கோலாலம்பூர் டவுன் ஹாலுக்கு வந்துவிட்டனர். அழைப்பும் நுழைவுச் சீட்டும் சிலருக்குக் கிடைக்கவில்லை. எனவே காவலர்கள் உள்ளேவிட சிலரை மறுத்தனர். எனது கோட்டில் மாநாடு ஐக்கிய அழைப்பாளர்களுக் குரிய தங்கமுலாம் பூசிய சின்னம் குத்தப்பட்டிருப்பதால் என் பின்னே வந்தவர்களனைவரும் உள்ளே தடங்கலின்றி நுழைந்தனர், மேடையில் மலேசியப் பிரதமருடன், தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. பக்தவத்சலம், மாநாட்டுத் தலைவர் டாக்டர் பிலயோசா. அடிகள், அ. சுப்பையா ஆகியவர்களிருந்தனர். கூட்டத்தில் தமிழ் நாட்டிலிருந்து வந்தவர்களில் சிலரிடையே "என்ன, நமக்கு மேடை யில் இடமில்லையே" என்று முனகல் எழுந்தது. "அந்த மாநாடு நடப்பதற்கு மிகவும் துணை நின்ற சுப்பிரமணியமே பொதுமக்கள் வரிசையில் இருந்தாரே! எனவே குறுகிய மேடையில் எல்லோரு மிருக்க இயலாதாகையால் சிலரைக் குறிப்பாக முதியவர்களை மேடையில் இருத்தியிருந்தோம்" என்று அடிகள் பதில் கூறியதாக நண்பர்கள் சொன்னார்கள்.

அடுத்த நாள் காலையில் "எனக்கும் பொன்முலாம் பூசிய சின்னம் வேண்டும்; வாழ்நாள் முழுவதும் தமிழுக்காக உழைத்த எனக்கு அது தராவிட்டால் நான் மாநாட்டில் கலந்து கொள்ள மாட்டேன்" என்று எப்பொழுதும் அன்பாகப் பழகும், ஆனால் சற்று முன்கோபமுடைய முதிய நண்பர் ஒருவர் அடம்பிடித்தார். ம. பொ. சிவஞான கிராமணியார் "அவர் அடம் பிடிக்கிறார். சமாதானப் படுத்துங்கள்" என்று என்னிடம் கூறினார். நான் என்னால் ஆனமட்டும் முயன்றேன். "முலாம் பூசிய என் முத்திரையை தங்கள் தோள்பட்டையில் குத்திவிடுகிறேன். தமிழ் நாட்டிலிருந்து திரளாக வந்து, கோலாலம்பூர் நண்பர்களிடையே மனஉளைச்சல் ஏற்படுமாறு நடப்பது நன்றல்ல" எனக் கூறினேன். அவர் என் சொற்களைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. இறுதியில் தனிநாயக அடிகள் அவரிடம் சில சமாதானச் சொற்கள் கூறியிருக்க வேண்டும். அடம் பிடித்த நண்பர் கருத்தரங்கில் முதல் வரிசையிலிருப்பதை பின்னர் கண்டேன்.

அந்த மாநாடு ஆய்விற்கு முதலிடம் கொடுத்து, ஒவ்வொரு நாளும் பிற நிகழ்ச்சிகள் நடப்பதற்கும் சிறப்பாக ஏற்பாடு செய் திருந்தது. ஒருநாள் இரவு தனிநாயக அடிகள் விருந்தொன்று கொடுத்து மகாநாட்டின் முனைப்பாக உழைத்தவர்களைப் பாராட்டி சிறு மது அருந்திய நிகழ்ச்சி ஒன்றும் நினைவிருக்கிறது.

மகாநாடு நடக்கும்போது ஒருநாள் காலை அடிகள் நான் தங்கும் அறையில் வந்து "முக்கியமான ஒன்றிரண்டு பேரை நாம் சென்று சந்திப்போம்; நீயும் என்னுடன் வா என்றார்." "போவோம்" என்று கூறி "1935ஆம் ஆண்டுவாக்கில் திருவனந்த புரத்தில் நடந்த அகில இந்திய கீழ்த்திசை மகாநாட்டுப் பேராளர் கள் தங்கியிருந்த ஒவ்வொரு அறைக்கும் சென்று, அன்று டிவானாக இருந்த சர். சி.பி. இராமசாமி ஐயர் குசலம் விசாரித்ததும் அதனால் பேராளர்கள் மிக மகிழ்ந்ததையும்" கூறினேன். எனவே, எல்லா அறைகளுக்கும் சென்று ஒவ்வொருவருடைய நலனையும் அவர் விசாரிக்க முற்பட்டார். நான் அவர் பின்னே புன்முறுவ லுடன் சொல்லாடாமல் நின்றிருந்தேன். அன்று நடந்த நிகழ்ச்சி யால் பேராளர்கள் தமக்கிருந்த ஒருசில குறைகளைக் கூட மறந்து விட்டனர். ஆட்களுடன் எளிதில் பழகும் ஆற்றல் அடிகளுக்கு வாய்ந்த பெருங்குணம். துறவை மேற்கொண்டிருந்ததால், பழகு பவர்கள் மிக மதிப்புடன் அவரோடு உரையாடினர். நீடிக்கும் நட்புறவை பலருடன் அடிகள் கொண்டிருந்ததற்கு அவைதாம் காரணம்.

மாநாடு நடந்து முடிந்ததும் பேராளர்கள் ஈப்போ போன்ற அயல் நகரங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். நானும் சில நண்பர்களும் கோலாலம்பூர் மாணவர் விடுதியிலேயே தங்கி விட்டோம்.

அந்த இடைவேளையில் ஒருநாள் ஒரு மலையிடத்தில் உல்லாச பயணத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர். அங்கு மலைக் காட்சி களைப் பார்ப்பதுடன் பன்னாட்டுத் தமிழ் ஆய்வுக் கழகத்தின் (IATR) வருங்கால வளர்ச்சி ஆய்வு நிறுவனம் ஒன்றை நிறுவுவது தமிழ் ஆய்வுக்கென ஒரு அரையாண்டு இதழ் ஒன்றை வெளியிடுவது போன்ற திட்டங்கள் உருவாயின. பிறர் கருத்தைக் கேட்பதும், அவர்கள் கேட்டால் அவற்றை எவ்வாறு செயல்படுத்துவது என்பதை நானறிந்த மட்டில் தெரிவிப்பதும் என் போக்காக இருந்தது.

நான் ஊர் திரும்பும் முன் ஒரு நாள் 'சுப்பு! உன் செலவிற்கு மலேசிய டாலர் தரட்டுமா?' என்றார் அடிகள்.

இலக்கியக் கொள்கை என்ற நூலை மொழி பெயர்த்த திருமதி. குளோறியா சுந்தரமதிக்கு ஐந்நூறு ரூபாய் சிறப்பு ஊதியம் கொடுக்கத் தீர்மானித்திருப்பதால் அந்தப் பணம் மட்டும்

தந்தால் போதும். கடன் பெற்று செலவு செய்வது நன்றன்று என்றேன். எனது கையில் ஏறத்தாழ எழுநூறு ரூபாய் இருந்த தால் எனக்குப் பொருள் ஏதும் தேவைப்படவில்லை.

சென்னையில் 1968இல் நடைபெறவிருக்கும் மகாநாட்டிற்கான ஆரம்ப ஏற்பாடுகள் துவங்கின. அதற்குச் சற்று முன் நடந்த பொதுத் தேர்தலில், மகாநாட்டுக்கு அழைப்பு விடுத்த திரு. பக்தவத்சலமும் காங்கிரஸ் கட்சியும் தோல்வியுற்றன. திராவிட முன்னேற்ற கழகம் மிகப்பெரும் வெற்றியைப் பெற்றது. எனவே தமிழ் மீதும் தமிழ்ப்பண்பாடு மீதும் புத்துணர்வும் எழுச்சியும் அன்று வெளிப்படையாகத் தெரிந்தது.

அன்று முதலமைச்சர் திரு. அண்ணாத்துரையும் அமைச்சர் களும் தமிழக அரசின் மாநாடு நடத்துவதில் முனைப்புடன் செயல் பட்டனர். அரசியலும் பிரச்சாரமும் கலவாத ஆய்வு மாநாடு ஒன்றை நடத்த பன்னாட்டுத் தமிழாய்வுக் கழகம் விரும்பியது. அரசியல் பேச்சாளர்கள் தாங்கள் தாம் தமிழ் வளர்ப்பவர்கள்; பாதுகாவலர்கள். எனவே, தாம் தாம் முன்னின்று நடத்த வேண்டும் என்று அடம் பிடிக்கவே மாநாடு இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டு, பொது மக்களுக்குத் தீவுத்திடலிலும் ஆய்வாளர்களுக்குப் பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்திலும் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. பொதுமக்கள் விரும்பும் ஆரவாரப் பேச்சுக் கள் கேளிக்கைகள் முதலியவற்றை ஆய்வாளர்கள் விரும்புவதில்லை. பல நாட்டிலிருந்து மாநாட்டிற்குப் பேராளர்கள் வந்திருந்தனர். விழாக்கோலம் கொண்டிருந்த சென்னையில் ஆய்வுக்கட்டுரைகள் படைக்கும் நூற்றாண்டு மண்டபத்தில் தேர்ந்தெடுத்தவர்கள் மட்டும் நுழைவு அட்டைகளுடன் அனுமதிக்கப்பட்டனர். எனவே அறிஞர்களும் ஆய்வாளர்களும் மட்டும் கூடிய கூட்டமாக நூற்றாண்டு மண்டபக் கூட்டம் அமைந்தது.

'ஒரு கொள்கையாக்கச் சொற்பொழிவாற்ற வேண்டும்' என்றும் அமைப்பாளர் குழுவின் சார்பில் அ. சுப்பையா என்னைக் கேட்டுக் கொண்டார். 'தமிழ் இலக்கியத்தில் சில மைல் கற்கள்' என்பது என் தலைப்பு. என் கட்டுரை 1960 முதல் 1965 வரை நடந்த ஆய்வைச் சீர்தூக்கிய பின்னர் சில புதுச் செய்திகளையும் கொண்டிருந்தது. திரு. அ. சுப்பையாவுக்கு அந்தக் கட்டுரையின் போக்கு பிடிக்காததால், கட்டுரையில் வேறுசில செய்திகளையும் சேர்த்திடுமாறு அப்போது செயலாளராக இயங்கிய கமில்ஸ்வலபில் வழி எனக்குக் கடிதமொன்றை எழுதச் செய்தார். "என்

கட்டுரையில் எந்தவித மாற்றத்தையும் செய்ய இயலாது; மாநாட்டில் அதனைப் படைத்திட வேண்டும் என்ற எண்ணமும் எனக்கில்லை'' என்று எழுதினேன். நான் பதில் எழுதுவதற்கு முன்னர் கமில்ஸ்வலபில் தமது கையெழுத்தில் தன் கருத்தாக ''அது நல்ல கட்டுரை, அதை மாற்ற முனையாதீர்கள்'' என்று எழுதியிருந்தார். அவருடைய பரிந்துரையைப் பாராட்டினாலும் 'திரு. அ. சுப்பையாவிடம் அதனைக் கூறியிருக்கலாமே' என்று எனக்குத் தோன்றியது. எனவே மாநாட்டுக்குச் செல்லும் உள்ளுந்தல் எனக்கு இல்லாமலிருந்தது. திருவனந்தபுரத்திலுள்ள தமிழ்த் துறையிலும் மொழியியல் துறையிலும் பணிசெய்யும் எல்லா ஆய்வாளர்களையும் பங்கு பெறுமாறு அனுப்பிவிட்டு நான் மட்டும் செல்ல மனமில்லாமல் ஊரில் தங்கினேன். அதனையறிந்த அடிகள் ''மாநாட்டிற்கு உடனே வருமாறு'' தந்தியொன்றை அனுப்பினார். செய்தித்தாள்கள் தமிழ் மாநாட்டு ஏற்பாடுகளை மிக விரிவாக ஒவ்வொரு நாளும் வெளியிட்டு வந்தன. தமிழ் அபிமானிகளுக்கு அந்தச் செய்திகள் எழுச்சியூட்டின. எனவே நான் மாநாட்டிற்குச் செல்வதாக அது துவங்கும் நாள் காலையில் முடிவு செய்து, விமானத்தில் மதுரை வரைச் சென்று அதன்பின் சென்னை செல்ல இடம் கிடைக்காததால், இரயிலில் அடுத்தநாள் காலை சென்று சேர்ந்தேன். துவக்க நாளில் நடந்த பேரணிகளும், பெருந்திரளான மக்கள் கூட்டமும் அன்று ஜனாதிபதியாக இருந்த டாக்டர் சக்கீர் உசேன் அவற்றைப் பார்வையிட்டுக் கடற்கரையின் மைதானத்தில் மாநாட்டினைத் துவக்கி வைத்ததும் செய்தித் தாள்களில் வெளியிடப்பட்டிருந்தன. கூட்டம் அலைமோதியதாகவும் செய்தித்தாள்கள் தெரிவித்தன. சென்னை சென்றதும் அறையெதுவும் விடுதிகளில் கிடைக்காததால் கீழ்ப்பாக்கத்தில் என் தம்பி வீட்டில் தங்கி ஒன்பதரை மணிக்கு நான் பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்திற்குச் சென்றேன். மண்டபத்தின் உள்ளே நுழைவதற்கு அட்டை எதுவுமில்லை. திரு.வி.எஸ், தியாகராய முதலியார் வாயிலில் என்னை அடையாளங்கண்டு கொண்டு உள்ளே செல்ல ஏற்பாடு செய்தார். பார்வையாளர் பகுதியில் அமர்ந்தேன். திருவனந்தபுரத்திலிருந்து வந்த மாணவர்கள் முகத்தில் ஆசுவாசம் பிறந்தது. அப்போது முதல் அமர்வு தொடங்கியது. அதன் முடிவில் அடிகள் நானிருக்கும் இடம் வந்து மதிய உணவிற்கு அழைத்துச் சென்றார். அப்போது 'நான் வரமாட்டேன் என்று திருவனந்தபுரம் ஆய்வாளர்கள் கூறிய செய்தியை'யும் பன்னாட்டுத் தமிழ் ஆய்வுக்கழகம் துவங்குவதற்கு

முனைந்த இருவருள் ஒருவன் வராமல் இருப்பது பெருங்குறை யாகும் என்று தான் கருதித் தந்தியனுப்பியதாகவும், முந்திய நாள் கடற்கரைத் திறப்பு விழாவில் நடந்த நிகழ்ச்சிகளையும் கூறினார் மாநாடு நடந்த ஏழு நாட்களும் அடிகளுடன்தான் பெரும்பாலும் நான் செலவழிக்க நேர்ந்தது.

எனது கட்டுரை அரங்கேற்றுவதற்கு மாநாடு நடக்கும் காலை புதன்கிழமை ஒதுக்கப்பட்டது என நினைவு. நான் அன்று அதன் நகலொன்றைக் கையில் எடுத்துச் சென்றிருந்தேன். திரு. வி. எஸ். தியாகராய முதலியார், அந்தக் கட்டுரையை அலுவலகத்தில் தேடியும் கிடைக்கவில்லை என்று வருத்தத்துடன் கூறும்போது, என் கையில் அதன் நகல் இருக்கிறது என்றேன். கருத்து வேறுபாட்டால் என் கட்டுரையை அலுவலகம் அச்சேற்ற வில்லை. அந்தக் கட்டுரை சுருக்கமானதாக இருந்ததால் இருபது நிமிட நேரந்தான் நீடித்தது. ஆனால் கேள்வியும் அதற்குரிய பதிலும் ஏறத்தாழ ஒன்றரை மணியளவு நீண்டு நின்றது. அதன் முழு விவரங்களை ஈழ நண்பர் டாக்டர் கைலாசபதி இலங்கை நாளிதழ் ஒன்றில் பலநாள் வெளியிட்டு எனக்குத் தொகுத்துப் பின்னர் அனுப்பியிருந்தார். தினமணி ஆசிரியர் எ. என். சிவராமன் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் "தரமான முற்போக் கான கட்டுரை" என்று பாராட்டியிருந்தார். கட்டுரை படிக்காமல் விடப்பட்டிருந்தால், மாநாட்டு நல்ல நிகழ்ச்சி ஒன்று, பிறர் கண்ணில் படாமல் போயிருக்கும் என்று அடிகளும் திரு. சுப்பையாவும் பின்னர் கூறினர். அந்த மகாநாட்டில் இந்தியத் தேசிய அமைப்பின் செயலாளராக என் பெயரை அடிகளும், சுப்பையாவும் செயற்குழு கூட்டத்தில் கூறிட அதனைப் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரம் எதிர்த்தாராம். நான் அந்தக் கூட்டத்திற்குப் போகவில்லை. எனவே அடுத்த நாள் உலகக் குழுவின் பொதுச் செயலாளராக என்னை உயரிடத்தில் நியமித்தனர். அன்று இரவு எக்ஸ்பிரஸ் செய்தித்தாளின் உரிமையாளர் திரு. கோயங்கா அளித்த விருந்திடத்தில் கண்ட அடிகள், "என்னுடன் நீயும் பன்னாட்டுத் தமிழாய்வுக் கழகத்தின் செயலாளர் ஆக்கப்பட்டு விட்டாய். இருவரும் சேர்ந்து பணி செய்வோம்" என்றார். பதவியால் எதுவும் சாதித்துவிட முடியாது என்ற எண்ணம் உறுதி யாக என் மனதில் பதிந்திருந்ததால், அடக்கத்துடன் அவர் கூறிய செய்திகளனைத்தையும் கேட்டுக் கொண்டேன். ஒருநாள் மாலை, தீவுத் திடலுக்கு அடிகளுடன் நானும் சென்றேன். அங்குச் சென்ற நேரம் மாலை ஆகையால் நிகழ்ச்சி எதுவும் அப்போது நடைபெற

வில்லை. பல கடைகள் (டீ ஸ்டால், வெற்றிலை பாக்குக் கடை) முதலியவை அரசியல் தலைவர்களின் பெயரில் அங்கே இயங்கின. அவற்றைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பினோம்.

ஆய்வு மாநாடு எது, இலக்கிய விளம்பர மாநாடு எது என்பது பிரித்தறிய அன்று, வாழ்ந்த அறிவுச் செல்வர்கள் முயலவில்லை. தமிழ் செய்தித் தாள்களின் சில, பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டப நிகழ்ச்சிகளையும் அதன் அமைப்பாளர்களையும் விமர்சித்து செய்திகளை வெளியிட்டன. ஆனால் பன்னாட்டுத் தமிழ் ஆய்வுக் கழகம் எவ்வித பதிலும் அவற்றிற்கு அளிக்க முயல வில்லை. புறக்கணித்துவிட்டது. மாநாடு முடிந்தபோது அடிகள் வேலைப் பளுவால் களைப்புடன் ஆனால் உற்சாகமாக காணப் பட்டார். நானும் அடுத்த நாள் ஊர் திரும்பினேன்.

அந்த மாநாட்டில் முடிவு செய்த தீர்மானங்களுள் ஒன்று உயர் ஆய்வு மையமொன்றைத் துவக்குவது; ஆங்கிலத்தில் அரையாண்டு இதழுக்கு அடிகள் ஆசிரியர், நான் இணையாசிரியர், திரு. அ. சுப்பையா பொருளாளர் என இவ்வாறு பொறுப்பு ஒதுக்கப்பட்டது. உயர் ஆய்வு மையத்தின் திட்ட அமைப்புக் குழுவுக்கு நான் உறுப்புச் செயலாளருமாக நியமிக்கப்பட்டேன். கல்வி அமைச்சர் வி. ஆர். நெடுஞ்செழியன் அதன் தலைவர். எனவே என் பொறுப்பு கணிசமாகப் பெருகியது. அன்று கல்வி அமைச்சராக இருந்த வி.ஆர். நெடுஞ்செழியனின் ஆதரவு இந்த இரண்டு திட்டத் திற்கும் மிகவும் கூடுதலாக இருந்தது. அவர் மூலமாக என்னை ஓரிரு மாதங்களுக்குப் பணிவிடுப்பில் அனுப்புமாறு கேரளப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த திரு. சாமுவேல் மத்தாயிக்கு திரு. சுப்பையா எழுதியிருந்தார். நானும் அந்த வேனல் விடுமுறையில், சென்னை சென்று பன்னாட்டுத் தமிழாய்வு மையத்தின் (I. I. T. S.) அறிக்கையையும் செயல்படுத்தும் திட்டத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டேன். திரு. சுப்பையா வேனல் விடுமுறையாகையால் வழக்கம் போல் கொடைக்கானல் சென்றுவிட்டார். எனவே ஓரிரு மாதங்களுக்குள் நான் மட்டும் சில உதவியாளருடன் திட்டத்தின் கரடு வரைவைத் தயாரித்தேன். அதனை திருத்தி கல்வி அமைச்சகத்திற்கு சமர்ப்பிப்பதன் முன்னர், அறிஞர்கள் சிலரை அழைத்து வரைவை ஆய்ந்து அவர்கள் பரிந்துரையுடன் அனுப்புவது நல்லது என்ற எண்ணத் துடன் ஆய்வுககுழு ஒன்றும் நிறுவப்பட்டது. அந்த ஆய்வுக் குழுவில் எஸ், கே. சட்டர்ஜி (கல்கத்தா), ஆர். என். தண்டேகர்

(பூனா), மொ. அ. துரை அரங்கனார், மு. வரதராசனார், இரஷ்யத் தூதரகப் பிரதிநிதி, அமெரிக்க தூதரகப் பிரதிநிதி முதலியவர்கள் திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் தலைமையில் ஒருநாள் ஆய்ந்தனர். அந்த கூட்டத்திற்கு தனிநாயக அடிகள் வர இயலவில்லை. கூட்டம் நடந்து முடிந்ததும், வெளியூர் அறிஞர்களை இரயிலேற்றி விட்டு அன்றே திருத்தங்களைச் செய்து அறிக்கையின் மூன்றுபடி எடுத்து அப்போது துணைச் செயலாளராக இருந்த திருமதி. இரமேசத்திடம் கொடுத்துவிட்டு திருவனந்தபுரம் திரும்பி விட்டேன். அந்த அறிக்கை உருவாக்கும் காலத்தில், ஒரு ஆய்வு நிறுவனத்திற்கு என்ன என்ன தேவை, எவர் எவர் துணையை நாடவேண்டும், எவ்வாறு எழுத்து எழுதி அறிஞர்களை அதில் ஈடுபடச் செய்ய வேண்டும் என்பது போன்ற பல அடிப்படை அனுபவங்களை நான் பெற்றிட வாய்ப்பு ஏற்பட்டது. பின்னர் அனைத்து இந்திய திராவிட மொழியியற் கழகமும், பன்னாட்டு மொழியியல் ஆய்வு நிறுவனமும் உருவாக்குவதற்கு அந்த அனுபவம் மிகவும் துணை செய்தது.

தமிழ் ஆய்வு நிறுவனத் திட்டம் சென்னையில் செயல் படுத்தப்பட்டது. மாறுபட்ட சூழ்நிலை காரணமாகத் தனிநாயக அடிகள் மலேசியாவிலுள்ள பேராசிரியர் பதவியை விட்டு விலகி விட்டார். "அவரைப் புதிதாக அமையவிருக்கும் தமிழாய்வு நிறுவனத்தின் இயக்குநராக நியமித்தால் மிகச் சிறப்பாக நடத்துவார்" என்பது எனது உறுதியான நம்பிக்கை. "ஆய்வில் உனக்கு அடிகளை விட கூடுதல் அனுபவமும் உலகோர் ஒப்புதலும் உண்டு" என்று பன்னாட்டுத் தமிழாய்வுக் கழகத்தில் பெரும் பொறுப்பு வகித்த நண்பர் ஒருவர் என்னிடம் ஒருநாள் கூறினார். "எங்கள் நட்பு பலவாண்டுகள் நீடித்து வரும் ஒன்று. பல துறை அறிஞர்களைக் கவரும் தெய்வசக்தியும் தமிழின் ஏற்றத்தைப் பல மொழியாளர்களிடம் கூறி ஒப்புதலைப் பெறும் வல்லமையும் அடிகளிடம் உண்டு" என்று கூறி அவர்கள் சொற்களை மீண்டும் கூறக் கேட்க நான் விரும்பவில்லை என்று தெரிவித்துவிட்டேன். மலேசியா பதவியை விட்டு அடிகள் விலகியபோது, சென்னை ஆய்வு நிறுவனத்தின் பொறுப்பை ஏற்க அழைக்கப்படுவார் என்ற நம்பிக்கை அவருக்கிருந்தது. ஆனால் நாளாவட்டத்தில் அந்த நம்பிக்கை குறைந்தது. நானும் அந்த நிறுவனப் பணியிலிருந்து மெள்ள மெள்ள அகலத் துவங்கினேன்.

ஆய்வு நிறுவனத்திற்கு மைய அரசு ஏதேனும் நல்கைத் தந்திட வேண்டும் என்று அ. சுப்பையா முயன்றார். அதற்காக சி. சுப்பிரமணியம் உடன்வர அ. சுப்பையா, அன்று கல்வி அமைச்சராக இருந்த டாக்டர் வி. கே. ஆர். வி. இராவை டெல்லியில் சென்று சந்தித்தனர். அவர் தமிழ் வளர்ச்சிக்கு ஐந்தாண்டுகளுக்குத் தமிழக அரசுக்கு ஒதுக்கப் பட்டுள்ள ஒரு கோடி ரூபாயிலிருந்து செலவிடுக என்று கூறிவிட்டார். அன்று வி. கே. ஆர். வி. இராவ் நடந்து கொண்ட முறை எரிச்சல் ஏற்படுத்தியதாகவும் அ. சுப்பையா கூறினார். வி.கே.ஆர்.வி. இராவ் நேரத்திற்கேற்ப மனம் மாறும் நிலையினர். அறிஞர்களுக்கு இயற்கையாக ஏற்படும் பெரும் சினமும் அதன்பின் சினத்தணிவும் அவரிடமுண்டு. ஆனால் மொழி வளர்ச்சியில் நல்லெண்ணம் உடையவர். தாமே வகுத்துக் கொண்ட திட்டப் படி செயல்படுவர். பிறர் கூறுவதை அனுசரிப்பது மிகவும் குறைவு. எனினும் அவரைக் கண்ட பின்னரும் அதிக ஆதரவு கிடைக்க வில்லையே என்று சுப்பையா வருந்தினார்.

பன்னாட்டுத் தமிழாய்வு குழுவுடன் நான் கொண்ட தொடர்பு படிப்படியாகக் குறைந்தது. பாரீசில் நடந்த மூன்றாம் உலக மாநாட்டின் பின் அந்தத் தொடர்பு அறவே குறைந்துவிட்டது. உள்ளேயிருந்து ஒரு நிறுவனத்தின் அமைப்பை எதிர்ப்பதை விட அதனை விட்டு விலகுவதுதான் என் வழக்கம். எனவே 1970ஆம் ஆண்டுவாக்கில் என் பொறுப்புகள் அனைத்திலிருந்தும் விலகிக் கொண்டேன். அதன் பின்னர் டாக்டர் மு. வரதராசனார் ஈடு படுத்தப்பட்டார். தனிநாயக அடிகளும் தொட்டுத் தொடாமலும் அதில் தொடர்ந்தார்.

பாரீசில் நடந்த உலகக் கீழ்த்திசை மாநாட்டில் அடிகளைச் சந்தித்த போது மிகவும் தன்னம்பிக்கை இன்றி காணப்பட்டார். தமிழாய்வு நிறுவனம் வேறொரு வழியில் இயங்குவது பற்றியும் குறிக்கோளனைத்தும் நிலைகுலைந்து போவதையும் கூறினார் அப்போது தான் யாழ்ப்பாணத்தில் வாழ்வதாகவும் நீரிழிவு நோய் இருப்பதாகவும் பல குருக்கள்மார் முதுமையில் சித்த பிரமையால் அவதிப்படுவது போன்று தாமும் அவதிப்படாமல் பார்த்துக் கொள்வதாகவும் கூறினார். கேட்பதற்கு வருத்தமாக இருந்தது. அவர் செய்த பெருந்தொண்டினைக் கூறி அவரைத் தேற்றினேன்.

1970ஆம் ஆண்டில் திராவிட மொழியியல் கழகம் உருவானது. எதிர்பாராத இடங்களிலிருந்து ஆதரவு, அதற்குக் கிடைத்தது.

அது வலுவுற்றபோது இலங்கையிலிருந்த அடிகள் எழுதிய எழுத்துக்கள் மிகவும் ஊக்கம் தந்தன. ஒரு கடிதத்தில் 'தன்னைச் சேர்த்துக் கொள்ளாதது ஏன்' என்று கேட்டிருந்தார். ''மொழியியல் ஆய்வில் மட்டும் ஒதுங்கி நிற்கும் அந்த நிறுவனத்தில் அடிகளைச் சேர்ப்பது பொருந்தாது; அது மட்டுமன்று, நானிருக்கும் இடங்களில் எல்லாம் அடிகள் அல்லவா இருக்கிறார்'' என்று தேற்றினேன். அடிகள் வயது முதிர்வில் எழுதிய கையெழுத்துக் கடிதங்கள், தெளிவாக நடுக்கம் எதுவுமின்றி இருந்தன. அவருடைய அன்பு ஒரு துளியளவு கூட குறைந்திடவில்லை. அந்தக் காலக் கட்டத்தில் இருவரும் சந்திப்பது மிகக் குறைவாகவே நடை பெற்றது.

திருவனந்தபுரத்தில் வாழும் மார் கிரிகோஸ் திருமேனியைச் சில ஆண்டுகளுக்கு முன் சிந்தித்தபோது தனிநாயக அடிகள் திருவனந்தபுரம் டையோசிஸில் சேர்ந்தவர் என்று கூறி அதற்குரிய பின்னணியை விளக்கினார். இலங்கை பிஷப் இத்தாலியில் சென்று தனிநாயகம் படிக்க அனுமதிக்காததால் திருவனந்தபுரம் மலங்கரை சர்ச்சின் டையோசிஸில் உறுப்பினராக்கி, அதன் பின்னர் ரோமுக்குக் கல்வி பயில அனுப்பப்பட்டார் என்றார். பின்னர் மலங்கரை சர்ச்சிலிருந்து பிரிந்து தூத்துக்குடி பிஷப் ரோச்சு அவர்கள் ஆதரவில் தூத்துக்குடி டையோசிஸில் தனிநாயக அடிகள் சேர்ந்து பணி செய்தார் என்று நண்பர்கள் கூறினர். பிஷப் ரோச்சுதான் அடிகளுக்கு ஆசிரியராகவும் ஆய்வுப் பணியிலும் கலந்து கொள்ளும் முழு உரிமையை அளித்தவர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திற்கு நான் 1983இல் சென்றபோது அங்குள்ள அரசப் பிரதிநிதியின் தந்தை திரு. நேசையா அடிகளைப் பற்றியும் பல நுணுக்கச் செய்திகளைத் தெரிவித்தார். சிங்களவரின் ஆதிக்கம் மேலோங்கியதும் தமிழர்களின் இன்னல்களைப் பொறுக்காத தனிநாயக அடிகள் அரசுக்கு எதிராக தமது கருத்தைத் தெரிவித்தார் என்றும், காவல் கண்காணிப்பு மிகவே பல்கலைக்கழகத்தில் தான் தங்கியிருந்த அறையைப்பூட்டி திரு. நேசையா கையில் சாவியைக் கொடுத்து நூல்களையும் ஏனைய உடைமைகளையும் தனது வீட்டில் எடுத்துச் சென்று காக்குமாறு கூறிவிட்டு தமிழகத்திற்குத் தனிநாயக அடிகள் வந்து தங்கிய செய்தியைத் தெரிவித்தார்.

அடிகள் தனிமனித சுதந்திரத்தைப் போற்றியவர். பிறர் சுதந்திரத்தைத் தடை செய்யும் எந்த முயற்சியையும் எதிர்த்தவர். அதற்காக அவர் மேற்கொண்ட இன்னல்கள் சிறிதல்ல என்று பிறர் கூறக் கேட்டேன். ஆனால் இலங்கை நிகழ்ச்சி பற்றி என்னிடம் எதுவும் சொன்னதில்லை.

1981ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மதுரையில் நடைபெறவிருந்த உலகத் தமிழ் மகாநாட்டிற்குரிய அமைப்புக் குழுவில் என்னையும் ஓர் உறுப்பினராகத் தமிழக அரசு நியமித்திருந்தது. அங்கும் ஆய்விற்கும், பொது மக்கள் பங்கெடுப்பதற்கும் இருகூறாக மாநாடு நடத்த முடிவெடுத்திருந்தனர். ஆய்வு மாநாடு மதுரைப் பல்கலைக்கழக வளாகத்திலும் பொதுமக்கள் பங்கெடுக்கும் பிரச்சார மாநாடு தமுக்கம் மைதானத்தில் நடத்த ஏற்பாடாகி யிருந்தது. 1980ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடந்த ஆய்வு மாநாட்டு அமைப்புக் குழுக் கூட்டத்திற்குத் திரு. ஆர். எம். வீரப்பன் தலைமை தாங்கினார். சென்னை இந்திரா நகருக்கு அருகாமையிலுள்ள வெங்கடரத்தின நகரிலுள்ள ஓர் இல்லத்தில் அதன் அலுவலகம் இயங்கியது. அந்தக் கூட்டத்திற்கு நான் பயணம் செய்த விமானம் காலந்தாழ்த்தி சென்னை சென்று சேர்ந்ததால் சற்று நேரம் கழித்துதான் கூட்டத்தில் பங்கேற்க முடிந்தது. என்னைக் கண்ட வ. சுப. மாணிக்கனார், ''தனிநாயக அடிகள் காலமாகி விட்டதாக நேற்று ஒரு தந்தி வந்திருந்தது. நீங்கள் தெரிந்திட வேண்டும் என்று அதனை இப்போதே கூறு கிறேன்'' என்றார். ஒரு கணம் அந்தச் செய்தியைக் கேட்டு நிலையிழந்துவிட்டேன்; நா வரண்டது. ''என்னைவிட என் அருகிலிருந்த அ. சுப்பையா அவர்கள் மிகவும் வருத்தமடைவார்'' என்றேன். எனினும் கூட்டம் நடந்து முடிந்தது. நான்கு உலக மாநாடுகளுக்கு அடிகோலி, வழிகாட்டியாக விளங்கிய அடிகள் இல்லாமல் மதுரை மாநாடு பொலிவிழந்துவிடப் போகிறதே என்ற வருத்தம் என்னை வாட்டியது. எனினும் மாநாடு தோற்றுவிடக் கூடாதே என்ற எண்ணத்தால் அன்றையக் கூட்டத்திலும் அதன் பின்னர் நடந்த கூட்டத்திலும் பங்கேற்றேன். அதன்பின் நடந்த மதுரை மாநாட்டில், மூன்று நாள் கலந்துவிட்டு ஊர் திரும்பினேன்.

தனிநாயக அடிகளின் உருவச் சிலையை கல்வியமைச்சர் செ. அரங்கநாயகம் மாநாட்டின் முதல் நாள் திறப்பதாக அறிவிக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வது என் கடமையாகக் கருதி அந்தக் கூட்டத்திற்குச் சென்றிருந்தேன்.

ஈழத்து நண்பர்கள் பலர் வந்திருந்தனர். நண்பர் மதுரை நெடுமாறன் அங்கிருந்தார். என்னைப் பேசுமாறு அவர் கேட்டுக் கொள்ள கல்வியமைச்சர் அழைத்தார். எதிர்பாராத அழைப்பு அது. ''உலகோர் பலர் தமிழ் மொழியைப் போற்றுமாறு செய்த பெரும் தொண்டை மேற்கொண்டவர் அடிகள். பிறரைத் தன் வயப்படுத்தும் தெய்வ சக்தியைக் கொண்டவர், தமிழுக்கு ஏற்றம்; தமிழுக்கு நல்வாழ்வு ஆகியவற்றைத் தமது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டவர்'' என்று கூறியது நினைவிருக்கிறது. அதன் பின்னர்தான் மதுரைப் பல்கலைக்கழக ஆய்வு மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றேன். அந்த மாநாடு நடப்பதற்குப் பெரும் பொருள் செலவாயினும் ஆய்வில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக ஆய்வுக் கட்டுரைகள் தெளிவாக்கவில்லை.

அந்த மகாநாட்டில் தான் தமிழுக்கு என ஒரு தனிப் பல்கலைக் கழகம் அமைக்கும் முடிவை முதலமைச்சர் எம். ஜி. இராமச் சந்திரனார் இறுதிநாள் முடிப்புச் சொற்பொழிவில் தெரிவித்தார் என்று செய்தித் தாள்கள் தெரிவித்தன. அந்தப் பல்கலைக் கழகம் துவங்கியபோது முதன்மைச் செயலாளர் க. திரவியம் ''துணை வேந்தராகப் பொறுப்பு ஏற்க இசைவு தரவேண்டுமென்று'' தொலைபேசியில் என்னை அழைத்துத் தெரிவித்தார். எதிர் பாராத அழைப்பு. அதன் பின்னர் முதலமைச்சர் எம். ஜி. இராமச் சந்திரனார் 1981ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் தஞ்சையில் நடக்கும் பல்கலைக்கழகத் துவக்க விழாவில் கலந்திட வேண்டு மென்று அழைத்தார். எல்லாம் விரைவாக எதிர்பாராதவிதமாக நடந்தது. ஓரிரு ஆண்டுக்குள் பட்டமளிப்பு விழா நடத்த ஏற்பாடாகி இருந்தது. அந்தப் பல்கலைக்கழக குழுக்கள் செய்யும் பரிந்துரைப்படி நடக்கும் நான், அன்று விதிவிலக்காக அடிகளுக்குச் சிறப்பு முனைவர் பட்டம் அளிக்கும் தீர்மானத்தைக் கூறவே ஆளுநர் குழுவும் ஒரு மனதாக ஒப்புக் கொண்டது. அடிகளின் மருமகன் மலேசியாவிலிருந்து வந்து அந்தப் பட்டத்தை, மேன்மை தங்கிய ஆளுநர் குரோனாவிடமிருந்து பெற்றார்.

தமிழ்மொழி பழமையானது. அதன் சங்க இலக்கியம் ஏற்ற முடையது. அதன் பக்தி இலக்கியம் மனதை உருக்கும் இயல் புடையன. சிலப்பதிகார காவியம் உலக இலக்கியங்களில் சிறப்பிடம் பெறத்தக்கது என்று பிறநாட்டார் அறிந்திடச் செய்தவர் அடிகளாவார், உலக மாநாடு மலேசியாவில் நடத்

தியதும், அதன்பின்னர் சென்னை, பாரீஸ், யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் நடத்துவதற்கு வழிகாட்டியாக நின்றவரும் அடிகளாவார். அதன் பின்னர் தான் சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி முதலிய மொழிகள் உலக மகாநாடுகளை நடத்த முயன்றன. அவற்றிற்கெல்லாம் முன்னோடி அடிகளாவார். தமிழகம் அவர் செய்த பெருந்தொண்டை முழுமையாக உணர்ந்திடவில்லை. அவரால் உலக அரங்கில் தமிழுக்கு ஏற்பட்ட சிறப்பை, இதுவரை விலை மதித்திடவில்லை. தமிழ்நாட்டில் நல்ல தொண்டுகளை சீர்தூக்கிப் பாராட்டப் பலவாண்டுகளாகும். வளராத மனநிலை உடையவர்கள் பலராகையால் அந்த மனநிலை மாற பலவாண்டு நீடித்திடும். ஆனால் விரைவில் அந்த நிலை மாறாமல் இருக்காது. அன்று தனிநாயக அடிகளைச் சிரமேற்கொண்டு தமிழர் போற்றுவர்.

# பதிப்புரை

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' எனும் பாரதியின் கனவினை நனவாக்கச் செயலாற்றி வெற்றி கண்ட ஆண்டகை; இவ் 'உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்' தோன்ற முன்னின்ற சான்றோர்; உலகறிந்த தமிழறிஞர் தவத்திரு தனிநாயகம் அடிகளார் ஆவார். அன்னாரைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையில் 1992இல் புதிதாக நிறுவனத்தில் 'தவத்திரு தனிநாயகம் அடிகளார் அறக்கட்டளை' நிறுவப்பட்டுள்ளது. அதன் முதல் சொற்பொழிவு (1, 2-12-92) இந்நூல்.

உலகத் தமிழ் மாநாடுகள் நடத்தியும், 'Tamil Culture' இதழ் வெளியிட்டும், பாரெங்கும் சுற்றித் தமிழ் பரப்பியும் தமிழ்த் தொண்டாற்றிய தகைசால் பெருந்தலைவர் தவத்திரு தனிநாயகம் அடிகளாரது வாழ்க்கையையும், ஆற்றிய தொண்டினையும் தமிழுலகம் நன்கறிதற் பொருட்டு, அவையே இவ்வறக்கட்டளை யின் முதற்சொற்பொழிவாய் அமைக்கப்பட்டன. நிறுவனத்தில் இவ்வறக்கட்டளை அமைய முன்னின்று பெருவிருப்புடன் செய லாற்றிய அமுதன் அடிகளே இப்பொறுப்பினையும் மகிழ்வுடன் ஏற்றுச் சிறப்புற நிறைவேற்றியுள்ளார்.

தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப் பணியினை முழுமையாகத் தொகுத்து, நேர்நின்று, ஆய்வுக் கண்ணோட்டத் தோடு அணுகி மிகத் தெளிவாகத் தேவையான விளக்கங்களுடன் நூலை ஆசிரியர் படைத்திருக்கும் திறன் மிகுந்த பாராட்டிற் குரியது. அடிகளாரின் தமிழ்ப்பணி வரலாற்றோடு உலகத்தமிழ் மாநாடுகளின் வரலாறும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வரலாறும் பின்னிப் பிணைந்திருப்பதையும் சிறப்பாக விளக்கி யுள்ளார். பல்லாற்றானும் அரியதொரு நூலை நிறுவனம் வெளியிட உதவிய நூலாசிரியருக்கு நிறுவனம் நன்றி தெரி வித்துக் கொள்கிறது.

தம்முடன் பயின்று நட்புறவு கொண்ட அடிகளாரின் நினைவில் இன்புறும் தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணை வேந்தரும், திருவனந்தபுரம், திராவிட மொழியியல் கழகத்தின்

மதிப்புறு இயக்குநருமாகிய பேராசிரியர் முனைவர் வி. ஐ. சுப்பிரமணியம் அவர்களின் கட்டுரை நூலுக்கு அணி செய்யும் வண்ணம் அமைக்கப் பெற்றுள்ளது. 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்ற நிலையில் தம்மோடு அடிகளார் பழகிய நாட்களைத் தம் 'தனிநாயக அடிகள்' கட்டுரை வழி மலரும் நினைவுகளாக மணக்கச் செய்துள்ளார். தமது எண்ணத்தை நிறுவன நூல் வழிப் பகிர்ந்து கொள்ள அன்போடு அனுமதியளித்த பேராசிரிய பெருந்தகைக்கும் நிறுவனம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஆண்டுதோறும் தவத்திரு தனிநாயக அடிகளாரை எண்ணிப் போற்றி அஞ்சலி செய்யும் வகையில் அன்னாருக்கு அறக்கட்டளை நிறுவி உதவிய திருச்சி, தமிழ் இலக்கியக் கழகத்தார்; இவ்வறக் கட்டளை உருவாக்கத்திற்கும், சொற்பொழிவிற்கும், நூலாக்கத்திற்கும் காரணரான நிறுவன இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னிதாமசு அவர்கள்; மெய்ப்பு திருத்தியுதவிய திரு. சு. சண்முக வேலாயுதம்; சொல்லகராதி தயாரித்தளித்த மாணாக்கர் அ. லோ. பழனிசாமி; செவ்வையாக அச்சிட்டளித்துள்ள கவின்கலை அச்சகத்தார் ஆகிய அனைவருக்கும் எங்கள் நன்றி.

சென்னை-113

28-6-93

அன்புடன்

**ச. சிவகாமி**

அறக்கட்டளைப் பொறுப்பாளர்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்



## ஆசிரியர் அறிமுகம்

**பெயர்** : அமுதன் அடிகள்

**ஆயம்** : கத்தோலிக்க சமயக் குரு

**பிறப்பு** : புன்னைக்காயல், 18-4-1943

**கல்வி** : எம்.ஏ. 1965 (மெய்யியல்)—உர்பன் பல்கலைக் கழகம் உரோமை; எம்.ஏ. 1969 (சமயவியல்) உ. ப.க; எகம்.ஏ. 1975 (இதழியல்)—மார்க்கெட் பல்கலைக் கழகம், மில்வாக்கி (U.S.A.) எம். ஏ. 1977 (உளவியல்) மா. ப. க; எம்.ஏ. 1987 (தமிழ்) சென்னைப் பல்கலைக்கழகம்

**ஆய்வு** : முனைவர் பட்டத்துக்காக 'வள்ளலாரின் ஆன்மீக அனுபவங்கள்' பற்றிய ஆய்வு (பாரதிதாசன் பல்கலை) — வீரமாமுனிவர் பற்றிய ஆய்வு (தனிப்பட்ட முறையில்)

**எழுதிய நூல்கள்** : நெஞ்சம் நிறைந்தவர் (1986)
உலகெல்லாம் தமிழ் முழக்கம் (1992)

**கட்டுரை** : பல இதழ்களில் (சமய, இலக்கிய, வரலாற்றுக் கட்டுரைகள்)

**பொறுப்பு** : ஆசிரியர், வேளாங்கண்ணிக் குரலொலி (1977-1987) Editor, Vailankanni Calling (1977-1987)
இயக்குநர், தமிழ்க் கத்தோலிக்க எழுத்தாளர் பேரவை (1977—)
செயலர், தமிழ் இலக்கியக் கழகம், திருச்சி (1987—)
செயற்குழு உறுப்பினர், இந்தியக் கத்தோலிக்க அச்சுத்துறைக் கழகம் (1992—)

# என்னுரை

தவத்திரு. சேவியர் தனிநாயகம் அடிகளார் உலகப் புகழ் பெற்ற தமிழ்ப் பேரறிஞர். உலக அரங்கில் தமிழுக்கு இடம் பெற்றுத் தந்த ஒப்பற்ற தமிழ்த் தொண்டர். இருபதாம் நூற்றாண்டில் இவரைப் போல் உலகளாவிய தமிழ்ப் பணி புரிந்தவர் வேறெவருமில்லை என்பது என் துணிபு.

இத்துணைப் பெரும்புகழ் பெற்ற தமிழ் அறிஞரைத் தமிழுலகம் எளிதாக மறந்து வருவதை உணர்ந்து மனம் நொந்த யான், அவரது தொண்டுகளை உலகுக்கு உணர்த்த விரும்பினேன். திருச்சிப் பகுதியிலுள்ள பல நண்பர்களுடன் இணைந்து அவரது நினைவு மலர் வெளியிடுதல், அவர் பெயரால் அறக்கட்டளை நிறுவுதல் ஆகிய பல பணிகளில் முனைந்து தலைப்பட்டேன்.

பல நல்ல உள்ளங்கள் வழங்கிய நிதியுதவியைக் கொண்டும், கும்பகோணம் ஆயர் மேதகு பீட்டர் ரெமிஜியஸ் ஆண்டகையும், தவப்பெருந்திரு குன்றக்குடி அடிகளாரும் வழங்கிய பொருளுதவியைக் கொண்டும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் தனிநாயகம் அடிகளார் அறக்கட்டளை நிறுவி ஆண்டுதோறும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் ஆற்றப்பட வழிவகுக்கும் பேறுபெற்றதை என் வாழ்வின் பெரும்பேறாகக் கருதுகின்றேன்.

அறக்கட்டளையின் முதல் சொற்பொழிவுகளை வழங்கும் வாய்ப்பினை யான் பெற்ற போது என்னுள் எழுந்த உணர்வுகளைச் சொல்லில் வடிப்பது எளிதன்று. ஏனெனில் தனிநாயகம் அடிகளார் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட மாமனிதர். 1965-ஆம் ஆண்டில் அவரைச் சந்தித்து உரையாடும் வாய்ப்புப் பெற்றது முதல் அவரை என் எளிய பணிகளுக்கு வழிகாட்டியாகக் கொண்டு யான் ஒழுகி வந்துள்ளேன்.

இப்பெறலரும் பெரும் வாய்ப்பினை எனக்கு வழங்கிய உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தார்க்கும், அதன் இயக்குநர் முனைவர் அன்னி தாமசு அம்மையார்க்கும் யான் என்றென்றும் நன்றிக் கடப்பாடு உடையேன்.

இந்நூலை எழுதுவதற்குத் தேவையான கருவி நூல்களையும் இதழ்களையும் கட்டுரைகளையும் கிடைக்கச் செய்த நண்பர்களுக்கும், நேர்காணலின் போது அடிகளார் பற்றிய பல செய்திகளைத் தெரிவித்த பெரியோர்களுக்கும் என் நன்றி உரியது.

இந்நூலை எழுதும் பணியில் என்னை ஊக்குவித்து உதவிய என் அருமைத் தமையன் திரு. ஜே. ஜே. பர்னாண்டோ, அருட் சகோதரி செயக்கொடி, நண்பர் அகரம் திரவியராசு ஆகியோர்க்கும், தட்டச்சு செய்து உதவிய செல்வி கெ. புஷ்பா, செல்வன் சி. சகாயராசு ஆகியோர்க்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைப் புலப்படுத்தி மகிழ்கிறேன்.

ஈன்று புறந்தந்து என்னைச்
சான்றோனாக்க முனைந்த
என் அருமைப் பெற்றோர்
செபமாலை, அமிர்தசீலி.
பெற்ற தாயினும் மேலாக என்னைப்
பேணி வளர்த்து அன்பு செலுத்தி வரும்
அன்னை லூசிபா
ஆகியோரின் திருவடிகளுக்கு
இந்நூலை உரித்தாக்குகின்றேன்.

தமிழ்கூறு நல்லுலகம் என் எளிய முயற்சியினை வரவேற்று ஆதரிக்கும் என நம்புகின்றேன.

அமுதன் அடிகள்

# உள்ளே


| | பக்கம் |
|---|---|
| வாழ்வும் வளமும் | 1 |
| உலகெங்கும் தமிழ் முழக்கம் | 12 |
| தமிழ் உரிமைக் காவலர் | 24 |
| பல்கலைக் கழகச் சாதனைகள் | 41 |
| அறிஞர் கண்ட ஆராய்ச்சி மன்றம் | 57 |
| வரலாறு படைத்த உலக மாநாடுகள் | 69 |
| ஆய்வுக் களத்தில் அரிய இதழ்கள் | 97 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் | 118 |
| தேடிக் கண்ட செல்வங்கள் | 123 |
| தெள்ளமுதத் தமிழ் நூல்கள் | 133 |
| ஆங்கிலத்திலும் ஆராய்ச்சி | 168 |
| தொகுத்து வழங்கிய தொண்டு | 178 |
| யாமறிந்த மொழிகளிலே | 182 |
| பற்பல பணிகள் | 188 |
| பண்பாட்டின் இலக்கணம் | 191 |
| மறைவில் நிறைவு | 199 |
| பின்னிணைப்புகள் | |
| தனிநாயகம் அடிகளாரின் எழுத்தோவியங்கள் | 204 |
| கருவி நூற்பட்டியல் | 216 |
| நேர்காணல் | 218 |
| Bibliography | 219 |
| சிறப்புச் சொல்லகராதி | 223 |

# வாழ்வும் வளமும்

இலங்கை நாட்டு யாழ்ப்பாணம் நெடுந்தீவைச் சார்ந்த ஹென்றி ஸ்தனிஸ்லாஸ் கணபதிப்பிள்ளை, செசில் இராசம்மா வஸ்தியாம் பிள்ளை தம்பதியரின் முதல் மகவாக 2-8-1913 அன்று கரம்பொன் என்னும் ஊரில் பிறந்தவர் சேவியர் தனிநாயகம் அடிகளார். பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் சேவியர் என்பது. தம் தந்தையின் பெயரையும் இணைத்து சேவியர் ஸ்தனிஸ்லாஸ் என்பதே அவரது பெயராக வழங்கி வந்தது.

### சமயப்பணியா? வேண்டாம்

சேவியர் ஸ்தனிஸ்லாஸ் கத்தோலிக்க சமயப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்பது அவர்தம் பெற்றோரின் விருப்பம். தங்கள் முதல் குழந்தை ஆணாகப் பிறந்தால் அவனைச் சமயப் பணிக்கு அர்ப்பணிக்கவேண்டும் என்று அவர்கள் ஏற்கனவே தீர்மானம் செய்திருந்தார்கள். சேவியர் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்தான். கல்வியில் சிறந்து விளங்கினான். பள்ளி ஆண்டு விழாக்களின்போது பரிசுகளைப் பெற்றுக் குவித்தான். 'இவன் பெற்றோர் என்நோற்றார்கொல்' என அனைவரும் வியக்கச் சிறந்து விளங்கினான். ஆனால் சமயப் பணியில் ஈடுபட மறுத்துவிட்டான். அவனது பெற்றோரும், குறிப்பாக அன்னையும் எவ்வளவோ நயந்து வேண்டியும் மறுத்து விட்டான். அவனது அன்னை தன் மரணப் படுக்கையில் அவனைக் கேட்டுக்கொண்டபோதும்கூட 'முடியாது' என்றுதான் பதிலளித்தான்.[1]

---

1. நிர்மலா ராசரெத்தினம்; தமிழும் தனிநாயகரும்; தனிநாயகம் அடிகளார் நினைவுமலர்; அமுதன் அடிகள் (தொகு); திருச்சி; 1992; ப. 1.

### மனம் மாறியது

ஆனால் பள்ளியிறுதி வகுப்பில் பயிலும்போது அவனது மனம் மாறத் தொடங்கியது. லியோ டால்ஸ்டாய் எழுதிய 'புத்துயிர்ப்பு' (Resurrection) என்னும் நூலை அவன் தன் பதினைந்தாம் வயதில் படித்தான். ''அந்நூலைப் படித்ததால்தான் என் வாழ்க்கை சமயச் சேவையிலும் கல்விச் சேவையிலும் உருவாகியது என்று நம்புகிறேன்''[2] என அடிகளார் குறிப்பிட்டுள்ளார். ''நான் இவ்வுலகில் ஒருமுறைதான் வாழமுடியும், எனவே நான் இறக்கும் முன் என்னால் இயன்ற அளவு எல்லா நற்செயல்களையும் செய்தல் வேண்டும். ஏனெனில் மீண்டும் ஒருமுறை நான் வாழப் போவதில்லை' என்று ட்ரம்மன்ட் (Drummond) எழுதியதைப் படித்தமையும் அவரது மனம் மாறிடத் துணைபுரிந்தது.[3] எனவே அவர் கத்தோலிக்க சமயக் குருவாக முடிவு செய்தார். அச்செய்தியை அறிந்து அவரின் தந்தையார் மிகவே மகிழ்ந்தார். அதனை அறிந்து மகிழ அன்னையார் அப்போது உயிரோடு இல்லை.

### ஆங்கிலமே வேண்டும்

இளமையில் உயர்நிலைப்பள்ளியில் அவர் தமிழ் பயின்றார் எனினும் தமிழ்க் கல்வியில் அவர் நாட்டம் கொள்ளவில்லை. உலகப் பொது மொழியாகிய ஆங்கில மொழியில் புலமை பெற்று, அதனைச் செம்மையுற எழுதவும் பேசவும் ஆற்றல் பெற வேண்டும் என்பதே இளமைப் பருவத்தில் அவரது நோக்கமாக இருந்தது. ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளில் பரிசு பெறுவதைப் பெரும் சாதனையாக அவர் நினைத்த காலம் அது.

### ஆங்கிலக் கட்டுரைகள்

1923-ஆம் ஆண்டு முதல் 1930 வரை அவர் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் பயின்ற காலத்தில் Bottled Sunshine என்னும் தங்கள் கல்லூரி மலரின் ஆசிரியராகவும் அவர் விளங்கினார். அவ்வாண்டுகளில் அம்மலரில் அவர் பதினேழு ஆங்கிலக் கட்டுரைகளை எழுதினார் என்பது அவரது கல்வி ஆர்வத்தையும் ஆங்கில எழுத்தாற்றலையும் மெய்ப்பிக்க வல்லது. பிற்காலத்தில் இந்தியாவில் அவர் குருத்துவப் பணியாற்றி வந்த

---

2. தனிநாயகம் அடிகள்; ஒன்றே உலகம்; சென்னை; 1974; ப. 69.
3. நிர்மலா ராசரெத்தினம்; முன் சுட்டியது.

காலத்திலும், இளமையில் தம் எழுத்தாற்றலுக்கு வித்திட்ட கல்லூரி மலரில் இரண்டொரு ஆங்கிலக் கட்டுரைகளை எழுதியதுண்டு.

பின்னர் கொழும்பு நகரிலுள்ள புனித பெர்நார்து குருத்துவக் கல்லூரியில் (1931-1934) மெய்யியல் பயின்றபோதும் அவரது ஆங்கில எழுத்துப்பணி தொடர்ந்தது. கொழும்பிலிருந்து வெளிவந்த The Messenger of the Sacred Heart for Ceylon என்னும் ஆங்கில வார இதழில் Max Pemberton என்னும் புனைபெயரில் பதினொரு கட்டுரைகளை அவர் வடித்து வழங்கினார். இவ்வாறு அவர் தம் எழுத்துத் திறனையும் ஆங்கிலப் புலமையையும் வளர்த்து வந்தார்.

## தடையும் விடையும்

கொழும்பு புனித பெர்நார்து குருத்துவக் கல்லூரியில் தம் மெய்யியற் கல்வியை முடித்த சேவியர், குருத்துவக் கல்லூரியை விட்டு வெளியேற்றப்பட்டார். தக்க காரணமின்றித் தாம் வெளியேற்றப்பட்டமையை எண்ணியெண்ணி இரவெல்லாம் அழுது புலம்பினார் சேவியர். என்ன காரணத்துக்காக அவர் வெளியேற்றப்பட்டார் என்பதை நாம் அறிந்திட இயலவில்லை. மனம் நொந்து "தலையணை கண்ணீரால் தோய அழுது அழுது, இறைவனிடம் என் கவலையையும் பிரச்சினைகளையும் எடுத்துக் கூறாத இரவுகள் இல்லை"[4] என அடிகளாரே தம் நிலையினை எடுத்துரைத்துள்ளார்.

1934ஆம் ஆண்டில் இந்திய நாட்டுக் கேரள மாநிலத்தின் திருவனந்தபுரம் பேராயர் மார் இவானியோஸ் இலங்கை சென்றிருந்தார். அவருடன் சேவியர் தொடர்பு கொண்டு திருவனந்தபுரம் மறைமாநிலத்தில் சேர்ந்தார். சேவியரின் அறிவாற்றலைக் கண்ட மார் இவானியோஸ் ஆண்டகை சமயவியல் கல்வி பயில்வதற்காக அவரை உரோமை மாநகரிலுள்ள உர்பன் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பினார்.

## பன்மொழி பயின்றார்

1934-ஆம் ஆண்டு உரோமை சென்றடைந்த சேவியர் உர்பன் குருமடத்தில் மாணவராகி, உர்பன் பல்கலைக் கழகத்தில் சமய

4. வே. அந்தனி ஜான் அழகரசன்; தனிநாயக அடிகளின் வாழ்வும் பணியும்; மட்டுநகர்; 1984; ப. 114.

வியல் பயிலத் தொடங்கினார். ஏற்கனவே ஆங்கிலத்திலும் இலத்தீனிலும் புலமை பெற்றிருந்த சேவியர் உரோமையில் இத்தாலிய மொழியினைத் திறம்படப் பயின்றதோடு ஸ்பானிஷ், போர்த்துக்கேயம், பிரெஞ்சு, செர்மன், கிரேக்கம், எபிரேயம் ஆகிய மொழிகளையும் பயின்றார்.

உர்பன் குருமடத்தில் நாற்பத்து மூன்று நாடுகளைச் சேர்ந்த 250 மாணவர்கள் பயிற்சி பெற்றுவந்தனர். "அவருடன் ஐந்து ஆண்டுகள் வாழ்ந்ததன் பயனாகவே பரந்த உலக மனப்பான்மை படைத்தேனாயினேன்"[5] என்றும், "வெவ்வேறு நாடுகளைப் பற்றியும் இலக்கியங்களைப்பற்றியும் அறிவதற்கு அக்கல்லூரி எனக்கு அரிய வாய்ப்பை அளித்தது. ஒன்றே உலகம் எனும் மனப்பான்மையை அக்கல்லூரி நன்கு வளர்த்தது"[6] என்றும் அடிகளார் வரைந்துள்ளார்.

### உரோமையிலும் ஆங்கிலமே

உரோமையில் பயிலும்போதும் சேவியர் ஆங்கில மொழியி லேயே கவனம் செலுத்தினார். அங்கு அமெரிக்கரும் ஆஸ்திரேலி யருமே அவரது நண்பர்கள். தமிழ் மாணவர்களுடன் அவர் நெருங்கிப் பழக மாட்டார்.[7]

### தமிழ் எதற்கு?

உரோமை உர்பன் பல்கலைக் கழகத்தில் பயின்றுவந்த தமிழ் மாணவர்கள் ஒருங்கிணைந்து 'வீரமாமுனிவர் தமிழ்ச் சங்கம்' என்றோர் அமைப்பினை நிறுவியிருந்தனர். இதனைப்பற்றி அடிகளாரே தமது 'தமிழ்த்தூது' என்னும் நூலில் குறிப்பிடு கின்றார். ஆங்கிலப் புலமையில் தனிக் கவனம் செலுத்திவந்த அடிகளார், வீரமாமுனிவர் தமிழ்ச்சங்க நிகழ்ச்சிகளில் விருப் பின்றியே கலந்து கொண்டார். அவரது உள்ளம் தமிழ்க் கல்வியில் ஈடுபடாத காலம் அது. அன்றைய அவரது தமிழ்க் கையெழுத்து சிறுபிள்ளையின் எழுத்தைப்போலப் பக்குவமின்றியிருந்ததைக் காணலாம்.[8]

---

5. தனிநாயக அடிகள்; தமிழ்த்தூது; சென்னை: 1962; ப. 19.
6. தனிநாயக அடிகள்; ஒன்றே உலகம்; ப. 132.
7. சுவாமி அமலதாசன்; நேர்காணல்; 9-12-1992.
8. மேற்படி

## தமிழ் ஆர்வம் அரும்புகின்றது

தமிழ்க் கல்வியில் மனம் தோயாத அடிகளார் தமிழில் நாட்டம் செலுத்தத் தொடங்கியது எவ்வாறு?

உரோமையில் பயிலும்போதே தமிழ்ப்பற்று அவரது உள்ளத்தில் தோன்றத் தொடங்கியது எனலாம். 1939-ஆம் ஆண்டில் பன்னிரண்டாம் பத்திநாதர் போப் ஆண்டவராகப் பொறுப்பேற்ற அன்று "இந்திய இலங்கை நாடுகளுக்கு வானொலி உரைகள் நிகழ்த்தப்பெற்றன. தமிழிலும் உரைகள் நிகழ்த்தினோம்" என எழுதும் அடிகளார், "பாரதியாரின் அவா—தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவ வேண்டுமென்ற அவா—விஞ்ஞானக் கருவியின் வழியாய் நிறைவேற்றப்பட்டதை எண்ணி என் மனம் உவகையுற்றது"[9] எனவும் எழுதியுள்ளமை உரோமை வாழ்க்கையின்போதே அடிகளாரின் உள்ளத்தில் தமிழுணர்வு அரும்பத் தொடங்கிவிட்டதை உணர்த்துகின்றது.

உரோமையில் பயிலும் காலத்தில் "என் தமிழ்ப்பற்று மிகுந்ததே அன்றிக் குறைந்திலது" என்றும், "அவ்வாண்டுகளில் உரோமை மாநகரில் ஒருங்கு வாழ்ந்த தமிழர் எண்மர். யாம் 'வீரமாமுனிவர் கழகம்' என ஒன்று குருமடத்தில் நிறுவி, தமிழை ஆண்டும் ஒரு சிறிது பயின்று வந்தனம். வத்திக்கான் வானொலி நிலையத்திலிருந்து தமிழில் ஒலிபரப்பும் வாய்ப்பும் பன்முறை பெற்றோம். அங்ஙனம் ஒலிபரப்புந்தோறும் 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்' பரவும் வகை செய்தோம் எனக் கருதிக் களிப்புற்றோம்"[10] என்றும் அடிகளார் எழுதியுள்ளமை இவ்வுண்மையை நமக்கு உணர்த்த வல்லது.

## ஆளுமை வளர்ச்சி

சேவியரின் மனத்தையும் அறிவையும் பக்குவப்படுத்தி வளர்த்த உரோமை வாழ்வு அவரது ஆளுமையையும் மிகச் சிறப்பானதாக மாற்றியமைத்தது என்பது உண்மை. "ஓர் அரசுத் தூதரின் நாகரிகமும் புலிட்சர் பரிசு பெறுவோர்க்குரிய சொல் வளமையும் ஆக்சுபோர்டு பல்கலைக் கழக அறிஞருக்குரிய ஆங்கிலப் பேச்சு முறையும் கொண்டவர்"[11] எனப் பார்பரா ஜென்க்சு*

---

9. தனிநாயக அடிகள்; ஒன்றே உலகம்; ப. 128.
10. தனிநாயக அடிகள்; தமிழ்த் தூது; ப. 20.
11. Xavier S. Thani Nayagam; The carthaginian clergy; Tuticorin; 1950, Wrapper p. 4.

என்னும் அமெரிக்க அம்மையார் பின்னாளில் (1950) அடிகளாரைப் போற்றிப் புகழ்வதற்குரிய அடிப்படை, அடிகளாரின் உரோமை வாழ்வின்போதுதான் உருவாகியது என்பது மிகையன்று. அடிகளார் பழகுவதற்கு இனியவரென்றும், அறிவாற்றல் மிக்கவரென்றும், கடுமையாக உழைப்பதற்கு அஞ்சாதவரென்றும், பெரியோர்களுடன் தொடர்பும் உறவும் கொள்ளுவதில் வல்லவரென்றும் அவரது வகுப்புத்தோழர் சுவாமி அமலதாசன் கூறுவார்.

## திருநிலைப்பாடு

1938-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19-ஆம் நாள் உரோமையில் கத்தோலிக்கச் சமயக் குருவாக அடிகளார் திருநிலைப்படுத்தப் பட்டார். மறுநாள் தமது முதல் திருப்பலியைப் புனித செசிலியா கல்லறைச் சுரங்கத்தில் நிறைவேற்றினார். தம் அன்னையின் பெயர்கொண்ட அப்புனிதையின் மீது தாம் கொண்டிருந்த பக்தி காரணமாகவே, தம் முதல் திருப்பலிக்கு அடிகளார் அவ்விடத்தைத் தேர்ந்துகொண்டார்.

## வரலாற்றுப் புலமை

உரோமையில் அடிகளார் உலகின் செம்மொழிகளையும் அவற்றின் இலக்கியங்களையும் கற்றதோடமையாது உரோமை நகரின் தொன்மைச் சிறப்புக்களையும் கற்றறிதலில் கவனம் செலுத்தினார். அடிகளார் தம் முனைவர் பட்ட ஆய்வினைத் தொன்மையியல் துறையில் மேற்கொள்வார் என்று அவர்தம் நண்பர்கள் எதிர்பார்க்குமளவுக்கு அவர் தொன்மையியல் துறையில் ஆர்வம் செலுத்திவந்தார். அவ்வார்வத்தை இணைத்துக் கொண்டவராக மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓர் ஆப்பிரிக்க ஆயரின் காலத்தைப் பற்றி ஆய்வுசெய்து வரலாற்றுத் துறையில் அவர் முனைவர் பட்டம் பெற்றார். தம் ஆய்வு, 'தொன்மையியல் துறையின்மீது தாம் கொண்டுள்ள ஆர்வத்தின் விளைவே'[12] என்று அடிகளார் குறிப்பிட்டுள்ளார்.

## கேரளத்தில்

உரோமையில் முனைவர் பட்டம் பெற்றபின் 1939-ஆம் ஆண்டில் திருவனந்தபுரம் திரும்பிய சேவியர் ஸ்தனிஸ்லாஸ் அடிகளார் கேரளத்தில் பணியாற்றத் தொடங்கினார். ஆனால் அவர் அப்பணியில் மன நிறைவு கொள்ளவில்லை. திருவனந்தபுரம்

12. Ibid p. vii.

மறைமாநிலம் கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்ததே எனினும் அது சீரியன் பாரம்பரியத்தையும் ஆசாரங்களையும் பின்பற்றி வந்தது. இதுவும் அடிகளாருக்கு மனநிறைவு தரவில்லை.[13]

## தூத்துக்குடி வருகிறார்

ஆகவே உரோமையிலுள்ள கத்தோலிக்க சமய உயர் அதிகாரிகளிடம் இசைவு பெற்று 1940-ஆம் ஆண்டில் அடிகளார் தூத்துக்குடி மறைமாவட்டத்தில் (வ. உ. சிதம்பரனார் மாவட்டம்) சேர்ந்தார்.[14] அம்மறைமாவட்ட ஆயர் பிரான்சிஸ் திபூர்சிஸ் ரோச் ஆண்டகை, அடிகளாரை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

## ஆற்றல்மிக்க ஆயர்

ரோச் ஆண்டகை தமிழ், ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் வல்லுநர். தமிழிலும் ஆங்கிலத்திலும் நாவன்மையுடன் உரையாற்ற வல்லவர். நாகரிகத்திலும் பண்பாட்டிலும் தலைசிறந்தவர். ''ரோச் ஆண்டகை அறிவாற்றலும் சிறந்த நாகரிகமும் கொண்டவர்...கடுஞ்சொற்களை அவரிடம் காணுதல் அரிது... நிரம்பிய சான்றோர் அவர்... புனித வாழ்வு வாழ்ந்தவர்...நிறைய நூல்களைப் படித்தும் பல நாடுகளுக்குப் பயணம் செய்தும் தம் ஆளுமையைச் சிறந்ததாக்கிக் கொண்டவர், தமிழ்ப் பண்பாட்டின் மீது மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த அவர் தம் சொற்பொழிவுகளிலும் மறையுரைகளிலும் திருக்குறளை அடிக்கடி மேற்கோளாகக் காட்டுவார்''[15] என ரோச் ஆண்டகை நூற்றாண்டு நினைவு மலரில் அடிகளாரே பிற்காலத்தில் எழுதியுள்ளார்.

## தனிநாயகம் ஆனார்

ரோச் ஆண்டகையின் ஆணைக்கேற்ப ஸ்தனிஸ்லாஸ் அடிகளார் நெல்லை மாவட்டத்திலுள்ள வடக்கன்குளம் என்னும் ஊரில் அமைந்துள்ள புனித தெரசாள் உயர்நிலைப் பள்ளியில் துணைத் தலைமை ஆசிரியராக 1940ஆம் ஆண்டு முதல் 1945ஆம் ஆண்டு வரை பணிபுரிந்தார். ரோச் ஆண்டகையும், பள்ளித்

---

13. வே. அந்தனிஜான் அழகரசன்; முன் சுட்டியது; ப. 7.
14. மேற்படி
15. X.S. Thaninayagam; Bishop Francis Tiburtius Roche, ரோச் ஆண்டகை நூற்றாண்டு நினைவுமலர், சுவாமி ஸ்டீபன் கோமஸ் (தொகுப்பு) தூத்துக்குடி; 1979; ப. 15.

தலைமையாசிரியர் ஜே. எஸ். லோபோ அடிகளாரும் தமிழறிவு மிக்கவர்களாதலின் சேவியர் அடிகளாரின் தமிழ் ஆர்வத்தைத் தூண்டி வளர்த்தனர்.

இதன் விளைவாக வடக்கன்குளத்தில் பண்டிதர் குருசாமி சுப்பிரமணிய ஐயர் என்பவரிடம் நான்கு ஆண்டுக்காலம் அடிகளார் தமிழ் பயின்றார்.

அடிகளார் ஒரு தமிழ்ப் பெயரைச் சூட்டிக் கொள்ளவேண்டும் என்று ரோச் ஆண்டகை கருத்துத் தெரிவித்தபோது அடிகளார் அக்கருத்தினை மனமுவந்து ஏற்றார். இதுபற்றி அடிகளார் தம் தந்தையிடம் எழுதிக்கேட்டு, நெல்லை மாவட்டத்திலிருந்து நெடுந் தீவில் குடியேறிய தனிநாயக முதலி பரம்பரையில் தாம் தோன்றியவர் என்பதை அறிந்து தம் பெயரைச் 'சேவியர் ஸ்தனிஸ்லாஸ் தனிநாயகம்'[16] என்று மாற்றிக் கொண்டார்.

### வடக்கன்குளத்தில் ஆசிரியப்பணி

வடக்கன்குளத்தில் அடிகளார் பணிபுரிந்த ஆறாண்டுக் காலத் திலும் (1940-45) ஆங்கிலம், தமிழ், வரலாறு, சமயப் பாடம் ஆகிய வற்றைக் கற்பித்து வந்தார். அடிகளாரின் ஆளுமை அங்கு மாணவர்களைப் பெரிதும் கவர்ந்தது. பள்ளியில் கண்டிப்பு மிக்க ஆசிரியரே எனினும் விளையாட்டுத் திடலில் மாணவர்களுடன் கால்பந்து விளையாடுவதில் அடிகளார் ஈடுபடுவார். அங்குத் தம்மைத் துணைத் தலைமையாசிரியராகப் பார்க்காமல், விளை யாட்டுத் தோழராகவே கருதவேண்டுமென்று வலியுறுத்துவார்.

### அண்ணாமலையில் தமிழ்க் கல்வி

நான்காண்டுக் காலம் பண்டிதரின் துணையோடு தமிழ் பயின்ற அடிகளாரைத் தமிழ் மொழியின் இலக்கியச் சிறப்பும் கருத்து வளமையும் ஈர்த்துக் கொண்டன. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'உண்டாலம்ம இவ்வுலகம்' போன்ற புறநானூற்றுச் செய்யுட்களின் கருத்துச் செறிவில் உளம் தோய்ந்த அடிகளார், தொடர்ந்து தமிழ்பயின்று முதுகலைப்பட்டம் பெற முடிவு செய்தார்.

தம் முடிவினை ரோச் ஆண்டகையிடம் தெரிவித்தபோது அவர் அதற்கு மனமுவந்து இசைவு வழங்கினார்.

---

16 நிர்மலா இராசரெத்தினம்; முன் சுட்டியது; ப. 2.

ஆகவே 1945ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் முதுகலை மாணவராகச் சேர்ந்தார் அடிகளார். அப்போது அவருக்கு வயது மூப்பத்திரண்டு.

புகழ்பெற்ற அரசியல் அறிஞர், சென்னை மாநிலச் சட்ட மன்றத்தின் முன்னாள் தலைவர், ஆங்கிலத்தில் சிறந்த எழுத் தாளர், பேச்சாளர், சட்டக் கல்லூரி பச்சையப்பன் கல்லூரி ஆகிய வற்றின் முன்னாள் முதல்வர் எனப் பலவகைச் சிறப்புக்களைக் கொண்ட பேராசிரியர் எம். இரத்தினசாமி அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக விளங்கிய காலம் அது. அவரது பெருமுயற்சியால் பல்கலைக்கழக விருந்தினர் விடுதியில் அடிகளார் தங்கிப் பயிலப் பல்கலைக்கழக இணைவேந்தர் செட்டிநாட்டரசர் இராசா சர் முத்தையா செட்டியார் ஒப்புதல் வழங்கினார். அன்று மூத்த தமிழறிஞராக விளங்கியவரும், தமிழ் மொழியியல் முன்னோடியும், பின்னர் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பணியாற்றியவருமாகிய பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராக அப்போது பணியாற்றிவந்தார்.

அடிகளாரின் பல்கலை ஆற்றலையும் பன்மொழிப் புலமையை யும் கண்ட பல்கலைக் கழகத்தார் அடிகளாரை முதுகலை மாணவ ராகச் சேர்த்துக் கொண்டனர்.

**மாணவரும் தோழரும்**

தமிழ்ப் பேராசிரியர்களாகிய தெ. பொ. மீனாட்சி சுந்தர னாரும் அ சிதம்பரநாதனாரும் அடிகளாரைத் தங்கள் மாணாக்க ராக மட்டும் கருதவில்லை, நட்புணர்வும் கொண்டனர். சிதம்பர நாதனார் பின்னாளில் சென்னைப் பல்கலைக்கழக அகராதி ஆக்கக் குழுவின் தலைவராகப் பணியாற்றியபோது அடிகளாரை யும் அக்குழுவின் உறுப்பினராக்கிக் கொண்டார். அவரும் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரும் அடிகளார் நிறுவிய தமிழ்ப்பண்பாட்டுக் கழகம், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் ஆகிய அமைப்புக்களிலும், அடிகளார் நிறுவி அவரே முதன்மை ஆசிரியராக இருந்து நடத்தி வந்த Tamil Culture என்னும் ஆங்கில முத்திங்கள் இதழின் ஆசிரியர் குழுவிலும் உறுப்பினராகவும் பொறுப்பாளராகவு மிருந்து பணியாற்றியுள்ளனர்,

## தயக்கமும் நெருக்கமும்

அண்ணாமலையில் பயின்றபோது அவர் கத்தோலிக்க சமயக் குரு என்பதாலும், மற்ற மாணவர்களைவிட வயதில் சற்றே மூத்தவர் என்பதாலும் பொதுவாக மாணவர்கள் அவருடன் பழகத் தயங்கியதுண்டு. எனினும் வி. அய். சுப்பிரமணியம் (உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் பொதுச் செயலாளர், தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தர்) போன்ற சிலர் அடிகளாருடன் நட்புறவு பூண்டனர்.

## இந்து சமயத்திலும் தேர்ச்சி

தேவாரம், திருவாசகம் போன்ற சைவ சமய இலக்கியங்களை அடிகளார் நன்கு கற்றறிந்திருந்தமை சுப்பிரமணியம் போன்றோருக்குப் பெருவியப்பைத் தந்தது.[17] ரிக் வேதத்தை அடிகளார் ஆங்கில மொழிபெயர்ப்பைக் கொண்டு பயின்றுவந்ததும் அவர்களுக்கு வியப்பளித்தது. இந்து சமய இலக்கியங்களைப்பற்றி அடிகளார் தம் மாணவத் தோழர்களுடன் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் உரையாடுவதுண்டு. 'ஒன்றே உலகம்' என்றும், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றும் செல்லுமிடமெல்லாம் எடுத்தோதிவந்த அடிகளார் இந்து சமய இலக்கியங்களைக் கற்றதிலும் போற்றியதிலும் வியப்பில்லை.

## இலங்கைத் தமிழருடன்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இயங்கி வந்த இலங்கை நாட்டு மாணவர் மன்றத்தில் உறுப்பினராகச் சேர்ந்த அடிகளார் மற்ற உறுப்பினர்களுக்கிடையே எழுந்த பிணக்குகளைத் தீர்த்து வைப்பதில் அவ்வப்போது ஈடுபடுவதுண்டு. மன்ற அலுவலகத்தில் ஆறுமுக நாவலர், நல்லூர் ஞானப்பிரகாசர், விபுலாநந்த அடிகள் போன்ற ஈழத் தமிழ் அறிஞர்களின் படங்கள் இடம்பெறவும் அவர் உதவினார்.

## சங்க இலக்கியப் புலமை

அடிகளார் சங்க இலக்கியங்களை விரும்பிப் பயின்றார். சங்க இலக்கியங்களே அவரைத் தமிழ் ஆராய்ச்சித் துறைக்கு ஈர்த்தன என்பது மிகையன்று. அவரது எம். லிட். பட்ட ஆய்வேடும் சங்க

---

17. V. I. Subramaniom; His Long-Lasting Revolution in Tamil studies, Tamilaram, Rajan Philipupillai (ed) Jaffna; 1983; p. 44.

இலக்கியத்தைப் பற்றியதே என்பதும் ஈண்டு நினைவு கூர்தற்குரியது. சங்க இலக்கியங்களோடு சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் அடிகளார் விரும்பிப் பயின்றார். பேராசிரியர் அ. சிதம்பரநாதனார் சிலப்பதிகாரத்தை ஆர்வமுடன் கற்றுக் கொடுத்தமையும் இதற்குக் காரணமாகும்.

## மிகச் சிறந்த ஆய்வு

1947-ஆம் ஆண்டில் தமிழில் முதுகலைப் பட்டம் (எம்.ஏ) பெற்றபின் அடிகளார் தொடர்ந்து கற்று 1949-ஆம் ஆண்டில் தமிழ் இலக்கிய முதுகலைப் (எம்,லிட்.) பட்டமும் பெற்றார். அப்பட்டத்துக்காகப் பேராசிரியர் அ. சிதம்பரநாதனாரை வழிகாட்டியாகக் கொண்டு பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' என்னும் பொருள் பற்றி அடிகளார் ஆய்வு மேற்கொண்டார். அவ்வாய்வேடு Nature in Ancient Tamil Poetry என்னும் நூலாக 1952-ஆம் ஆண்டில் தமிழ் இலக்கியக் கழகத்தால் வெளியிடப் பெற்றது. இந்நூலின் மறுபதிப்புக்கள் Nature in Tamil Poetry—The Classical Period, Landscape and Poetry —A Study of Nature in Classical Tamil Poetry என்னும் பெயர்களோடு வெளியாயின. இந்நூலைத் திறனாய்வு செய்த பேராசிரியர் கமில் சுவலபில் 'பழந்தமிழ் இலக்கியங்களைப் பற்றி இதுவரை எழுதப்பட்டவை அனைத்தையும் இந்நூல் பலவகையிலும் விஞ்சி நிற்கின்றது'[18] என்று குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் இலக்கியக் கழகம்

(1948-ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் 'தமிழ் இலக்கியக் கழகம்' என்னும் அமைப்பினை அடிகளார் நிறுவினார். அத்துடன் 'எழுத்தாளர் இல்லம்' ஒன்றினையும் 'உயர்நிலை தமிழ் ஆராய்ச்சிக் கழகம்' ஒன்றினையும் நிறுவிட அடிகளார் திட்டமிட்டார். அத்திட்டம் செயல் வடிவம் பெறவில்லை. தமது எம்.லிட். பட்ட ஆய்வேட்டையும், தேம்பாவணி ஆராய்ச்சி (ஜே. ஜி. சுந்தரம்), திருக்காவலூர்க் கோவில் (இரா. பி. சேதுப்பிள்ளை), இயேசுநாதர் (செல்வராசு ரெட்டியார்), பத்துப்பாட்டு ஆங்கில மொழிபெயர்ப்பு (ஜே. வி. செல்லையா), திராவிடர் வரலாறு முதலிய பல நூல்களையும் தமிழ் இலக்கியக் கழகத்தின் வழியாக அடிகளார் வெளியிட்டார்.

---

18. Rajan Philipupillai; A Biographical Sketch, Ibid P. 5.

# உலகெங்கும் தமிழ் முழக்கம்

உலக நாடுகளில் தமிழ் இலக்கியங்களைப் பற்றியும் கலைகளைப் பற்றியும் உரைகள் நிகழ்த்த வேண்டுமென்னும் எண்ணம் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவராக இருந்தபோது அடிகளாரின் உள்ளத்தில் முகிழ்த்தது.

தமிழ் இலக்கியத்தில் தோய்ந்திருந்த அடிகளார் அதனை உலகறியச் செய்யும் வகையில் உழைத்திட அப்போதே உறுதி பூண்டார்.

''நான்காண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று எம்.ஏ. சிறப்புப் பட்டமும் எம்.லிட். ஆராய்ச்சிப் பட்டமும் பெற்றேன். தமிழ்க் கலைகளில் மூழ்கியிருந்த நான் அந்தக் காலத்திலேயே நம் ஒப்பற்ற இலக்கியத்தைப் பற்றி உலகு அறிய வேண்டுமென ஒரு சிறிதாகுதல் உழைக்கஉறுதி பூண்டேன்''[1] என்று அடிகளாரே தெரிவித்துள்ளார். இவ்வாறு உலக நாடுகளில் தமிழ்க் கலைத்தூது நிகழ்த்துவதற்கு அடிகளார் மிகவும் பொருத்த மானவரே. ஏனெனில் ஏற்கனவே ஐரோப்பாவில் பயின்றதால் அந்நாட்டு மக்களுடனும் மொழிகளுடனும் தொடர்புடையவர் அவர். ஆங்கிலம், இத்தாலியம், ஸ்பானிஷ், போர்த்துக்கேயம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளில் மிக அருமையாக உரையாடவும் உரை நிகழ்த்தவும் வல்லவர் அடிகளார்.

**தூது நிகழ்த்திய நாடுகள்**

1949-ஆம் ஆண்டு முதல் 1950-ஆம் ஆண்டுவரை ஈராண்டுகள் மலேயா, சீனா, சப்பான், அமெரிக்க ஐக்கிய நாடு, தென் அமெரிக்

1. வே. அந்தனி ஜான் அழகரசன்; முன்சுட்டியது; ப. 15

காவிலுள்ள பனாமா, எக்குவதோர், பெரு, சிலி, அர்ஜெண்டீனா, உருகுவே, பிரேசில், மெக்சிக்கோ, மேற்கிந்தியத் தீவுகளான ட்ரினிடாட், ஜமெய்க்கா, மார்த்தினீக், நடு ஆப்பிரிக்கா, வட ஆப்பிரிக்கா, இத்தாலி, பாலஸ்தீன், எகிப்து எனப் பல நாடுகளில் பயணம் செய்து தமிழ்மொழி, கலை, வரலாறு ஆகியவை பற்றி அடிகளார் உரையாற்றினார். அமெரிக்க ஐக்கிய நாட்டில் மட்டும் ஒரே ஆண்டில் இருநூற்றுக்கு மேற்பட்ட சொற்பொழிவுகளை அவர் நிகழ்த்தினார்.[2]

### அறியாமை

மேனாட்டு மொழியாராய்ச்சியாளரும் இலக்கிய ஆராய்ச்சியாளரும் இந்திய நாகரிகத்தை அறிவதற்கு வடமொழி இலக்கியப் பயிற்சியே போதும் என நினைத்திருந்ததையும், மேனாடுகளில் வெளிவந்துள்ள இந்திய இலக்கிய வரலாற்று நூல்களில் தமிழ் இலக்கியத்தைப் பற்றிய கருத்துச் சிறிதேனும் இடம் பெறாமையையும் தம் தூதுப் பயணத்தின்போது கண்டு அடிகளார் மிகவும் மனம் வருந்தினார். "அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கொலம்பியா, ஹாவர்டு, கலிபோர்னியா போன்ற பல்கலைக்கழகங்களில் கீழ்த் திசை நாடுகளைப் பற்றி ஆழ்ந்த ஆராய்ச்சி நடந்து வருகிறது. ஆயினும் தமிழைப் பற்றிய ஆராய்ச்சி மிகக் குறைவேயாம்...... மொழி நூலைக் கற்ற சிலர் திராவிட மொழிகளின் தனித் தன்மையை ஒருவாறு உணர்ந்திருந்தனர். ஆயினும் இந்தியக் கலைகள் என்றால் வடகலைகள் என்றும், இந்திய நாடு என்றால் சிந்து கங்கைப் பெருவெளி என்றும், இந்தியப் பேரூர்கள் என்றால் பம்பாய், டில்லி, கல்கத்தா என்றும் நினைக்கும் அளவுக்கு இந்தியாவின் வட பிரிவினது பெருமையையே இதுகாறும் மாறுபட உணர்ந்துள்ளனர்"[3] என்பதை அடிகளார் கண்டார். சப்பான் நாட்டிலும் ஏறக்குறைய இந்நிலையையே அடிகளார் கண்டார். "திராவிடக் கலைகளைப் பற்றியும் பண்பைப் பற்றியும் யாம் அறிய விரும்புகின்றோம். சப்பானிய மொழியில் அவற்றைப் பற்றி அறியத்தக்க நூல்கள் எமக்குக் கிடைத்தில. ஆங்கிலத்திலும் மிகக் குறைவே"[4] என்று சப்பானில் கீழ்த்திசைக் கலைமொழி ஆசிரியர் ஒருவர் தம்மிடம் கூறியதாக அடிகளார் எழுதுகின்றார். எனினும் தோக்கியோவிலுள்ள பழைய நூல் விற்பனைக் கூடமொன்றில்

---

2. தனிநாயக அடிகள்; தமிழ்த் தூது; ப. 13.
3. மேற்படி பக். 14-15
4. " ப. 7

போப் ஐயருடைய பல நூல்களையும் தீட்சிதரின் சிலப்பதிகார மொழிபெயர்ப்பையும் தாம் கண்டதாக அடிகளார் குறிப்பிடுகின்றார்.

## தமிழ் — சப்பானிய ஒப்புமைகள்

அடிகளார் சப்பானிய மொழியினைக் கற்கவில்லை. எனினும் தாம் அங்குத் தங்கியிருந்தபோது சப்பானிய மொழி திராவிட மொழிகளுடன் தொடர்புடைய மொழியன்று எனினும், தமிழைப் போல் ஒட்டுநிலை வகுப்பினைச் சார்ந்தது என்பதை அறிந்தார். சப்பானியச் செய்யுட்களில் இறைச்சி போன்ற சில பண்புகள் அமைந்திருந்தமையையும், சங்க இலக்கிய அகப் பாடல்களின் உரையாசிரியர் அப்பாடல்களுக்குக் கொளு எழுதியிருந்தது போலச் சப்பானியப் பாடல்களுக்கு அந்நாட்டுப் புலவர் கொளு எழுதியிருப்பதையும் அறிந்து மகிழ்ந்தார். சப்பானிய இலக்கியத்தில் 'தங்கா' எனப்படும் செய்யுள் வகை முப்பத்தோரசைகளைப் பேரெல்லையாகக் கொண்டு, கருத்திலும் கொளுவிலும் நம் குறுந்தொகைச் செய்யுட்களைப் போல விளங்குவது பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார்.[5]

## ஹவாயில் சங்க கால நினைவுகள்

ஹவாய்த் தீவுகளில் மலர்களையும் மாலைகளையும் பெரிதாய்ப் பேணுவதைக் கண்டபோது ''சங்க இலக்கியத்தின் நினைவு என்னையறியாமலே எனக்குத் தோன்றிற்று''[6] என அடிகளார் எழுதுகின்றார். ''ஏனெனில் அங்குத் துறைமுகத்துக்கு வந்த மக்கள் அனைவரும் கண்ணியும் மாலையும் தாரும் கோதையும் அணிந்தே வந்தனர். விருந்தாக வந்தவர்க்கு மாலைகளைச் சூட்டினர். வழியனுப்புவோருக்கும் மாலைகளைச் சூட்டி விடையளித்தனர். சிலர் தழையுடைகளை அணிந்து வந்திருந்தனர். இப்பெண்டிரும் ஆடவரும் சங்க காலத் தமிழ் மக்களைப் போல எனக்குத் தோன்றினர் என்பதில் சிறிதேனும் உயர்வு நவிற்சியன்று''[7] என்பார் அடிகளார்.

## அமெரிக்க ஐக்கிய நாட்டில் அடிகளார்

தம் ஈராண்டுப் பயணத்தில் அடிகளார் ஓராண்டுக்கு மேல் அமெரிக்க ஐக்கிய நாட்டிலேயே தங்கித் தமிழ்த் தூது நிகழ்த்தினார்.

---

5. மேற்படி ப 9
6. ,, ப. 10
7. மேற்படி

"அந்நாட்டவர் பிறநாடுகளைப்பற்றியும் பிற மக்களைப் பற்றியும் பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் வேற்று நாட்டுச் சொற்பொழிவாளரை அழைப்பது பெருவழக்கம். சொற்பொழிவுகள் கேட்பதிலும், விருந்துகளுடன் கூட்டங்களைக் கூட்டுவதிலும், விருந்தோடு விரிவுரைகள் நிகழ்த்துவதிலும் ஐக்கிய அமெரிக்கா பிற நாடுகளைவிடத் தேர்ச்சிபெற்றது... பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் கிழமைக்கு ஒருமுறை மாணவர் பொதுக் கூட்டம் கூட்டி ஆசிரியரையும் பேரறிஞரையும் வரவழைத்து விரிவுரைகள் நிகழ்த்துவிப்பர்" எனக் குறிப்பிடும் அடிகளார், "ஆதலால் ஐக்கிய அமெரிக்காவில் ஓராண்டில் யான் தமிழைப் பற்றி இருநூறு விரிவுரைகள் நிகழ்த்தியது பெருவியப்பன்று"[8] என அடக்கமாக எழுதுகின்றார்.

அடிகளாரின் உலகத் தமிழ்த்தூதுப் பணி பெரும்பாலும் விரிவுரைகள் மூலமே நடைபெற்றது. எனினும் வானொலி, தொலைக்காட்சி நேர்காணல்கள் மூலமும் அவரது பணி நடைபெற்றது. அவ்வாறே செய்தித்தாள் நேர் காணல் மூலமாகவும் அடிகளார் அந்நாடுகளில் தமிழ்ப்பணி புரிந்தார்.[9]

### அறிமுக உரைகளே!

தம் பயணத்தின்போது அடிகளார் ஆற்றிய விரிவுரைகளில் பெரும்பாலும் தமிழைப் பற்றிய சில பொதுக் குறிப்புக்களே அமைந்திருந்தன. அதற்குக் காரணம் "தமிழைப் பற்றி யாதேனும் அறியார்க்கு ஆராய்ச்சியுரை நிகழ்த்துதற்கு இடமின்று"[10] என அடிகளார் கூறுவார்.

பல்வேறு கழகங்களிலும் ஊர்களிலும் வெவ்வேறு குழுவினர்க்கு உரை நிகழ்த்தியதால் ஏறக்குறைய நான்கு ஐந்து விரிவுரைகளையும் அதே கருத்துக்களையும் மீண்டும் மீண்டும் அடிகளார் உரைத்து வந்தார். "தென் இந்தியாவின் பண்பாட்டு மரபு", "தென் இந்திய இலக்கியம்", "தென் இந்தியாவின் அறிப்படாத இலக்கியம்", "புதிய இந்தியா" போன்ற தலைப்புகளில் அடிகளார் அந்நாடுகளில் உரையாற்றினார் என்பதற்குரிய சான்றுகள்[11] கிடைத்துள்ளன. தமிழர் பெருமையையும், தமிழரின் பண்டை வணிகத்தையும்,

---

8. மேற்படி ப. 13
9. " பக். 13-14 10. " ப. 15
11. La Prensa 21-9-1950 P. 3; The Southern Cross 26-3-1950

யவனர் உரோமர் போன்றோருடன் தமிழ்நாட்டு நட்பையும் அடிகளார் தம் விரிவுரைகளில் விளக்கிக் கூறினார். "அம்மக்கள் தமிழ்நாட்டின் கலைகளை, தமிழ் இலக்கிய நிதிப் பெருக்கை, பழந் தமிழ்க் காதற்பாக்களை, பக்திமாலைகளைப் பற்றிக் கேள்விப் பட்டவர் அல்லர்."[12] ஆதலால் அடிகளார் மூலம் முதன்முறையாக அவை பற்றி அறிந்த அம்மக்கள் பெருவியப்புக் கொண்டனர்.

தம் விரிவுரைகளின்போது 'அகர முதலவெழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு' என்னும் குறட்பாவுடன் விவிலிய நூலில் வரும் "நானே அகரமாயிருக்கிறேன்" என்னும் திருமொழியை அடிகளார் ஒப்பிட்டு விளக்குவார். மேலும் 'யாம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல', 'தீயினுள் தெறல்நீ, பூவினுள் நாற்றம் நீ, கல்லினுள் மணியும் நீ, சொல்லினுள் வாய்மையும் நீ' போன்ற பரிபாடல் பகுதிகளை இசையுடன் உரைத்து விளக்குவார். தமிழரின் இயற்கை ஈடுபாட்டையும், தமிழ்மொழியின் வியத்தகு இயல்புகளையும், ஐந்திணை இலக் கணத்தையும், மலர்மாலைகளை நம் முன்னோர் கையாண்ட முறைகளையும் எடுத்துக் கூறுவார்.

### பல்வகைத் தூது

வானொலி, தொலைக்காட்சி நேர்காணல்களின் போதும் கூட்டங்களிலும் பாரதியாரின் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே', 'யாமறிந்த மொழிகளிலே' போன்ற பாடல்களை அடிகளார் இசைத்துக் காட்டியதும் உண்டு. இதன் மூலமாகத் தமிழின் பல்வகைச் செழுமையையும் தம் பயணத்தின்போது அடிகளார் மேனாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

தமிழ்க் கலைகளைப் பற்றி உரை நிகழ்த்திய அடிகளார் அவற்றைத் திரைப்படங்கள் வாயிலாகவும் விளக்கினார். அதற்காக இரு திரைப்படச் சுருள்களைத் தம்முடன் எடுத்துச் சென்றார். அவற்றுள் ஒன்று தமிழ்நாட்டின் கோயில்களையும் கட்டிடங்களையும் மாளிகைகளையும் காட்டுவது, மற்றொன்று நாட்டியக் கலையை உணர்த்துவது. இவ்விரு படங்களும் அடிகளார்க்கு மிகவும் பயன்பட்டன. "இவ்விரு படங்களையும் மேல் நாட்டினர் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்." "நீங்கள் காட்டிய நடனப்படம் இளம் அருவியின் சலசலவெனும் ஓட்டம்

12. தனிநாயக அடிகள், தமிழ்த் தூது; பக். 15-16

போல் இருந்தது' என அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் கூறினார்'' என்றும்[13] அடிகளார் தெரிவிக்கின்றார்.

## பொதுநிலை ஒலிப்பு வேண்டும்

தாம் உலக நாடுகளில் பயணம் செய்தபோது அவ்வவ்நாடுகளில் வாழும் தமிழர்களைச் சந்தித்து மகிழ்வார் அடிகளார். தமிழும் தமிழரும் உலகில் பரவியிருக்கும் வகைகண்டு அடிகளார் வியந்ததும் உண்டு. பர்மா, ட்ரினிடாட், ஜமெய்க்கா, மார்த்தினிக், ஆப்பிரிக்க நாடுகள், மலேயா, சிங்கப்பூர் எனப் பல நாடுகளிலும் தமிழ் மக்கள் பெருஞ்சிறப்புடன் வாழ்ந்து வருதல் கண்டு வியப்பும் மகிழ்வும் கொண்டார் அடிகளார்.

ஆயினும், தமிழ் ஒலிப்பு முறை நாடுதோறும் மாறுபடுதல் கண்டு அடிகளார் கவலை கொண்டார். மலாயாவில் சீனத்தைப் போலும், அமெரிக்கத் தீவில் ஆங்கிலத்தைப் போலும் தமிழை உரைத்து வருகின்றனர் என்பதைக் கவனித்த அடிகளார், ''இவ்வேறுபாடுகளை நீக்கி, மேலை நாட்டு மொழிகளுக்கு உள்ளதைப் போன்ற பொதுநிலை ஒலிப்பு ஒன்றைப் பரப்புவது தமிழ்ப் பாதுகாப்பிற்குப் பெருநலத்தினைப் பயக்கும்... ஆங்கிலத்திற்குப் பி.பி.சி.யின் ஒலிப்புப் பொதுநிலை விதியாயிருத்தல் போல, தமிழிற்கும் யாதானுமொரு பொதுநிலை ஒலிப்பு வேண்டும்''[14] என அறிவுறுத்துகின்றார்.

## கீழ்த்திசை நாடுகளை மறக்கலாமா?

பண்டைத் தமிழ் மன்னர்களாகிய சோழரும் பாண்டியரும் இந்தியாவுக்குக் கீழ்த்திசையிலுள்ள சாவகம், புட்பகம் போன்ற நாடுகளைக் கைப்பற்றி ஆட்சி புரிந்ததை வரலாறு எடுத்தோதுகின்றது. கடாரம் என்னும் பகுதியை வென்ற இராசேந்திர சோழன் 'கடாரம் கொண்டான்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றதையும் நாம் அறிவோம்.

தமிழுக்கும் மேலைநாடுகளுக்கும் ஏற்பட்ட தொடர்பு தமிழுக்கும் ஆசிய நாடுகளுக்கும் ஏற்படவில்லை என்பது உண்மை. மேலை நாடுகளிலிருந்து இந்தியாவிலும் இலங்கையிலும் கிறித்துவ சமயப் பணி புரிதற்காகப் போந்த பலர் மூலம் தமிழுக்கும் அந்நாடுகளுக்கும் தொடர்பு ஏற்படலாயிற்று. சில மேலை நாட்டு நூல்

13. மேற்படி ப. 22 14. மேற்படி ப. 4

களை என்றீக்கோ என்றிக்கஸ் பாதிரியார் தமிழில் மொழிபெயர்த்தார். வீரமாமுனிவரோ திருக்குறளின் அறத்துப்பாலையும், பொருட்பாலையும், இலத்தீன் மொழியில் பெயர்த்துத் தமிழரின் இலக்கியச் செல்வத்தை மேலைநாடுகளுக்கு அறிமுகம் செய்தார். பின்னர் போப் ஐயர் திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய மூன்றினையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார். பல ஐரோப்பிய அறிஞர்கள் தமிழின் பல்வேறு துறைகளிலும் பணியாற்றி முதல் தமிழ் அகராதி, பிறமொழிகளில் தமிழ் இலக்கணம் எனப் பல்வகைப் பணிகளையாற்றினர்.

ஆனால் ஆசிய நாடுகளில் தமிழர் குடியேறி வாழும் நாடுகளைத் தவிர பிற நாடுகளில் தமிழ் பரவவில்லை. அந்நாடுகளுடன் தமிழர் தொடர்பு கொள்ளவில்லை. இந்நிலை கண்டு அடிகளார் பெரிதும் வருந்தியதை, “பண்டைப் பண்பு படைத்த சீனம், சப்பான் முதலிய நாடுகளிலும், தமிழ்க் கலைகளும் பண்பும் பரவியிருந்த சாவகம், புட்பகம் போன்ற நாடுகளிலும், தமிழினது புகழை எடுத்துக் கூறும் தொண்டை ஆற்றுவார் இலர். சென்ற பல ஆண்டுகளாக மேற்றிசை நோக்கியே நம் எண்ணங்களைச் செலுத்தி வந்திருக்கின்றனம். ஆசியப் பரப்பின் நடுநாட்டவராயிருக்கும் தமிழர் நாற்றிசையிலும் தம் எண்ணங்களைச் செலுத்தித் தமிழ்த் தொண்டாற்றுவது இன்றியமையாதது. இக்கீழ்த்திசை நாடுகளுக்கெல்லாம் முன்னொருகால் தமிழர் புத்த சமயத் தொண்டாற்றுதற்கும், தம் வணிகத்தைப் பெருக்குதற்கும் சென்றிருந்தனர். இங்ஙனம் உண்டாகிய பண்புத் தொடர்புகளை நாம் இழப்பது எதற்கு?”[15] என்று அவரே குறிப்பிட்டிருப்பதன் மூலம் நாம் உணரலாம்.

தம் முதல் உலகப் பயணத்திற்குப்பின் அடிகளார் ஆசியாவிலுள்ள தாய்லாந்து, கம்போதியா ஆகிய நாடுகளுக்குச் சென்று அந்நாடுகளோடு இந்தியர், குறிப்பாகத் தமிழர் கொண்டிருந்த தொடர்புகளை ஆராய்ந்தார்.

### தாய்லாந்தில் தமிழ்

1954-ஆம் ஆண்டில் தாய்லாந்து சென்றிருந்த அடிகளார் அங்குத் தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவில் பாடும் தமிழ்ப்

15. மேற்படி ப. 6

பாக்கள் திருவாசகத்திலுள்ள திருவெம்பாவையிலிருந்து எடுக்கப் பட்டவை என்பதை அறிந்து வியப்புற்றார். அப்பாடல்கள் பின் வருமாறு :

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான் . . .
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதியாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்!'

'பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போது இப்போது ஆர் விமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையும் சிலவும் விளையாடி
ஏசும் இடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பர்யாம் ஆரேலோர் எம்பாவாய்!

இப்பாடல்களை அடிகளார்க்குப் படித்துக் காட்டிய தாய்லாந்து நாட்டுஅரச குரு தாய்லாந்து மொழியிலும் கிரந்தத்திலும் எழுதப்பட்டிருந்த சில ஏடுகளிலிருந்தே எடுத்துப் படித்தார். ஒரு காலத்தில் இந்து சமயத்தைத் தழுவிப் பிற்காலத்தில் புத்த மதத்தை மேற்கொண்ட நிலையிலும் தாய்லாந்து மன்னர்கள் இந்து பிராமணரைப் போற்றி அவர்களின் சடங்குகளுக்கும் தமிழ் மொழிப் பாடல்களுக்கும் தம் அரண்மனையில் இடங்கொடுத் திருத்தல் தமிழ்ப் பண்பாடும் செல்வாக்கும் அங்கு எத்துணை வேரூன்றியிருத்தல் வேண்டுமென்பதைக் காட்டுகின்றது என்பார் அடிகளார். தாய்லாந்து நாட்டுக்கும் தமிழகத்துக்கும் உள்ள தொடர்பினை முதன் முதலில் அறிந்து தெரிவித்தவர் தனிநாயகம் அடிகளாரே எனப் பன்மொழி புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்[16] கூறியுள்ளார். தாய்லாந்து மொழியில் இயற்றப்

16. T.P. Meenakshisundaram; 'All India Oriental, Congress, 1955 Presidential Address-Tamil Section' Tamil culture Vol V. No. 2 Ap. 1956; p. 143.

பெற்றுள்ள இராமாயணத்தின் பெரும் பகுதி தமிழ்க் கம்ப ராமாயணத்தையே தழுவியாக்கப் பெற்றுள்ளது என்றும், கப்பல், தாயகம் என்னும் தமிழ்ச் சொற்கள் தாய்லாந்து மொழியில் வழக்கிலிருக்கின்றன என்றும், ஐ, அம், ஆய் என்னும் விகுதிகள் பெற்ற பல சொற்கள் தாய்லாந்து மொழியில் உள்ளன என்றும், அந்நாட்டு இராமாயணத்தின் கதைமாந்தர் தமிழ்ப் பெயர் வழக்கினைத் தழுவிக் குபேரன், சுமந்தன், மாயன், தேவன், சீவன் என்று 'அன்' விகுதியுடன் பெயரிடப் பெற்றிருக்கின்றனர் என்றும்[17] அடிகளார் கண்டார். தாய்லாந்து நாட்டு நாட்டியக் கலைகள் பெரும்பாலும் தமிழ்நாட்டுக் கலைகள் போன்றவை என்பதையும், தாய்லாந்தில் ஆக்கப்பெற்ற வெண்கலச் சிலைகளுக்கும் சோழர்கால வெண்கலச் சிலைகளுக்கும் தொடர்பு இருப்பதையும் அடிகளார் கண்டு வியந்தார். பல்லவர், சோழர் காலச் சிற்ப முறைகளும் கட்டட அமைப்புகளும் தாய்லாந்தில் பரவியிருந்ததை அவர் கண்டார். மலாயாவையும் தாய்லாந்தையும் இணைக்கும் நீண்டு குறுகிய இடப்பரப்பில் அமைந்துள்ள 'தாக்குவப்பா' என்னும் இடமே சிலப்பதிகாரம் காட்டும் 'தக்கோலம்' என்பது அடிகளாரின் துணிபு. அம்மாவட்டத்திலேயே மணிக் கிராமத்தார் பற்றிய தமிழ்க் கல்வெட்டொன்று கண்டுபிடிக்கப்பட்டதும், அங்குள்ள இடப் பெயர்களும் சிவபெருமானின் பழைய சிலையும் தமிழ்க் கலைத் தொடர்பைக் காட்டுவதும் அடிகளாரின் இம்முடிவுக்கு அரணாயின.

''தமின்'' என்னும் தாய்லாந்து மொழிச் சொல்லுக்குக் ''கொடிய, கறுத்த இந்தியன்''[18] என்னும் பொருள் வழங்குவதைக் கண்டறிந்த அடிகளார் தாய்லாந்துக்கும் தமிழகத்துக்குமிடையே விளங்கிய தொடர்பு இதனால் உறுதிப்படுகிறது என்கிறார். அவ்வாறே 1955-ஆம் ஆண்டு, கம்போதிய நாட்டுக்குச் சென்ற அடிகளார் அந்நாட்டுக்கும் தமிழகத்துக்கும் இடையே விளங்கிய தொடர்புகளைக் கண்டார். அந்நாட்டுக் கிரேமர் மொழியில் கப்பல் 'கப்பால்' எனவும், குதிரை 'மா' எனவும் வழங்கப் பெறுவதையும் அவர் அறிந்தார். சைவமும் வைணவமும் கிரேமர் அரச குடும்பங்களில் பல காலமாகத் தழுவப் பெற்றுவந்த சமயங்கள். பிற்காலத்தில் அங்குப் புத்த சமயம் பரவியது எனினும் மன்னர்

17. தனிநாயக அடிகள்; ஒன்றே உலகம், பக். 201-202
18. மேற்படி ப. 203; தனிநாயக அடிகள், தமிழ்த் தூது; ப. 121.

அரண்மனைகளில் பிராமணர்கள் வழிபாடு செய்து வந்தனர். "இன்றும் கம்போதியாவின் தலைநகராகிய ஃப்நோம் பென் நகரில் அப்பிராமணர்களின் வழித் தோன்றல்கள் அரண்மனையில் சில வேளைகளில் வழிபாடு செய்து வருகின்றனர்"[19] என்பதை அடிகளார் கண்டார்.

அந்நாட்டிலுள்ள அங்கோர்வாட், அங்கோர்தோம் ஆகிய இடங்களை ஆராய்ந்தபோது அங்குப் பல இந்தியக் கலைக் கூறுகளை அடிகளார் கண்டார். மாளிகைச் சுவர்களில் பாரதம், இராமாயணம், விட்டுணு புராணம் முதலிய இந்தியக் காப்பியங் களிலுள்ள கதைகள் செதுக்கப்பட்டு இருந்ததையும் நகரைச் சுற்றி யமைந்திருந்த அகழிகளையும் கண்டபோது, இந்தியாவுக்கும் கம்போதியாவுக்குமிடையில் பண்டைக் காலத்தில் நிலவிய தொடர்பினை[20] அடிகளார் உணர்ந்தார். அந்நாட்டு மன்னர் திருமாலின் அவதாரமாகக் கருதப்பட்டு வந்ததையும் அவர் அறிந்த போது பெருவியப்புக் கொண்டார். கோபுரங்களையும் கட்டட அமைப்புக்களையும் திருமாலின் உருவங்களையும் ஆராயும்போது மாமல்லபுரம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள கட்டட, சிற்பக் கலையைக் கிரேமர் அறிந்திருக்க வேண்டுமென்று அவர் துணிந் தார். அந்நாட்டு மன்னர்கள் கயவர்மன், இந்திரவர்மன், சூரிய வர்மன் போன்ற 'அன்' விகுதி பெற்ற பெயர்களைச் சூடும் வழக்கத்தை அறிந்தபோது பல்லவ மன்னருடன் அவர்கள் தொடர்பு கொண்டிருந்திருத்தல் வேண்டும் என்று அவர் உறுதி யாகக் கருதினார்.

தம் பன்னாட்டுப் பயணங்களின் போது அடிகளார் ஆற்றிய தமிழ்த் தொண்டினைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

அ) தமிழ் மொழி, இனம், இலக்கியம், நாகரிகம், வரலாறு ஆகியவை பற்றி எதுமே அறியாமல், இந்தியா என்றாலே இந்தியாவின் வடபுலம் தான் என்று மேனாட்டார் நினைத்து வந்த நிலையைத் தம் விரிவுரைகள் மூலமும், வானொலி தொலைக்காட்சி செய்தித்தாள் நேர்காணல்கள் மூலமும், பல அறிஞர்களோடு நேரடித் தொடர்பு கொண்டு விளக்கியமை மூலமும் அடிகளார் மாற்றியமைத்தார்.

---

19. தனிநாயக அடிகள், ஒன்றே உலகம்; ப. 212;
20. மேற்படி, பக். 210-211

அடிகளாரின் தொண்டு காரணமாகவே உலக அரங்கில் தமிழ் இடம் பெற்றது என்பது மறுக்கவியலாத உண்மை.

ஆ) இந்திய மொழிக் குடும்பங்களைப் பற்றியும் வரலாறு பற்றியும் அறிந்தும் ஆராய்ச்சி மேற்கொண்டுமிருந்த மேனாட்டு அறிஞர்கள் திராவிட மொழிக் குடும்பங்கள் பற்றியும் குறிப்பாகத் தமிழ் பற்றியும் அடிகளார் மூலம் அறிய வந்ததால், தமது தூண்டுதல் காரணமாகத் திராவிட மொழிகளைப் பற்றியும்—குறிப்பாகத் தமிழைப் பற்றியும்—ஆய்வுகளை அவர்கள் மேற்கொள்ள வழி வகுத்தார்.

இ) தாய்லாந்து, கம்போதியா போன்ற கிழக்காசிய நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் குறிப்பாகத் தமிழகத்துக்கும் இடையில் நிலவிய அரசியல், கலை, சமய, மொழி உறவுகளை முதன் முறையாக அறிந்து அதனைத் தமிழருக்கு வெளிப்படுத்தி, அதன் மூலம் பல அறிஞர்கள் அத்துறையில் ஆய்வுகளை மேற்கொள்ள வழி கோலினார்.

ஈ) தமிழைப் பற்றிய ஆய்வுகள் தமிழில் மட்டும் நிகழ்வது தொடருமாயின் மேனாட்டார் தமிழைப் பற்றி அறிந்திடுதல் கடினம் என்பதால் தமிழைப் பற்றிய ஆய்வுகள் ஆங்கிலம் போன்ற பிற மொழிகளிலும் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

**உடன் விளைவு**

தமது முதல் உலகத் தமிழ்த் தூதுப் பயணத்தின்போது அடிகளாரின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்த பேருண்மை பின்வருமாறு:

> "உலகின் மிகப் பழைய மொழிகளுள் ஒன்றும் உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்றுமாகிய தமிழ் மொழியோடு தொடர்புள்ள செய்திகளும் ஆய்வுக் கட்டுரைகளும் ஆங்கிலத்தில் வெளியிடப்பெற்றால் மட்டுமே உலக அரங்கில் தமிழ் இடம் பெறஇயலும்".

ஆகவே தம் பயணத்தை முடித்துக் கொண்டு தூத்துக்குடிக்குத் திரும்பிய அடிகளார் ஆங்கில முத்திங்கள் இதழ் ஒன்றினைத் தொடங்கும் முயற்சியில் முனைப்புடன் ஈடுபட்டார். அதற்கு Tamil Culture என்று பெயரிட்டார். அடிகளார் செயலராக இருந்து பணியாற்றிவந்த தமிழ் இலக்கியக் கழகமே இதழின் பதிப்பகமாக அமைந்தது.

விரைவில் Tamil Culture உலக அறிஞர்களின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கியது. அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தலை நகராகிய வாஷிங்டன் நகரிலுள்ள அமெரிக்கப் பாராளுமன்ற நூலகம் இதழைத் தங்களுக்கு இலவசமாக அனுப்பிவைக்குமாறு அடிகளாருக்கு வேண்டுகோள் விடுத்தது. அவ்வாறே நியுயார்க் பொது நூலகமும் உரோமையில் உள்ள பண்பாட்டுப் பரப்பு மையமும் வேண்டுகோள் விடுத்தன. (அன்றைய) செக்கோஸ்லா வாகிய நாட்டு ப்ராக் நகரிலுள்ள சார்லஸ் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியியல் அறிஞர் கமில் சுவலபில், ப்ரான்சு நாட்டுப் பாரீஸ் நகரிலுள்ள பிரான்சுக் கல்லூரியைச் சார்ந்த ழான்ஃபிலியோசா போன்றோர் அடிகளாருடன் தொடர்பு கொண்டனர்.

# தமிழ் உரிமைக் காவலர்

தனிநாயகம் அடிகளார் கட்சி அரசியலில் என்றுமே ஈடுபாடு கொண்டதில்லை. ஆனால் கட்சிகளைக் கடந்து மக்கள் நலனையும் மனித நேயத்தையும் அடிப்படையாகக் கொண்ட அரசியலில் அவர் கவனம் செலுத்தி வந்தார். மனித நேயத்தைத் தம் சமய வாழ்விலும் ஆராய்ச்சிப் பணியிலும் ஆணிவேராகக் கொண்டிருந்த அடிகளார் இத்தகைய நாட்டம் கொண்டிருந்ததில் வியப்பில்லை.

**உலகக் குடிமகன்**

'அந்தோணியுஸ் என்னும் அளவில் நான் உரோமையன், மனிதன் என்னும் அளவில் உலகமே என் நாடு' என்று மார்க்குஸ் அவுரேலியஸ் (கி.பி. 121-180) என்னும் உரோமைப் பேரறிஞரும்,

> 'யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
> சாந்துணையும் கல்லாதவாறு'

என்று திருக்குறளும்,

> 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'
>
> 'பெரிதே உலகம், பேணுநர் பலரே'
>
> 'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே'

என்று புறநானூறும் கூறும் பரந்த உலக மனப்பான்மையை அடிகளார் தமதாக்கிக் கொண்டவர். அவரை 'உலகக் குடிமகன்' என்று முனைவர் சி. ஆர். பாக்ஸர் போற்றுவார்.[1] ஆனால் உலகில் பல்வேறு மொழிகளும் பல்வேறு பண்பாடுகளும் சிறந்திருக்கும் நிலையில் ஒவ்வொருவரும் தத்தம் மொழியினையும்

---

1. C.R. Boxer; A Citizen of the World, Tamilaram, P. 25

பண்பாட்டையும் பேணிப் போற்றுவதை அடிகளார் பரந்த உலக மனப்பான்மைக்கு முரணாகக் கொண்டதில்லை. மொழியாலும் இனத்தாலும் பண்பாட்டாலும் தாம் தமிழரே என்று உலக அரங்குகளில் முழங்கிய அடிகளார், நாட்டால் தாம் இலங்கையர் என்பதை என்றுமே மறந்ததில்லை. ஆகவே வாய்ப்புக் கிடைத்த போது இலங்கைப் பல்கலைக் கழகத்தில் (1952) பணியாற்றவும், மலாயாப் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வு பெற்ற நிலையில் (1969) தம் எஞ்சிய வாழ்நாளை இலங்கையில் செலவிடவும் அவர் தீர்மானித்ததில் வியப்பதற்கொன்றுமில்லை.

### யாவரும் கேளிர்

அதே சமயத்தில் தாம் மனிதன் என்னும் அளவில் உலகைச் சார்ந்தவர் என்பதையும் மறந்ததில்லை. அடிகளார் பல மொழிகளைப் பயின்று அம்மொழி இலக்கியங்களில் ஆழ்ந்த புலமை பெற்றமைக்கும் இது ஒரு காரணம் எனலாம்.

இந்தியா, மலாயா, சிங்கப்பூர், தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம், அமெரிக்க ஐக்கிய நாடு, பனாமா, மெக்சிக்கோ, பெரு, அர்ஜன்டீனா, எக்குவதோர், சிலி, பிரேசில், உருகுவே, ட்ரினிடாட், மார்ட்டினிக், சோவியத்ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி, ஆஸ்திரியா, கிரீஸ், போத்துக்கல், ஸ்பெயின், நார்வே, ஸ்வீடன், டென்மார்க், பின்லாந்து, ஸ்விட்சர்லாந்து, ஆலந்து, பெல்ஜியம், செனகால், காங்கோ, அல்ஜீரியா, துனீசியா, எகிப்து, சூடான், எத்தியோப்பியா, உகாண்டா, கெனியா, தான்சானியா, மொரீஷஸ், துருக்கி, லெபனன், ஈராக், ஈரான், பர்மா, இந்தோனேசியா, சப்பான் ஆகிய ஐம்பத்தொரு நாடுகளுக்கு அடிகளார் சென்றுள்ளார். இவற்றுள் சில நாடுகளுக்குப் பன்முறை பயணம் செய்துள்ளார். எந்த நாட்டுக்குச் சென்றாலும் அந்நாட்டு மக்களின் பண்பாட்டையும் மொழியையும் வரலாற்றையும் இலக்கியங்களையும் அறிவதில் ஆர்வம் செலுத்துவார். எல்லா நாட்டு மனிதரையும் தம்மையொத்த மனிதராகக் காணும் மனப் பக்குவமும் மனித நேயமும் அடிகளாரிடம் விளங்கின. எல்லா மக்களும் தம்மவரே எனக் கருதும் மனப்பான்மை கொண்டவர் அடிகளார்.

ஆகவேதான் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் புறநானூற்று வரியை அவர் பொன்னேபோல் போற்றி வந்தார். இம்மனப்பான்மையை அனைவரும் வளர்க்க வேண்டும் என்று

தாம் செல்லும் நாடுகளிலெல்லாம் கூறிவந்த அடிகளார், உலகின் பல்வேறு இடங்களிலும் தம் கையெழுத்தை விரும்புவோர்க்கும் விருந்தினர் ஏடுகளிலும் கணியன் பூங்குன்றனாரின் இவ்வழகிய அடிகளைத் தமிழில் எழுதி, ஒத்த மொழிபெயர்ப்பினை அவ்வவ்நாட்டு மொழியில் வரைவார்.

Every Country is my Country
Every Man is my Kinsman

என ஆங்கிலத்திலும்,

Todos Los Pais Son mi Pais
Todos Los Hombres Son Mis Hermanos

என ஸ்பானிஷ் மொழியிலும் அச்சொற்கள் இனிதென ஒலித்தன[2] எனப் பெருமிதத்தோடு கூறுவார் அடிகளார்.

**ஒத்த உரிமை**

அடிகளாரின் மனித நேயமும் நாகரிகமும் மனிதரை மதித்து நடத்துவதிலும் மனித உரிமைகளை மதித்துப் போற்றுவதிலும் வெளிப்பட்டன. எனவே இலங்கைத் தமிழ் மக்கள் இனத்துக்கும் மொழிக்கும் ஒத்த உரிமை கோரியது நியாயமே என்று உறுதியாக நம்பினார் அடிகளார். அதனால் வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் இதனை வலியுறுத்த அவர் தவறியதில்லை. சிங்களம், தமிழ் ஆகிய இருமொழி இனத்தவரைக் கொண்ட இலங்கையில் பெரும்பான்மை, சிறுபான்மை என்று பாராமல் இரு இனங்களைச் சார்ந்த மக்களும் ஒத்த உரிமையும் நிலையும் கொண்ட மக்களாக வாழ வேண்டும் என்பதே அடிகளாரின் உறுதியான கொள்கை. இரு இனங்களும் ஒத்த உரிமை கொண்டு வாழும்போதுதான் உண்மையான தேசிய உணர்வையும் ஒருமைப்பாட்டையும் கட்டிக் காக்க இயலும் என்று அவர் உறுதியாக நம்பினார்.

**ஏன் முடியாது?**

பெல்ஜியநாடு ஃபிரெஞ்சு, ஃப்ளெமிங் ஆகிய இருமொழிகளைப் பேசும் இரு இனத்தவர்க்கும் ஒத்த உரிமை வழங்கித் தேசிய ஒருமைப்பாட்டைப் போற்றுவதையும், கனடாநாடு ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய இருமொழிகளைப் பேசும் இரு இனத்தவர்க்கும் ஒத்த உரிமை வழங்கித் தேசிய ஒருமைப்பாட்டைப் போற்று

2. தனிநாயக அடிகள்; தமிழ்த்தூது; ப. 8.

வதையும் சுவிட்சர்லாந்து நாடு பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலியம், ரொமான்ஷ் ஆகிய நான்கு மொழிகளைப் பேசும் நான்கு இனத்தவர்க்கும் ஒத்த உரிமை வழங்கித் தேசிய ஒருமைப்பாட்டைப் போற்றுவதையும் அடிகளார் நன்றாக அறிவார். 1955-57 ஆம் ஆண்டுகளில் அவர் இலண்டன் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்துக்காகப் பயின்று கொண்டிருந்த போது இத்தகைய இரு மொழி. மும்மொழிக் கொள்கைகளை நடைமுறையில் கொண்டிருந்த நாடுகளைப் பற்றி ஆராய்ந்தார். இருமொழி இனத்தவரைக் கொண்ட இலங்கையில் மொழிப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமாயின் இருமொழி இனத்தவர்க்கும் ஒத்த உரிமை வழங்கி இலங்கை இருமொழிகளைப் பேசும் இரு இனத்தவரைக் கொண்ட ஒரு நாடு என்னும் ஒருமைப்பாட்டு உணர்வை நடைமுறைப்படுத்த இயலும் என்னும் முடிவுக்கு வர அவ்வாராய்ச்சிகள் அடிகளாருக்குத் துணைபுரிந்தன.

### தலைநகரில் விரிவுரை

தாம் ஏற்கனவே 1952-ஆம் ஆண்டில் கொழும்பில் நிறுவியிருந்த தமிழ்ப் பண்பாட்டுச் சங்கம் 2-8-1955 அன்று ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் 'இலங்கையும் தமிழ்ப் பண்பாடும் - நேற்றும் இன்றும் நாளையும்' என்னும் தலைப்பில் அடிகளார் உரை நிகழ்த்தினார்.[3]

அவ்வுரையின்போது தென்னிந்தியாவுடன் இன, பண்பாட்டுத் தொடர்புடைய மக்கள் இலங்கையில் தொன்றுதொட்டே வாழ்ந்து வருகின்றனர் என்பதற்கு நிலவியல், மானுடவியல், வரலாற்று, இலக்கிய, மொழியியல் சான்றுகள் நிரம்ப உள்ளன என்று கூறிய அடிகளார், சிங்கள நூலாகிய 'மகாவம்ச' இதனை உறுதிப்படுத்துகிறது என்று விளக்கினார்.

### தொன்று தொட்டு வரும் உறவு

தொடக்க காலமுதலே தமிழரும் சிங்களவரும் இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர் என்னும் உண்மைக்கு 'மகாவம்ச' தக்க சான்றுபகர்கின்றது. போர்த்துகேயர் இலங்கைக்கு வந்த போது கோட்டையில் தமிழ் சிறப்பிடம் பெற்றிருந்ததும் மேற்கு, வட

3. X. S. Thani Nayagam; Tamilculture-Its Past, Its Present and Its future with Special reference to Ceylon; Tamilculture-Vol V. No 4, Oct. 1955 PP. 341-364.

மேற்குப் பகுதிகளில் போர்த்துகேயர் தமிழ்ப் பள்ளிகளை நிறுவியதும் வரலாறு குறித்துக் காட்டும் உண்மைகள். டச்சுக் காரர்கள் இலங்கையில் அச்சுக்கலையை முதன் முதலில் அறிமுகப் படுத்தியபோது அவர்கள் தமிழ், சிங்களம் ஆகிய இருமொழி களிலும் நூல்களை அச்சிட்டனர். கொழும்பில் 1754-ஆம் ஆண்டில் ப்ரோன்ஸ்வெல்ட் என்னும் டச்சுப் பாதிரியார் வெளியிட்ட ஒரு தமிழ் நூலில் இலங்கைத் தீவின் பெரும்பகுதி,மக்கள் தமிழ் பேசும் மக்கள் என்னும் குறிப்புக் காணப்படுகிறது. கண்டி அரசில் தமிழ் நகரங்கள் இருந்ததையும் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்ததையும் ராபர்ட் நாக்ஸ் குறிப்பிடுகின்றார். ஆலந்து நாட்டுக்கு இலங்கையி லிருந்து அனுப்பப்பட்ட அரசுக் குறிப்புக்களும், இதைத் தெரிவிக் கின்றன.

### உறவும் ஒற்றுமையும்

இவ்வாறு, தமிழ், சிங்களம் ஆகிய இரு இனங்கள் இலங்கையில் விளங்கியபோதும் அவை ஒன்றோடொன்று தொடர்பும் உறவும் கொண்டு சிறந்தன என்பதையும் அடிகளார் தம் உரையில் விளக்கு கின்றார். தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளையும் ஒப்பிட்டு நோக்கும்போது இலக்கியம், இலக்கணம், இடப்பெயர்கள், நாடகம் நடனம், கட்டடக் கலை, சிற்பம் எனப் பல துறைகளிலும் ஒற்றுமைகள் இருப்பதைக் குறிப்பிடும் அடிகளார், ஒரு மொழியின் தாக்கம் மற்றொரு மொழியில் இருப்பதையும் எடுத்துரைக் கின்றார். சட்டங்கள், சாதி அமைப்புமுறை, சமுதாய அமைப்பு முறை போன்றவற்றிலும் பல பொதுமைக் கூறுகள் இருப்பதாக அவர் தெரிவிக்கின்றார். இலங்கையின் தென் கோடிப் பகுதியி லுள்ள கதிர்காமம் இந்து, இசுலாம், பௌத்தம் ஆகிய மூன்று சமயங்களைச் சார்ந்த மக்களாலும் புனிதமாகப் போற்றப் படுவதையும், இலங்கையின் வடகோடிப் பகுதியிலுள்ள நயினாத் தீவில் அமைந்திருக்கும் பௌத்த சமயப் புனித இடங்கள் இந்து சமயத்தாராலும் புனிதமாகப் போற்றப்படுவதையும் ஒப்பிட்டுக் காட்டுகின்றார். ஒரு சமயத்தைச் சார்ந்த மன்னன் மற்றொரு சமயத்தைச் சார்ந்த மக்களுக்கு ஆதரவு வழங்கியதற்குரிய சான்று களாகச் சிங்கள அரசவைகளில் சைவப் பிராமணர்கள் பணி யமர்த்தப் பட்டிருந்ததையும், சிங்கள மன்னர்கள் தமிழ்ச் சைவ இளவரசிகளை மணந்துகொண்டதையும், பௌத்தக் கல்விக் கூடங்களில் சிங்களம், பாலி, வடமொழி, ஆகியவற்றோடு தமிழும் கற்பிக்கப்பட்டு வந்ததைக் 'கீர சந்தேச' (கி,பி. 15-ஆம் நூற்

றாண்டு) என்னும் நூல் குறிப்பிடுவதையும் சுட்டிக்காட்டி மகிழ்ந்தார் அடிகளார்.

## தமிழர் வளர்த்த பௌத்தம்

பல இலங்கைத் தமிழர்கள் பௌத்த சமயத்தினராக இருந்தது, தமிழ்ப் பௌத்தத் துறவிகள் பாலி இலக்கியத்தை வளர்த்தது, இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் தமிழ்ப் பகுதிகளில் பௌத்த விகாரைகள் எழுப்பப்பட்டது. தமிழ்த் துறவிகள் சிங்கள அரசுகளில் கற்கவும் கற்பிக்கவும் வந்தது எனப் பல ஆதாரங்களை அடுக்கடுக்காகக் கூறிய அடிகளார் பழங்காலத்தில் சிங்களவரும் தமிழரும் ஒற்றுமையாக வாழ்ந்துவந்தனர் என்பதைக் கோடிட்டுக் காட்டினார்.

தமிழ்க் காப்பியமாகிய மணிமேகலை பௌத்த சமயத்தின் ஒரு பிரிவாகிய தேரவாத பௌத்த சமயத்தைச் சார்ந்த இலக்கியமாகும். தேரவாத பௌத்தம் சார்ந்த இலக்கியம் உலகிலேயே இது ஒன்றுதான் என்பதை அடிகளார் தம் உரையில் பெருமிதத்துடன் குறிப்பிட்டார். 'வீரசோழியம்' என்னும் தமிழ் இலக்கணத்தின் தாக்கம் 'சிதத் சங்கரவா' என்னும் சிங்கள இலக்கண நூலில் காணப்படுவதாகக் கருத்துத் தெரிவித்த அடிகளார், சங்கமித்தா (4-ஆம் நூற்.), புத்ததத்த மகாதேரோ (5-ஆம் நூற்.), வஜிரபோதி (7-ஆம் நூற் ), அனுருதா (12-ஆம் நூற்.), தர்மகீர்த்தி (13-ஆம் நூற்.) போன்றோர் சமயப் பணிக்காகவும் கலாச்சாரப் பணிக்காகவும் இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பல்வேறு நூற்றாண்டுகளில் வந்ததையும், திக்நாகர், தர்மபாலர், போதிதர்மர் போன்றோர் பௌத்த சமய அறிஞர்களாகப் புகழ்பெற்று விளங்கியதையும் தக்க சான்றுகளுடன் தம் உரையில் விளக்கினார்.

## இருமொழிகளும் தேவை

இவ்வாறு பழங்காலத்தில் சிங்களவரும் தமிழரும் இன, சமய வேறுபாடுகளைக் களைந்த நிலையில் இலங்கையில் ஒற்றுமையுடன் விளங்கியதை விளக்கிய அடிகளார் தற்காலத்தில் (1955) தங்களுக்குள் வேறுபட்டு விளங்குவதையும் விளக்கினார். இலங்கையில் இனவாதமும் இனப் பிரிவினையும் ஒழிந்து இரு இனங்களைக் கொண்ட ஒரு தேசிய உணர்வு தோன்றவேண்டுமாயின் சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளும் இலங்கையின் ஆட்சிமொழிகளாக அறிக்கையிடப் படவேண்டும் என்னும் அழுத்தமான கருத்தை

அடிகளார் தம் உரையில் வெளியிட்டார். அரசு அலுவலர்கள் இரு மொழிகளையும் கற்றிருக்கவேண்டுமென்றும் அவ்வாறாயின் அவர்கள் இலங்கையின் எப்பகுதியிலும் பணி புரிய இயலுமென்றும் அவர் தெளிவாக்கினார்.

## பன்மையில் ஒருமை

'மூன்று இனத்தவரும் நான்குமொழியினரும், மூன்று சமயத்தவரும் ஒத்துழைத்து சுவிட்சர்லாந்தில் ஒரு தேசியத்தை உருவாக்கியுள்ளனர்; அவ்வாறே நாட்டின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் காத்திட நாம் விரும்புவோமாயின் இலங்கையின் இரு மொழிகள், தீர்க்கமுடியாத ஒரு பிரச்சினைக்குக் காரணமாகிவிட முடியாது' என்று விளக்கிய அடிகளார் தென் ஆப்பிரிக்கா, கானடா, பெல்ஜியம், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் இருமொழி அல்லது பன்மொழி பேசும் நாடுகளாக இருந்தும் மொழிப் பிரச்சினைக்குத் தக்க தீர்வு கண்டிருப்பதை எடுத்துரைத்தார்.

## இனமும் தேசியமும்

தமிழ் அல்லது சிங்களப் பண்பாட்டைத் தழுவி வாழ்வதால் இலங்கைத் தேசிய உணர்வு குன்றிவிடாது என்பது அடிகளாரின் ஆணித்தரமான வாதம். ஆகவே தமிழ் மக்கள் தங்கள் இன உணர்வினைப் போற்றித் தங்கள் மொழியை வளர்த்துத் தங்கள் பண்பாட்டைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டுமென்று தம் உரையில் அடிகளார் வலியுறுத்தினார்.

அடிகளாரின் இவ்வுரையை முழுமையாக நோக்கும்போது அவர்சிங்கள மொழிக்கோ சிங்கள மக்களுக்கோ எதிரானவர் அல்லர் என்பதும், அதே சமயத்தில் தமிழர்கள் தங்கள் இலங்கைத் தேசிய உணர்வுக்குப் பங்கமில்லாத வகையில் தங்கள் தமிழ் இன உணர்வை வளர்த்துக் கொள்வதில் தவறில்லை என்பதும் அடிகளாரின் கருத்து என்பது தெளிவாகின்றது. இருமையில் ஒருமைப்பாடு, அல்லது வேற்றுமையில் ஒற்றுமை காண்பதும் காப்பதும் மனித இயல்புதான் என்பதையே தம் உரையில் அடிகளார் தெளிவு படுத்த முயன்றார்.

## வாள் முனையில்

ஆனால் 1956-ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப்பின் 'சிங்களம் மட்டுமே இயக்கம்' தீவிரமடைந்ததைக் கண்டு கலங்கினார். புதிய பிரதமர் திரு. சாலமன் பண்டாரநாயகனை நேரில் சந்தித்துச்

சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளையும் இலங்கையில் ஆட்சி மொழிகள் ஆக்கி இனப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க முடியும் என்று தகுந்த ஆதாரங்களையும் பெல்ஜியம், கானடா, சுவிட்சர் லாந்து நாடுகளின் முன்னுதாரணங்களையும் எடுத்துரைத்தார். ஆனால் பண்டார நாயக அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. "வாள் முனையில் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதையே நான் விரும்பு கிறேன்" ("Father. I will rather decide it on the point of sword.") என்று பிரதமர்[4] ஆணித்தரமாகக் கூறியபோது அடிகளார்க்கு ஏற்பட்ட அதிர்ச்சி விளக்க இயலாதது.

**ஒல்லும் வகையெல்லாம் உதவி**

எனினும் பிரதமர் பண்டாரநாயக பண்பாட்டுத்துறையை (சாஹித்ய மண்டாலயா) நிறுவியபோது, அவ்வமைப்பில் அடிகளார் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். பின் அதன் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுச் செயலாற்றினார். பின்னர் தேசிய நூற்கழகம் நிறுவப்பட்ட போதும் அடிகளார் அதன் உறுப்பினரானார். அதன் மூலம் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வெளி வந்த சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கப்படவும் துணை புரிந்தார்.

**சிங்களம் மட்டுமே!**

இதற்கிடையில் 'இலங்கையில் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக இருக்கும்' என்னும் மசோதா 15-6-1956 அன்று இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. தமிழ் சிங்களம் ஆகிய இருமொழிகளுமே ஆட்சி மொழிகளாக அறிவிக்கப் பட வேண்டுமென்று தமிழ்ச் சிறுபான்மையினர் கேட்டதை அரசு புறக்கணித்தது. 14 மணி நேரம் நடந்த அன்றைய பாராளுமன்ற அமர்வு, மசோதாவுக்கு ஆதரவாக 66 வாக்குகளும் எதிராக 29 வாக்குகளும் பெற்று முடிவுற்றது. இலங்கைச் சுதந்திரக் கட்சியும் (பண்டார நாயக), ஐக்கிய தேசியக் கட்சியும் (சேன நாயக்க), நியமன உறுப்பினர்களும் மசோதாவுக்கு ஆதரவாகவும், தமிழ்க் கட்சிகளும் இடதுசாரிக் கட்சிகளும் மசோதாவுக்கு எதிராகவும் வாக்களித்தன.[5]

---

4. A.J. Wilson, The Dedicated Patriotism of Father Thani Nayagam; Tamilaram; p. 84
5. Tamil Culture Vol. V, No. 3, July 1956; p. 289.

### முயற்சி தொடர்கின்றது

இந்நிலையிலும் அடிகளார் மனம் தளரவில்லை. தோல்வியைத் தழுவிவிட்டோம் என்று துவண்டு விடவில்லை. கருத்துக்கள் கருத்துக்களோடு மோதும் உண்மையான வாதத்தில் தான் உண்மையான தெளிவான கருத்துக்கள் உருவாக முடியும் என்னும் பகுத்தறிவுக் கோட்பாட்டில் அடிகளார் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்.

எனவே 'சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி' என்னும் மசோதா நிறைவேறிய நிலையிலும் 'இலங்கையில் மொழி உரிமைகள்' என்னும் கட்டுரையை எழுதி வெளியிட்டார்.[6]

### நியாயம் என்பது பெரும்பான்மை தானா?

'பெரும்பான்மையினர் கருத்து என்பதற்காக ஒரு கருத்து நியாயமான கருத்தாகிவிட முடியாது. அக்கருத்து எந்த அளவுக்கு நியாயமானது, சரியானது, சட்டத்துக்கும் அறிவுக்கும் இயைந்தது என்பதைக் கொண்டே அக்கருத்து முறையானதா அல்லதா என்பதை நிலைநாட்ட முடியும் என்று அக்கட்டுரையின் தொடக்கத்தில் ஓர் ஆணித்தரமான வாதத்தை முன் வைத்தார் அடிகளார். பல இனங்களும் பல மொழிகளும் கொண்ட ஒரு நாட்டை ஓரின, ஒருமொழி நாடாக அறிக்கையிட்டால் அது அந்நாட்டின் ஒற்றுமைக்கும் அமைதிக்கும் ஊறு விளைவிக்கும் என்று அடிகளார் எடுத்துரைத்தார்.

பெரும்பான்மை என்பதைத் தவறாகப் புரிந்துகொண்டால் அது பெரும்பான்மையினரின் கொடுங்கோன்மைக்கு வழிவகுத்து விடும் என்று தோக்கலில் கூறியதை[7] நினைவு கூர்ந்த அடிகளார், சிங்கள மொழியை இலங்கையின் ஆட்சி மொழியாகத் திணிப்பதால் தமிழினத்தின் உரிமையும் சுதந்திரமும் பறிக்கப்பட்டு அது அடக்குமுறைக்கு ஆளாக்கப்படுகிறது என்றார். இதையே 'பெரும்பான்மையினரின் கொடுங்கோன்மை' என்று அவர் குறிப்பிட்டார்.

### தேசிய ஒற்றுமைதான் தேவை

மொழிப்பிரச்சினை என்பது அரசியல் எல்லைகளை விட விரிந்துபரந்தது; அது தத்துவப் பிரச்சினை; அரசியல், குடியாட்சி அமைப்பு முறைக் கோட்பாட்டு பிரச்சினை; அக்கோட்பாட்டை

6. X.S. Thani Nayagam; 'Language Rights in Ceylon' — Tamil Culture, Vol. V, No.3, July 1956; pp 217-230

நடைமுறைப்படுத்தும் பிரச்சினை; அது ஒழுக்கப் பிரச்சினை; சமூகவியல் பிரச்சினை, மனித இயக்கவியல் பிரச்சினை என்று அடிகளார் விளக்கினார். எனவே மொழிப் பிரச்சினையைப் பற்றிச் சிந்திப்பது அரசியல்வாதிகளுக்கு மட்டும் உரியதல்ல; அரசியல் சிந்தனையாளர்கள், தத்துவவாதிகள், சட்ட வல்லுநர்கள், சமூகவியல் அறிஞர்கள் ஆகியோருக்கும் அது உரியது என்றார் அவர். 'வேற்றுமையில் ஒற்றுமை' காண்பதன் மூலம் பண்பாட்டுச் சுதந்திரமும் அரசியல் ஒற்றுமையும் கைகோத்துச் செல்வதும், ஒரே அரசியல் அமைப்புக்குள் சுய நிர்ணய உரிமையும் பண்பாட்டுத் தன்னாட்சியுரிமையும் நிலவுவதும் இன்று உலகில் பரவி வரும் சிந்தனைகள் என்பதை அடிகளார் தம் கட்டுரையில் வற்புறுத்தினார். தேசிய ஒற்றுமைதான் (Unity) முக்கியமேயன்றி, தேசிய ஒருசீர்மை (Uniformity) முக்கியமல்ல என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார்.

இலங்கைக்கும் தமிழ்மொழிக்குமுள்ள உறவு பழமையானது, பரந்துபட்டது, நிலையானது, பயனுள்ளது, இரு பண்பாடுகளுக்கும் உந்து சக்தியாக அமைந்தது; எனவே சட்டத்தின் மூலம் இந்த உறவினை அழிக்க முயல்வது பயனற்றதாகும் என்று விளக்கினார் அடிகளார். மொழியுரிமைகளை மறுப்பது தீய விளைவுகளுக்கு வழிகோலும் என்று அன்றே அவர் முன்னுரைத்தார்.

பெரும்பான்மையினருக்கு அதிக உரிமைகளும் சிறுபான்மையினருக்குக் குறைந்த உரிமைகளும் வழங்கினால் அக்கொடுமை குடியாட்சியின் ஆணிவேரையே அசைத்துவிடும் என்றும் அடிகளார் அறிவுறுத்தினார்.

### உலக எடுத்துக் காட்டுகள்

பின்லாந்து நாட்டு மக்கள் தொகையில் ஸ்வீடிஷ் மொழி பேசுவோர் 9% மக்களே என்றாலும், பின்லாந்து நாட்டில் ஸ்வீடிஷ் மொழி தேசியமொழியாகவும் ஆட்சிமொழியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதையும், சுவிட்சர்லாந்து நாட்டு மக்கள் தொகையில் இத்தாலிய மொழி பேசுவோர் 6% மக்களே என்றாலும் அந்நாட்டின் தேசிய, ஆட்சிமொழிகளுள் இத்தாலியும் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதையும் அடிகளார் சுட்டிக் காட்டினார். தமிழர், சிங்களவர் ஆகிய இரு இனத்தவரும் இணைந்தே இலங்கை நாடு உருவாகியது என்னும் உண்மையில்

தமக்கு உள்ள அசைக்க முடியாத நம்பிக்கையைத் தம் கட்டுரையின் மூலம் மீண்டும் அறிக்கையிட்ட அடிகளார், இவ்விரு இனங்களும் தங்கள் தனித்தன்மையையும் பண்பாட்டுத் தன்னாட்சி உரிமையை யும் விட்டுக் கொடுக்காமல், பொது அரசியல் அமைப்பில் ஒன்றாக வாழ விரும்பியதாலேயே இலங்கைத் தேசியம் உருவாகியுள்ளது என்பதைத் தெளிவாக எடுத்துரைத்தார். மொழிகளிடையே ஒத்த உரிமை உண்டு என்பதை 2500 ஆண்டுகளுக்கு முன்பே எடுத் துரைத்த அதே புத்தர் பிறந்தநாள் விழாவினைத் தமிழ் மொழியின் தேசிய மொழியுரிமையைப் பறிக்கும் கொடுங்கோன்மை முடுக்கி விடப்பட்ட நாளாக மாற்றியிருக்கும் கொடுமையை நினைந்து மனம் நொந்தார் அடிகளார்.

### எல்லா மொழிகளுக்கும் உரிமை

ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைக் கொண்டுள்ள நாடுகள் உலகில் முப்பதுக்கு மேல் உள்ளன. அந்நாடுகளனைத்தும் தங்கள் நாட்டு மொழிகளுக்கெல்லாம் ஒத்த உரிமையினை வழங்குவதன் மூலம் மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்க, இலங்கை மட்டும் இத்தகைய உலகளாவிய சிந்தனையையும் கோட்பாட்டை யும் மறுக்க முனைவது ஏன் என்று தம் கட்டுரையில் வினாத் தொடுத்தார் அடிகளார். உரிமையும் சமத்துவமுமே மொழிப் பிரச்சினைக்குத் தகுந்த தீர்வு காண முடியும் என்பதில் தளராத உறுதி கொண்ட அவர்,

> ''தேசிய இனங்களையும் தேசியச் சிறுபான்மை இனங்களை யும் ஒவ்வோர் இனத்துக்கும் உரிய மதிப்போடும் உரிமை யோடும் வாழ்க்கை முறைக்குரிய சட்டப் பாதுகாப்போடும் அரசியல் அமைப்புக்குள் ஒருங்கிணைப்பதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை''[8]

என்று ஆஸ்கர் இயனோஸ்கி எழுதியுள்ளதைச் சுட்டிக்காட்டி வாதிட்டார்.

ஒரு நாட்டுக்குள் பல மொழியினங்களுக்கு மொழி உரிமை வழங்குவதே இன்று நடைமுறையாக இருக்க, இலங்கையில் மட்டும் தமிழ் மொழிக்கு ஏற்கனவே இருந்த உரிமைகளைப் பறிப்பதும் ஒடுக்குவதும் நடைமுறையாவதை வருத்தத்துடன் அவர் எடுத்துக் காட்டினார்.

---

8. Ibid. p 227

இந்தியா, சோவியத் ரஷ்யா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் மிகப் பல மொழிகள் வழங்குவதால் பல மொழிகளைப் பொதுமொழியாக ஏற்கவியலாத நிலையில் அவற்றுள் ஒருமொழியைப் பொதுமொழியாக ஏற்க வேண்டிய கட்டாயம் உள்ளது; ஆனால் இருமொழிகள் மட்டுமே வழங்கும் இலங்கையில் தமிழின் உரிமையினைப் பறிப்பது அநியாயம் என்று தம் கட்டுரையில் அழுத்தந்திருத்தமாக எழுதினார் அடிகளார்.

இவ்வாறு ஒரு விரிவுரை, ஒரு கட்டுரை ஆகியவற்றின் மூலம் இலங்கை மொழிப் பிரச்சினையைப் பற்றி விரிவாக விவாதித்து, பிரச்சினைக்கு ஆரோக்கியமான ஒரு முடிவு காண முயன்றார் அடிகளார். அம்முயற்சியில் அவர் தோல்வியே காண நேர்ந்தது.

கட்சி அரசியலோடு தொடர்பற்றவராயினும், இலங்கைத் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளுக்காக அடிகளார் தமக்கே உரிய முறையில் உழைக்கத் தயங்க மாட்டார் என்பதை மேற்குறித்த இரு முயற்சிகளும் மக்களுக்குப் புலப்படுத்தின. அடிகளாரின் விரிவுரைகளும் கட்டுரையும் அறிவு பூர்வமான முறையில் இலங்கைத் தமிழரின் நியாயமான உரிமைகளைத் தக்க ஆதாரங்களுடன் வலியுறுத்திய பான்மை இலங்கைத் தமிழரின் உள்ளங்களில் நீங்காத இடம் பெற்றது. தன்னலமும் கட்சிச் சார்பும் அற்றவராகக் குரல்கொடுத்த அடிகளாரைத் தங்கள் தேசியத் தலைவராக இலங்கைத் தமிழ் மக்கள் போற்றியதில் வியப்பில்லை.

இதற்கு இன்னொரு முக்கிய காரணமும் உண்டு. தமிழர்கள் தங்கள் நியாயமான உரிமைகளை வலியுறுத்துவதற்காக 1956, 1961-ஆம் ஆண்டுகளில் நடத்திய அறப்போர்களில் அடிகளார் பங்கு பெற்றார் என்பதே அக்காரணம்.

### அறப்போரும் அடிகளாரும்

1956-ஆம் ஆண்டில் சிங்கள மொழிச் சட்டத்தை எதிர்த்துத் தமிழ் அரசியல் கட்சிகள் கொழும்பு காலிமுகத்திடலில் அறப்போர் நடத்தியபோது அவ்வறப்போரில் அடிகளார் கலந்து கொண்டாரா இல்லையா என்பதைப் பற்றி வேறுபட்ட கருத்துக்கள் உண்டு.[9]

அப்போரில் அடிகளார் 'துணிந்து தாமும் பங்குகொண்டார்' என்று[10] முனைவர் அந்தனி ஜான் அழகரசன் கூறுகின்றார். 'தமிழ்

9. அமுதன் அடிகள்; உலகெலாம் தமிழ் முழக்கம்; பாளையம் 1992, பக். 25-26
10. வே. அந்தனி ஜான் அழகரசன்; முன்சுட்டியது; ப. 33

மக்களின் எதிர்ப்புப் போராட்டங்களிலும் அறப்போர்களிலும் அடிகளார் நேரிடையாகப் பங்கு பெற்றார்' என்று அடிகளாரின் தங்கை மகன் திரு. ராஜன் பிலிப்புப்பிள்ளை[11] கூறுகின்றார்.

புகழ் பெற்ற இலங்கைத் தமிழ்ப் புலவராகிய நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மகன் புலவர் இளமுருகனார் இயற்றிய 'செந்தமிழ்ச் செவியறிவுறூஉ' என்னும் செய்யுள் நூலிலும் காலிமுகப் போராட்டத்தில் கலந்து கொண்டோரின் பெயர்களுள் அடிகளார் பெயரும் இடம் பெற்றிருக்கிறது.[12]

"1956-இல் காலிமுகத்திடலிலே தமிழ்மக்கள் தெரிவித்த எதிர்ப்பிலே கத்தோலிக்கத் துறவிகளுக்கும் முக்கிய பங்குண்டு என்பதை நாடு முழுவதும் அறியச் செய்ய அவரும் (அடிகளாரும்) அதிலே பங்கெடுத்தார்" என்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருள்திரு. யே. நீக்கிலஸ் அடிகள் எழுதியிருக்கிறார்.[13]

"அடிகளார் தாம் மதகுரு என்பதையும் பொருட்படுத்தாது, தமிழ் இரத்தம் ஓடும் மக்களோடு மக்களாய்த் தம் தமிழ்த்தாய் மட்டில் தனயனுக்குள்ள பற்றை, பாசத்தைக் காட்ட 1956இல் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தில் பங்கு கொண்டார்" என்பது யாழ்ப்பாணம் கிறிஸ்தவத் தமிழ்ப் பண்பாட்டுப் பேரவையின் தலைவராகிய அருட்செல்வி பெனடிக்ரா வஸ்தியாம் பிள்ளையின் கூற்று.

"அஞ்சாமற் கொழும்புநகர்க் காலிமுகத்திடலில்
ஆவியிலும் மேலான தமிழ் மானம் காத்தான்"

என்று நெடுநகர் பண்டித ஞானி நம் அடிகளாரைப் பற்றிப் பாடியுள்ளார்.[14]

"நாளிதில் நாம்விழாக் கொள்ளுகின்ற—தனி
நாயகன் மட்டுமே ஒரு துறவி
தோளில் சிலுவையைத் தாங்கி நின்று—பிறர்
துன்பம் துடைக்கிற யேசுபோலக்

---

11. Rajan Philipupillai; 'A Biographical Sketch, Tamilaram p. 7
12. அமுதன் அடிகள்; முன்சுட்டியது; ப. 26
13. அருள்திரு. யே. நீக்கிலஸ்; ஆசியுரை—தவத்திரு தனிநாயக அடிகளார் மாட்சி நயப்பு மலர்; யாழ்ப்பாணம்; 1982
14. பண்டித. ஞானி; மேற்படி; ப. 42

காலிமுகத் திடல் போர்க்களத்தில்— வந்து
கர்த்தரின் சாட்சியாய் வீற்றிருந்தார்
கூலிப்படை போட்ட கும்பலுள்ளும்—தன்
கும்பிட்டகைகளால் ஆசி தந்தார்''[15]

என்று நாவண்ணன் பாடியுள்ளார்.

அடிகளார் "1956இல் கொழும்பு காலிமுக மைதானத்தில் நடைபெற்ற தமிழ் மொழி உரிமைப் போராட்டச் சத்தியாக்கிரகத்தில் தாமும் கலந்து கொண்டார்.''[16] என்று அ. ஸ. அப்துஸ் ஸமது எழுதியுள்ளார்.

இவ்வாறு பலர் அடிகளார் காலிமுனைச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டதைப் பற்றிக் கூறியுள்ளனர். அப்போராட்டத்தில் கலந்து கொண்டோரில் குறிப்பிடத்தக்க ஒருவராகிய அ. அமிர்தலிங்கம், எம்.பி. அவர்கள் தனிநாயகம் அடிகளாரின் அடக்க நாளாகிய 3-9-1980 அன்று யாழ் பேராலயத் திறந்த வெளி அரங்கில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் உரையாற்றும்போது அடிகளார் காலிமுகத்திடலில் போராட்டத்தில் கலந்து கொண்டதைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

"1956ஆம் ஆண்டு ஆனிமாதம் 3ஆம் திகதி தனிச்சிங்களச் சட்டம் பாராளுமன்றத்திலே புகுத்தப்பட்ட அன்று காலிமுகக் கடற்கரையிலே, அந்தப் பச்சைப் புல் தரையிலே• மழையிலே ஈரமாகக் கிடந்த நிலத்திலே நாமெல்லாம் இருந்து சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருந்தபோது, எம்மை ஆயிரக் கணக்கான காடையர் சுற்றி வளைத்துக் கல்மாரி பொழிந்து தாக்கிக் கொண்டிருந்த நேரத்தில், பொலிசார் எமக்கும் அவர்களுக்கும் இடையிலே இடைவெளியை ஏற்படுத்தி, ஓரளவிற்கு அந்தத் தாக்குதலிலிருந்து எங்களைத் தடுத்துக் கொண்டிருந்த அந்த நேரத்தில், திடீரென்று அந்தத் தாக்குதலுக்கூடாக ஒரு உருவம், துறவியின் உடையிலே, எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தது. எங்கள் மனம் ஒரு நிமிடம் பெருமிதப் பட்டது. இத்தனைத் துன்பங்களுக்கு மத்தியிலும் நான் இந்தச் சத்தியாக்கிரகத்தை நடத்துபவர்களோடு சேரப் போகிறேன் என்று அந்தக் காடையர் கூட்டத்தை விலக்கிக் கொண்டு வரக்கூடிய உளம் படைத்தவராக, தமிழுக்காக நடைபெறுகின்ற சத்தியாக்கிரகத்திலே தாமும் பங்குகொள்ள

15. நாவண்ணன்; மேற்படி ப. 49
16. அ. ஸ. அப்துஸ் சமது; 'தமிழுக்கு ஓர் அணிகலன்'— அணையா விளக்கு; கல்முனை; 1980; ப. 39

வேண்டுமென்ற அந்தத் தைரியத்தோடு அங்கு வந்திருந்த தனி நாயக அடிகளாரை நாம் என்றும் மறக்கமுடியாது."[17]

அடிகளார் காலிமுகத்திடலில் தமிழரின் அறப்போரில் கலந்து கொண்டார் என்பதை மேற்குறித்துள்ள சான்றுகள் உறுதிப் படுத்துகின்றன.

## அச்சமே இல்லாதவர்

1956ஆம் ஆண்டு அறப்போரில் அடிகளார் கலந்துகொண்ட போது அவர் இலங்கைப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து விடுப்புப் பெற்றுக் கொண்டு இலண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறை யில் முனைவர் பட்டத்துக்காக ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்: விடுமுறையில் இலங்கைக்கு வந்திருந்தபோதே அறப்போரில் ஈடுபட்டார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழக விரிவுரையாளர் என்பதால் அவர் அரசு ஊழியர் என்பதையும், இது காரணமாக அவர் பல்கலைக்கழகப் பணியிலிருந்து விலக்கப்படும் ஆபத்து இருந்தது என்பதையும், அது குறித்து அஞ்சாதவராக அவர் போராட்டத்தில் கலந்துகொண்டார் என்பதையும் எண்ணும் போது நீதிக்காக எத்துயரையும் தாங்கும் நெஞ்சுரம் கொண்டவர் அடிகளார் என்பதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

## உலக அரங்கில்

உலகச் சட்ட அறிஞர்கள் கழகத்துக்குச் சென்று இலங்கைத் தமிழர் பிரச்சினையை எடுத்துரைப்பதற்காகத் தாமே நிதிதிரட்டி ஒருவரை அனுப்பிவைத்தார் அடிகளார். அதன் விளைவாக இலங்கைத் தமிழர் பிரச்சினைகளைப் பற்றிய கட்டுரையொன்று அக்கழகத்தின் செய்திமடலில் இடம்பெற்றது[18] என்று பேராசிரியர் ஏ. ஜே. வில்சன் எழுதியுள்ளார்.

## மீண்டும் அறப்போர்

1956ஆம் ஆண்டு அறப்போரில் நேரிடையாகவே கலந்து கொண்ட அடிகளார் 1961ஆம் ஆண்டு அறப்போரின்போது வேறு வகையில் கலந்து கொண்டார். போராட்டத்தில் கைதுசெய்யப் பட்ட அறப்போர் வீரர்களை யாழ்ப்பாணம் கச்சேரியிலும் மட்டக் களப்பிலும் கல்முனையிலும் சந்தித்து அப்போராட்டத்துக்குத் தம் ஆதரவைத் தெரிவித்தார்.[19] அறப்போருக்கு நிதி சேர்த்தும்

17. அ. அமிர்தலிங்கம்; இரங்கலுரை—மேற்படி; ப. 42
18. A. J. Wilson; Op. cit; p. 85
19. Ibid

அடிகளார் வழங்கினார். தமிழ்மக்கள் பெற வேண்டிய நியாய மான உரிமைகள் பற்றியும், இலங்கையின் தேசிய நலனுக்காக அவர்கள் ஆற்றிய அரும்பணிகள் பற்றியும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் துண்டு வெளியீடுகள் அச்சிட்டுப் பரப்பினார். தமிழ்மொழிக்கு உரிமை வழங்கப்பட வேண்டும் என்னும் சில வேண்டுகோள்களில் சிங்களப் பிரமுகர்களின் ஒப்பங்கள் பெற்று அவற்றையும் பகிரங்கமாக வெளியிட்டார்.[20]

### உரிமை முழக்கம்

1980ஆம் ஆண்டு அவசர காலச் சட்டத்தின்கீழ் தமிழ்மக்கள் படும் துயரைப் பற்றித் தாம் பேசுவதற்கு ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்யுமாறு தம் நண்பரும் பேராதனை இலங்கைப் பல்கலைக் கழகத்தில் உடன் பணியாற்றிய பேராசிரியர் கு. நேசையாவை அடிகளார் கேட்டுக் கொண்டார்.[21] அதற்கிணங்க 10-1-1980 அன்று யாழ்ப்பாணம் நகர அரங்கில் அடிகளார் பேசினார். யாழ்ப்பாணம் உலகத் தமிழ் மாநாட்டின்போது வன்முறைக்கு ஆளாகி மறைந்த தமிழர்களின் நினைவு நாள் அது என்பது குறிப்பிடத்தக்கது.

### இலங்கைத் தமிழ்த் தலைவர்

இவ்வாறு இலங்கைத் தமிழ் மக்களின் நியாயமான உரிமை களுக்காகத் தம் பேச்சாலும் எழுத்தாலும் அறப்போராலும் நிதியுதவியாலும் ஆதரவாலும் உழைத்த தனிநாயகம் அடிகளார் ஒரு சிறந்த இலங்கைத் தமிழ்த் தலைவர் என்பதில் ஐயமில்லை.

> "எமக்குக் கலாச்சாரத் துறையிலே, கலாச்சாரத்தையும் அரசியலையும் பின்னிப் பிணைத்து எமது கலாச்சாரத்தைக் காப்பதற்கு அரசியல் எந்த வகையில் பணிபுரிய வேண்டுமென்று காட்டக் கூடியவராக, அல்லது எமது அரசியல் இலட்சியத்தை அடைவதற்குக் கலாச்சாரம் எந்த வகையில் உதவ முடியும் என்பதை எடுத்துக் காட்டுபவராக வணக்கத்துக்குரிய தனிநாயகம் அடிகளார் விளங்கினார்"

என்று மறைந்த அ. அமிர்தலிங்கம் கூறுவது[22] முற்றிலும் பொருத்தமாகும்.

---

20. அ. ஸ. அப்துஸ் சமது; முன்சுட்டியது
21. K. Nesiah; 'Like a Seer of Old, yet different'; Tamilaram; p. 77
22. அ. அமிர்தலிங்கம்; முன்சுட்டியது; ப. 43

# பல்கலைக் கழகச் சாதனைகள்

1952ஆம் ஆண்டு தனிநாயகம் அடிகளாரின் வாழ்வில் குறிப்பிடத்தக்க ஓராண்டாகும். முழுமையாகத் தமிழ்ப் பணியில் அவர் தம்மை ஈடுபடுத்திக்கொண்டது அவ்வாண்டிலிருந்துதான். ஏற்கனவே தூத்துக்குடியில் தமிழ் இலக்கியக் கழகத்தை நிறுவிப் பணியாற்றிக் கொண்டிருந்த அடிகளார் 1952 பெப்ருவரித் திங்களில் Tamil Culture ஆங்கில முத்திங்கள் இதழைத் தொடங்கினார். அவ்வாண்டில் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கல்வித் துறையில் விரிவுரையாளர் பொறுப்பையேற்றார்.

## தமிழ்ப்பணி ஆற்றவே!

தமிழ்ப்பணி செய்யவே இறைவன் தன்னை அழைக்கின்றான் என்று அவர் உறுதியாக நம்பினார். யாழ்ப்பாணத்தில் 1951ஆம் ஆண்டு நிகழ்ந்த தமிழ் விழாவில் அவர் உரையாற்றும் போதும் சரி,[1] பின் அவர் உரையாற்றிய பல கூட்டங்களிலும் சரி,

"என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே"

என்னும் திருமூலரின் வரிகளைச் சொல்லித் தம் உரையை முடிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். கோலாலம்பூரில் முதல் உலகத் தமிழ் மாநாட்டின் முதல் அமர்வுக்குத் தாம் தலைமை தாங்கியபோதும் மேற்கூறிய வரிகளைக் கூறிய பின்னரே ஆங்கிலத்தில் தம் உரையைத் தொடர்ந்தார்.[2]

---

1. தனிநாயக அடிகள்; தமிழ்த்தூது; ப. 50
2. X. S. Thani Nayagam; Chairman's introductory remarks—Proceedings of the First International Tamil Conference Seminar; X. S. Thani Nayagam etal. (Ed) Kualalumpur; 1968; p. 3

**விரிவுரையாளர்**

1952ஆம் ஆண்டு முதல் 1961ஆம் ஆண்டு வரை (இடையில் இலண்டன் பல்கலைக் கழகத்தில் கல்வித் துறையில் முனைவர் பட்டத்துக்காகப் பயின்ற காலம் தவிர) அடிகளார் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் கல்வித்துறையில் விரிவுரையாளராகப் பணி புரிந்தார். கல்விக் கொள்கைகள், தமிழ்மொழியைக் கற்பிக்கும் முறைகள், சமூகக் கல்வியியல் போன்ற தலைப்புக்களில் விரிவுரைகள் நிகழ்த்தி வந்தார்.

யாழ்ப்பாணம் கோப்பாய்ப் பகுதியைச் சார்ந்த வழக்கறிஞர் திரு. எஸ். சுப்பிரமணியம் அவர்களே இலங்கையில் பணியாற்ற வருமாறு அடிகளாரைத் தூண்டியவர். அதனை ஏற்ற அவர் பேராசிரியர் மயில்வாகனத்தின் உதவியுடன் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பொறுப்பேற்றார்.

பல்கலைக் கழகத்தில் பணியாற்றியபோது மாணவர்களிடமும் பேராசிரியர்களிடமும் அடிகளார் நெருங்கிப் பழகியதால், அவர் பலருக்கு நண்பரானார். பல்கலைக் கழகத்தில் இன வேறுபாடும் சமய வேறுபாடும் இன்றிப் பலருடனும் பழகினார் அடிகளார் சிங்களவரிடையேயும் அவருக்கு நண்பர்கள் உண்டு. சிங்கள—தமிழ்ப் பண்பாட்டினைப்பற்றிய ஆய்வு இதழ் ஒன்றினைத் தொடங்க வேண்டுமென்றுகூட அவர் ஒரு சமயம் திட்டமிட்டார்.[3]

கண்டியில் இலங்கைப் பல்கலைக் கழகம் அமைந்துள்ள பேராதனைப் பகுதி இயற்கை எழில் கொஞ்சும் பகுதியாகும். மலை வளமும் மர வளமும் நிறைந்து எங்கும் பசுமை பூத்த பகுதி அது. இத்தகைய இயற்கைச் சூழ்நிலை அடிகளாருக்கு மிகவும் பிடித்திருந்தது. பல்கலைக் கழக வளாகத்தில் பூக்கும் மலர்கள்மீது தனிப்பற்று அவருக்கு. அவர் எழுதிய 'மலரும் மாலையும்' என்னும் கட்டுரை மலர்கள் மீது அவர் கொண்டிருந்த பற்றினை நமக்கு எடுத்துக் காட்ட வல்லது.

**இலண்டனில் முனைவர் பட்டம்**

தம் இலங்கைப் பல்கலைக் கழகப் பணிக்கு நடுவில் 1955-57 ஆண்டுகளில் இலண்டன் பல்கலைக் கழகத்தில் பயின்று 'பழந்தமிழ்

---

3. Sarachchandra Ediriweera, 'Reminiscences of Fr. Thani Nayagam—The Peradeniya years'; Tamilaram; p. 31

இலக்கியங்களில் கல்விச் சிந்தனைகள்' (Educational thought in ancient Tamil Literature) என்னும் தலைப்பில் ஆய்வுசெய்து முனைவர் பட்டம் பெற்றார். ஏற்கனவே உரோமையில் சமயவியல் முனைவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலை, இலக்கிய முதுகலைப் பட்டங்களைப் பெற்றிருந்த அடிகளார் பெற்ற நான்காவது பட்டம் இது.

## பேராதனைத் தமிழ் விழா

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றியபோது அங்குப் பயின்று வந்த மாணவரிடையே தமிழார்வத்தை வளர்ப்பதிலும், ஆராய்ச்சியுணர்வை ஊக்குவிப்பதிலும் அடிகளார் ஈடு பட்டார். அவரது முயற்சியால் பேராதனைத் தமிழ்ச்சங்கம் முறையாகச் செயல்பட்டது. சங்கம் தன் ஆண்டுவிழாவைத் தமிழ் விழாவாகவே கொண்டாடி வந்தது. இம் முயற்சிகளுக்குப் பக்க பலமாக அடிகளார் பின்னணியிலிருந்து உதவி வந்தார்.

1958ஆம் ஆண்டுத் தமிழ் விழாவைப் பெப்ருவரி 22ஆம் நாளன்று மிகச் சிறப்பாக நடத்தச் சங்கத்தார் திட்டமிட்டனர். விழாவில் கலந்துகொண்டு காலை அமர்வுக்குத் தலைமை தாங்க இந்தியாவிலிருந்து பன்மொழிப் புலவர் பேரா. தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரை அழைத்திருந்தனர். இசைவு தெரிவித்த மீனாட்சி சுந்தரனார் எக்காரணத்தாலோ விழாவுக்கு வர இயலாமற் போயிற்று. ஆகவே தனிநாயகம் அடிகளார் காலை அமர்வுக்குத் தலைமையேற்றுச் சிறப்பித்தார்.

பிற்பகல் அமர்வு மாலை ஆறு மணிக்குத் தொடங்கவிருந்தது. அமர்வு தொடங்குவதற்கு முன்னரே திறந்த வெளி அரங்கம் நிரம்பி வழியலாயிற்று. பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், மாணவர்களோடு சிங்கள மக்களும் திரளாக விழாவுக்கு வந்திருந் தனர். கற்றோர் நிரம்பிய அக்கூட்டத்தில் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்துதல் பயனுள்ளதாக இருக்குமென எண்ணிய சங்கப் பொறுப்பாளர்கள் அடிகளாரை ஆங்கிலத்தில் தொடக்கவுரை நிகழ்த்துமாறு வேண்டினர். அதுபோது விழாவில் கலந்து கொள் வதற்காகத் தம் இல்லத்தை விட்டு அவர் வெளியே வந்து கொண் டிருந்தார். ''எவ்வளவு நேரம் பேச வேண்டும்?'' என்று அடிகளார் வினவ, ''பத்து நிமிட நேரம்'' என்று தமிழ்ச் சங்கத் தலைவர் இரத்தினம் பதில் கூறினார்.

விழா குறித்த நேரத்தில் தொடங்கியது. அடிகளார் விழாவைத் தொடங்கிவைத்து ஆங்கிலத்தில் அருமையான உரை நிகழ்த்தினார். சங்க காலத்தில் தொடங்கிய அவரது உரை பேராதனைத் தமிழ்ச் சங்கம் வரையும் படர்ந்து சென்று முடிவு பெற்றது. காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ற மணியான உரை அது. மறுநாள் அவரைச் சந்தித்த மாணவர்களும் பேராசிரியர்களும் ''அறிஞர் என்று உங்களைப் பாராட்டியவர்கள் உண்மையில் போற்றப்பட வேண்டியவர்களே'' என்று உளம்கனிந்து அடிகளாரைப் பாராட்டினார்கள்.[4]

## தமிழ் நூல் கண்காட்சி

பல்கலைக் கழகக் கல்வித்துறை மாணவர்களின் துணையோடு அடிகளார் தமிழ் நூல்களின் கண்காட்சி ஒன்றையும் ஏற்பாடு செய்தார். பெருங்காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், நாவல்கள், சிறுகதைகள், கவிதை, புவியியல், வரலாறு, அறிவியல் எனப் பல துறை நூல்களும் இக்கண்காட்சியில் இடம் பெற்றன. இலங்கையில் அச்சிடப்பட்ட 'அங்காதிபாதம்' போன்ற பழைய அறிவியல் நூல்கள் கூட அக்கண்காட்சியில் இடம்பெற்றன. இலங்கையில் வெளியான நூல்கள் இதழ்களோடு, தமிழ்நாட்டில் வெளியிடப் பெற்ற நூல்களும் இதழ்களும் அதில் இடம் பெற்றன.

கண்காட்சியைத் தொடங்கி வைத்து உரையாற்றிய பல்கலைக் கழகத் துணைவேந்தர் சர் நிக்கொலாஸ் அற்றிக்கலை, கண்காட்சியை ஏற்பாடு செய்த அடிகளாரின் அறிவு முதிர்ச்சியையும் அயராத உழைப்பையும் பாராட்டி, பேராதனைப் பல்கலைக்கழகம் செய்யும் பயனுள்ள பணி இது என்று குறிப்பிட்டார்.

இலங்கையின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் தமிழ் அறிஞர்களும் மாணவர்களும் இலக்கிய அன்பர்களும் நூற்றுக்கணக்காக வந்து கண்காட்சியைக் கண்டு பயன் பெற்று மகிழ்ந்தனர்.

கண்காட்சி நிறைவுற்ற அன்று, அதற்காக உழைத்த நண்பர்களுக்கும் மாணவர்களுக்கும் அடிகளார் சிறந்த விருந்து படைத்தார். அதுபோது, ''தமிழ் நூல்களின் கண்காட்சியைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடத்த வேண்டும் என்னும் எண்ணம் உங்களுக்கு எப்படித் தோன்றியது?'' என்று ஒரு மாணவர் வினவி

4. அமுது; தனிநாயகம் அடிகளார் சிரிக்கிறார்; தவத்திரு தனிநாயக அடிகளார் மாட்சி நயப்பு மலர்; ப. 38

னார். "புத்தகங்களை நாம் வாசிக்காவிட்டாலும், புத்தகங்களின் அட்டைகளையாவது நாம் பார்த்திருக்கவேண்டும்" என்று அடிகளார் நகைச் சுவையோடு பதிலிறுத்தார்.[5]

அடிகளார் ஒரு புத்தகப் பிரியர். நல்ல புத்தகங்கள் எங்குக் கிடைத்தாலும், எவ்விலை ஆயினும் தயங்காமல் வாங்கித் தம் நூலகத்தைப் பெருக்கி வந்தார். பல்கலைக் கழகப் பணிகளும் மாலை நேர விளையாட்டும் தவிர எஞ்சிய நேரத்தையெல்லாம் பல நூல்களைப் படித்துத் தம் அறிவை மேலும் மேலும் வளர்த்துக் கொள்வதிலும், தம் ஆராய்ச்சியை விரிவாக்குவதிலும் அடிகளார் கவனம் செலுத்தி வந்தார்.

### படிக்கும் முறை

நின்றபடியே நூல்களைப் படிப்பதில் அடிகளார்க்கு விருப்பம் மிகுதி. எனவே நூல்மேடையொன்று அடிகளாரின் அறையில் எப்போதும் இருக்கும். தூத்துக்குடியிலும், அண்ணாமலை நகரிலும், கண்டியிலும், கோலாலம்பூரிலும், யாழ்ப்பாணத்திலும் அடிகளார் வசித்த இடங்களிலெல்லாம் அவரது அறையில் நூல் மேடை எப்போதும் இடம் பெற்றிருந்தது.

நூல்களைப் படிக்கும்போது அவற்றிலுள்ள சிறந்த பகுதி களைக் குறிப்பெடுத்து, அக்குறிப்புக்களை ஒரு தனிப்பெட்டியில் இட்டு, வசதி வாய்க்கும்போது மீண்டும் அவற்றை எடுத்துப் படிப்பது அடிகளாரின் வழக்கம்.

நாள், வார, மாத இதழ்களில் வரும் சிறந்த கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் ஆகியவற்றை வெட்டி ஒட்டிப் புத்தகங் களில் வைத்துப் பத்திரப்படுத்துவதும் அடிகளாரின் வழக்கமாக இருந்தது.

### கைது செய்ய ஆணை!

இலண்டனில் முனைவர் பட்டம் பெற்று இலங்கைக்குத் திரும்பிய அடிகளார் பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாள ராகப் பதவி உயர்வு பெற்றார். ஆயினும் இலங்கையில் அடிகளார் தொடர்ந்து பணியாற்ற இயலாத சூழ்நிலை அன்று நிலவியது. இலங்கைத் தமிழர்கள் சமவுரிமை வேண்டி நடத்திய போராட்டங் களை அடிகளார் ஆதரித்தார். சமவுரிமை வேண்டுவோர் தமிழர்

---

5. மேற்படி ப. 39

என்பதைவிட, தங்கள் பிறப்புரிமையை இழந்து அநீதிக்கு ஆளாக்கப்பட்ட மனிதர்கள் என்பதாலேயே அவர் தமிழர் போராட்டங்களை ஆதரித்தார் என்பது பொருந்தும். ஆனால் அன்றைய இலங்கை அரசு இதைப் புரிந்துகொள்ளாமல் அடிகளார் அரசியலில் தலையிடுகின்றார் என்று தவறாக எண்ணியது. அவரைக் கைது செய்ய மறைவில் ஆணை பிறப்பித்திருந்தது என்று கூடச் சிலர் எண்ணியதுண்டு.[6]

எனவே அடிகளார் இலங்கைப் பல்கலைக் கழகப் பணியைத் துறந்துவிட முடிவு செய்ததில் வியப்பில்லை.

### மலாயாப் பல்கலைக் கழகத்தில்

அடிகளார் இலங்கைப் பல்கலைக் கழகத்தைவிட்டு விலகி மலாயாப் பல்கலைக் கழகத்துக்குப் பொறுப்பேற்கச் சென்ற போது, இலங்கையை விட்டுப் பிரிவது அவருக்கு எளிதாக இருக்கவில்லை. அவரது நண்பர்களும் அதனால் பெரிதும வருந்தினர். அவர் இலங்கைப் பல்கலைக் கழகத்தினை விட்டுச் சென்றால் அதன் வளமை குன்றும் என எண்ணியோருள் சில சிங்கள நண்பர்களும் இருந்தனர்.[7]

### அறிமுகமானவரே

மலாயாப் பல்கலைக் கழகம் அவரை இருகரம் நீட்டி வரவேற்றது. மலாயா நாடு அடிகளுக்குப் புதிதல்ல. 1954ஆம் ஆண்டு 'தமிழர் திருநாள்' நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு அவர் ஆற்றிய உரைகள் அவரது தமிழ்ப் புலமையையும பேச்சாற்றலையும் புலப்படுத்தின. 14-1-1955 அன்று சிங்கப்பூரில் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு அவர் ஆற்றிய சொற்பொழிவு காரணமாக மலாயா, சிங்கப்பூர்த் தமிழரிடையே அவரது புகழ் பரவத் தொடங்கியது.[8]

### உற்ற நண்பர்

'தமிழ் முரசு' ஆசிரியராகிய திரு. கோ. சாரங்கபாணி நம் அடிகளாரின் நெருங்கிய நண்பர். மலாயாப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டபோது அதில் சீனத்துறை, மலாயாத் துறை இடம் பெற்றது போலவே தமிழுக்கும் இடமளிக்கும் வகையில் இந்தியத் துறை அமைய வேண்டுமென உழைத்து வெற்றி கண்ட பெருமை

---

6. வே. அந்தனி ஜான் அழகரசன்; முன்சுட்டியது; பக். 35-36
7. Sarachchandra Ediweera; op. cit; pp. 30-31
8. Rajan Philipupillai; op. cit; p. 8

திரு. கோ. சாரங்கபாணிக்கு உண்டு. அன்று மலாயா—சிங்கப்பூர்த் தமிழர்களின் பெருந்தலைவராக அவர் விளங்கினார். தமிழர் திருநாளின்போது தமிழகத்திலிருந்து தமிழ் அறிஞர்களை அழைத்து வந்து தமிழின் அருமை பெருமைகளைத் தம் நாட்டு மக்களுக்கு எடுத்தோதும் பண்பாட்டுப் பெருவிழாவாக அவர் அவ் விழாவை மாற்றினார். தமிழர் திருவிழாவிற்கு அடிகளாரை அழைத்ததும் அவரே.

''மலாயாப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் கட்டிலுக்கு நான்முதற் பேராசிரியராகச் செல்ல வேண்டும் என்று சாரங்கபாணி போன்ற தமிழ்ப் பற்றுடையோர் விரும்பினர். நானும் இந்த வாய்ப்பை வரவேற்காமல் இல்லை'' என்பார் அடிகளார்.[9]

எனினும் 1960 முதல் 1961 வரை பேராசிரியர் முத்து இராசாக் கண்ணனார் இந்தியத்துறையின் தலைவராகப் பொறுப்பேற்றார் 1961ஆம் ஆண்டுமுதல் 1969 வரை அடிகளார் இந்தியத்துறைத் தலைவராகப் பெரும்புகழுடன் பணிபுரிந்தார்.

### தமிழுக்கே முதலிடம் வேண்டும்

மலாயாப் பல்கலைக் கழகத்தின் இந்தியத் துறையில் வடமொழிக்கு முதன்மை வழங்கப்படவேண்டும் என்று சிலர் பரிந்துரைத்தபோது[10] திரு. கோ. சாரங்கபாணியின் தலைமையில் தமிழர்கள் திரண்டெழுந்து அம்முயற்சியைத் தோல்வியுறச் செய்தனர். மலேசியாவிலுள்ள இந்தியர் - இலங்கையருள் 80% தமிழர்கள்; ஆகவே இந்தியத் துறையில் தமிழுக்கே முதலிடம் கொடுக்கப்பட வேண்டுமென்று உழைத்த சாரங்கபாணியார் **'தமிழ் எங்கள் உயிர்'** இயக்கத்தைத் தோற்றுவித்து அதன் மூலம் போராடி, வெற்றி கண்டார். அவ்வியக்கம் தமிழ் மக்களிடையே நிதி திரட்டி 10,000 தமிழ் நூல்களை வாங்கிப் பல்கலைக் கழகத்தில் ஒரு தமிழ் நூலகம் அமைத்திட வழி வகுத்தது. இந்தியத் துறை எனினும் அது தமிழ்த் துறையாகவே நடைமுறையில் விளங்கு வதற்கு முதற் காரணம் கோ. சாரங்கபாணி அவர்களென்றால் மற்றொரு காரணம் தனிநாயகம் அடிகளாரே எனில் அது மிகையன்று. இந்தியத்துறை தொடங்கப் பெறுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே ''மலாயாப் பல்கலைக் கழகத்தில்

---

9. வே. அந்தனி ஜான் அழகரசன்; முன்சுட்டியது; ப. 39
10. மேற்படி

விரைவில் தொடங்கப்படவிருக்கும் இந்தியத்துறையின் பாடத் திட்டத்தில் தென் கிழக்காசியத் தமிழ்ப்பண்பாடு முக்கிய பாடமாக அமையுமென நம்புகிறோம்'' என்று அடிகளார் எழுதினார்.[11] இந்தியத் துறையிலுள்ள ஒன்பது ஆசிரியர்களுள் ஒருவரே வடமொழி ஆசிரியர் என்பதையும், மூன்று பகுதி நேர ஆசிரியர்களுள் வடமொழி ஆசிரியர் எவருமில்லை என்பதையும், நான்கு துணை விரிவுரையாளர்களுள் ஒருவரே வடமொழி ஆசிரியர் என்பதையும் காணும் போது[12] .இந்தியத் துறை உண்மையில் தமிழ்த் துறையாகவே அடிகளாரின் தலைமையில் இயங்கியதை உணரலாம்.

அடிகளாரின் தலைமையில் இந்தியத்துறை பல வகையிலும் விரிவுபெற்றுச் சிறப்புப் பெற்றது. வெளிநாட்டு அறிஞர்களின் ஆதரவுடனும் திரு. கோ. சாரங்கபாணி போன்றோரின் உதவியுடனும் இந்தியத்துறை நூலகத்துக்கு இந்திய நாட்டுத் தத்துவம், சமயம், பண்பாடு, மொழிகள், வரலாறு ஆகிய பல துறைகளைப் பற்றிய தமிழ், ஆங்கில, பிரெஞ்சு மொழி நூல்கள் வாங்கப் பட்டன.

இந்தியத்துறையில் ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாகவும் தமிழைப் பயிற்று மொழியாகவும் கொண்ட இரு பிரிவுகள் செயல் பட்டன.

சங்க இலக்கியம், தமிழ்ச் சமுதாயத்தில் மேனாட்டார் தாக்கங்கள், தமிழ்ப்பண்பாடும் நாகரிகமும், கல்வி, மெய்யியல் ஆகியவை அடிகளார் மலாயாப் பல்கலைக் கழகத்தில் விரும்பிக் கற்பித்த பாடங்கள்.

**சிறந்த ஆசிரியர்**

அடிகளார் இயல்பாகவே ஒரு நல்லாசிரியர் என்பது மிகையாகாது. நெல்லை மாவட்டத்திலுள்ள வடக்கன்குளம் புனித தெரசாள் உயர்நிலைப் பள்ளியில் அவரிடம் பயின்றவர்கள்கூட இதற்குச் சான்று பகர்வர். அடிகளின் ஆளுமை, அறிவாற்றல், தெளிந்த சிந்தனைத் திறன், வளமான குரல் போன்றவை அவரது

11. X. S. Thani Nayagam, Tamil culture Vol. IV No. 3; p. 220.
12. S. Singaravelu; Tamil Studies in Malaysia - Tamil Studies Abroad; X. S Thani Nayagam (ed) 1968; pp 219—221

ஆசிரியப் பணியில் அவருக்குத் துணை நின்றன. அவர் ஒரு கவிதையை எடுத்துக் கொண்டால் அதை அரைகுறையாக நடத்த மாட்டார். முழுக்கவிதையையும் தெளிவாக விளக்கி, அதன் உணர்வுகளை வெளிக்கொணர்வார். பிற மொழி இலக்கியங்களோடு ஒப்பிடுவார்.[13] அதனால் அடிகளாரின் வகுப்புகள் மாணவர்க்குத் தேனாக இனித்தன. 1967-68 கல்வியாண்டில் இந்தியத் துறையில் இளங்கலை வகுப்பு மாணவர்கள் 363 பேர் என்பதும், பிற துறைகளிலிருந்து வந்து தமிழ் வகுப்புகளில் கலந்துகொண்டோர் தொகை 1142 என்பதையும் அறியும் போது மலைப்பு மேலிடுகின்றது.[14]

## ஆராய்ச்சியும் வெளியீடுகளும்

இந்தியத் துறையில் அடிகளார் ஆராய்ச்சிக்குச் சிறப்பிடம் வழங்கினார். துறைப் பேராசிரியர்கள் பாடம் நடத்தியதோடு தாங்களும் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். அடிகளாரும் சிலப்பதிகாரம், சங்க கால நிலவியல், சங்க இலக்கியங்கள், தமிழ் இலக்கியங்களின் கால உறுதிப்பாடு, தொடக்க காலத் தமிழ் அச்சுக்கலை, வெளிநாடுகளில் தமிழர் குடியேற்றம் எனப் பல துறைகளில் ஆராய்ச்சி செய்துவந்தார்[15].

முதுகலை மாணவர்கள் ஆய்வேடு எழுதவேண்டும் என்பது கட்டாயமாக இருந்தது. பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் பெண்கள் நிலை, திருவாசகமும் திருவருட்பாவும், மலாயாவில் இந்தியக் கல்வியின் வரலாறு, இருபதாம் நூற்றாண்டு நாவல்கள், தற்கால இலக்கியத்தில் பெண்கள் போன்ற ஆய்வேடுகள்[16] நூல் வடிவம் பெற்றன. நூல் வெளியீட்டுக்காகவே இந்தியத் துறையில் ஒரு தனிப் பிரிவை அடிகளார் தொடங்கினார். தமிழ்ச் சமுதாயம், இலக்கியம், பண்பாடு, மொழியியல், வட்டார மொழிகள், மலாயா இந்தியச் சமுதாயம், தமிழ் ஆய்வடங்கல் எனப் பலதுறை நூல்களை இதன்மூலம் வெளியிட அடிகளார் ஆவன செய்தார்.[17]

---

13. வே. அந்தனி ஜான் அழகரசன்; முன்சுட்டியுது; பக். 41-43
14. S. Singaravelu; op. cit. p. 223
15. Ibid, p. 219
16. வே. அந்தனி ஜான் அழகரசன்; முன்சுட்டியது; ப. 49
17. S. Arasarathnam; 'Xavier S. Thani Nayagam; His Malaysian years (1961-1976)'; Tamilaram; p. 36

**உலகளாவிய புகழ்**

தனிநாயகம் அடிகளாரால் மலாயாப் பல்கலைக் கழகத்தின் இந்தியத்துறை உலகப் புகழ்பெற்றது என்பது உயர்வு நவிற்சியன்று. தமிழ் நாட்டிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் தமிழறிஞர்களையும் மொழியியல் வல்லுநர்களையும் வரவழைத்து இந்தியத் துறையில் சிறப்பு விரிவுரைகளுக்கு அடிகளார் ஏற்பாடு செய்வார். பேராசிரியர்கள் மு. வரதராசன், தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் போன்ற தமிழ் நாட்டு அறிஞர்களும், ஆர். இ. ஆஷர், கிளாரன்ஸ் க்ளிக், எட்கர் நோல்ட்டன், கார்ல் மெங்கெஸ் போன்ற வெளி நாட்டு அறிஞர்களும் அவ்வாறு உரையாற்றியோருள் குறிப்பிடத் தக்கவர்கள்[18].

தனிநாயகம் அடிகளார் துறைத் தலைவராகப் பணியாற்றிய பத்தாண்டுகளில் இந்தியத் துறை மலாயாப் பல்கலைக் கழகத்தில் மிகச் சிறந்து விளங்கியது. அடிகளார் பல்கலைக் கழகத்தில் செல்வாக்கு மிக்கவராகப் பொலிந்தார். பல்கலைக்கழகக் குழுக்களில் அவரது பேச்சுக்குத் தனிமதிப்பு இருந்தது.

**திட்டமிட்ட வளர்ச்சி**

இந்தியத் துறையினை அடிகளார் திட்டமிட்டு வளர்த்தார். மலாயா, சிங்கப்பூர் நாடுகளில் வாழ்ந்த இந்தியர்களுள் பெரும்பான்மையினர் தமிழர்களே. ஆகவே அவர்களது தேவைக்கும் வளர்ச்சிக்கும் தக்கவாறு தம் துறையின் பாடத்திட்டங்களை அடிகளார் அமைத்ததில் வியப்பொன்றுமில்லை. இந்தியத் தத்துவங்களையும் மெய்யியலையும் புறக்கணித்துவிடாமல், அதே வேளையில் திராவிட, தமிழ்ப் பண்பாட்டுக்குச் சிறப்பிடம் வழங்கும் வகையில் இந்தியத் துறை திட்டமிட்டுச் செயலாற்றியது. மலாயா நாட்டு இந்தியருள் பெரும்பான்மையினரின் தாய்மொழி தமிழாதலின், அம்மக்கள் தங்கள் தாய்மொழியில் புலமைபெறும் வகையில் பாடத்திட்டம் அமைந்தது. எனினும் வடமொழிக் கல்வி புறக்கணிக்கப்பட்டு விடவில்லை.

தமிழராயினும் இந்தியராயினும் அவர்கள் மலாயா நாட்டுக் குடிமக்கள் என்பதை மறவாதவராக அடிகளார் பாடத்திட்டத்தை அமைத்தார். சீனம், மலாய், பஞ்சாபி, தெலுங்கு, மலையாளம்

18. Ibid. pp. 35-36

போன்ற பிற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவரும் தமிழையோ வடமொழியையோ பயில்வதற்கு இந்தியத்துறை வழிவகுத்ததால், பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளில் பயின்று வந்த பிற மொழி மாணவர்களும் இந்தியத் துறையில் மொழிப் பாடங்களைப் பயில முன்வந்தனர்.

அடிகளாரின் தமிழார்வம் அத்துறையின் பிற பேராசிரியர் களையும் பற்றிக் கொண்டது. திறமையும் புலமையும் கொண்ட தகுதியான ஆராய்ச்சியாளர்களையே தம் துறையில் ஆசிரியர் களாக அடிகளார் தேர்ந்தெடுத்தார். தமிழிலும் வடமொழியிலும் வரலாற்றிலும் தொன்மையியல் துறையிலும் புலமை மிக்க பலர் இந்தியத் துறையில் அமர்த்தப்பட்டனர்.

அடிகளார் தாம் செய்யும் எதையும் சிறப்பாகவும் தரத்தில் உயர்ந்ததாகவும் செய்யும் இயல்புடையவர். ஆகவே இந்தியத் துறையின் பாடத்திட்டங்களை வகுப்பதிலும், ஆராய்ச்சியிலும், தக்க ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் உயர்தரம் சிறக்க வேண்டும் என்பதில் தனிக்கவனம் செலுத்தி வந்தார். எனவே இந்தியத்துறை மலாயாப் பல்கலைக் கழகத்தில் தரத்தில் உயர்ந்த ஒரு துறையாக விளங்கியதில் வியப்பில்லை.

### உலகம் போற்றிய பேரறிஞர்

பல்கலைக் கழகத்தின் சிறந்த பேராசிரியர் சிலருள் அடிகளார் ஒருவராக விளங்கியமைக்கு இவ்வாறு உயர்தரச் செயல்பாடுகளை அவர் தம் துறையில் நிலைபெறச் செய்தமை ஒரு காரணமாகும். அடிகளாரின் பன்மொழிப் புலமையும், உலகத் தரம் வாய்ந்த இதழ்களில் அவர் வடித்த ஆய்வுக் கட்டுரைகளும், பல்வேறு உலக மாநாடுகளில் அவர் பங்குபற்றி ஆய்வுக்கட்டுரைகள் வழங்கியமை யும், உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழறிஞர்களின் வழி காட்டியாகவும் தலைவராகவும் அவர் விளங்கியமையும், குறிப்பாக உலகத் தமிழ் மாநாட்டைக் கோலாலம்பூரில் மலாயாப் பல்கலைக் கழக வளாகத்தில் கூட்டி மிகச் சிறப்பான முறையிலும் உலக அறிஞர்கள் பலர் பங்குபெறும் வகையிலும் அதை நடத்தியமையும் அடிகளாரின் சிறப்பினைப் பல்கலைக்கழகத்தார் உணர்ந்து போற்றுதற்குக் காரணமாயின. இத்தகைய பெருமை மிக்க பேராசிரியர் பல்கலைக் கழகத்தின் கலைப்புலத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், அவரை இந்தியத் தலைவராகக் கொண்டிருந்த இந்தியத் துறை உலக அளவில் பெயர் பெற்று விளங்கியதிலும் வியப்பதற்கொன்றுமில்லை.

## பிரதமர் போற்றிய பேராசிரியர்

மலாய் மக்களின் தலைவரெனப் போற்றப்பட்டவரும், மலேசியப் பிரதமருமான மாண்புமிகு துங்கு அப்துல் ரகுமான் முதல் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொண்டு தொடக்கவுரை யாற்றியமைக்கு அடிகளாரின் சிறப்பும் செல்வாக்குமே காரணம் எனலாம். "குறுகிய துறைப்புலமை வாய்ந்தவராக அல்லாமல் பன்மொழிப் புலமையிற் சிறந்த ஒருவரைத் தன் துறைத் தலைவ ராகப் பெற்றிருப்பது இந்தியத் துறையின் பெரும் பேறாகும். கலைப்புல உயர் தலைவர் பேராசிரியர் தனிநாயகம் அடிகளாரையே நான் குறிப்பிடுகிறேன்"[19] என்று தம் உரையில் அவர் அடிகளாரைச் சிறப்பித்துப் பேசினார். அவர் தம் உரையில் அன்று தனிநாயகம் அடிகளாரை மட்டுமே பெயர் சுட்டிக் குறிப்பிட்டார் என்பது மலேசியப் பிரதமர் அடிகளாரை எவ்வளவுக்கு மதித்துப் போற்றினார் என்பதைப் புலப்படுத்து கிறது.

## திருக்குறள் மொழிபெயர்ப்பு

மலாயாப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் இருவர் திருக்குறளைத் தத்தம் மொழியில் பெயர்ப்பதற்கு அடிகளார் தூண்டுதலாக இருந்தார். அதன் விளைவாக மலாய்த்துறையைச் சார்ந்த பேராசிரியர் இஸ்மாயில் ஹுசைன் (Prof. Ismail Hussein) மலாய் மொழியிலும், சீனத் துறையைச் சார்ந்த பேராசிரியர் ச்சீங் ஹ்ஸி (Prof. Ch'eeng Hsi) சீன மொழியிலும் திருக்குறளைப் பெயர்த்து வழங்கினர்.[20] இவ்வாறு இந்தியத் துறையைக் கடந்த நிலையிலும் அவரது செல்வாக்கு செயல்பட்டு வந்ததை நாம் காணலாம்.

## சிறப்புரையின் சிறப்பு

பொதுவாக ஒருவர் பேராசிரியப் பொறுப்பேற்ற சிறிது காலத்தில், தம் துறைக்குத் தொடர்புடைய ஒரு தலைப்பில், பல்கலைக் கழகக் கல்வியாண்டுத் தொடக்கத்தில் சிறப்புரை வழங்குவது மலாயாப் பல்கலைக்கழகத்தில் மரபாக இருந்தது. (உலகில் பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் இம்மரபு உண்டு.)

---

19. Tunku Abdul Rahman, 'Opening Address' in Proceed ings of the First International Tamil Conference— Seminar, p. xxxv
20, S. Singaravelu; op. cit; p. 217 (foot note)

இம்மரபின் படி 14-12-1962 அன்று அடிகளார் 'இந்தியச் சிந்தனையும் உரோமைய ஸ்டாயிக் சிந்தனையும்' (Indian Thought and Roman Stoicism) என்னும் தலைப்பில் மலாயாப் பல்கலைக் கழகத்தில் அரியதோர் உரை நிகழ்த்தினார். இந்தியச் சிந்தனையை உரோமையச் சிந்தனையோடு ஒப்பீடு செய்து அவர் ஆற்றிய உரை பல்கலைக்கழக அளவில் அவருக்குப் பெருமை சேர்த்தது. அவ்வுரையைக் கேட்ட பின்பே அடிகளாரின் பெருமையையும் பரந்துபட்ட அறிவையும் பிற பேராசிரியர்கள் உணர்ந்தனர் எனலாம்.

கடந்த காலத்தில் ஜான் ரஸ்கின் போன்றோர்கூட இந்தியக் கலையின் சிறப்பினை உணராதாராக இருந்தனர் என்பதைத் தம் உரையில் குறிப்பிட்ட அடிகளார், இந்த நூற்றாண்டில் அரவிந்தர், மாக்ஸ்ம்யுல்லர், ஹெர்மன் ஒல்டென்பெர்க், ஹாப்கின்ஸ், பெரிடேல் கீத், ழூலியேன் வென்ஸோன், ரைஸ் டேவிட்ஸ், ஹைன்ரிஹ் ஃஸிம்மர், லூயி தெ லாவேல் புஸ்ஸேன், ழான் ஃபீலியோஃஸா, பியர் மைல், லூயீ ரெனூ, ஜே. கோன்டா, ஜியுஸெப்பெ தூச்சி, எம். பி. எமனோ, தாமஸ் பர்ரோ, ஏ. எல். பாஷம், கமில் சுவலபில் போன்ற எத்தனையோ அறிஞர்கள் இந்தியக் கலையையும் சிந்தனையையும் ஆய்வு செய்து, அதன் தரத்தை உணர்ந்து பரப்பிவருகிறார்கள்[21] என்று தக்க சான்றுகளுடன் விளக்கினார். தம் உரையின்போது அவர்களின் நூல்களிலிருந்து ஏராளமான மேற்கோள்களை எடுத்து வழங்கவும் அவர் தயங்கவில்லை.

### இனியும் புறக்கணிக்க இயலாது

''பல்கலைக் கழகக் கல்வியின் வரலாற்றைத் தொகுப்பவர்கள் தட்சசீலம், நாலந்தா, காஞ்சீபுரம் ஆகிய இடங்களை ஒதுக்குவதும், காப்பிய இயல்பை ஆராய்ச்சி செய்பவர்கள் மகாபாரதம், இராமாயணம், சிலப்பதிகாரம் ஆகியவற்றை ஒதுக்கி விடுவதும், மாக்கியவெல்லியில் தொடங்கி அரசியலின் அறிவு சார்ந்த ஆய்வுகளின் வரலாற்றை எழுதுபவர்கள் அதற்கெல்லாம் முந்திய அர்த்த சாஸ்திரத்தைக் குறிப்பிடாமலிருப்பதும், பக்தி மார்க்கத்தை ஆய்வு செய்பவர்கள் தமிழ்ப் பக்திக் கவிஞர்களை மறந்துவிடுவதும், மெய்யியல் சிந்தனை முறைகளை விளக்குபவர்

---

21. X. S. Thani Nayagam; Indian Thought and Roman Stoicism; Tamil culture Vol. X. No. 3, 1963; pp. 2-3

கள் சங்கரரையும் இராமனுசரையும் குறிப்பிடத் தவறுவதும், சிற்பக்கலை வரலாற்றைக் கற்பிப்பவர்கள் நடராசர் சிலையை மறந்துவிடுவதும் இன்று அறிவுடைமையாகக் கருதப்படாது''[22] என்று ஆணித்தரமாக அடிகளார் தம் உரையின் போது முழங்கினார்.

சிந்தனை ஒப்பீடு

இலத்தீன், கிரேக்க இலக்கியங்களில் காணப்படும் ஸ்டாயிக் சிந்தனைக் கூறுபாடுகளுடன் ஒத்த காலத் தமிழ் இலக்கியத்தில் காணப்படும் சிந்தனைகளை ஒப்பீடு செய்து அடிகளார் விளக்கிய போது பலரும் அதுபற்றி முதன்முறையாக அறிந்து பெருவியப்புக் கொண்டனர். தமிழர் உரோமையரோடும் யவனரோடும் கொண்டிருந்த வாணிகத் தொடர்பினை விளக்கியபோது, தமிழருக்கும் உரோமையருக்குமிடையில் இருந்த சிந்தனை ஒருமைப்பாட்டையும் அடிகளார் விளக்கத் தவறவில்லை.

இந்தியச் சிந்தனையின் பல்வேறு கூறுகளையும் மரபுகளையும் குறிப்பிட்ட அடிகளார், இந்தியச் சிந்தனையில் முக்கிய கூறாகிய தமிழ்ச் சிந்தனையைப் பற்றியே தாம் மிகுதியும் எடுத்துரைத்த தாகத் தம் உரையில் அவரே ஒப்புக்கொண்டார். உரோமை ஸ்டாயிக் ஆசிரியர்கள் மக்களிடையே சமத்துவத்தை எடுத்தோதி யதை நினைவுகூர்ந்ததோடு, அடிகளார் அதனை

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

என்னும் புறநானூற்றுப் பாடலுடனும்

'யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாதவாறு'

என்னும் குறட்பாவுடனும் ஒப்பிட்டுக் காட்டினார். மக்களிடையே வேற்றுமைகளைக் கற்பித்த பிளேட்டோ போன்ற கிரேக்க ஸ்டாய்க்வாதிகளின் கருத்துக்களோடு, சாதி வேறுபாடுகளைக் கற்பித்த பிராமணச் சிந்தனைகளை ஒப்பிட்டார் அடிகளார்.[23] அலெக்சாண்டர் காலந்தொட்டு கிரேக்கருக்கும் வட இந்தியா வுக்கும் தொடர்பு இருந்தமையும் நினைவில் கொள்ளத்தக்கது என்று அடிகளார் வலியுறுத்தினார். தமிழ் இலக்கியத்தில்

22. Ibid, p. 5
23. Ibid, pp. 18-19

குறிப்பிடப்படும் யவனர் அதிரியாட்டிக் கடற்பகுதியில் உள்ள இயோனியா தீவைச் சார்ந்தவர்களேயன்றி, கிரேக்க தீபகற்பத்தைச் சார்ந்தவர்களல்லர் என்பது அடிகளார் கருத்து

**ஆதாரமில்லாத அபத்தம்**

சாந்தத்தைத் தம் பண்பாகக் கொண்டு இனிமையைத் தம் மரபாகக் கொண்டிருந்த அடிகளார் தமிழுக்கு ஊறு எனில் வீறு கொண்டு பொங்கியெழுந்த பாங்கினையும் அப்பல்கலைக்கழக உரை புலப்படுத்தியது. ''இந்தியச் சிந்தனைகளுக்கு ஊற்று வட மொழி இலக்கியங்களே எனக் காட்டும் முயற்சிகள் இன்றும் அறிஞர்களுள் ஒரு சிலரிடம் இருப்பதைக் காண்கிறோம். அத்தகையோர் தமிழ் மொழியினைஅறிந்தோராக இருப்பதால் சரியான விளக்கங்களை வழங்கியிருக்க வேண்டும். இருந்தும் **'இவ்விலக்கியங்களெல்லாம் வடமொழிக்குப் பெரிதும் கடமைப் பட்டவை. வடமொழியென்னும் மந்திரக்கோல் தொட்டதாலேயே திராவிட மொழிகளெல்லாம் சேரிமொழி என்னும் நிலையினின்று உயர்ந்து இலக்கிய மொழி என்னும் உயர் நிலையை அடைந்தன'** என்று பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாத்திரி தம் முதுமைக் காலத்தில் கூறுவதற்கு என்ன ஆதாரங்கள் உள்ளன?''[24] என்று தம் உரையின்போது அடிகளார் வெகுண்டெழுந்து வினவினார். எந்தக் கருத்தும் தகுந்த ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டே அமைய வேண்டும் என்பதில் அடிகளாருக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை உண்டு. ஆகவே தான் ஆதாரமே இல்லாமல் நீலகண்ட சாத்திரியார் உண்மையைத் திரித்துக் கூறும் கொடுமையை அவரால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை.

**இதுதான் பண்பாடு!**

> ''பகைவரை மன்னித்தல் பண்பாடு எனில், நண்பர்களை மன்னித்தல் அதனினும் சிறந்த பண்பாடு. உனக்குத் தீங்கு இழைத்தோருக்கும் நன்மை செய்தல் பண்பாடு. தாழ்ந்தோரும் அணுகிவரும் அளவுக்குப் பழகுதலும் அத்தகையோருடன் நட்புரிமை பாராட்டுதலும் பண்பாடு. கற்றதெல்லாம் போதாது என எண்ணுதலும், கைம்மாறு கருதாமல் தொண்டு புரிதலும், பெருக்கத்துப் பணிதலும், மன்னிக்கும் மனப் பக்குவமும், பிறரைத் துன்புறுத்தாத சான்றாண்மையும், உண்மையையும் நீதியையும் அடிப்படையாகக் கொண்டு

24. Ibid, p. 33

தோன்றும் மனத் தூய்மையும், குறுகிய ம[illegible]ன்மையை உருவாக்கும் தாழ்ந்த சிந்தனைகளைப் புறத்தே ஒதுக்கிவிடும் மனத் தாராளமும் ஆகிய இவையெல்லாம் பண்பாடு''[25]

என்று அடுக்கடுக்காக உண்மையான பண்பாட்டின் பெருமைகளை அடிகளார் தொகுத்துக் காட்டியபோது அரங்கமே தொடர்ந்து கையொலியெழுப்பிப் பாராட்டியது. இத்தகைய பேருரையை இதுவரையில் கேட்டதில்லை என்பதே அன்று மலாயாப் பல்கலைக் கழகத்தில் பேச்சாக இருந்தது.

### உலக அரங்கில் அடிகளார்

அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவராக இருந்த காலந்தொட்டே தேசிய அளவிலும் உலக அளவிலும் நடைபெற்ற பல்வேறு கருத்தரங்குகளில் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியுள்ளார். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை :

**'தமிழிலக்கியத்தில் கத்தோலிக்கரின் பங்களிப்பு'**
*இந்திய வரலாற்றுக் கருத்தரங்கம், அண்ணாமலை நகர் 1946.*

**'அகவன் மக்களும் கவிதையும்'** *கீழைத்தேய அறிஞர்களின் 25ஆம் உலகக் கருத்தரங்கம், மாஸ்கோ, 1960.*

**பழந்தமிழ் இலக்கியத்தில் மாதிரி ஆசிரியர்**
*கீழைத்தேய அறிஞர்களின் 25ஆம் உலகக் கருத்தரங்கம், மாஸ்கோ 1960.*

**'தமிழ் மனிதநேயக் கோட்பாடுகள் 'சி' விரிவாகும் ஆளுமையின் குறிக்கோள்'**, *சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள். சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை; பெப். 1961.*

**'திருவள்ளுவர்'**, *சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், 1961.*

**'ப்ரொயென்சாவின் தமிழ்—போர்த்துக்கேய அகராதி'**
*கீழைத்தேய அறிஞர்களின் 26ஆம் உலகக் கருத்தரங்கம், புதுடில்லி, 1964.*

**'இந்தியாவுக்கும் தென்கிழக்கு ஆசியாவுக்குமிடையில் காணும் பொதுப் பண்பாட்டுக் கூறுகள்;** *கீழைத்தேய அறிஞர்களின் மலேசிய மாநாடு, கோலாலம்பூர், 1965.*

---

25. Ibid, p. 31

**'இந்தியவியல் ஆராய்ச்சியில் திராவிடப் பண்பாட்டின் இடம்',** *ஹாம்பர்க் பல்கலைக்கழகம்,* மே. ஜெர்மனி 1964.

**கடாரம் எது?** *முதல் உலகத் தமிழ் மாநாடு,* கோலாலம்பூர், 1966.

**'சங்க காலத்தில் தமிழருக்கும் உரோமையருக்குமிடையில் நிகழ்ந்த வணிகம்';** *கீழைத்தேய அறிஞர்களின் 27ஆம் உலகக் கருத் தரங்கம்,* ஆன் ஆர்பர், 1967.

**குவாடலூப், மார்த்தினீக் நாடுகளில்**
**தமிழர் குடியேற்றம் 1853—1883;**

*இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு, சென்னை,* 1968.

**தற்காலத் தமிழ்ச் சமுதாயம்—ஒருமதிப்பீடு,**

*மூன்றாம் உலகத் தமிழ் மாநாடு, பாரீஸ்,* 1970.

**சிறந்த செல்வாக்கு**

அடிகளாரின் செல்வாக்கு இந்தியாவில் எந்த அளவுக்குப் பரவி யிருந்ததென்பதைக் கீழ்வரும் நிகழ்ச்சி புலப்படுத்தும். 1962ஆம் ஆண்டு பெப்ருவரித் திங்களில் மலாயாப் பல்கலைக் கழகத் தமிழ் மொழிக் கழகத்தின் சார்பில் ஆசிரியர்களும் மாணவர்களுமாகிய இருபது பேர் இந்தியச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு சென்னைக்கு வந்தபோது, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத்தலைவரும் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் தலைவரு மாகிய பேராசிரியர் மு. வரதராசனாரின் தலைமையில் அவர் களுக்குச் சென்னைத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் வரவேற்பு விருந்தளித்தது.[26] இது மலாயாப் பல்கலைக் கழக இந்தியத் துறைத்தலைவராக விளங்கிய தனிநாயகம் அடிகளாரின் பெருமைக்குத் தக்க சான்றாகும்.

இவ்வாறு பல்கலைக்கழகப் பேராசிரியராக விளங்கிய அடிகளார் இந்தியாவும் இலங்கையும் மலேசியாவும், ஏன், உலகமுமே மதித்துப் போற்றிய பேரறிஞராக விளங்கினார் என்பது தெளிவு.

---

26. Tamil Culture Vol. X No. 1, 1963, Pp. 112—113

# அறிஞர் கண்ட ஆராய்ச்சி மன்றம்

தனிநாயகம் அடிகளாரின் நிலைத்த புகழுக்குக் காரணமாக அமைந்தது உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை நிறுவியதும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளை நடத்தியதுமே என்பது மிகையாகாது.

1964ஆம் ஆண்டில் டில்லியில் நடைபெற்ற கீழைத்தேய அறிஞர்களின் உலக மாநாட்டின்போதுதான் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் தொடங்கப்பட்டது என்பது அனைவரும் அறிந்த செய்தி.

தமிழின் பல்வேறு துறைகளிலும் ஆர்வமுள்ள அறிஞர்கள் பலர் 7-12-1964 அன்று பகல் 12 மணிக்குச் சந்திக்குமாறு விடுக்கப் பட்ட அழைப்பில் தனிநாயகம் அடிகளாரும் முனைவர் வி. அய். சுப்பிரமணியமும் மட்டுமே கையெழுத்திட்டிருந்தனர் என்பது வரலாற்றுச் செய்தி. பலர் இக்கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று பேரா. வி. அய். சுப்பிரமணியம் நமக்குத் தெரிவிக்கின்றார்.[1]

**யாருடைய முயற்சி?**

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் யாருடைய முயற்சியால் தோன்றியது? அடிகளாரின் முயற்சியால் தோன்றியது என்பதே பொதுவாக அனைவரும் ஏற்றுக் கொள்வதாகும். எனினும் அது இலங்கைத் தமிழறிஞராகிய பேரா. கா. பொ. இரத்தினம் அவர் களின் முயற்சியால் தோன்றியது என்பது போல முனைவர் சாலை இளந்திரையனார் எழுதியுள்ளார்.

1. V. I. Subramaniam; His Long-lasting Revolution in Tamil Studies; Tamilaram; p. 43

(கீழைத்தேய அறிஞர்களின் உலக) "மாநாட்டில் பங்கு கொள்வதற்காகத் தில்லிக்கு வந்து எங்கள் இல்லத்தில் தங்கியிருந்த ஈழத்து அறிஞர் கா. பொ. இரத்தினம் அவர்கள், "பல பேர் வந்திருக்கிறார்கள். இங்கேயே உலகு தழுவிய அமைப்பு ஒன்றை நிறுவிவிடலாமே" என்றார்.

(ஏற்கனவே இதுபற்றி அவரும் தனிநாயக அடிகளாரும் பேசியிருந்தார்களோ என்னவோ தெரியாது.) நாங்களும் (நானும் சாலினியாரும்) "ஆமாம், நல்ல யோசனை" என்றோம். மூவரும் ஒன்றாகச் சென்று பல நாட்டு அறிஞர்களிடமும் இந்தக் கருத்தைத் தெரிவித்தோம். அடிகளார் மிகச் சுறுசுறுப்பாக இப்பணியில் ஈடுபட்டார்"[2]

என்று சாலை இளந்திரையனார் எழுதியுள்ளார். அதாவது இந்தக் கருத்து கா. பொ. இரத்தினம் அவர்களால் தெரிவிக்கப்பட்டது, இந்த முயற்சிக்கு அடிகளாரும் ஆதரவு கொடுத்தார், என்று சாலை இளந்திரையனார் நமக்குத் தெரிவிக்கின்றார்.

பேரா. கா. பொ. இரத்தினமும் இதே கருத்தினைச் சற்று விளக்கமாகவே எடுத்துரைத்துள்ளார்.

"ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்து நாலாம் ஆண்டு சனவரியில் உலகக் கீழைநாட்டியற் புலவர்களின் இருபத்தாறாவது உலக மாநாட்டினைத் தெல்லி மாநகரிற் கூட்டுதற்கு ஒழுங்குகள் நடைபெற்றன. இம் மாநாட்டுக்கு வருகை தரும் தமிழியல் ஆராய்ச்சி அறிஞர்களைச் சென்னை நகருக்கு அழைத்து உலகத் தமிழியல் அறிஞர் மாநாட்டினைத் தைத் திங்கள் இரண்டாம் கிழமையில் நடத்துவதற்குத் தவத்திரு. தனிநாயகம் அடிகளார் பெரிதும் முயன்றார். எனினும் அவரது முயற்சி கைகூடவில்லை. எனவே, தெல்லி மாநகரில் நடைபெற்ற மாநாட்டுக்கு வருகை தரும் தமிழ் அறிஞர்களையும் ஆராய்ச்சியாளர்களையும் தெல்லி மாநகரிலேயே கூட்டி, உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை நிறுவ வேண்டுமென நான் தவத்திரு. தனிநாயகம் அடிகளாரிடம் கூறினேன். அவரும் அதை ஏற்றுக்கொண்டு அயராது உழைத்தார்.

உலகளாவிய தமிழாராய்ச்சி மன்றத்தை நிறுவுவதற்கு அரசியற் சூழ்நிலைகள் காரணமாகப் பொறுப்பான உயர்பதவிகளி

2. சாலை இளந்திரையன்; தவத்திரு தனிநாயக அடிகளார் மாட்சி நயப்பு மலர்; ப. 49

விருந்த பிற நாட்டு அறிஞர்கள் முன்னின்றுழைக்கத் தயங்கினார்கள். இதனால் நானே முன்னணியில் நின்று உழைக்க வேண்டியிருந்தது.

தெல்லி மாநகர் சென்றவுடன் நான் என் இனிய நண்பர் சாலை இளந்திரையனுக்கும் அவருடைய மனைவியார் சாலினிக்கும் எமது எண்ணத்தையும் சூழ்நிலையையும் விளக்கினேன். எவ்வாற்றானும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை நிறுவ முயல்வதென நாங்கள் மூவரும் உறுதி பூண்டோம். சாலையும் அவருடைய மனைவியாரும் பிறர் காட்டிய அச்சமும் கூச்சமுமின்றி என்னுடன் சேர்ந்து முன்னின்று உழைக்க முற்பட்டனர்.

தெல்லி மாநகருக்கு வருகை தந்தவர்களிலே தமிழியல் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்ட அறிஞர் பெருமக்களை ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்து நான்காம் ஆண்டு சனவரி ஏழில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை நிறுவுதற்கு அழைத்தோம். மேனாட்டுத் தமிழாராய்ச்சித் துறை அறிஞர்கள் பலரைக் கூட்டத்துக்கு அழைத்தற்குத் தவத்திரு தனிநாயக அடிகளார் பெருமுயற்சி செய்தார்.

எல்லோரையும் கூட்டியபின் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை நிறுவுதற்கு ஒரு முன் மொழிவை மொழியுமாறு கேட்கப்பட்டது. தமிழ்நாட்டுப் பேரறிஞர்களில் ஒருவர் மொழிவது நன்றென்று கருதிச் சிலரைக் கேட்டோம். எவரும் முன்வரத் தயங்கினர், இதனால் நானே முன்மொழிவை மொழிந்தேன். நண்பர் சாலை வழிமொழிந்தார். இந்த முன்மொழிவை எல்லோரும் ஏற்றுக்கொண்டபின் அலுவலாளர் தெரிவு நடைபெற்றது. தவத்திரு. தனிநாயக அடிகளார் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். இந்த ஆராய்ச்சி மன்றத்தை வளர்ப்பதற்கு அவர் அயராமலும் தளராமலும் உழைத்தார்.''[3]

ஆக, உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை நிறுவும் கருத்தினைத் தனிநாயகம் அடிகளார்க்குத் தாம்தான் கூறியதாகவும், அதற்காக டில்லி மாநாட்டின்போது தாமே முன்னின்று உழைத்ததாகவும், முன்மொழிவை மொழிந்திடத் தமிழ் நாட்டுப் பேரறிஞர் எவரும் முன்வராமையால் தாமே முன்மொழிந்ததாகவும் முனைவர் இளந்திரையனார் வழிமொழிந்ததாகவும் பேரா. கா. பொ. இரத்தினம் எழுதுகின்றார்.

3. கா. பொ. இரத்தினம்; தமிழ் உணர்ச்சி; சென்னை; 1986; பக். 72-73

1960ஆம் ஆண்டு மாஸ்கோ நகரில் கீழ்த்திசை அறிஞர்களின் உலக மாநாடு நடந்தபோது,

> "தமிழோடும் தமிழரோடும் தொடர்புடைய துறைக ளனைத்தையும் ஆராயத் தக்கதோர் உலகளாவிய நிறுவ கத்தை உருவாக்க வேண்டுமெனவும், திராவிடவியல், இந்திய வியல் என்பன போலத் தமிழியலையும் ஓர் ஆராய்ச்சித் துறை யாக்க வேண்டுமெனவும் நான் (தனிநாயக) அடிகளாரிடம் கூறினேன்"[4]

என்றும் பேரா. கா. பொ. இரத்தினம் எழுதியிருக்கின்றார்.

ஆனால் இவை பற்றித் தனிநாயகம் அடிகளாரின் மறைவுக்குப் பின்னர்தான் இருவருமே எழுதியிருக்கிறார்கள் என்பது நம் மனத்தில் ஐயப்பாட்டை எழுப்புகின்றது .

**ஏன் எழுதவில்லை?**

கா. பொ. இரத்தினம் அவர்கள் அதே மாஸ்கோ மாநாட்டைப் பற்றி 1960-ஆம் ஆண்டில் (அதாவது மாநாடு நடந்த அதே ஆண்டில்) 'சுதந்திரன்' ஏட்டில் எழுதிய 'உலக மாநாடு—காட்சியும் கருத்தும்'[5] என்னும் விரிவான கட்டுரையும் அவரது 'தமிழ் உணர்ச்சி' நூலில் இடம் பெற்றுள்ளது. மாநாடு நடந்த உடனே எழுதப்பெற்ற இக்கட்டுரையில் 'உலகளாவிய தமிழ் நிறுவகம்' அமைப்பதைப் பற்றி அடிகளாரிடம் பேசியது பற்றிய எக்குறிப்பும் காணப்படவில்லை என்பது வியப்புத் தருகின்றது. 21 ஆண்டு களுக்குப் பின் எழுதப்பட்ட கட்டுரையில் காணப்படும் கருத்து, மாநாடு நடந்த ஆண்டிலேயே எழுதப்பட்ட கட்டுரையில் இடம் பெறாமல் போனது எங்ஙனம் என்னும் வினாவுக்கு விடை காண இயலாமற் போகின்றது.

அடிகளாரின் நினைவாக 18-7-1981 அன்று வெளியிடப்பட்ட 'தவத்திரு தனிநாயக அடிகளார் மாட்சி நயப்பு மலர்' அடிக ளாரைப்பற்றிய கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்தது. அடிகளார் பற்றிப் பலரும் பல்வேறு ஏடுகளில் எழுதியவையும் மறு பதிப்பாக அம்மலரில் இடம் பெற்றுள்ளன. அத்தகைய மறு பதிப்புக் கட்டுரை ஒன்றில் "அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி

4. மேற்படி, ப. 71
5. மேற்படி, பக். 90-1

மன்றத்தின் தந்தையும் தாயும் அவரேயாவர்"[6] என்று கா. பொ. இரத்தினம் அவர்களே அடிகளாரைப் பற்றி எழுதியுள்ளார். அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தந்தையும் தாயும் தனிநாயகம் அடிகளாரே என்பதை ஒப்புக் கொண்டபின் கா. பொ. இரத்தினம் அவர்கள் மன்றம் பற்றிய கருத்தினை 1960ஆம் ஆண்டிலும், பின் 1964ஆம் ஆண்டிலும் தாமே அடிகளார்க்குத் தெரிவித்ததாகவும், 1964ஆம் ஆண்டு டெல்லியில் இதற்காகத் தாமே முன்னணியில் நின்று உழைத்ததாகவும் கூறுவதை நாம் எப்படி நம்புவது?

**ஆதாரம் இல்லை**

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டுப் பேரறிஞர் யாரும் முன்வராததால் தாமே டில்லியில் முன்மொழிவை மொழிந்ததாகவும், சாலை இளந்திரையனார் வழிமொழிந்ததாகவும் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

தாம் வழிமொழிந்ததாகச் சாலை இளந்திரையனார் எங்கும் எழுதியதாகத் தெரியவில்லை. ஆகவே கா. பொ. இரத்தினம் அவர்களின் கூற்றை மட்டுமே நாம் ஆராய வேண்டியுள்ளது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் தொடங்கப்பட்டதைத் தெரிவிக்கும் இரு பக்கச் செய்தியினை நாம் Tamil Culture இதழில் காணலாம். ஆனால் முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் பற்றிய குறிப்பு அக்கட்டுரையில் இல்லை.

முதல் உலகத் தமிழ் மாநாட்டுத் தொகை நூலின் பின்னிணைப்பு-1 உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களை வழங்குகின்றது. அது மன்றத்தைத் தொடங்க வேண்டுமென்று முன்மொழிந்தவர் தனிநாயகம் அடிகளாரென்றும், வழிமொழிந்தவர் முனைவர் கமில் சுவலபில் என்றும்[7] நமக்குத் தெளிவாகத் தெரிவிக்கின்றது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றமே இவ்வாறு அதிகார பூர்வமாகத் தெரிவித்திருப்பதால், பேரா. கா. பொ. இரத்தினம் கூறியிருப்பதை ஆதாரமற்றது என்றே நாம் தள்ள வேண்டியிருக்கிறது.

6. க. பொ. இரத்தினம்; தவத்திரு தனிநாயக அடிகளார் மாட்சி நயப்பு மலர்; ப. 46
7. Proceedings of the First International Tamil Conference—Seminar; p. 879.

மன்றத்தின் அதிகார பூர்வமான செய்திக்கு மாறாகத் தாம் முன்மொழிந்ததாகவும், சாலை இளந்திரையனார் வழிமொழிந்த தாகவும் கூறும் பேரா. கா. பொ. இரத்தினம், தமிழ் ஆராய்ச்சிக் காக உலகளாவிய நிறுவகம் தொடங்கவேண்டுமென்றும், டில்லி மாநாட்டின்போது உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தினை நிறுவ வேண்டுமென்றும் தாம் தனிநாயகம் அடிகளாரிடம் கூறியதாக எழுதியிருப்பதை உண்மையென ஏற்றுக் கொள்ள இயலாமற் போகின்றது.

**பின்னணி**

அதோடு உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் தோன்றுவதற்கு முன்னோடியாகவும் அடித்தளமாகவும் அமைந்த முயற்சிகளையும் நாம் அறிதல் நலம்.

தமிழ் ஆய்வாளர்களும், ஆர்வலர்களும் தமிழ் ஆராய்ச்சி இதழ் ஒன்று ஆங்கிலத்தில் வெளியிடப்பட வேண்டும் என்னும் தேவையைத் தமது உலகப் பயணத்தின்போது தம்மிடம் பலமுறை வலியுறுத்தியதாலும், இது உடனடியாக நிறைவு செய்யப்படுவதன் மூலம் உலக அரங்கில் தமிழுக்குரிய இடத்தை ஆய்வு செய்திட இயலும் என்பதாலுமே தாம் Tamil Culture என்னும் ஆங்கில முத்திங்கள் இதழைத் தொடங்கியதாக அடிகளார் எழுதியுள்ளார். இவ்விதழே உலகில் பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழரும், தமிழரல்லாதோருமாகிய தமிழ் அறிஞர்களை இணைக்கவும் தமிழ் மொழி, வரலாறு, கலை, மொழியியல், மெய்யியல், சமயம், தொன்மையியல் எனத் தமிழோடு தொடர்புடைய எல்லாத் துறை களிலும் அறிவியல் முறையில் ஆய்வு நிகழவும் வழிகோலியது என்பது மிகையன்று.

Tamil Culture மூலமாகவே முனைவர் கமில் சுவலபில், பேராசிரியர் ழான் ஃப்லியோசா போன்றோர் தமிழுலகுக்கு அறிமுகமாயினர் என்பது உண்மை.

''திராவிட மொழியியலில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் ஒரு பன்னாட்டு அமைப்பில் ஒருங்கிணைந்து தம்முள் தொடர்பு கொண்டு உழைக்க வேண்டும்'' என்று திராவிட மொழியியல் உலக அமைப்புப் பற்றிய கருத்தினை முதன் முதலாக முனைவர் கமில் சுவலபில் அவர்கள் வெளியிட்டார்.[8]

---

8. Zvelebil, Kamil, 'The Present State of Dravidian Philology' Tamil Culture, Vol. IV, No. 1, January 1955, p. 54 (footnote)

ஆயினும் தமிழியலில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் பன்னாட்டு அமைப்பாக இணைந்து செயல்படுதல் பற்றிய சிந்தனைக் கரு, 1958ஆம் ஆண்டுக்கும் 1962ஆம் ஆண்டுக்குமிடையில் தனிநாயகம் அடிகள், பேராசிரியர் வி. அய். சுப்பிரமணியம், முனைவர் கமில் சுவலபில் ஆகிய மூவருக்குமிடையில் நிகழ்ந்து வந்த கடிதப் போக்குவரத்தில் தோன்றி வளர்ந்து, 1964ஆம் ஆண்டு அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றமாக மலர்ந்தது என அறிகிறோம்.[9]

பல ஆண்டுகளுக்கு முன்னரே அண்ணாமலை, சென்னை, இலங்கை, மலாயா, இலண்டன், பாரீஸ், ப்ராக் பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் தமிழ்ப் பேராசிரியர்கள் பங்குபற்றும் வகையில் ஆண்டுதோறும் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடத்தப்பெறுதல் வேண்டும்[10] என்னும் கருத்தை அடிகளார் வற்புறுத்தினார். அப்போதுதான் மலாயாப் பல்கலைக் கழகத்தின் இந்தியத் துறைப் பேராசிரியராக அடிகளார் பொறுப்பேற்றிருந்தார் என்பதும் இங்கு நினைத்தற்குரியது.

27-10-1961 அன்று பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரும் தனிநாயகம் அடிகளாரும் சேர்ந்து கையெழுத்திட்டு, அன்றைய சென்னை மாநில அமைச்சரும். தமிழ் ஆராய்ச்சி—வளர்ச்சிக் கழகத்தின் தலைவருமாகிய மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு விடுத்த மடலிலும் இக்கருத்து வலியுறுத்தப்பட்டது [11] 1962ஆம் ஆண்டு பெப்ருவரி அல்லது மார்ச் திங்களில் அத்தகைய மாநாடு கூட்டப்படுவது நல்லது என்று இருவரும் தங்கள் மடலில் வலியுறுத்தினர். அமைச்சர் சி. சுப்பிரமணியம் மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்று டில்லிக்குச் சென்று விட்டாரேனும் அம்முயற்சி அத்துடன் நின்று விடவில்லை.

மலாயாவில் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டைக் கூட்டும் முயற்சியில் அடிகளார் ஈடுபட்டார். அதற்கு மலாயாவிலிருந்த இந்தியத் தலைவர்களாகிய மாண்புமிகு வி. மாணிக்கவாசகம், திரு. வி. செல்வநாயகம் போன்றோரின் ஆதரவையும் அடிகளார் பெற்றார்.

9. Zvelebil, K., 'The Spiritual Father of the IATR', Tamilaram p. 41
10. Proceedings of the First International Tamil Conference—Seminar, p. 874-875
11. Ibid p. 875

இதற்கிடையில் 1963ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் சென்னையில் தமிழ் ஆராய்ச்சி—வளர்ச்சிக் கழகக் கூட்டம் நடைபெற்ற போது அக்கழகத்தின் ஆதரவில் உலகத் தமிழறிஞர்களின் கூட்டத்தை நடத்த வேண்டுமென்று அடிகளார் கருத்துத் தெரிவித்தார். 1964ஆம் ஆண்டு சனவரித் திங்களில் டில்லியில் கூடவிருக்கும் கீழைத்தேய அறிஞர்களின் உலக மாநாடு முடிந்த உடனே தமிழ் ஆராய்ச்சி மாநாட்டைக் கூட்டலாம் என்று அடிகளார் தெரிவித்த கருத்தினை மன்றம் ஏற்றுக்கொண்டது. பின் இது தொடர்பாக அடிகளார் தமிழ் ஆராய்ச்சி—வளர்ச்சிக் கழகத்துடன் தொடர்பு கொண்டார். கழகமும் இந்திய அரசின் பண்பாட்டுத்துறை அமைச்சகத்துடனும், டில்லி மாநாட்டு அமைப்பாளர்களுடனும் தொடர்பு கொண்டது. இம்முயற்சிகளின் பலனாக உலகத் தமிழ் மாநாட்டினை மூன்று அமர்வுகளாக நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. முதல் அமர்வு 1964 சனவரி 13, 14 தேதிகளில் சென்னையிலும், இரண்டாம் அமர்வு 15ஆம் தேதி அண்ணாமலை நகரிலும், மூன்றாம் அமர்வு 17ஆம் தேதியன்று மதுரையிலும் நடைபெறுமென்றும் தீர்மானிக்கப் பட்டது. சென்னையில் தமிழாய்வு, தமிழ் வரலாறு ஆகிய பொருள் பற்றியும் மாநாடு நிகழும் எனத் திட்டமும் வகுக்கப் பட்டது. அண்ணாமலை நகர் மாநாட்டில் 'பன்னாட்டு ஒத்துழைப்பு' என்னும் தலைப்பில் கட்டுரை வழங்குமாறு அடிகளாருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. மாநாட்டுப் பிரதிநிதிகள் சென்னைக்கு வந்து சேர்ந்த பின் அவர்களின் உணவு, உறையுள், போக்குவரத்து முதலிய செலவுகளுக்குச் சென்னை அரசின் தமிழ் வெளியீட்டுத் துறை பொறுப்பேற்க முடிவு செய்தது.

இவ்வளவு ஏற்பாடுகளுக்குப் பின்னரும் அம்மாநாடு நடைபெறாமல் போனது வருந்தற்குரியதாகும். நடைபெறாமைக்குக் காரணங்கள் பல.

தமிழ் ஆராய்ச்சி வளர்ச்சிக் கழகம் உலகத் தமிழ் மாநாட்டைக் கூட்டுவதற்குச் செய்த முயற்சிகளைப் பற்றிக் கோலாலம்பூர் முதல் உலகத் தமிழ் மாநாட்டின்போது குறிப்பிட்ட அன்றைய சென்னை முதல்வர் எம். பக்தவத்சலம், டில்லி மாநாட்டுப் பிரதிநிதிகள் தொடர்ந்து இந்தியாவில் தங்க இயலாமற் போனதாலேயே தாங்கள் திட்டமிட்டவாறு உலகத் தமிழ் மாநாடு தமிழகத்தில் நடைபெற இயலாமற் போயிற்று என்று தெரிவித்

தார். அன்று நடைபெற முடியாத உலகத் தமிழ் மாநாட்டினை இன்று நடத்திக் காட்டி விட்டார் தனிநாயகம் அடிகளார் என்று அப்போது அடிகளாரைப் பாராட்டிப் பேசினார் முதல்வர் பக்தவத்சலம்.[12]

உலகத் தமிழ் மாநாடு கோலாலம்பூரில் நடைபெறுவதற்குத் தனிநாயகம் அடிகளாரின் தலைமை காரணமாக இருந்ததை மலேசியப் பிரதமர் துங்க்கு அப்துல் ரகுமானும் அப்போது பாராட்டிப் பேசினார்.

தமிழ் ஆராய்ச்சி—வளர்ச்சிக் கழகம் முயற்சிகளை மேற் கொண்டிருந்த போதே, டில்லி உலகக் கீழைத்தேய அறிஞர்களின் உலக மாநாட்டுக்கு வரும் தமிழ் அறிஞர்களையும் ஆர்வலர்களை யும் கூட்டி உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை நிறுவிட அடிகளார் திட்டமிட்டார்.[13]

அதன் விளைவாகவே 7-1-1964 அன்று டில்லியில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் பிறந்தது.

மேற்கூறிய குறிப்புக்களெல்லாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் தோன்றிய பின்னணியைத் தெளிவாக்குவதால் பேரா. கா. பொ. இரத்தினமும் இளந்திரையனாரும் எழுதியது ஆதார மற்றது என்பதை நாம் எளிதாகப் புரிந்து கொள்ளலாம். யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரும் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த நான்காம் உலகத் தமிழ் மாநாட்டுக்குத் தலைமையேற்ற வருமாகிய முனைவர் சு. வித்தியானந்தன் "மன்றத்தின் தாபகர் தனிநாயகம் அடிகள்"[14] என்று கூறியுள்ளமையும் இங்கு நினைவு கூரத்தக்கது.

'உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் ஞானத் தந்தை தனிநாயகம் அடிகளாரே' என்று முனைவர் கமில் சுவலபில் கூறு வதையும் நாம் இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

---

12. Ibid p. xxxix
13. Ibid p. 879
14. சு. வித்தியானந்தன்; 'தன்னை நன்றாகத் தமிழ் செய்த தமிழ்த் தூதுவர் தனிநாயக அடிகள்'—அருள்திரு தனிநாயக அடிகளார் நினைவு மலர்; ப. 44

**தீர்மானித்த கூட்டம்**

அடிகளாரும் முனைவர் வி. அய். சுப்பிரமணியமும் விடுத்த அழைப்பினை ஏற்றுத் தமிழறிஞர்களும் ஆர்வலர்களுமாகிய 26 பேர் கூடினர். அவர்களின் பெயர்கள்[15] பின் வருமாறு:

பேரா. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

பேரா. ழான் ஃபீலியோசா, பிரான்சுக் கல்லூரி, பாரீஸ்

பேரா. மு. வரதராசன், சென்னைப் பல்கலைக்கழகம்

பேரா. தாமஸ் பர்ரோ, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம்

பேரா. எஃப். பி. ஜே. க்யூப்பர், லைடன் பல்கலைக்கழகம்

பேரா. அ. சிதம்பரநாதனார், சென்னைப் பல்கலைக்கழகம்

பேரா. க. கணபதிப்பிள்ளை, இலங்கைப் பல்கலைக்கழகம்

பேரா. வி. அய். சுப்பிரமணியம், கேரளப் பல்கலைக்கழகம்

பேரா. எம். ஏ. துரை அரங்கசாமி, மதுரைப் பல்கலைக்கழகம்

பேரா. கமில் சுவலபில், சார்லஸ் பல்கலைக்கழகம், ப்ராக்

பேரா. கா. பொ. இரத்தினம், மலாயாப் பல்கலைக்கழகம்

பேரா. கே. ஆறுமுகம், டில்லிப் பல்கலைக்கழகம்

பேரா. எஸ். சங்கரராஜ் நாயுடு, சென்னைப் பல்கலைக்கழகம்

பேரா. சார்லஸ் ஃப்யுவேசி, ஹார்வர்டு பல்கலைக்கழகம்

பேரா. ஹேரல்டு பவர்ஸ், பென்சில்வேனியா பல்கலைக்கழகம்

பேரா. ஆர். இ. ஆஷர், லண்டன் பல்கலைக்கழகம்

பேரா. ஏ. கே. இராமானுசம், சிக்காகோ பல்கலைக்கழகம்

பேரா. வோடலில், பாரீஸ் பல்கலைக்கழகம்

பேரா. கே. மகாதேவ சாஸ்திரி, வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம்

பேரா. ஆர். சண்முகம், பம்பாய்ப் பல்கலைக்கழகம்

திரு. எம். ஆர். ஜம்புநாதன், பம்பாய் பல்கலைக்கழகம்

பேரா. சாலை இளந்திரையன், டில்லி பல்கலைக்கழகம்

பேரா. இளம். கனக செளந்தரி, டில்லி பல்கலைக்கழகம்

பேரா. ஆர். பார்த்தசாரதி, டில்லி பல்கலைக்கழகம்

அருள்திரு. பேரா. ச. இராசமாணிக்கம், பாளையங்கோட்டை

அருள்திரு. பேரா. சேவியர் தனிநாயகம், மலாயா பல்கலைக் கழகம்.

பேரா. தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரின் தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தின்போது, கூட்டத்தின் நோக்கத்தைத்

15. Proceedings of the First International Conference—Seminar p. 879

தெளிவுறுத்திப் பேசிய அடிகளார் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை நிறுவும் திட்டத்தை வெளியிட்டு, அதனை முன்மொழிய, கமில் சுவலபில் அதை வழிமொழிந்து பேசினார்.[16]

சென்னைப் பல்கலைக்கழக இந்தித் துறை இணைப் பேராசிரிய ராகிய முனைவர் சங்கரராஜ் நாயுடு, இதனை 'உலகத் திராவிட ஆராய்ச்சி மன்றம்' என நிறுவி, திராவிட மொழிகளையும் இலக்கியங்களையும் ஆராயலாமே என்று கருத்துத் தெரிவித்தார். அக்கருத்து கூட்டத்தினரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

நடைபெற்ற கருத்துப் பரிமாற்றங்களின்போது, பேராசிரியர் கள் ழான் ஃபீலியோசா, தாமஸ் பர்ரோ, எஃப். பி. ஜே. க்யூப்பர், தெ.பொ. மீ., கமில் சுவலபில் ஆகியோர் மன்றம் ஆற்றக் கூடிய பணிகளை எடுத்து விளக்கினர்.

டில்லி மாநாட்டை அடுத்துத் தமிழகத்தில் நடத்தத் திட்ட மிட்ட உலகத் தமிழ் மாநாடு நடைபெறாமல் போய்விட்ட சூழ்நிலையை விளக்கிய அடிகளார், அத்தகைய மாநாட்டை நடத்துவதை மன்றம் தன் செயல்திட்டங்களுள் ஒன்றாகக் கொள்ளலாம் என்று எடுத்துரைத்தார்.

**பொறுப்பாளர்கள்**

மன்றத் தலைவராகப் பேராசிரியர் ழான் ஃபீலியோசாவின் பெயரைப் பேராசிரியர் தெ. பொ. மீ. முன்மொழிந்தபோது, அனைவரும் ஒருமனதாக அதனை ஏற்றுக் கொண்டனர். பின் துணைத் தலைவர்களாகப்

பேரா. தாமஸ் பர்ரோ (ஆக்ஸ்போர்டு)
பேரா. எஃப். பி. ஜே. க்யூப்பர் (லைடன்)
பேரா, தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் (மதுரை)
பேரா. மு. வரதராசன் (சென்னை)

ஆகியோரும், செயலாளர்களாகப்

பேரா. கமில் சுவலபில் (ப்ராக்)
பேரா. சேவியர் எஸ். தனிநாயகம் (மலாயா)

ஆகியோரும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.[17]

---

16. Ibid
17. Ibid p. 380

1964ஆம் ஆண்டு தொடங்கித் தம் மறைவு வரையில் அடிகளார் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் பொதுச் செயலாளர்களுள் ஒருவராகத் தொடர்ந்து பணியாற்றியதோடு, அம் மன்றத்தின் முதுகெலும்பாகவும் முன்னணித் தலைவராகவும் உயிர் மூச்சாகவும் செயல்பட்டு வந்தார் என்பது மறுக்கவியலாத உண்மை. அடிகளாரின் மறைவுக்குப் பின் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் தன் செயல் பாடுகளில் தளர்ச்சி கண்டது என்பதும் உண்மையே. கீழைநாட்டுத் தமிழ் அறிஞர்களையும் மேலைநாட்டுத் தமிழ் அறிஞர்களையும் இணைக்கும் பாலமாகப் பணியாற்றும் ஆற்றல்மிக்க ஒரு பேரறிஞரை அடிகளாருக்குப் பின் தமிழ் ஆராய்ச்சியுலகம் பெற்றிலது என்பது வருந்தற்குரியது.

# வரலாறு படைத்த உலக மாநாடுகள்

உலகில் பல்வேறு நாடுகளிலும் பணியாற்றிவரும் தமிழறிஞர்களை ஒருங்கிணைத்துத் தமிழ் ஆராய்ச்சியை ஒருமுகப்படுத்தவும் வளப்படுத்தவும் வேண்டுமென்பது அடிகளாரின் நீண்ட நாள் விருப்பம். 1952ஆம் ஆண்டில் Tamil Culture இதழை அவர் தோற்றுவித்ததற்குக் காரணமும் இதுவே.

தமிழக அரசின் மூலம் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் முயற்சியில் தோல்வியைத் தழுவிய அடிகளார் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றமே இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என விரும்பினார்.

ஆகவேதான் உலகத் தமிழ் மாநாடு கூட்டுவதை உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் தன் செயல்திட்டங்களுள் ஒன்றாகக் கொள்ள வேண்டும் என்று மன்றத்தின் தொடக்கக் கூட்டத்திலேயே அடிகளார் தெரிவித்தார்.[1] விரைவில் அத்தகைய மாநாடு ஒன்றினைக் கூட்டவும் திட்டமிட்டார். அதுபற்றி 20-8-1964 அன்று கமில் சுவலபிலுக்குத் தாம் எழுதிய கடிதத்தில் அடிகளார் குறிப்பிட்டார்.[2]

**மலாயாவில் மாநாடு**

பின் 30-10-1964 அன்று மன்ற உறுப்பினர்களுக்கு ஒரு சுற்றறிக்கை[3] விடுத்தார். அதில் 1966ஆம் ஆண்டு மார்ச் 20ஆம் தேதிக்கும் ஏப்ரல் 24ஆம் தேதிக்குமிடையில் மலாயாப் பல்கலைக் கழகத்தில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தலாம் என்று

1. Proceedings of the First International Tamil Conference Seminar; p. 880
2. Ibid p 881; 3. Ibid Pp. 881-882,

தெரிவித்து, உறுப்பினர்களுக்கு வசதியான நாட்களைக் குறிப்பிட்டுத் தமக்கு எழுதுமாறு கேட்டுக் கொண்டார். பின்னர் 1966 ஏப்ரல் 17 முதல் 23ஆம் தேதி வரை மாநாடு நடைபெறும் என்பதை உறுதியாகத் தெரிவித்து, மாநாட்டில் இலக்கியக் கொள்கைகள், சமூக வரலாறு, தென்கிழக்காசியப் பண்பாடு, மொழியியல், மொழிபெயர்ப்பு ஆகிய பல பொருள் பற்றிய கட்டுரைகள் வழங்கப்படலாம் என்பதையும் தெரிவித்த மடல்[4] அனுப்பப்பட்டது.

### அமைப்புக் குழு

மாண்புமிகு வி. டி. சம்பந்தன் அவர்களைத் தலைவராகவும், அடிகளாரைத் துணைத் தலைவராகவும், திரு. வி. செல்வநாயகம் அவர்களைப் பொதுச் செயலாளராகவும் கொண்ட மாநாட்டு அமைப்புக் குழுவும் அம்மடலில் அறிவிக்கப்பட்டது. உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம், மலாயாப் பல்கலைக் கழகம், மலாயா நாட்டுத் தேசியக் கல்வி வளர்ச்சி மன்றத்தின் இந்தியப் பள்ளிகள் பிரிவு ஆகியவை இணைந்து மாநாட்டை நடத்தும் என்பதும் அறிவிக்கப்பட்டது.

### நிதி திரட்டல்

அடிகளார், மாண்புமிகு வி. மாணிக்கவாசகம், திரு. வி. செல்வநாயகம் ஆகியோரின் பெருமுயற்சியால் மலாயாவில் மாநாட்டுக்காக 2,10,000 டாலர் திரட்டப்பட்டது.[5] இதற்காக அடிகளார் மலாயா நாடெங்கும் சுற்றிப் பல மாவட்டங்களில் உரை நிகழ்த்தினார்.

### வரலாறு காணாத மாநாடு!

இவ்வாறு அடிகளாரின் தலைமையில், பலரின் ஒத்துழைப்புடன், மிகச் சிறந்த முறையில் ஏற்பாடு செய்யப்பட்ட முதல் உலகத் தமிழ் மாநாடு, மலாயாப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. 132 பிரதிநிதிகளும் 40 பார்வையாளர்களும் கலந்து கொண்டனர். இந்தியா, இலங்கை, மலாயா, சிங்கப்பூர், பர்மா, டென்மார்க், பிரான்சு, மேற்கு ஜெர்மனி, ஹாலந்து,

4. Ibid p. 889
5. R. E. Asher, IATR; The Outcome of his Original Inspiration and Sustained Interest; Tamilaram; p. 46

ஹாங்காங், ஜப்பான், மௌரீஷஸ், பிலிப்பைன்ஸ், போர்த்துக்கல் தென்கொரியா. ஸ்வீடன், சுவிட்சர்லாந்து, தாய்லாந்து, பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடு, வியட்நாம் ஆகிய 21 நாடுகளிலிருந்து அறிஞர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

தமிழ்ப்பண்பாட்டுடன் தொடர்புள்ள தென்கிழக்காசிய நாடு
களின் பண்பாடும் வரலாறும்
தமிழ் இலக்கியத் திறனாய்வு
சங்க காலத் தமிழ்ச் சமுதாயம்
மேனாட்டாரின் தமிழ் ஆய்வு
இலக்கியமும் சமுதாயமும்
தற்காலத் தமிழ் இலக்கியம்
1500ஆம் ஆண்டுக்குப்பின் தென்கிழக்கு ஆசியா
இசையும் நடனமும்
கலையும் தொன்மையியலும்
திராவிட ஒப்பியல் திறனாய்வு
தற்காலத் தமிழ்ச் சமுதாயம்

ஆகிய பல்வேறு பொருள் பற்றி 146 கட்டுரைகள் வழங்கப்பட்டன. கட்டுரைகள் பெரும்பாலும் ஆங்கிலத்தில் அமைந்திருந்தன. எனினும் தமிழ்க் கட்டுரைகளும் மாநாட்டில் இடம் பெற்றன.

### அடிகளாரின் ஆற்றல்

மாநாட்டைத் திறந்து வைத்து உரையாற்றிய மலாயாப் பிரதமர் துங்க்கு அப்துல் ரகுமான் தமிழின் தொன்மையையும், மலாயா நாட்டில் தமிழர் சிறப்புற வாழ்ந்து வருவதையும் குறிப்பிட்டதோடு, தனிநாயகம் அடிகளாரின் பன்மொழிப் புலமையையும் அவரது தலைமையாற்றலையும் பாராட்டிப் பேசினார்.

மாநாடு சிறப்புற நடப்பதற்குரிய முழுப் பொறுப்பையும் அடிகளார் ஏற்றுச் செயல்பட்டார் எனலாம். மாநாட்டின் துணைத் தலைவராக இருந்த அவரே மாநாட்டுக்குரிய ஏற்பாடு கள் குறைவின்றிச் செம்மையான முறையில் நடைபெறக் காரண மானார். அடிகளாரின் அமைப்புத்திறனும், அளவற்ற செல் வாக்கும், அறிவாற்றலும் மாநாட்டின் வெற்றிக்குக் காரண மாயின.

உலகின் பல்வேறு நாடுகளிலுமுள்ள (தமிழரும் தமிழரல்லா தாருமாகிய) தமிழ் அறிஞர்களை இணைத்து மாநாடு நடத்துவது என்பதைப் பலரும் ஒரு கனவு என்றே கருதிய நிலையில்—தமிழக அரசு முயன்றும் முடியாமல் கைவிட்டுவிட்ட நிலையில்—கோலாலம்பூர் மாநாட்டை அடிகளார் மிகச் சிறந்த முறையில் ஏற்பாடு செய்து நடத்தியதைத் தமிழ்கூறு நல்லுலகம் என்றும் மறந்திட இயலாது.

### வெளியீடுகள்

மாநாட்டின்போது குறிப்பிடத்தக்க சில ஆய்வு நூல்கள் வெளியிடப் பெற்றன. அவை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| Andronov, M. | : | Materials for Bibliography of Dravidian Linguistics |
| Arasaratnam, S. | : | Indian Festivals in Malaya |
| Rama Subbaiah | : | A Lexical Study of Tamil Dialects in Lower Perak |
| Singaravelu, S. | : | Social life of the Tamil-the Classical period |
| Thani Nayagam, X S. (Ed.) | : | A Reference Guide to Tamil Studies : Books |
| Thani Nayagam, X S. and Eagar C. Knowlton Jr. (Ed.) | : | Antaode Proenca : Tamil-Portuguese Dictionary. |

இவற்றுள் பல உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் ஆதரவில் வெளியிடப் பெற்றவை. உலக அளவில் தமிழ் ஆய்வுகளை ஊக்கு வித்தல், அவற்றை ஒருமுகப்படுத்துதல், ஆய்வு நூல்கள் வெளி யிடுதல், தமிழ் மாநாடு நடத்துதல் ஆகிய உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்ற நோக்கங்கள் இனிதே நடைபெறுதற்கு அடிகளார் பொறுப் பேற்று நடத்திய கோலாலம்பூர் மாநாடு தக்க தூண்டுதலாக அமைந்தது.

### மாநாட்டுக்குப் பின்

மாநாடு முடிந்ததோடு அடிகளாரின் பணிமுடிந்து விடவில்லை. அடிகளாரின் தலைமையில் பேராசிரியர்கள் வி. அய். சுப்பிர மணியம், லெ. ப. கரு. இராமநாதன், எஸ். அரசரத்தினம், ஆர்.இ.ஆஷர், இராம. சுப்பையா, எஸ். சிங்காரவேலு ஆகியோர்

இணைந்து ஆசிரியர் குழுவாகச் செயல்பட்டுக் கோலாலம்பூர் மாநாட்டில் ஆற்றப்பட்ட உரைகளையும், வழங்கப்பட்ட கட்டுரைகளையும் தொகுத்து வெளியிட்டனர்.

### அடிகளாரே வழிகாட்டி

அதுமட்டுமல்ல, இனி உலகத்தமிழ் மாநாடுகள் எவ்வாறு நடத்தப்பட வேண்டுமென்பதற்குக் கோலாலம்பூர் மாநாடு மூலமாக அடிகளார் வழிகோலினார் என்று முனைவர் ஆர். இ. ஆஷர்[6] கூறுவது மிகைக் கூற்றன்று.

### இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு

முதல் உலகத் தமிழ் மாநாட்டுக்குத் தனிநாயகம் அடிகளார் ஆணிவேராக இருந்து செயல்பட்டது போலவே, இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு சென்னையில் (1968) நடைபெற்றபோது அடிகளாரின் உற்ற நண்பராகிய திரு. ஏ. சுப்பையா அதன் ஆணிவேராக இருந்து செயல்பட்டார். இரண்டாவது மாநாட்டில் அடிகளார் ஆற்றிய பணிகளைப் பற்றிய செய்திகள் நமக்குக் கிடைக்கவில்லை.

மாநாட்டு ஏற்பாடுகளிலும், கருத்தரங்கக் கட்டுரைகளை வகைப்படுத்துவதிலும் முனைவர் கமில் சுவலபில் மிகுதியாக உதவினார் என்று உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றப் பொதுச் செயலாளர்களுள் ஒருவராகிய முனைவர் ஆர். இ. ஆஷர்[7] எழுதியுள்ளார். சுவலபில் இதற்காகச் சென்னையில் பல வாரங்கள் தங்கியிருந்து செயல்பட்டார் என்றும், மாநாட்டின் பொதுவான ஏற்பாடுகளைச் செய்வதில் மாநாட்டு அமைப்பாளராகிய திரு. ஏ. சுப்பையாவும் மாநாட்டுப் பொதுச் செயலராகிய திரு. வி. எஸ். தியாகராஜனும் கடுமையாக உழைத்தார்கள் என்றும் ஆஷர் மூலம் அறிகின்றோம்.

ஆனால் சென்னை மாநாட்டை அறிவுபூர்வமான முறையில் நடத்துவதற்கு அடிகளார் துணைபுரிந்தார் என்பது உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத் தலைவராகிய பேராசிரியர் ழான் ஃபீலியோசா[8],

---

6. Ibid
7. Asher, R.E. (Ed.) Proceedings of the Second International Conference Seminar of the Tamil Studies Madras, 1971, p. xi
8. Filliozat, Jean., 'Father Thani Nayagam and his work : The Creation of the IATR', Tamilaram, p, 39

துணைத்தலைவர் எம். பி. எமனோ[9] ஆகியோரின் கருத்து. சென்னை மாநாட்டில் உயிராற்றலாக அடிகளார் விளங்கினார் என்பார் திரு. எம். எம். உவைஸ்[10] இவை தவிர வேறு குறிப்புக்கள் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் இவையெல்லாம் அடிகளார் இறந்தபின் வெளியிடப்பட்ட இரங்கல் மலர்களில் இடம் பெற்றவை என்பதால் இக்கருத்துக்களை நாம் எவ்வளவுக்கு ஏற்றுக் கொள்ள முடியும் என்பது புரியவில்லை.

சென்னை மாநாடு நடந்து முடிந்தபின் 1971ஆம் ஆண்டில் மாநாட்டுத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது. அதனை ஆசிரியர்களாக இருந்து பதிப்பித்தோர் முனைவர் ஆர். இ. ஆஷர், முனைவர் வி. அய். சுப்பிரமணியம் ஆகிய இருவருமே. மாநாடு நடந்து முடிந்தபின் அதிகார முறையில் வெளிவந்த இவ்வாவணத்தில் அடிகளார் சென்னை மாநாட்டுக்கு எவ்வகையில் ஒத்துழைப்பு வழங்கினார் என்பதைப் பற்றிய குறிப்புகள் இல்லாமையால் சென்னை மாநாட்டு ஏற்பாடுகளில் அடிகளாரின் பங்களிப்பு ஒன்றுமில்லை என்னும் முடிவுக்கே நாம் வரவேண்டியுள்ளது. பாரீஸ் மாநாட்டில் (1970) சென்னை மாநாட்டைப் பற்றி வழங்கப்பட்ட அறிக்கையும் அடிகளாரின் பங்களிப்புப் பற்றி எதுவுமே குறிப்பிடா திருப்பது மேற்குறித்த முடிவை உறுதி செய்கிறது.

சென்னை மாநாட்டு ஏற்பாடுகளில் அடிகளாரின் பங்களிப்பு இல்லாதிருந்தமைக்கு உரிய காரணங்கள் எவையென்று நமக்குத் தெரியாத நிலையில் ஊகங்களுக்கு இடமளிக்க விரும்பவில்லை.

### கோலாலம்பூர் வழிகாட்டியது

ஆனால் ஒன்றுமட்டும் உறுதி, சென்னை மாநாட்டில் வெளி ஆரவாரங்கள் மிகுதியென்றாலும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் பொறுப்பேற்று நடத்திய உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கம் கோலாலம்பூர் மாநாட்டை அடியொற்றியே நடந்தது. அறிவு பூர்வமான முறையில் குழு அமர்வுகள், பொது அமர்வுகள் என அறிஞர்கள் கலந்து கொண்டு தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியதும், ஒவ்வோர் அமர்வின் இறுதியிலும் கட்டுரைகள் விவாதிக்கப்பட்டதும் ஆகிய இவையெல்லாம் கோலாலம்பூர்

9. Emeneau, M.B., 'A man of the World', Tamilaram, p. 27
10. Uwise, M.M., 'A Vetreran Scholar', Tamilaram, p. 82

மாநாட்டைப் பின்பற்றியே நிகழ்ந்தன. ஒவ்வொரு குழு அமர்வுக்கும் தலைவர், செயலர் என்றெல்லாம் அறிஞர்களை நியமித்துச் செயல்பட்டதும், கோலாலம்பூர் மாநாட்டுப் பாணியில்தான். ஆகவே கோலாலம்பூரில் அடிகளார் பொறுப்பேற்று நடத்திய முதல் உலகத் தமிழ் மாநாடு அடுத்து வந்த பிற மாநாட்டுகளுக்கெல்லாம் வழிகாட்டியாக அமைந்தது என்பதில் ஐயமில்லை. மலேசியாவிலிருந்து 37 பிரதிநிதிகளும், இலங்கையிலிருந்து 49 பிரதிநிதிகளும் சென்னை மாநாட்டில் கலந்து கொண்டமைக்கு அடிகளாரின் தூண்டுதலும் ஊக்கமுமே காரணம் என்றும் நாம் எளிதாக ஊகிக்கலாம்.

**அடிகளாரின் பங்களிப்பு**

மாநாட்டு ஏற்பாடுகளில் தான் அடிகளாரின் பங்களிப்பு எதுவுமில்லையே தவிர, மாநாட்டில் அடிகளார் கட்டுரைகள் வழங்கவும், விவாதங்களில் கலந்து கொள்ளவும் தவறவில்லை.

கோலாலம்பூர் மாநாட்டைப் போலவே சென்னை மாநாட்டிலும் முதல் பொது அமர்வுக்குத் தனியாகவும் அடிகளாரே தலைமை தாங்கினார்.[11] அவ்வமர்வில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத் தலைவராகிய பேராசிரியர் ழான் ஃபீலியோசா 'தொன்மையியலும் தமிழ் ஆய்வுகளும்' என்னும் தலைப்பிலும், சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் முனைவர் கே. கே. பிள்ளை 'தமிழ்நாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க காலக்கட்டங்கள்' என்னும் தலைப்பிலும் ஆய்வுக்கட்டுரைகள் வழங்கினர்.

கோலாலம்பூர் மாநாட்டுத் தொகுப்பு நூல் சென்னை மாநாட்டில் அடிகளார் தலைமை தாங்கிய முதல் பொது அமர்விலேயே வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

**வழித்தடங்கள்**

பொதுஅமர்வில் அடிகளார் தமது தலைமையுரையில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் (1964) தொடங்குவதற்கு முன்னரே 1952ஆம் ஆண்டில் தாம் நிறுவி ஆசிரியராக இருந்து நடத்திய (Tamil Culture) இதழும், அதே ஆண்டில் தாம் கொழும்பில் நிறுவிய தமிழ்ப் பண்பாட்டுச் சங்கமும், 1954ஆம் ஆண்டில் சென்னையில் நிறுவப்பட்ட தமிழ்ப் பண்பாட்டுக் கழகமும் ஓர்

11. Proceedings of the Second International Conference Seminar of Tamil Studies; Pp. III-iv

இயக்கமாகவே செயல்பட்டன என்றும் (Tamil Culture) முத்திங்கள் இதழ் உலக அளவில் தமிழ் ஆராய்ச்சியாளர்களுக்கிடையே தொடர்பை உருவாக்கி வளர்த்துச் செயல்பட்டது என்றும் குறிப்பிட்டார். இதனாலேயே 1964ஆம் ஆண்டில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை நிறுவ முடிந்தது என்றும் அடிகளார் விளக்கினார்.

## முன்னேற்றம் உண்டு

சென்னை மாநாடு முந்திய மாநாட்டை விட முன்னேறியிருப்பதைச் சுட்டிக்காட்டி, முந்திய மாநாட்டில் 21 நாடுகளிலிருந்து 200 பேர் கலந்து கொண்டனர், ஆனால் சென்னை மாநாட்டில் 40 நாடுகளிலிருந்து 430 பேர் கலந்து கொண்டிருக்கின்றனர் என்று அடிகளார் விளக்கினார். தன் குழந்தையின் வளர்ச்சியைக் கண்டு பெருமையும் பெருமிதமும் கொள்ளும் ஒரு தாயின் நிலையில் அடிகளாரின் பேச்சு அமைந்திருந்தது.

## நிலவியல் கட்டுரை

5-1-1968 அன்று நடந்த குழு அமர்வில் 'மேல்நாட்டு நிலவியல் நூல்களும் சங்ககால ஆராய்ச்சியும்' என்னும் ஆய்வுக் கட்டுரையை[12] அடிகளார் வழங்கினார். சங்க காலத்தவராகிய பெரிப்ளூஸ், (Periplus), தொலமி (Ptolemy) ஆகிய மேனாட்டு அறிஞர்களின் நூல்களில் ஆய்மன்னரைப் பற்றியும், கொற்கை, தங்கால், மோசி, சாலியூர், ஒக்கூர், எக்கூர், தொண்டி, முசிறி, கரூர், குமரி, காவேரி, பொதிகை, தேனூர் பெருங்கரை, ஆகூர், நாகூர் என்னும் ஊர்களைப் பற்றியும் குறிப்புக்கள் இருப்பதைத் தம் கட்டுரையில் அவர் சுட்டிக் காட்டினார்.

இவற்றுள் சில ஊர்கள் இன்னவை எனப் புரியாத நிலையில், தோலமி குறிப்பிடும் தங்கலா (Tangola) சங்க நூல்களில் காணும் 'தங்கால்' என்னும் ஊரின் பெயரை ஒத்திருப்பதையும், மோசிக்குறி மோசிகீரனாரின் ஊராகிய மோசிக்குடியையும், சாலூர் சாலியூரையும் ஒத்திருப்பதையும் அடிகளார் தம் ஆய்வுக்கட்டுரையில் சுட்டிக் காட்டி விளக்குகின்றார். பாண்டிநாட்டுக் கொற்கை மேலை நாட்டு நூல்களில் 'கொல்கை' என 'ல' கர ஒலியுடன் வழங்குவதைக் குறிப்பிட்டு,

12 Ibid, Vol. III Pp 7-13

> "இச்சொல் மக்களின் பேச்சு வழக்கைக் காட்டுதல் கூடுமெனினும், 'கொல்கை' காரணப் பெயராக இருத்தல் கூடும் என்றும் எண்ணுவதற்கு இடமுண்டு. மேலும் கொற்கையில் முத்துக் குளிப்பதற்கு அரச தண்டனைக்கு உட்பட்ட குற்றவாளிகளையே அனுப்புகின்றனர் என்று பிளினி குறிப்பிடுகின்றார். சிலப்பதிகாரம், மதுரையில் நிகழ்ந்த கொடுங்கோன்மைக்குக் கொற்கையில் ஆயிரம் பொற்கொல்லரைக் கொன்று கழுவாய் நிகழ்த்தியதாகக் கூறுகின்றது. பாண்டியர் தம் தண்டனைகளை அங்கு நிறைவேற்றுவதால் அப்பட்டினத்திற்குக் கொல்கை என்ற பெயர் பிறந்ததா? இன்றேல், பாண்டியரின் பழைய பதியாதலானும் 'கொலுவின் கை' அங்கு வீற்றிருப்பதாலும் கொல்கையாயிற்றா?"[13]

என அடிகளாா் விளக்கும் பாங்கு நம்மைச் சிந்திக்கச் செய்கிறது.

'கலம்' என்னும் தமிழ்ச்சொல் கிரேக்கத்தில் Kolana என வழங்குவதைக் காட்டும் அடிகளாா்,

> "Kolana எனும் சொல் ஒருமையில் Kolanon ஆகும். கலம் என்ற தமிழ்ச் சொல்லினைக் கிரேக்க மொழியில் எழுதுவதென்றாலோ ஒலிப்பதென்றாலோ வேறு எந்த முறையில் எழுதவோ ஒலிக்கவோ கூடும்?"[14]

என வினவுகின்றார்.

பெரிப்ளுஸ், தொலமி ஆகிய இருவரின் நூல்களின் பாடபேதங்களைக் கிரேக்க மொழி அறிவின் துணைகொண்டு ஆராய்ந்து அடிகளாா் தம் கட்டுரையை வடித்துத் தந்தாா் என்பது தெளிவு.

**வாழ்வியல் கட்டுரை**

8-1-1968 அன்று 'வரலாறும் சமூக ஆய்வுகளும்' பற்றிய மூன்றாம் குழு அமர்வில், '1859-1896 ஆண்டுகளில் குவாடலூப், மார்த்தினீக் நாடுகளில் தமிழர் குடியேற்றம்' (Tamil Migrations to Gvadaloupe and Martinique, 1859-1896) என்னும் தலைப்பில் ஆங்கிலக் கட்டுரையொன்றை[15] அடிகளாா் வழங்கினாா். தமிழர்தம் மொழி, இலக்கணம், இலக்கியம், கலை, வரலாறு,

13. Ibid p. 13
14. Ibid p. 9
15. Ibid Vol. II Pp 369-376

பண்பாடு, வாழ்வியல், சமுதாயம் ஆகிய பல துறைகளையும் உள்ளடக்கியனவாகத் தமிழ் ஆய்வுகள் அமைய வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்த அடிகளார் தம் ஆய்வுக் கட்டுரைக்கு இப்பொருளினைத் தேர்ந்தெடுத்தமை மிகவும் பொருத்தமே.

குவாடலூப், மார்த்தினீக் ஆகிய இரு தீவுகளையும் பற்றி இதுவரை எழுதப்பட்டுள்ளவற்றைப் படித்ததோடமையாது, தாமே இரு தீவுகளுக்கும் நேரில் சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்து, ஆலயங்களிலும், பள்ளிகளிலுமுள்ள ஆவணங்களை ஆராய்ந்த பின்னரே தாம் இக்கட்டுரையை வடித்ததாக அடிகளார் குறிக்கின்றார்.

1852ஆம் ஆண்டு முதல் 1883ஆம் ஆண்டு வரை தமிழ் நாட்டில் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலிருந்து வேலையாட்கள் மார்த்தினீக், குவாடலூப் தீவுகளுக்கு அழைத்து வரப்பட்டனர் என்றும், தோட்ட உரிமையாளர்களின் தேவைக்கும் கிடைக்கும் வேலையாட்களின் தொகைக்கும் ஏற்றவாறு அவர்கள் தோட்டங் களுக்குப் பிரித்து அனுப்பப்பட்டனர் என்றும் அடிகளார் தம் கட்டுரையில் விவரிக்கின்றார். பத்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் மூத்தோர் (Adults) என்று கருதப்பட்டதைக் குறிப்பிடும் அடிகளார், 22-9-1856 அன்று 570 பேரோடு (440 ஆண்கள், பெண்கள் 81, பத்து வயதுக்கு உட்பட்ட ஆண் குழந்தைகள் 36, பத்து வயதுக்கு உட்பட்ட பெண் குழந்தைகள் 2, பச்சைக் குழந்தைகளும் வேலையாட்களல்லாதோரும் 11) புதுச் சேரியிலிருந்து புறப்பட்ட ஹாம்ப்டென் கப்பல் 11-12-1856 அன்று சென்பியர் துறைமுகத்தில் வந்திறங்கியபோது அதில் 549 பேரே இருந்தனர் என்னும் புள்ளி விவரத்தையும் தருகின்றார்.

தொடக்கத்தில் கறுப்பர் இனத்தவரை விட இந்தியர்கள் அங்குக் கேவலமாக நடத்தப்பட்டதை அடிகளார் குறிப்பிட்டு, இன்று இந்தியர்கள் மார்த்தினீக், குவாடலூப் மக்களுடன் முழுமை யாகக் கலந்து விட்டதையும், இந்தியாவைப் பற்றிய எத்தகைய ஞாபகமும் அவர்களுக்கு இல்லையென்பதையும் விளக்குகின்றார். ஆனால் சமையலில் இன்னும் பல தமிழ்ச் சொற்கள் வழங்குவதை அவர் கண்டார். அடிகளார் அங்குச் சென்றிருந்த ஆண்டில் (1967) மார்த்தினீக்கில் இந்தியப் பரம்பரையினராக 15,000 பேரும், குவாடலூப்பில் 20,000 பேரும் வாழ்ந்து வந்தனர். இவர்களுள் தமிழ் அறிந்தோர் 17 பேர் கூட இருக்கமாட்டார்கள் என்று அவர் குறிக்கின்றார். இவர்களும் 60-70 வயதுடைய முதியோர்

என்றும், ஆல்பர்ட் மாரிமுத்து என்பவர் மிக நன்றாகத் தமிழ் பேசுகின்றார் என்றும் அடிகளார் எழுதுகின்றார். அவர்களிடையே முத்து, முத்தம்மாள், முத்துசாமி, சாரங்கபாணி, பாவாடை, கருப்பன், ரங்கன், வைத்தி, காமாட்சி, வெள்ளையம்மாள், தங்கமணி, வேலாயி, வீரப்பன், சின்னம்மா, குப்பி, பூங்கா, சின்னம்மா, ரெங்கசாமி, கோவிந்தன், நாராயணன், சுப்பராயன், சுப்பம்மா என்று பல தமிழ்ப் பெயர்கள் இரு தீவுகளிலும் வழங்கி வருவதை அடிகளார் குறிப்பிட்டு, தமிழைக் கற்க வேண்டும் என்னும் ஆர்வம் அத்தீவுகளில் வளர்ந்து வருவதையும் எடுத்துரைக்கின்றார்.

தாங்கள் தமிழர் என்பதையே மறந்தவராக மேற்கிந்தியத் தீவுகளில் பெருந்தொகையாக தமிழர் வாழ்ந்து வருவதைத் தம் ஆய்வுக் கட்டுரையின் மூலம் அடிகளார் தமிழுலகுக்கு அறிவித்தார்.

## பாரீஸ் மாநாடு

மூன்றாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 1970ஆம் ஆண்டு ஜூலை 15 முதல் 18ஆம் தேதி வரை பிரான்சு நாட்டுத் தலைநகராகிய பாரீஸ் நகரில் நடைபெற்றது. பிரான்சுக் கல்லூரியில் மாநாட்டு அமர்வுகள் இடம்பெற்றன. எத்தகைய ஆரவாரமும் இல்லாமல் முழுமையும் ஆராய்ச்சி நிலையில் இம்மாநாடு நடைபெற்றது என்பது நினைவில் கொள்ளுதற்குரியது. பிரதிநிதிகளும் பார்வையாளர்களுமாக 26 நாடுகளிலிருந்து 180 பேர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். வழக்கமாகப் பெருந்தொகையினரைப் பிரதிநிதிகளாக அனுப்பும் இந்தியா, இலங்கை, மலேசியா போன்ற நாடுகள் தொகையும் செலவும் காரணமாக முறையே 29, 8, 2 பிரதிநிதிகளையே அனுப்பிவைக்க முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சிந்துச் சமவெளி எழுத்து விளக்கம், சங்க இலக்கியங்களின் கால அமைவு, தமிழுக்கும் வடமொழிக்குமிடையிலுள்ள உறவுகள், தமிழ்ச் சமுதாயம், தற்காலத் தமிழ் இலக்கியம் எனப் பல தலைப்புகளில் ஆய்வரங்குகள் நடந்தன. உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தலைவரும் துணைத் தலைவர்களுமே பொதுவாக அமர்வுகளுக்குத் தலைமையேற்றனர். சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு, தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் மு. வரதராசன் ஆகிய இருவருக்கும் அவர்களின் சிறப்புக் கருதி அமர்வுத் தலைமையேற்கும் வாய்ப்பு

வழங்கப்பட்டது. மன்றத்தின் பொதுச் செயலாளர்கள் அமர்வு களின் செயலர்களாகப் பொறுப்பேற்று உதவினார்கள். மாநாட்டின் போது பிரெஞ்சு, ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளும் வழங்கப்பட்டன. மாநாட்டுத் தொடக்கவுரையாற்றிய ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல், பண்பாட்டு மன்றத்தின் (UNESCO) மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) முனைவர் மால்கம் ஆதிசேஷையா பிரெஞ்சு, ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று மொழி களிலும்[16] உரையாற்றியது குறிப்பிடத்தக்கது. வரவேற்புரை வழங்கிய மன்றத் தலைவரும் பிரான்சுக் கல்லூரிப் பேராசிரியரு மாகிய பேரா. ழான் ஃபீலியோசா, பிரெஞ்சிலும் ஆங்கிலத்திலும் வரவேற்புரையாற்றி 'எல்லோர்க்கும் நல்வரவு' என்று தமிழில் கூறி முடித்தார்.[17]

அந்நாளைய தமிழக முதல்வர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்களும், மாநாட்டுக்குத் தமிழகக் குழுவின் தலைவராகச் சென் றிருந்த அன்றைய தமிழக நிதி அமைச்சர் மாண்புமிகு கே. ஏ. மதியழகன் அவர்களும் வாழ்த்துரை வழங்கிய பின்னர் மன்றத் தலைவர் பேரா. ஃபீலியோசா மாநாட்டுத் தலைமையுரையை[18] வழங்கினார். அவ்வுரையில் பிரான்சு நாட்டில் இந்திய மொழிகளின் ஆராய்ச்சிகள் தொடங்கியதையும் எதுவார் ஆரியேல் (Edouard Ariel) இந்தியாவுக்கே சென்று தமிழைப் பயின்றதோடு, பல தமிழ் நூல்களைப் பாரீசுக்குக் கொண்டு வந்து ஆராய்ந்து ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டதையும், ழூலியன் வென் சோன், ழூல் ப்ளோக் போன்றறோர் தமிழை ஆராய்ந்ததையும் குறிப்பிட்டுப் பேசிய அவர், முதல் கீழ்த்திசை நாட்டியல் அறிஞர் உலக மாநாடு பாரீஸில் 1883ஆம் ஆண்டு நடைபெற்றபோது, அம்மாநாட்டில் தமிழ் ஆய்வுகள் சிறப்பிடம் பெற்றிருந்ததையும் விளக்கினார். தமிழ் நூல்கள், இலக்கணங்கள், அகராதிகள் ஆகியவை தொகுக்கப்பட்டுப் பாரீஸிலுள்ள மன்னர் நூலகத்தில் வைக்கப்பட்டிருந்ததையும் அவற்றின் பட்டியல் 1739ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளியிடப்பட்டதையும் அவர் எடுத்துரைத்தார். மரியதாஸ்பிள்ளை என்னும் தமிழரே தமிழ்ப் பண்பாட்டினை ஃபிரெஞ்சு மொழி மூலம் ஐரோப்பிய அறிஞரிடையே பரப்பி

16. Proceedings of the Third International Conference—Seminar, X. S. Thaninayagam & Francois Gros (Ed.) Pondicherry; 1973, P. 272
17. Ibid p. 1 18. Ibid Pp 21-26

யுதவினார் என்பதையும் ஃபீலியோசா தம் உரையில் நினைவு கூர்ந்தார். பின் கால்டுவெல், போப் போன்ற மேனாட்டறிஞர் பலர் தமிழை வளர்த்ததைக் குறிப்பிட்ட அவர், இன்னும் நாம் ஆற்ற வேண்டிய தமிழ் ஆராய்ச்சிப் பணி மிகப் பெரிது என்பதை விளக்கி, அப்பணியினை ஆய்வுக் கண்ணோட்டத்துடன் அறிவியல் முறையில் ஆற்றுவது இன்று நம் அனைவர்க்கும் உரிய கடமை என்று விரிவாக எடுத்துரைத்தார்.

### அடிகளாரின் பங்களிப்பு

'மாநாட்டு ஆயத்தப் பணிகளுக்கு நானே பொறுப்பு என்றாலும் பெரும்பாலும் அப்பணிகளை அடிகளாரே செய்தார்' என்று பேரா. ஃபீலியோசா எழுதியுள்ளார்.[19] அவ்வமயம் அடிகளார் பிரான்சுக் கல்லூரியில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்ததால் பாரீசு மாநாட்டுப் பணிகளில் எளிதில் ஈடுபட அவரால் முடிந்தது. அமைதியாகவும், திறமையாகவும் மிகுந்த நிர்வாக ஆற்றலுடனும் அடிகளார் இப்பணிகளைச் செய்ததாகப் பேரா. எம். பி. எமனோ கூறுவார்.[20]

### அமர்வுத் தலைமை

பாரீஸ் மாநாட்டில் இறுதி அமர்வுக்கு அடிகளார் தலைமை தாங்கினார். பிரான்சுக்கும் தமிழ்கூறு நல்லுலகத்துக்குமிடையிலுள்ள நெருங்கிய தொடர்புகளைத தம் உரையில் நினைவு கூர்ந்ததோடு, பிரெஞ்சு அறிஞர் பலர் தமிழ் ஆராய்ச்சிக்கும் கல்விக்கும் ஆற்றிய பணிகளையும்[21] அவர் எடுத்துரைத்தார். அடுத்த உலகத் தமிழ் மாநாடு 1973ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறும் என்பதை அறிவித்த அடிகளார், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்ற ஆட்சிக் குழுவின் ஒரு பகுதியாகிய செயற்குழுவில் பதினேழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருப்பதையும் அவையோருக்குத் தெரிவித்தார்.

### மன்றத்தின் பணிகள்

மாநாட்டு இறுதி நாளாகிய 18-7-1970 அன்று உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் பொதுக் குழுக் கூட்டத்தில் 1968-70ஆம்

---

19. J. Filliozat, op. cit; p. 39
20. M. B. Emeneau; op. cit; p. 27
21. Proceedings of the Third Internatio nal Conference—Seminar; p. 259

ஆண்டுகளில் மன்றத்தின் செயல்பாடுகளை அடிகளார் விளக்கிப் பேசினார்.[22] மன்றத்திடம் போதுமான அளவு நிதி இல்லாத போதும் அது உலகத் தமிழ் அறிஞர்களிடையே நல்லுறவை வளர்ப்பதில் வெற்றி பெற்றிருப்பதை அவர் குறிப்பிட்டார். மன்றத்தால் வெளியிடப்படும் 'தமிழ் ஆய்வு இதழ்' (Journal of Tamil Studies) கண்டுள்ள வளர்ச்சியையும் அவர் மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார்.

## இன்னுமா தொடர்வது?

மன்றப் பொறுப்பாளர்கள் ஏற்கனவே ஆறு ஆண்டுக்காலம் பணியாற்றி விட்டதால் புதிய பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று பேரா. ஃபீலியோசா அக்கூட்டத்தில் வற்புறுத்தினார். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் பற்றிய திட்டத்தைச் செயல்படுத்துதல் முதலிய பல காரணங்களுக்காக இதே பொறுப்பாளர்கள் தங்கள் பணியில் தொடர்தல் வேண்டுமென்று ஸ்வீடன் நாட்டு இங்வே ஃப்ரைக்கோம் வற்புறுத்தியபின், பேரா. ஃபீலியோசா இன்னும் மூன்றாண்டுக் காலத்துக்குத் தாமும் தமது குழுவும் தொடர்ந்து பணியாற்ற இசைவு தெரிவித்தார்.[23] 1973ஆம் ஆண்டிலும் இவ்வாறு வற்புறுத்துதல் கூடாது என்று அப்போது அடிகளார்[24] கூறினார்.

## பாரீசில் ஆய்வுக் கட்டுரை

பாரீஸ் மாநாட்டில் 17-7-1970 அன்று 'தமிழில் சமுதாயம்' என்னும் தலைப்பில் நடந்த அமர்வில் 'தற்காலத் தமிழ்ச் சமுதாயங்கள்—ஒரு மதிப்பீடு'[25] என்னும் பொருள் பற்றி அடிகளார் ஆய்வுக் கட்டுரை வழங்கினார். அ) இனவழியால் தமிழர் ஆ) தாய்மொழியால் தமிழர் இ) பண்பாட்டால் தமிழர் ஈ) தலைமுறை வழியால் தமிழர் என்று உலகத் தமிழரைப் பிரித்துக் கொண்டு அடிகளார் தம் கட்டுரையைத் தொடங்கினார். இதற்குக் காரணமுண்டு. இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள தமிழர் இனவழி, தாய்மொழிவழி, பண்பாட்டு வழி, தலைமுறை வழித் தமிழர் எனில், மலாயா, சிங்கப்பூர், நேட்டால் (தென் ஆப்பிரிக்கா), மௌரீஷஸ், அந்தில் நாடுகளில் தமிழைத் தாய் மொழியாக (வீட்டு மொழியாக)க் கொள்ளாவிடினும் இனவழி, பண்பாட்டு வழித் தமிழர்கள் பலர் உளர். தலைமுறை வழியாகத்

22. Ibid, p. 271
23. Ibid, p. 273
24. Ibid,
25. Ibid, 215-223

தமிழர் எனினும், இனக் கலப்புத் திருமணங்கள் வழித் தோன்றிய தமிழர்களை இனவழித் தமிழர் என்று கொள்வது கடினம். அத்தகையோர் தமிழ் பேசுவதுமில்லை. தாங்கள் தமிழர் என உணர்வதுமில்லை. எனினும் அவர்களின் குடும்பப் பெயர்கள் மூலம் (அவை சிதைந்தும் உருக்குலைந்தும் இருந்தால் கூட) அவர்கள் தலைமுறை வழித் தமிழர்கள் எனக் கொள்வது பொருந்தும் என்று தம் கட்டுரையின் தொடக்கத்தில் அடிகளார் விளக்குகின்றார்.

### பல நாடுகளில்

இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, இந்தோனேசியா, வியட்நாம், ஃபீஜி, டாஹிட்டி, தென் ஆப்பிரிக்கா, ரொடீஷியா, மௌரிஷஸ், ரியூனியோன், குவாடலூப், மார்த்தினீக், கயேன், சூரிநாம், கயானா, ட்ரினிடாட் ஆகிய பல நாடுகளில் வாழும் தமிழர்கள் மேற்குறித்த நான்கு பிரிவுகளில் ஒன்றிலோ பலவற்றிலோ அடங்குவர் எனக் கூறும் அடிகளார், அவ்வந்நாடுகளில் வாழும் தமிழர் தொகையினைத் தமக்குக் கிடைத்த மக்கள் தொகைக் கணக்கோடு சுட்டுகின்றார்.

### பல ஆராய்ச்சி நூல்கள்

இவ்வாறு கடல் கடந்து வாழும் தமிழர்களைப் பற்றிக் கம்ப்ஸ்டன், காங்குலி, ஜிலியோன், கொண்டப்பி, இலங்கசுந்தரம், கொடிக்கரா, பெனடிக்ட், மையர், வஸ்தியாம்பிள்ளை, கைலஸ்லேர், துப்போன், கெர்னியல் சிங் சிந்து, ஆர். கே. ஜெய்ன், அரசரத்தினம் ஆகிய பல ஆசிரியர்கள் ஆராய்ந்து எழுத்து வடிவில் தந்துள்ளதையும் அடிகளார் மறவாமல் குறிக்கின்றார்.

### எப்போது?

வெளிநாடுகளுக்குச் சென்று தமிழர் குடியேறுவது எப்போது தொடங்கியது என உறுதியாகச் சொல்ல இயலாவிடினும், 1834ஆம் ஆண்டுக்கு முன்னரே அது தொடங்கியதென்றும், 1834ஆம் ஆண்டில் ஆங்கிலேயரும் 1848ஆம் ஆண்டில் பிரெஞ்சுக் காரரும் அடிமை முறையை ஒழித்த பின்னர் இது அதிகமாயிற்று என்றும் அடிகளார் விளக்குகின்றார். அரசுகளுக்கிடையில் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு இந்தியத் தமிழர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றதையும் அடிகளார் குறிப்பிடுகின்றார். அரசு ஒப்பந்தத்தோடு பிற நாடுகளுக்குத் தமிழ் மக்கள் வேலையாட்

களாகச் செல்லத் தொடங்கிய ஆண்டுகளை அடிகளார் பட்டிய லிட்டுக் காட்டுகின்றார்.

| | |
|---|---|
| பர்மா | 1826 |
| இலங்கை | 1827 |
| மௌரீஷஸ் | 1836 |
| ரியூனியோன் | 1836 |
| மலாயா | 1838 |
| ட்ரினிடாட் | 1845 |
| மர்ட்டினீக் | 1853 |
| தென்ஆப்பிரிக்கா | 1860 |
| ஃபீஜி | 1903 |

**என்ன காரணம்?**

தமது சுற்றுப் பயணங்களின் போது பல நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களை அடிகளார் சந்தித்து உரையாடியபோது அதிகச் சம்பளம் என்பது மட்டுமன்றி இடர்மேற்கொள்ளும் துணிவு, சாதிப் பிரச்சினைகள், குடும்பப் பிரச்சினைகள் எனப் பல காரணங் களாலும் தமிழர் நாடு கடந்து சென்றனர் என்பதை உணர்ந்தார். சாதிப் பிரிவினைகள் அம்மக்களிடையே மறைந்து கல்வி, சொத்துரிமை, அரசியல் செல்வாக்கு போன்ற பல காரணங்களால் அவர்கள் தங்கள் வாழ்வில் முன்னேறுவதற்கு வெளிநாட்டு வாழ்வு துணை செய்திருக்கிறது. தமிழ் இனத்தை விட்டுப் பிற இன மக்களோடு திருமண உறவு கொள்வதால் இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலாயா, பர்மா தவிர்த்த பிற நாடுகளில் வாழும் தமிழர்கள் பெரும்பாலும் தமிழர் மரபில் வந்தவர்கள் என்பதைத் தவிர அவர்களிடம் இன்று தமிழ்மை (Tamil-ness) சிறிதளவும் இல்லை என்னும் உண்மையையும் அடிகளார் புலப்படுத்துகின்றார்.

**தமிழைப் பயன்படுத்துதல்**

அவ்வாறே இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, மௌரீஷஸ், ஃபீஜி முதலிய நாடுகளில் கல்வித் துறையிலும் நிர்வாகத் துறை யிலும் தமிழ் பயன்படுத்தப்படுகிறது என்றாலும் பயன்பாட்டு அளவு நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது.

**தமிழ் நாளிதழ்கள்**

மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தமிழ் நாளிதழ்கள் வெளிவருகின்றன. மௌரீஷஸ், ஃபீஜி, தென் ஆப்பிரிக்கா

போன்ற நாடுகளில் அவ்வப்போது தமிழ் இதழ்கள் வெளியாவதுண்டு. பர்மாவில் வெளிவந்து கொண்டிருந்த இரு தமிழ் நாளிதழ்கள் 1965ஆம் ஆண்டு தடைசெய்யப்பட்டன. தமிழ் நாட்டு இதழ்களும், இலக்கியங்களும், திரைப்படங்களும், இலங்கை, மலேசியா, மௌரீஷஸ், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் எளிதாகப் பரவுகின்றன; தொலை நாடுகளில் இது கடினம். மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, மௌரீஷஸ், பர்மா, ஃபீஜி, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் தமிழ்க் கல்வி இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு இந்தியாவையும் இலங்கையையும் தவிர மற்ற உலக நாடுகள் பலவற்றிலும் தமிழர் பலர் வாழ்வதையும், அவர்கள் அங்குச் சென்றது எவ்வாறு, எப்போது என்பதையும், அங்குத் தமிழ் எத்தகைய இடம் பெற்றிருக்கிறது என்பதையும் அடிகளார் பல நூல்களிலிருந்து அகழ்ந்தெடுத்த குறிப்புக்களையும், தாம் நேரில் பல நாடுகளுக்குச் சென்று மக்களைச் சந்தித்து ஆய்வு நிகழ்த்தி அறிந்ததையும் கொண்டு தம் கட்டுரையில் தொகுத்து எழுதியுள்ளார்.

அடிகளார் ஆய்வுக் கட்டுரை வழங்கிய அமர்வில் வேறு இரு கட்டுரைகளும் வழங்கப்பட்டன. ஆயினும் அமர்வின் இறுதியில் நடந்த விவாதத்தின்போது பேசிய நால்வரும் அடிகளாரின் கட்டுரையைப் பற்றியே கருத்துத் தெரிவித்தனர்[26] என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டைத் தவிர இந்தியாவின் பிற மாநிலங்களில் வாழும் தமிழரைப் பற்றிய ஆய்வுகளும், பிற நாடுகளில் வாழும் தமிழர்களின் பிற இனத்தவரை விட்டு ஒதுங்கியேவாழும் மனப்பான்மையைப் பற்றிய ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

### பதிப்புப்பணி

பாரீஸ் மாநாட்டு உரைகளைத் தொகுத்துப் பதிப்பிக்கும் பொறுப்பையும் அடிகளாரே ஏற்றார். மாநாட்டுத் தொகுப்பின் முன்னுரை[27] கூறுவது போல ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்துப் பதிப்புக்கு ஆயத்தம் செய்து கொடுக்கும் பொறுப்பினை அடிகளாரும், அச்சிட்டு வெளியிடும் பொறுப்பினைப் புதுச்சேரி இந்தியவியல் பிரெஞ்சு நிறுவனத்தின் துணை இயக்குநரான பிரான்சுவா க்ரோவும் ஏற்றுச் செயல்பட்டனர். இத்தொகுப்பு 1973ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றது.

---

26. Ibid p. 232
27. Ibid p. 1

**யாழ்ப்பாணத் தமிழ் மாநாடு**

அடுத்த மாநாட்டை இலங்கையில் நடத்த வேண்டுமென்று உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளை விடுத்த அழைப்பினைப் பாரீஸ் மாநாட்டின்போது உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றப் பொதுக்குழு ஏற்றுக் கொண்டது.

**எப்போது நடத்துவது?**

1973ஆம் ஆண்டு சனவரி 3-7 தேதிகளில் யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்த இலங்கைக் கிளை தீர்மானம் செய்தது. பின்னர் 1974ஆம் ஆண்டுக்கு மாற்றியது. யாழ்ப்பாணத்தில் வசதிகள் போதா என்னும் காரணத்தைக் காட்டிக் கொழும்பில் அல்லது கண்டியில் நடத்தக் கூடாதா என்னும் வினா இடையில் எழுந்தது. இறுதியாக மாநாட்டினை யாழ்ப்பாணத்தில் 1974ஆம் ஆண்டில் சனவரி 3-9 தேதிகளில் நடத்துவதென்று[28] உறுதியான முடிவு செய்யப்பட்டது.

**யார் தலைவர்?**

இம்மாநாட்டு ஆயத்தப் பணிகள் தொடர்பாக இலங்கைக் கிளையில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டமையால் கிளைத் தலைவர் நீதிபதி எச்.டபிள்யு. தம்பையா பதவி விலகவே, 20-9-1973 அன்று அடிகளார் தலைவராகத் தெரிவு செய்யப் பட்டார். ஆனால் அடிகளார் தலைமைப் பொறுப்பை ஏற்க மறுத்து, பேராசிரியர் வித்தியானந்தன் தலைவராக வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார். அவ்வாறே இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் இலங்கைக் கிளை யின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.[29]

**அடிகளாரின் ஆதரவு இல்லையா?**

சற்றே குழப்பமான இச்சூழ்நிலையில் 'தவத்திரு. தனிநாயகம் அடிகளின் ஆதரவு மாநாட்டு அமைப்புக்குழு உறுப்பினர்கட்கு இல்லை' என்று கூட கருத்துக்கள் வெளியாயின. அதை மறுத்து 16-12-1973 'ஈழநாடு' இதழில் பேரா. சு. வித்தியானந்தன் ஒரு கட்டுரை வெளியிட்டார். அதில் அவர்,

> ''தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் விருப்பத்துக்கு ஏற்ப யாழ்ப்பாணத்தில் மாநாடு நடைபெறுகின்றது. அவரின்

28. க. சச்சிதானந்தன்; எனது யாழ்ப்பாணமே; சென்னை; 1980; பக். 36, 39, 45, 76-96
29. மேற்படி ப. 100

விருப்பத்துக்கமையப் பேராசிரியர் வித்தியானந்தன் தலைவரானார். அவரே யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு அமைப்புக் குழுக் கூட்டத்துக்கும் வருகை தந்து உற்சாக மூட்டினார்; கருத்துக் கூறினார்; சேர்ந்து உழைத்தார்''

என்றும்,

''இலங்கைக் கிளையின் பழைய உறுப்பினர்களாகிய திரு. கே. சி. தங்கராசா, திருமதி புனிதம் திருச்செல்வம், திருமதி மகேஸ்வரி பாலகிருட்டிணன், திரு. பி. ஈ. வசுதியாம்பிள்ளை, திரு. எச். அம்பிகைபாகன் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், வண. தனிநாயகம் அடிகள், திரு. சேம்சு இரத்தினம் ஆகியோர் இணைச் செயலாளர்களாகவும், திருவாளர்கள் கே. செல்வநாதன், சி. அம்பலவாணர், இ. நமசிவாயர் ஆகியோர் பொருளாளர்களாகவும் பதவி வகித்துப் பணி புரிகின்றனர்''[30]

என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

''சனவரியில் நடக்கப்போகும் மாநாட்டை வெளிநாட்டு மக்கள் ஆவலோடு வரவேற்கின்றார்கள். இது சிறப்பாக அமையத் தமிழ் மக்கள் உதவுவார்கள், போதிய ஒத்துழைப்பு அளிப்பார்கள் என்று நம்புகிறேன்''[31]

என்று தனிநாயகம் அடிகளார் கூறியதாக 16-12-1973 'சுதந்திரன்' வார இதழில் செய்தி வெளிவந்தது. மாநாட்டுக்கு அடிகளாரின் முழு ஒத்துழைப்பும் உண்டு என்று பேரா. சு. வித்தியானந்தன் எழுதியதை இது உறுதி செய்தது.

## அடிகளாரின் எளிமை

மற்றொன்றையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் நிறுவுநரும், தொடக்க முதல் அதன் பொதுச் செயலாளரும், கோலாலம்பூர் மாநாட்டையும் பாரீஸ் மாநாட்டையும் அறிஞர்கள் வியந்து பாராட்டும் அளவுக்கு நடத்திக் காட்டியவரும், கோலாலம்பூர், பாரீசு மாநாட்டுத் தொகுப்புக்களைப் பதிப்பித்து வெளியிட்டவரும், உலக அரங்கில் மிகச் சிறந்த ஆராய்ச்சியாளர் என ஏற்றுக் கொள்ளப்பட்டவருமாகிய அடிகளார் இலங்கைக் கிளையின் இணைச் செயலாளர்களுள் ஒருவராக இருந்து பணியாற்ற இசைந்தமை அவரது

30. மேற்படி பக். 120-121 31. மேற்படி ப. 130

எளிமையையும், அடக்கத்தையும், பிறரை முன்னிலைப்படுத்தித் தாம் பின்னணியிலிருந்து உழைக்க விரும்பும் தியாக மனப் பான்மையையுமே புலப்படுத்துகின்றது.

**தத்திலிருந்து காத்தவர்**

யாழ்ப்பாணம் உலகத் தமிழ் நாட்டின் தொடக்க விழாவில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆற்றிய தலைமைப் பேருரையின் போது அடிகளாரைப் பற்றிப் பேசியது பின்வருமாறு:

> "பிற நாட்டவரிடையே தமிழார்வத்தையும் தமிழா ராய்ச்சியையும் வளர்த்த மன்றத்தின் தொண்டினை மதிப் பிடும்போது, இம்மன்றத்தின் தாபகர் வண. தனிநாயகம் அடிகளை நாம் பாராட்ட வேண்டியவர்கள் ஆகின்றோம். தனிநாயகம் அடிகள் தமிழ்த் தூதர். உலக ஆசைகளைத் துறந்திருப்பினும் தமிழ் ஆசையைத் துறவாதவர். தாம் செல்லும் நாடுகளில் தமிழ்த் தூதராய் விளங்கித் தமிழின் மேன்மையையும் தொன்மையையும் பற்றிச் சொற்பொழிவு கள் நிகழ்த்தியும் கட்டுரைகள் எழுதியும் வானொலியில் பேசி யும் அந்த அந்த நாட்டு மக்களுக்குத் தமிழ் மொழியிடத்து அன்பும் அக்கறையும் ஏற்படச் செய்தவர். உலகமெல்லாம் தமிழ் முழங்கத் 'தமிழ்ப் பண்பாடு' (Tamil Culture) என்ற ஆங்கில முத்திங்கள் இதழ் ஒன்றைத் தோற்றுவித்து, அதன் ஆசிரியராகவும் பணிசெய்தவர். இத்தொண்டுகள் எல்லா வற்றிலும் மேலாக இதுவரை யாவரும் செய்திராத பெரிய அளவில் ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா முதலிய எல்லாக் கண்டங்களிலுமுள்ள தமிழறிஞர்களை ஒன்று கூட்டி அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தினை நிறுவினார். எனவே இம்மன்றம் அவரின் குழந்தையாகும். இக்குழந்தை யைக் கடந்த பத்தாண்டாகச் சீராட்டித் தாலாட்டி வளர்த்து அதன் பத்தாண்டு நினைவினை, பிற நாட்டுப் பேரறிஞர்களும் கூடியுள்ள இவ்வரங்கிலே, உள்ளம் குளிரக் கண்டு மகிழ் கின்றார். குழந்தை வளர்ப்பு எவ்வளவு கடினமானது என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்தக் குழந்தைக்குப் பத்தாவது ஆண்டிறுதியில் ஒரு தத்து ஏற்பட்டது. அப்போது குழந்தையைத் தவிக்க வைத்து விட்டு ஓடி விட்டார் என்று அடிகளார் மீது பலர் பழி சுமத்த முயன்றார்கள். குழந்தைத் துரோகம் அறியாத தமிழ்ப் பண்பாட்டின காவலர் அவர், எனவேதான் தத்திலிருந்து குழந்தையைத் தப்ப வைக்க

எம்மோடு சேர்ந்து உழைத்தார். இக்குழந்தையின் வளர்ச்சியே தமது இலட்சியம் என்பதை நான்காவது மாநாட்டைத் திறந்து வைக்க முன்வந்ததிலிருந்து உலகறியச் செய்திருக் கின்றார்''.[32]

பேரா. வித்தியானந்தன் மேற்குறித்த உரையில் 'தத்து' என்று எதனைக் குறிப்பிடுகின்றார் என்பதனை இங்கு விளக்குதல் நலம்.

## தத்து இதுதான்

நான்காம் உலகத் தமிழ் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறு முன் இலங்கைக் கிளையில் பல கருத்து வேற்றுமைகள் எழுந்ததால் கிளையின் தலைவரே பதவி விலகினார். மாநாட்டு அமைப்புக் குழுவின் பொறுப்பாளர்கள் சிலர் தாங்கள் விரும்பியவாறு அறிக்கைகள் வெளியிட்டுக் கொண்டிருந்தனர். சில தமிழ் இதழ்கள் இக்குழப்பத்தையும் பெரிதுபடுத்தி எழுதிவந்தன. அவ் வேளையில் இலங்கைக் கிளையும் மாநாட்டு அமைப்புக் குழுவும் தங்களுக்கு வழிகாட்டத் தக்க தலைவர் இல்லாமல் தடுமாறின. அடிகளாரோ அதுசமயம் மாநாட்டுப் பணிகளை முன்னிட்டு மலேசியா, சிங்கப்பூர் நாடுகளுக்குச் சென்றிருந்தார். இதைச் சிலர் திரித்துக் கூறி. குழப்பமான நேரத்தில் அடிகளார் இலங்கையி லிருந்து வழி காட்டாமல் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டார் என்று புரளிகளைக் கிளப்பினர். இதையே பேரா. வித்தியானந்தன் மேற்கண்டவாறு எடுத்துரைத்துச் சரியான விளக்கம் தருகின்றார்.

## பலவகை எதிர்ப்புக்கள்

யாழ்ப்பாண மாநாட்டுக்கு எதிர்ப்பு மிகுதியாக இருந்தது. நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. அருளம்பலம் செய்தியாளருக்கு விடுத்த அறிக்கை 16-12-1973 'தினகரன்' நாளிதழில் வெளிவந்தது. அதில்,

> ''மாநாட்டைச் சாட்டி வரமுயலும் எவருக்கும் விசா கொடுக்க வேண்டாம் என்றும், அவசியமேற்படுமானால் மாநாட்டைத் தடைசெய்யுமாறும் எமது கட்சி கேட்டுக் கொள்ளுகின்றது''[33]

என்றே அவர் குறிப்பிட்டிருந்தார்.

மாநாட்டுக்கு வந்த வெளிநாட்டுத் தமிழறிஞர் சிலர் உட்புகல் அனுமதி இல்லாமல் திருப்பியனுப்பப்பட்டனர் என்னும் செய்தி

32. மேற்படி பக். 181-182
33. க. சச்சிதானந்தன்; முன்சுட்டியது; ப. 118

பி.பி.சி. 'தமிழோசை'யின் மூலம் வெளிவந்தது. இலங்கைக் கிளையின் இணைச்செயலாளர்களுள் ஒருவராகிய முனைவர் கோபாலப்பிள்ளை மகாதேவாவின் உடன்பிறந்த சகோதரர் ஒருவர் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்காக இலண்டனி லிருந்து வந்தார். அவரும் கொழும்பு விமான நிலையத்தில் வைத்துத் திருப்பியனுப்பப்பட்டார்.[34]

## வெளிநாட்டு உதவியே இல்லாமல்

இத்தனை இடுக்கண்களுக்கிடையிலும் மனம் தளராமல் பலர் மாநாட்டின் வெற்றிக்காக உழைத்தனர். நன்கொடைகள் மூலமும் கொடிநாள் நடத்தியும் நிதி திரட்டினர். முதற்கொடி பேரா. சு. வித்தியானந்தனால் தனிநாயகம் அடிகளாருக்கு அணிவிக்கப்பட்டது. மாநாட்டுக்குச் செலவாகிய தொகை முழு வதுமே இலங்கையிலேயே திரட்டப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும். வெளிநாட்டு உதவியே இல்லாமல் நடந்த முதல் உலகத் தமிழ் மாநாடு இதுவே. மாநாட்டுத் தொகை நூலும் வெளிநாட்டு உதவி இல்லாமல் 1980ஆம் ஆண்டு (அடிகளாரின் மறைவுக்குப் பின்) அடிகளார்க்கு உரித்தாக்கப்பட்டு வெளிவந்தது. தம் மறைவு வரையில் தொகுப்பு நூலின் ஆசிரியர் குழுவில் அடிகளார் உறுப்பினராக இருந்து தொண்டாற்றினார்.

## அடிகளாரின் தொடக்கவுரை

திட்டமிட்டபடியே மாநாடு 3-1-1974 அன்று தொடங்கியது. குத்துவிளக்கேற்றி மாநாட்டைத் திறந்து வைத்த தனிநாயகம் அடிகளார் பேராசிரியர் வித்தியானந்தனின் தலைமையுரைக்குப் பின் தொடக்கவுரை நிகழ்த்தினார். மாநாட்டுக்கு உதவிய பல ருக்கும் பாராட்டும் நன்றியும் தெரிவித்தபின் அடிகளார் பின் வருமாறு கூறினார் :

''இந்தத் தமிழாராய்ச்சிக் கழகம் ஆரம்பமானதிலிருந்து தமிழின் வளர்ச்சி அனைத்துலக ரீதியில் குறிப்பிடத்தக்க அளவு ஏற்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தில் கூறிய 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்!' எனும் கொள்கையையும், இந்த நூற்றாண்டில் பாரதியார் கூறிய 'திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்' எனும் கோட்பாட்டையும் அடிப்படைக் கோட்பாடுகளாகக் கொண்டிருப்பது இந்த அனைத் துலகத் தமிழ் அராய்ச்சிக் கழகம். இஃது ஆற்றி வரும் தொண்டு

34. மேற்படி ப. 159

கள் பல. அனைத்துலகத் தமிழறிஞர்கள் பலரை ஒன்று சேர்ப்பதும், அவர்களை அறிமுகப்படுத்துவதும் இந்தக் கழகத்தின் சிறப்புப் பணிகளும் நோக்கமுமாகும். இக்கழகத்திற்குப் பொருந்திய ஆராய்ச்சி, இலக்கணம் இலக்கியம் பற்றியது மட்டுமல்ல; தமிழ்த் துறையோடு தொடர்புள்ள எல்லாத் துறைகளையும் ஆராய்ச்சிக் களமாகக் கொண்ட ஆராய்ச்சி இக்கழகத்திற்குரியது.

தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபடும் வெளிநாட்டு அறிஞர் சிலர் நன்கு தமிழைப் பேசவும் எழுதவும் அறிந்திலர் எனினும், வரலாற்று அடிப்படையிலும் மொழி அடிப்படையிலும் ஒப்பியல் அடிப்படையிலும் ஆற்றும் தொண்டோ பெரிது. இப்படி உலகம் அறியவேண்டும் என்று ஆங்கிலத்தில் வெளியிடப்படும் ஆராய்ச்சி ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து கொண்டே வருகின்றது. ஆதலால் நம்மவரும் ஆராய்ச்சியை ஆங்கிலத்தில் வெளியிடுவதற்குக் காரணம் உலகம் அறிய வேண்டும் என்பதேயாகும். சென்ற மூன்று மாநாடுகளின் தொகை நூல்களைப் படித்துப் பார்க்க வேண்டும். அந்நூல்களைப் பார்த்தால் தமிழாராய்ச்சி எவ்வளவிற்கு முன்னேறி வருகிறதென்பதை உணரலாம்.

வெறும் புகழுக்காகவோ, காரணமின்றிப் போற்றுவதற்காகவோ நாம் தமிழாராய்ச்சியில் இறங்குவதில்லை. ஆராய்ச்சியளவின் நோக்கம் உண்மையைக் கண்டுபிடிப்பது. மறைந்திருக்கும் உண்மைகளைப் புலப்படுத்துவது, அகழ்ந்தெடுப்பது. மொழிகள் எத்துணையிருக்கத் தமிழுக்கு மட்டும் இம்மாநாடுகளை நடத்தவும் உலகத்து அறிஞர்கள் வரவும் காரணங்கள் இருக்க வேண்டும்.

இந்தியப் பண்பாட்டில் எழுபத்தைந்து விழுக்காடு திராவிடப் பண்பாடே எனத் திரு. சுனித்தி குமார் சட்டர்ஜி கூறியுள்ளார்... இந்த உண்மையைத் தமிழ்த்துறைகளில் ஆராய்ச்சி நடத்துவோர் உணர்ந்து கொண்டே வருகின்றனர். சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகமே என்று எண்ணுகிறவர்களுக்குத் தமிழ் மக்களின் தொன்மையும் தமிழ்க் கலைகளின் தொன்மையும் நன்கு புலனாகும். சிந்துவெளி நாகரிகத்தைச் சங்க காலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அங்குள்ள தொடர்புகள் தெளிவாகின்றன. ஆதலால் இந்திய வரலாற்றைப் பயில்கின்றவர் அந்த வரலாற்றில் மாபெரும் பங்கு கொண்டவர்களைப் பற்றி அறிந்தே தீரவேண்டும்.''[35]

35. மேற்படி பக். 172-174

### சிலை திறப்பு

மாநாட்டின்போது ஆறுமுக நாவலர், விபுலானந்த அடிகள், சுவாமி நல்லூர் ஞானப்பிரகாசர் போன்றோருக்கும் சிலைகள் வைக்கப்பட்டன. சுவாமி ஞானப்பிரகாசரின் சிலையைத் திறந்து வைத்த தனிநாயகம் அடிகளார் அதுபோது,

> ''யாழ்ப்பாணத்தில் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடத்துவதன் மூலம் நாம் தமிழன்னையின்மீது எத்தனைப் பற்றுக் கொண்டிருக்கிறோம் என்று உலகறியச் செய்துள்ளோம்''[36]

என்று கூறினார்.

### பத்தாண்டு குறைவு

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் தொடங்கி 7-1-1974 அன்று பத்தாண்டுகள் நிறைவுற்றன. அன்று நடந்த மரம் நடுவிழாவில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி வளாகத்தினுள் தனிநாயகம் அடிகளார் மரம் நட்டு, நினைவு நாளைச் சிறப்பித்தார்.

### அடிகளார் இல்லாத மாநாடு

ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு 1981ஆம் ஆண்டு சனவரித் திங்களில் மதுரையில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காம் உலகத் தமிழ் மாநாடு வரையில் எல்லா உலகத் தமிழ் மாநாடுகளிலும் பங்கேற்று, அளப்பரும் பணிகள் ஆற்றிய தனிநாயகம் அடிகளார் மதுரை மாநாடு நடைபெற்றபோது உயிரோடு இல்லை. 1-9-1980 அன்று யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பில் அடிகளார் உயிர்நீத்த செய்தி தமிழ் ஆராய்ச்சி உலகத்துக்குத் தாங்க முடியாத பேரதிர்ச்சியாக அமைந்தது.

### அடிகளார்க்கு அஞ்சலி

அடிகளார் உயிர் மூச்சாக இருந்து இயக்கி வந்த உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம், 5-1-1981 அன்று காலை மதுரை மாநாட்டின் முதல் பொது அமர்வின்போது அடிகளார்க்குத் தன் அஞ்சலியைச் செலுத்தியது. அவ்வஞ்சலிச் செய்தி பின்வருமாறு:

அருள்திரு. முனைவர் சேவியர் எஸ். தனிநாயகம் 2-8-1913—1-9-1980.

பேராசிரியர் தனிநாயகம் உலக அளவில் தமிழ் ஆய்வில் ஆர்வத்தை உருவாக்குவதில் தன்னிகரற்ற பணியாற்றியவர். இது

36. மேற்படி ப. 214

தொடர்பாக உலக நாடுகளில் பரந்த அளவில் பயணங்களை மேற் கொண்டவர். அவரே கூறியது போல 'தமிழ் உலகத்துடன் தொடர்பு கொள்வதற்கு எத்தகைய கருவியும் இல்லையே என்று வருந்திய பல அறிஞர்களையும் பண்பாட்டு ஆர்வலர்களையும், தம் பயணங்களின்போது அவர் சந்தித்தார். இத்தேவையை நிறைவு செய்வதற்காகவே 1952ஆம் ஆண்டின் 'தமிழ்ப் பண்பாடு' (Tamil Culture) என்னும் ஆங்கில இதழை அவர் வெளியிடத் தொடங் கினார். அதன் ஆசிரிய உரையில் அவர் பின்வருமாறு எழுதினார்: "தமிழ் மொழி, இலக்கியம் ஆகியவற்றின் தனித்தன்மைகளை உணர்ந்து, அதனைப் பிறரோடு பகிர்ந்து கொள்ள முனைந்த சிலரைக் கடந்த நூறாண்டுகளில் ஏறக்குறைய ஒவ்வொரு தலைமுறையும் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் சந்தித்திருக் கின்றது. இவர்களுள் பெரும்பாலோர் வெளி நாட்டவர். இலத்தீன், கிரேக்க மொழிகளில் புலமை பெற்றிருந்த இவர்கள் தமிழ்ப் பண்பாட்டைப் போற்றியமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கிடையில் இத்துறையில் நடைபெற்ற செயல்பாடுகள் மிகக் குறைவு. ஆய்வுக்குரிய காலமோ மிகவும் விரிந்துவிட்டது... இந்தியத் தமிழகத்தைப் பற்றிய ஆய்வுகளைச் செய்யாமல் புறக்கணித்தோமாயின், அது இந்திய வரலாற்றை எழுதுவதிலும் இந்திய பண்பாட்டை விளக்குவதிலும் பெரும் தவறுகளும் பிழை யான கருத்துக்களும் தோன்றுவதற்கு வழிவகுத்துவிடும்... கிரேக்கத்தையும் வடமொழியையும் போலவே தமிழும் ஒரு செம்மையான மொழி. ஆனால் ஒரு வேறுபாடு: பழமையில் தமிழை ஒத்த பிறமொழிகள் உருவம் தெரியாதவாறு மாறி விட்டன; அல்லது 'இறந்த' மொழியாக நெடுங்காலமாகக் கருதப் பட்டு வருகின்றன. தமிழோ வீறுடன் தொடர்ந்து வாழும் தற்கால இந்திய மொழிகளுள் ஒன்றாகும். இன்னும் தொடர்ந்து வழக்கிலுள்ள பழைய செம்மொழிகளுள் வரலாற்றுக்கு ஏற்ற எடுத்துக்காட்டு தமிழே எனலாம்... இவற்றைப் புலப்படுத்தி, உலகில் மிகப் பலருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டுவது உண்மை யின் மீது ஆர்வமுடையோர் அனைவருக்கும் உரிய கடமையாகும்."

'தமிழ்ப் பண்பாடு' உயர்தரமான ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வந்ததால், தமிழ் ஆய்வில் சடுபட்ட பல உலக அறிஞர் களின் ஆர்வத்தை அது தூண்டியது. வடமொழியை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு தாங்கள் செய்து வந்த இந்தியவியல் ஆய்வு களில் எழுந்த முக்கிய தடைகளுக்கெல்லாம் திராவிட மொழிகளை

யும் பண்பாடுகளையும் ஆராய்வதன் மூலமே விடை காண முடியும் என்பதை மேலைநாட்டு இந்தியவியல் அறிஞர்கள் தெளிவாக உணர்ந்தனர். ஆனால் தற்கால அறிவியல் போக்கில் திராவிட இயல் ஆய்வுகளை மேற்கொள்வதற்குரிய பல்கலைக் கழகங்களோ வேறு நிறுவனங்களோ இந்தியாவில் இல்லாமையால், அத்தகைய ஆய்வுகளுக்குரிய நிறுவன ஆதாரத்தை ஏற்படுத்த வேண்டு மென்பதில் பல அறிஞர்கள் ஆர்வம் கொண்டனர்.

1964ஆம் ஆண்டு புதுடில்லியில் நடைபெற்ற கீழைத் தேய அறிஞர்களின் 26ஆம் உலக மாநாட்டின்போது இதற்குரிய வாய்ப்புக் கிடைத்தது. அதுபோது பேராசிரியர்கள் ஜே. ஃபிலி யோசா (பிரான்சு), டி. பர்ரோ (பிரிட்டன்), எம். பி. எமனோ (அமெரிக்க ஐக்கிய நாடு), எஃப், பி. ஜே. கியூப்பர் (ஆலந்து), கமில் சுவலபில் (செக்கோஸ்லாவாகியா), சேவியர். தனி நாயகம் போன்ற புகழ்பெற்ற அறிஞர்கள் கூடி உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் என்னும் அமைப்பினை நிறுவினர். 1967ஆம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாட்டு ஆன் ஆர்பிரில் கீழைத் தேய அறிஞர்களின் 27ஆம் உலக மாநாடு நடைபெற்றபோது யுனெஸ்கோவின் ஓர் உறுப் பாகிய கீழைத்தேய அறிஞர்களின் உலக ஒன்றியத்தின் உறுப்பின ராக உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் ஒரு மனதாகத் தேர்ந் தெடுக்கப் பெற்றது. தமிழ் ஆய்வுகளில் ஆர்வம் கொண்டு உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வரும் அறிஞர்களிடையே தொடர்பு ஏற்படுத்துவதற்காக இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை உலகத் தமிழ் மாநாடுகள் நடத்துவதென்றும், அதனால் அறிஞர்கள் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை வழங்குவதற்கும் தங்களுக்குத் தொடர்புடைய துறைகளைப் பற்றிப் பிற அறிஞர் களுடன் கலந்துரையாடுவதற்கும் வாய்ப்பு வழங்கஇயலும் என்றும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் தீர்மானித்தது.

அறிஞர் சேவியர் எஸ். தனிநாயகம் கோலாலம்பூரில் முதல் மாநாட்டை நடத்திக் காட்டினார். பாரீஸில் மாநாடு கூடுவதற் கும் அவர் பெரிதும் காரணமாக இருந்தார். சென்னை மாநாட்டி லும் அவர் முக்கியப் பங்கு வகித்தார். அவரது அணையாத ஆற்றலும் கூர்த்த நோக்கும் யாழ்ப்பாண மாநாட்டை நடத்த உதவின... அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் ஐரோப்பாவிலும் பல பல்கலைக் கழகங்களில் தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கும் பேராசிரியக் கட்டில் நிறுவ அவர் வழி வகுத்தார்.

அவர் 1-9-1980 அன்று உயிர் நீத்தார். அவரது இறப்பைக் குறித்து இம்மாநாடு தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆன்ம சாந்திக்காக மன்றாடுகிறது''.[37]

இந்த அஞ்சலிச் செய்தியை மாநாட்டில் ஆங்கிலத்தில் படித்து வழங்கியவர் அடிகளாரின் நெருங்கிய நண்பரும், சென்னை மதுரைத் தமிழ் மாநாடுகளை முன்னின்று நடத்தியவருமாகிய திரு. ஏ. சுப்பையா அவர்கள்.

**அடிகளார் சாதித்தது என்ன?**

இவ்வாறு கோலாலம்பூரிலும் சென்னையிலும் பாரீசிலும் யாழ்ப்பாணத்திலும் மதுரையிலுமாக அடிகளாரின் முயற்சியால் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளால் என்ன நன்மை விளைந்திருக்கிறது? இத்தகைய ஒரு வினாவை யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் சு. வித்தியானந்தன் எழுப்பி, அதற்கு விடையும் தந்திருக்கின்றார். அதனை இங்குத் தருகின்றோம்:

“இதுவரை நடத்திய மாநாடுகள் மூலம் தனிநாயக அடிகளார் சாதித்தவை யாவை? முதலாவதாக, தமிழ் இலக்கியம் பற்றியோ மொழிபற்றியோ ஆராயும் உரிமை தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவருக்கே உரியதென்பதை இவர் தகர்த்தெறிந்துவிட்டார். தமிழாராய்ச்சி குறுகிய எல்லைக்குட்பட்டிராது பரந்து விரிந்து பல துறைகளில் விருத்தியடைந்திருக்கிறது. தமிழ் இலக்கியம் பற்றியும் தமிழ் இலக்கணம் பற்றியும் உள்ள ஆராய்ச்சி மட்டும் தமிழாராய்ச்சி என்ற நிலை மாறி, தமிழ் மக்கள் வரலாறு, தமிழ் மக்கள் மனிதவியல், தமிழ் மக்கள் சமயங்கள், தத்துவங்கள், தமிழ்த் தொல்பொருளியல், தமிழ்நாட்டவர் பிற நாட்டவரோடு கொண்ட தொடர்புகள், தமிழர் பண்பாடு, தமிழ்க்கலைகள், தமிழ் மொழியியல் இன்னோரன்ன பல துறைகளிலும் தமிழாராய்ச்சி விரிந்து சென்றிருக்கின்றது. இவர் முயற்சியின் பயனாகத் தமிழ் இலக்கியத்தின் சிறப்புப் பற்றியும், பண்பாட்டு வளர்ச்சி பற்றியும், தொன்மை பற்றியும் மொழியியல் பற்றியும் பல உண்மைகள் வெளி வந்துள்ளன.

---

37. Proceedings of the First International Conference—Seminar of Tamil Studies, M. Arunachalam (Ed); Pp. lxxvii-lxxviii

மேலும், இவரது தொண்டினால் இன்று பிற நாடுகள் பலவற்றிலுள்ள பல்கலைக் கழகங்களிலே தமிழை ஒரு பாடமாக அமைத்திருக்கின்றனர். தமிழ் ஆராய்ச்சியில் அப்பல்கலைக் கழகங்களில் பேராசிரியர்கள் ஈடுபடுகின்றனர். ஒருகாலத்தில் மேல்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் சமஸ்கிருதம் பற்றியும், இந்தோ-ஆரிய மொழிகள் பற்றியுமே ஆராய்ச்சி செய்து வந்தனர். இப்பொழுது அந்நிலை மாறித் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ் வரலாறு, தமிழர் பண்பாடு முதலிய பற்றியும் ஆராய்ச்சி செய்கின்ற நிலை இப்பல்கலைக் கழகங்களில் உருவாகி வளர்ச்சி பெற்றிருக்கின்றது. முன்பு, பிறநாட்டார் சமயப் பிரசாரத் திற்கும், வணிகப் பெருக்கத்திற்கும், அரசியல் ஆதிக்கத்திற்கும் தமிழைப் பெரும்பாலும் கற்றனர். ஆனால் இன்று ஆராய்ச்சிக் காகவும், தமிழ் மொழியின் சிறப்பியல்புகளுக்குமாகவே தமிழை அவர்கள் கற்கின்றனர். மொழிகளிற் சிறந்த தமிழ்மொழியை அறியாது இந்தியாவின் அடிப்படைப் பண்பாட்டையும் கலை களையும் அறியமுடியாதென உணர்ந்து தமிழைப் பயின்று வருகின்றனர்.......

இவ்வாறு தமிழியல் ஆய்விலே பல புரட்சிகள் ஏற்படுவதற்குக் கர்த்தாவாக இருந்தவர் அடிகள்.''[38]

தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் மூலமும், தம் அயராத முயற்சி களின் பயனாகவும் தனிநாயகம் அடிகளார் ஆற்றிய அளப்பரும் தமிழ்ப்பணிகளை இதைவிட அருமையாக யாரும் தொகுத்துக் கூறுவது இயலாது.

---

38. சு. வித்தியானந்தன்; முன்சுட்டியது; ப. 44-45

# ஆய்வுக்களத்தில் அரிய இதழ்கள்

உலகின் பல நாடுகளிலும் வாழும் அறிஞர்கள் தமிழ்பற்றி அறியாதவர்களாக இருப்பதைத் தம் உலகத் தமிழ்த் தூதின்போது கண்டுணர்ந்த தனிநாயகம் அடிகளார் பெரிதும் வருந்தினார். இக் குறையைப் போக்கினால்தான் தமிழின் பெருமையை உலகம் அறிய முடியும் என்று அவர் நம்பினார். தமிழைப் பற்றித் தமிழில் எழுதப்படும் கட்டுரைகளும் நூல்களும் தமிழறிந்தோரிடையே மட்டும் உலவ முடியுமே தவிர, தமிழறியாத பிற நாட்டறிஞர் களுக்குத் தமிழை அறிமுகப்படுத்த அவை உதவிடல் இயலாது என்பதை அடிகளார் நன்றாக உணர்ந்தார். ஆகவே மேலை நாட்டார் பெரிதும் புரிந்து கொள்ளக்கூடிய ஆங்கில மொழியில் ஓர் ஆய்வு இதழ் நடத்துவதே இக்குறையைப் போக்கிடச் சரியான வழி என்னும் முடிவுக்கு அவர் வந்தார்.

அண்ணாமலை, சென்னைப் பல்கலைக் கழகங்கள் தமிழைப் பற்றிய ஆங்கில நூல்களை வெளியிட்டிருப்பதை அடிகளார் அறிவார். அன்றைய தமிழ் எம்.லிட்., முனைவர் பட்ட ஆய்வேடு கள் கூட ஆங்கிலத்தில்தான் எழுதப்பட்டன. ஆனால் ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தமிழ் ஆய்வு நூல்கள் பெரும்பாலும் இலக்கண—இலக்கிய ஆய்வு நூல்களாகவே இருந்தன. பண்பாடு, வரலாறு, நிலவியல், மொழியியல், ஒப்பியல் ஆகிய துறைகளுக்கு அத்தகைய நூல்கள் சிறப்பிடம் வழங்க வில்லை. ஆனால் மேலை நாடுகளில் மொழிபற்றிய நூல்கள் இலக்கிய-இலக்கண நூல்களாக மட்டும் இல்லாமல், மொழிபேசும் மக்களோடு தொடர்புடைய எல்லாத் துறைகளையும் தழுவியன

வாக இருப்பதை அடிகளார் அறிவார். எனவே தமிழ் பேசும் மக்களுடன் தொடர்புடைய எல்லாத் துறைகளையும் தழுவிய கட்டுரைகளைத் தாங்கி வரும் ஆங்கில இதழ் இல்லாத குறையைப் போக்குவதற்காகவே தம் சொந்த முயற்சியில் அடிகளார் Tamil Culture என்னும் ஆங்கில முத்திங்கள் இதழைத் தொடங்கினார். இதழுக்குரிய நிதி முதலீட்டுக்கும் அடிகளாரே பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவ்விதழைத் தொடங்குவதற்கு வேறு யாரின் ஆதரவை யாவது அடிகளார் தேடினாரா என்பது தெரியவில்லை. ஆனால் தம்மினும் தகுதி மிக்கவர்களும், தமது தமிழ் இலக்கியக் கழகத்தைவிடப் புகழ்மிக்க நிறுவனங்களும் இப்பணியில் ஈடுபடாத தால், தாமே ஈடுபடுவதாக முதல் இதழின் ஆசிரியவுரையில் அடிகளார் குறிப்பிடுகின்றார்.

## முதல் இதழ்

முதல் இதழ் வெளிவந்ததும் இம்முயற்சிக்கு எத்தகைய ஆதரவு இருந்தது என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால் முதல் இதழில் அடிகளார் 'இந்த முத்திங்கள் இதழ்' (This Quarterly Journal) என்னும் தலைப்பில் எழுதிய ஆசிரியவுரையைத் தவிர, பேரா. எம். இரத்தினசுவாமி எழுதிய 'தமிழைப் பற்றிய மேலை நாட்டார் அறிவு', பேரா. எஸ். வையாபுரிப் பிள்ளை எழுதிய 'ஆய்வுத் துறையில் அண்மைக்கால வளர்ச்சி', சுவாமி ஞானப் பிரகாசர் எழுதிய 'இலங்கை தொடக்கத்தில் திராவிடர் நாடே', பேரா. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் எழுதிய 'சங்க இலக்கியக் கொள்கை', பேரா. அ. சிதம்பரநாதன் செட்டியார் எழுதிய 'ஆண்மைச் செயல்பாடு பற்றித் தமிழர் இலட்சியம்', பேரா. சி. எம். இராகவன் எழுதிய 'தமிழ் மறுமலர்ச்சிக் கவிஞன் பாரதி', அருள்திரு. ஏ. அருள் தங்கையா எழுதிய 'தமிழ்த் தூதர் முனைவர் ஜி.யு. போப்', எஃப் லெக்ரான் எழுதிய 'நீலமலைத் தோடர்கள்', பேரா. மு. ஆரோக்கியசாமி எழுதிய 'புதுக்கோட்டைப் பகுதியில் வரலாற்றுக் காலத்துக்கு முந்திய கல்லறைகள்' ஆகிய தரமான கட்டுரைகளைக் காணும்போது நமக்கு வியப்பு மேலிடுகின்றது. ஏனெனில் இவ்வாசிரியர்கள் அனைவரும் நாடறிந்த நல்ல ஆராய்ச்சியாளர்கள்.

இவ்வாறு முதல் இதழே ஆராய்ச்சியாளர்களின் கவனத்தைக் கவரும் வகையில் வெளிவந்தது. கட்டுரைகளின் தலைப்புக்களும் தமிழின் பல துறைகளைச் சார்ந்தவையாக அமைந்திருந்தன.

முதல் இதழிலிருந்தே தமிழ் தொடர்பான செய்திகளை வெளியிடுவதில் அடிகளார் கருத்துச் செலுத்தினார். மறைந்த பூம்புகார் பற்றிய ஆராய்ச்சிகளை மத்திய மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டுமென வற்புறுத்தி அன்றைய அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் எஸ். ஜி. மணவாள இராமானுசம் எழுதிய கடிதங்களை முதல் இதழின் இறுதிப்பகுதியில் நாம் காணுகின்றோம்.

அவ்வாறே தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்பற்றித் தமிழகச் சட்டப் பேரவையில் நிகழ்ந்த விவாதங்கள் பற்றிய செய்தியும், இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டு பற்றிய செய்தியும் அவ்விதழில் இடம் பெற்றன.

**தமிழ் அறிஞர்களின் கட்டுரைகள்**

ஒவ்வொரு இதழிலும் எழுதியுள்ள கட்டுரையாசிரியர்களின் பெயர்களைப் படித்தாலே மலைப்பாக இருக்கிறது. தமிழகத்தின் முன்னாள் ஆளுநர் முனைவர் பி. சி. அலெக்சாண்டர் கூட இரண்டாம் இதழில் 'அசோகரும் சேர நாட்டில் புத்தசமயம் பரவியதும்' என்னும் கட்டுரையை வரைந்துள்ளார்.

1952-66 ஆண்டுகளில் எழுதிய கட்டுரையாளர்கள் பட்டியல் இதோ :

| | |
|---|---|
| சுவாமி விபுலானந்தர் | பேரா. மு. ஆரோக்கியசாமி |
| பேரா. எஸ். அரசரத்தினம் | திருமிகு பி. ஜோசப் |
| இரசிகமணி டி. கே. சி. | பேரா. அ. சிதம்பரநாதன் செட்டியார் |
| பேரா. எஸ். சிங்காரவேலு | |
| பேரா. மா. இராசமாணிக்கனார் | பேரா. எம். ச. மாணிக்கவாசகம் |
| பேரா. சு. வித்தியானந்தன் | திரு. ஏ. சி. பால் நாடார் |
| பேரா. பிரான்சிஸ் முறாயிஸ் | திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை |
| பேரா. எஸ். தனஞ்சய ராசசிங்கம் | பேரா. வி. அய். சுப்பிரமணியம் |
| பேரா. மு. வரதராசனார் | பேரா. எம். இஸ்ரயேல் |
| பேரா. ஈ. சா. விசுவநாதன் | சுவாமி ஞானப்பிரகாசர். |
| திரு. மயிலை சீனி. வேங்கடசாமி | முனைவர் ஜே. டி. கொர்னேலியஸ் |
| பேரா. எம். இரத்தினசாமி | |
| பேரா. எஸ். வையாபுரிப்பிள்ளை | பேரா. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் |
| பேரா. எஸ். ஆறுமுக முதலியார் | |
| பேரா. இரா. பி. சேதுப்பிள்ளை | பேரா. கே. கே. பிள்ளை |
| பேரா. எஸ். ஏ. பிள்ளை | பேரா. எச். எஸ். டேவிட் |
| பேரா. சுனித்தி குமார் சட்டர்ஜி | பேரா. என். சுப்பிரமணியன் |
| பேரா. தேவபூபதி நடராசா | பேரா. இ. ஆர். மயிலேறு |

இவர்களுள் சுவாமி விபுலானந்தர், சுவாமி ஞானப்பிரகாசர் போன்றோரின் கட்டுரைகள் அவர்களின் மறைவுக்குப் பின் வெளி வந்தவை. பேரா. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் பல தமிழ்ப் பேராசிரியர்களுக்குப் பேராசிரியராக விளங்கியவர் என்பதோடு தமிழ் ஆராய்ச்சித் துறையிலும் மொழியியல் துறையிலும் முன்னோடியாகக் கருதப்படுபவர். தனிநாயகம் அடிகளார்க்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்தவர். பேராசிரியர் சுனித்தி குமார் சட்டர்ஜி வங்காளத்தைச் சேர்ந்தவர்; இந்திய மொழியல் துறையின் தந்தை என்று போற்றப்பட்டவர். சுவாமி விபுலானந்தர் 'யாழ் நூல்' எழுதிப் புகழ்பெற்றவர்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரிய ராகப் பொலிந்தவர். யாழ்ப்பாணம் சுவாமி ஞானப்பிரகாசர் உலகப் புகழ்பெற்ற சொற்பிறப்பியல் ஆராய்ச்சி வல்லுநர்; பதினெட்டு மொழிகளைக் கற்றுத் 'தமிழ்ச் சொற்பிறப்பியல் அகராதி' வகுத்துப் புகழ்பெற்றவர். பேரா. டேவிட் அவரது வழி வந்தவர்; சொற்பிறப்பியலில் பல ஆய்வுகளை நிகழ்த்தியவர். பேரா. மு. வரதராசனார், பேரா. அ. சிதம்பரநாதன் செட்டியார், பேரா. அ. இராசமாணிக்கனார், பேரா. இரா. பி. சேதுப்பிள்ளை, பேரா. மு. ஆரோக்கியசாமி போன்றோர் தமிழகத்துப் பல்கலைக் கழகங்களில் புகழ்பெற்ற பேராசிரியர்களாகச் சிறந்தவர்கள்.

இத்தகையோரின் ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வந்த Tamil Culture உலகப் புகழ்பெற்றதில் வியப்பில்லை. மேற்குறித்த பட்டியலில் காணும் பல பேராசிரியர்கள் தமிழில் மட்டுமே எழுதிக் கொண்டிருந்தவர்கள். அடிகளாரின் இதழில் ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கியதன் மூலம் தங்கள் புலமையை உலகறியச் செய்தார்கள்.

### வெளிநாட்டு அறிஞர்தம் கட்டுரைகள்

கட்டுரைகள் வழங்கிய வெளிநாட்டு அறிஞர்கள் தொகையும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது.

| | | |
|---|---|---|
| சர். மார்ட்டிமர் வீலர் | 1 | கட்டுரை |
| சி. வான் ஃப்யூரர் ஹைமன்டோர்ஃப் | 1 | ,, |
| எம். பி. எமனோ | 1 | ,, |
| ஜே. ஆர். மார் | 1 | ,, |
| சி. ஜே. டீல் | 1 | ,, |
| இ. சி. நோல்ட்டன் | 1 | ,, |

| | | |
|---|---|---|
| வி. ஏ. மக்காரென்கோ | 1 | கட்டுரை |
| ஆலிஸ்டர் லாம்ப் | 1 | ,, |
| எம். எஸ். எச். தாம்ஸன் | 1 | ,, |
| யு. ஆர். ஏரன்ஃபெல்ஸ் | 2 | ,, |
| ஆர்னோ லேமான் | 2 | ,, |
| ழான் ஃபீலியோசா | 2 | ,, |
| எச். ஹீராஸ் | 2 | ,, |
| எஃப். லெக்ரான் | 3 | ,, |
| எல். பாஃஜு | 4 | ,, |
| எம். ஆந்திரனோவ் | 4 | ,, |
| கமில் சுவலபில் | 19 | ,, |

இவர்களுள் ஃபீலியோசா, எமனோ, நோல்ட்டன் போன்றவர்கள் தமிழ்த்துறையில் Tamil Culture இதழின் மூலம் அடியெடுத்து வைத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஜே. ஆர். இங்கிலாந்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர்.

### செக் நாட்டுத் தமிழறிஞர்

செக்கோஸ்லாவாகிய நாட்டு ப்ராக் நகரிலுள்ள சார்லஸ் பல்கலைக்கழகத்தில் திராவிடவியல் துறைத்தலைவராகிய முனைவர் கமில் சுவலபில் பத்தொன்பது கட்டுரைகளை எழுதியிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். 1954ஆம் ஆண்டில் முதல் இதழில் அவர் எழுதிய ஒரு கடிதம்[1] வெளியாகியது. முந்திய இதழொன்றில் திரு. சி. ஆர். மயிலேறு 'ஆங்கிலத்தில் சில திராவிடச் சொற்கள்' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரை தொடர்பாக எழுதிய அம்மடலில் செக் மொழியில் அரிசி 'ரைஸ்' என்றும், பிப்பிலி 'பெப்ர்' என்றும், இஞ்சிவேர் 'ஃஸாஃஸ்வோர்' என்றும், கூலி 'குலி' என்றும், வெற்றிலை 'பெட்டல்' என்றும், குந்தம் 'கொருந்த்' என்றும் சற்றே திரிந்து வழக்காறு பெற்றிருப்பதையும், இவை கிரேக்கம் இலத்தீன் மொழிகள் வழியாகச் செக் மொழிக்கு வந்தவை என்றும் குறிப்பிட்டு அவர் எழுதியுள்ளார்.

அந்த ஆண்டிலிருந்தே அவரது கட்டுரைகள் Tamil Culture இதழில் இடம்பெறத் தொடங்கின. பெரும்பாலும் மொழியியல் கட்டுரைகளை எழுதுவதோடு, தமிழிலிருந்து செக் மொழிக்குப் பெயர்த்தெழுதும் பணியிலும் அவர் ஈடுபட்டார். டில்லியில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை நிறுவ வேண்டுமென்னும்

1. Tamil Culture Vol. III, No. 1, Jan. 1954, Pp. 2-3

தீர்மானத்தை வழிமொழிந்ததோடு, அதன் பொதுச் செயலாளராக அடிகளாருடன் இணைந்து பணியாற்றிய பெருமைக்குரியவர். சென்னையில் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது ஆய்வுக் கட்டுரைகள், குழு அமர்வுகள் ஆகியவற்றுக்குப் பொறுப்பேற்றுச் செயல்பட்டவர். தமிழ் பற்றிய தம் ஆய்வுக்கட்டுரைகளைச் செக் நாட்டு Novy Orient, Archiv Orientalni இதழ்களிலும் அவர் வெளியிட்டு வந்தார். சில சமயங்களில் ஒரே கட்டுரையை மொழிகள் வேறுபட்டிருப்பதன் காரணமாக Novy Orient, Archiv Orientalni, Tamil Culture ஆகிய இதழ்களில் ஆங்கிலத்திலும், செக் மொழியிலுமாக வெளியிட்டதுமுண்டு.

1964ஆம் ஆண்டு ஜனவரி மார்ச் இதழில் வெளி வந்த 'திராவிட மொழியியல் ஆய்வடங்கலில்'[2] கமில் சுவலபில் பல்வேறு இதழ்களில் எழுதியதாக 12 கட்டுரைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

தமது முயற்சியால் சார்லஸ் பல்கலைக் கழகத்தில் 1960ஆம் ஆண்டு தமிழ்த்துறை நிறுவப்பட்ட போது அதன் முதல் துறைத் தலைவராகச் சுவலபில் நியமிக்கப்பட்டார். செக் நாட்டிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் தமிழ் இலக்கியங்களைத் தம் மொழி பெயர்ப்புக்கள் மூலம் அறிமுகப்படுத்திய பெருமை இவருக்குரியது. தம் இருபத்திரண்டாவது வயதில் (1949) தாமே சில நூல்களின் உதவியோடு தமிழ் கற்கத் தொடங்கிய[3] இவர் தெலுங்கு, பார்ஸி மொழி, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகள் பற்றியும் ஆராய்ந்துள்ளார்.

**ரஷ்ய நாட்டுத் தமிழறிஞர்**

Tamil Culture இதழில் எழுதியோருள் எம். ஆந்திரனோவ் குறிப்பிடத் தக்க ரஷ்ய நாட்டுத் தமிழ் அறிஞர் ஆவார். இவர் தாம் தொகுத்த திராவிட மொழியியல் ஆய்வடங்கலில் 626 கட்டுரைகளையும் 50 நூல் மதிப்புரைகளையும் 67 அகராதிகளையும் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் இவரே ஆங்கிலத்திலும் ரஷ்ய மொழியிலும் எழுதிய 13 கட்டுரைகளும், ஒரு நூல் மதிப்புரையும், வேறு இருவரோடு சேர்ந்து தொகுத்த ரஷ்யன்-தமிழ் அகராதியும் அடங்கும்.[4]

---

2. M. Andronov; 'Mareriais for a Bibliography of Dravidian Linguistics'; Tamil Culture Vol. xi, No. 1, 1964, Pp. 3-50
3. Tamil Culture Vol. vii, No. 2, 1958, p. 200
4. M. Andronov; Op. Cit.

இவ்வாறு பல வெளிநாட்டு அறிஞர்களும் தமிழ் பற்றி ஆராயவும், ஆய்வுக் கட்டுரைகள் எழுதவும் அடிகளாரின் ஆங்கில இதழ் தூண்டுதலாகவும், கட்டுரைகளை வெளியிடக் கருவியாகவும் இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

## அடிகளாரின் கட்டுரைகள்

அடிகளார் எழுதிய 24 கட்டுரைகள் இவ்விதழில் வெளிவந்தன. இவற்றுள் சில ஏற்கனவே அடிகளார் எழுதிய ஆய்வேடுகளில் இடம் பெற்றவை. 'தமிழ்ப் பண்பாடு—நேற்று, இன்று, நாளை', 'இந்தியச் சிந்தனையும் உரோமை ஸ்டாயிக் சிந்தனையும்' போன்றவை அடிகளாரால் ஏற்கனவே சொற்பொழிவுகளாக நிகழ்த்தப்பட்டவை. 'தமிழ் இலக்கிய ஆய்வில் முன்னறிவோடு தொடர்புபடுத்தல்' கோலாலம்பூர் உலகத் தமிழ் மாநாட்டில் வழங்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை. 'இந்த முத்திங்கள் இதழ்', 'தமிழ்ப்பண்பாடு நின்று நிலைத்தல்', 'தமிழ் கற்பித்தல்' 'ஐரோப்பிய நூலகங்களில் தமிழ்க் கையெழுத்துப் படிகள்' 'தென் கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டுத் தாக்கம்', 'இலங்கையில் மொழியுரிமை', 'தமிழில் அச்சேறிய முதல் நூல்கள்', 'இரா. பி. சேதுப்பிள்ளை', 'இருபதாம் நூற்றாண்டில் வட்டாரத் தேசியம்', 'சென்னை நகர நாவலாசிரியர்', 'திரு.வி.க.வின் எழுத்துக்களில் இயற்கையும் இயல்பும்' போன்ற கட்டுரைகள் வேறெந்த நூலிலோ தொகுப்பிலோ வெளிவராதவை. Tamil Culture இதழுக்கென்றே எழுதப்பட்டவை.

## அறிவார்ந்த கட்டுரைகள்

அடிகளாரின் எழுத்துக்களில் நாம் உணர்ச்சி வயப்பட்ட நிலையினைக் காண இயலாது. தம் கருத்துக்களை அமைதியாக, அறிவுசார்ந்த நிலையில், தக்க ஆதாரங்களுடன் அவர் எழுதுவார். தமிழ்ப் பற்றில் அவர் யாருக்கும் இளைத்தவர் அல்லர். ஆனால் தமிழ்ப்பற்று உணர்ச்சியைத் தூண்டிவிடுவதாக அமையும் நிலையில் எழுதப்படும் கட்டுரைகள், அறிவுசார்ந்த நிலையில் ஆராயும் அறிஞர்களுக்கு ஏற்புடையவை ஆகா என்பதை அவர் நன்றாக உணர்ந்தவர். அறிவுசார்ந்த ஆதாரங்களோடு தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பை எழுத்தில் வடிக்கும்போதுதான் உலக அறிஞர்களின் கவனத்துக்கு அவை சென்றடையும் என்பதை நன்குணர்ந்தவர் அவர். உலக அறிஞர்கள் தமிழின் சிறப்பை உணர்ந்து ஏற்றுக் கொண்டால்தான் வரலாற்றில் தமிழுக்கு இடம்

கிடைக்கும் என்பதை அவர் தெளிவாக அறிந்திருந்தார். அதனால் தான் அறிவு சார்ந்த நிலையில் கட்டுரைகளைத் தக்க ஆதாரங் களுடன் தாமும் எழுதினார், பிறரும் எழுதத் தூண்டினார். அத்தகைய அறிவார்ந்த கட்டுரைகளுக்கே தம் இதழில் இடமளித் தார். இதனால்தான் உலக அரங்கில் தமிழுக்கு உரிய இடத்தைப் பெற்றுத்தர அவரால் முடிந்தது; உலகின் பல நாடுகளில் பல்கலைக் கழகங்களில் தமிழை இடம்பெறச் செய்யவும் அவரால் முடிந்தது.

**தமிழ்ப் பகைவரா அடிகளார்?**

இதைப் புரிந்து கொள்ளாத ஒரு தமிழறிஞர் அவர் தமிழ்ப் பகைவர்களோடு இணைந்துவிட்டார் என்றும் அவர் கூட்டிய உலகத் தமிழ் மாநாடுகள் தமிழைக் கெடுப்பனவே என்றும் எழுதியது[5] உண்டு. தமக்கெனச் சில உயர்ந்த கொள்கைகளை வகுத்துக்கொண்டு அவற்றை அறிவு சான்ற நிலையில் அடிகளார் பின்பற்றியதைப் புரிந்துகொள்ளாதவர்களின் கூற்றே இது.

தமிழ்மீது அடிகளார் எந்த அளவுக்குப் பற்றுக் கொண்டிருந் தாரோ, அந்த அளவுக்கு உண்மையின்மீதும் அவர் பற்றுக் கொண் டிருந்தார். உண்மையை அடிப்படையாகக் கொண்ட பற்றே உயர்ந்த பற்று என்பது அவரது திண்ணமான எண்ணம். எனவே தான் 'உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு' என்று பல மேடைகளில் முழங்கிய அடிகளார், தமிழின் சிறப்பினை உண்மையான ஆதாரங் களுடன் விளக்குவதில் ஈடுபட்டார்.

ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், பிரெஞ்சு, செர்மன், இஸ்பானியம், இத்தாலியம், போர்த்துக்கேயம் எனப் பல மொழிகளைக் கற்றறிந்து, அம்மொழிகளின் இலக்கியங்களை யும் அறிந்திருந்த அடிகளார், தமிழின் மீது தணியாத காதல் கொண்டிருந்ததை எவரும் மறுக்கவியலாது. இத்தனை மொழி களைக் கற்றிருந்ததால்தான்

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவதெங்கும் காணோம்'

என்று துணிந்து கூறத் தம்மால் முடியும் என்று சென்னையில் 27-8-1955 அன்று பொதுக்கூட்டத்தில் அவர் கூறினார்.[6]

5. ஞா. தேவநேயன், தமிழர் வரலாறு; காட்டுப்பாடி; 1972; ப. 367
6. Tamil Culture, Vol. IV, No. 4, 1955, p. 368

> ''வெர்ஜில் என்னும் பெருமை வாய்ந்த இலத்தீன் புலவரை என் இரு கைகளாலும் எடுத்து ஏந்திப் படித்து மகிழ்ந்துள்ளேன்; எகிப்து நாட்டின் தொன்மை வாய்ந்த ஏடுகளையும் எகிப்து நாகரிகத்தின் எழில்வாய்ந்த பழம்பெரும் சின்னங்களையும் புரட்டிப் பார்த்து வியந்துள்ளேன். நடு அமெரிக்கர், தென் அமெரிக்கராகிய இன்கா, அஸ்தெக்கர் பண்பிற்கு அறிகுறிகளான கோட்டைகளையும் கட்டடங்களையும் என் இரு கண்ணாரக் கண்டு களித்துள்ளேன். எனினும் தொல்காப்பியரை என் கைகளில் ஏந்தி விரிக்கும் பொழுது எனக்கு ஏற்படும் உள்ளக் கிளர்ச்சி வேறு எந்நூலாலும் ஏற்படுவதின்று என்பது உண்மை''

என்று யாழ்ப்பாணம் தமிழ்த் திருவிழாவில் (1951) அடிகளார் கூறிய ஒன்றே[7] அவரது செம்மாந்த தமிழ்ப்பற்றை மெய்ப்பிக்க வல்லதாகும்.

> ''திசை நோக்கி இயேசுவின் கோவிலையும் தமிழ் மொழியை எனக்குத் தாய்மொழியாகத் தந்த இறைவனையும் கைகூப்பி வணங்கினேன்''[8]

என்னும் கூற்று அவரது தமிழ்ப்பற்றின் திண்மையை எத்துணை உண்மையாக நமக்கு உணர்த்துகின்றது!

**நீதியின் அடிப்படையில்**

அடிகளாரின் தமிழ்ப்பற்று உண்மையை ஆதாரமாகக் கொண்டது போலவே, நீதியையும் நேர்மையையும் ஆதாரமாகக் கொண்டது. நீலகண்ட சாத்திரியார் போன்ற அறிஞர்கள் தமிழுக்கு உரிய சிறப்பினை மறைக்கவும் மறுக்கவும் முயன்றபோது சீறியெழுந்து தக்க ஆதாரங்களுடன் உண்மையை நிலைநாட்டிய பேரறிஞர் அடிகளார். நீதியின்மீது அடிகளார் கொண்டிருந்த அசைக்க முடியாத பற்றுத்தான் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஈடுபட்டு, அறப்போர்களில் பங்குபற்றும் துணிவை அவருக்குத் தந்தது. அதனால் தமக்கு இடர் விளையுமாயினும் அதுபற்றி அஞ்சாமல் நீதிக்காக உழைத்த நேர்மையாளர் அவர்.

இந்தியாவில் இந்தி மட்டுமே ஆட்சிமொழியாக நாட்டப்படுமாயின் அது இந்தியாவின் ஒற்றுமையைக் குலைக்கும் என்பதை

---

7. தனிநாயக அடிகள்; தமிழ்த்தூது; ப. 27
8. மேற்படி ப. 22

உணர்ந்திருந்தார் அடிகளார். ஆகவே இந்தியை ஆட்சி மொழியாக்குவதை எதிர்த்து இராஜாஜி, சர் சி. பி. இராமசாமி ஐயர் போன்ற அறிஞர்கள் தெரிவித்த கருத்துக்களைத் தம் இதழில் செய்திகளாக வெளியிட்டு, அவை வெளிநாட்டு அறிஞர்களின் கவனத்தை ஈர்க்குமளவுக்குப் பணிபுரிந்தார்.

### தாய்மொழியில் கல்வி

கல்வித்துறையில் ஆழ்ந்த புலமை பெற்றிருந்த அடிகளார், அத்துறையில் ஆய்வு செய்து இலண்டன் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர் என்பதை நாம் அறிவோம். கல்லூரிக் கல்வியும் தாய்மொழியில் அமைதல் வேண்டும் என்னும் கல்விக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு, தமிழ் நாட்டில் கல்லூரிக் கல்வி தமிழ்மொழியில் அமைதல் வேண்டுமென்னும் கருத்துக்குத் தம் இதழ் மூலமே அடிகளார் ஆதரவு தேடினார். இது பற்றிச் சட்டப் பேரவையில் இடம்பெறும் விவாதங்களையும், கல்லூரிகளில் தமிழ் வழிக் கல்வி கற்பிக்கப்படலாம் என்னும் அரசு ஆணையையும் தம் இதழில் செய்திகளாக வெளியிட்டார்.

### ஆறிப்போன செய்திகளே என்றாலும்

சிங்கப்பூரில் தமிழ் பரப்புக் கழகம் நிறுவப்பட்டது, இலண்டனில் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது, மலாயாப் பல்கலைக் கழகத்தில் இந்தியத் துறை நிறுவப்பட்டது, அதில் முனைவர் முத்து. இராசாக் கண்ணனார் பேராசிரியராகப் பொறுப்பேற்றது, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திராவிட மொழியியல் துறை அமைக்கப்பட்டது, தமிழில் அறிவியல் கலைச் சொற்களை உருவாக்கி உறுதி செய்வதற்காக அரசுக் குழு அமைக்கப்பட்டது, தமிழ் வளர்ச்சிக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது, திருச்சியில் தமிழகப் புலவர் குழு அமைக்கப்பட்டது, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சிறப்புத் தமிழ்த்துறை நிறுவப்பட்டு அதில் இணைப்பேராசிரியராக மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் பொறுப்பேற்றது, தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் பல்வேறு தொகுதிகள் வெளியிடப்பெற்றது, கம்பராமாயணத்தின் புதிய பதிப்பு வெளியீடு, ரஷ்யன், உருது, ஃபீஜியன் மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பெற்றது, தமிழ்-ரஷ்யன் அகராதி வெளியீடு, அமெரிக்க நிதியுதவி பெற்றுப் பேராசிரியர் வி அய். சுப்பிரமணியம் மொழியியல் பயில அமெரிக்கா சென்றது, சங்க இலக்கியங்களைக் கமில் சுவலபில்

செக் மொழியியல் பெயர்த்தது போன்ற தமிழுக்குத் தொடர் புடைய பல செய்திகளை நாம் Tamil Culture இதழில் காணலாம். தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையான செய்திகளெல்லாம் அவ்விதழில் இடம் பெற்றன என்பது உறுதி. ஒரு முத்திங்கள் இதழில் இடம்பெறும் செய்திகளெல்லாம் பெரும்பாலும் 'ஆறிப் போன' செய்திகளென்றாலும் பல நாட்டு அறிஞர்களுக்கும் அச்செய்திகள் கிடைக்க வேண்டும் என்னும் ஆர்வம் காரண மாகவே அடிகளார் இச்செய்திகளை வெளியிட்டார் எனலாம்.

## இதழின் பொறுப்பு

முதல் மூன்று ஆண்டுகளிலும் இதழின் பொறுப்பை முழுவது மாக அடிகளாரே ஏற்றுச் செயல்பட்டார். 18-9-1954 அன்று 'தமிழ்ப் பண்பாட்டுக் கழகம்' (Academy of Tamil Culture) சென்னையில் நிறுவப்பட்டது. அடிகளாரும் அவரது நண்பர் திரு. ஏ. சுப்பையாவுமே இக்கழகம் அமைக்கப்படுவதற்குரிய முயற்சி களை மேற்கொண்டார்கள்[9] என அறிகிறோம். நீதிபதி எஸ். சோமசுந்தரம் இக்கழகத்தின் தலைவராகவும், பேராசிரியர் இரா. பி. சேதுப்பிள்ளை, திரு. கருமுத்து தியாகராசச் செட்டியார், திரு. ஏ. வி. இராமன், டாக்டர் அழகப்பச் செட்டியார், திரு. ஏ. சுப்பையா ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், முனைவர் மு. வரதராசன், முனைவர் கே. கே. பிள்ளை ஆகிய இருவரும் செயலாளர்களாகவும் திரு. வி. எஸ். தியாகராச முதலியார், திரு. சி. அமிர்தகணேச முதலியார் ஆகிய இருவரும் பொருளாளர்களாக வும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பில் 1955ஆம் ஆண்டு முதல் Tamil Culture வெளிவரத் தொடங்கியது. அதோடு இதழுக்கு ஆசிரியர் குழுவும் நியமிக்கப்பட்டது. அடிகளார் முதன்மை ஆசிரியராகவும் அருள்திரு. ஏ. சீராக், பேரா. அ. சிதம்பர நாதன் செட்டியார், பேரா. எம். எம். கனி, முனைவர் கே. கே. பிள்ளை, முனைவர் எஸ். ஜி. மணவாள இராமானுசம், பேரா. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், பேரா. எஸ். உருத்திராபதி, பேரா, வி. அய். சுப்பிரமணியம், பேரா. பி. எம். சுந்தரம், திரு. பி. திருஞான சம்பந்தம் ஆகியோர் ஆசிரியர் குழு உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டனர். 1963ஆம் ஆண்டு முதல் திரு. ஏ. சுப்பையா

9. Tamil Culture; Op. cit; p. 99-104

இணையாசிரியராகவும், பின் 1964ஆம் ஆண்டு முதல் பேரா. எஸ். சிங்காரவேலு துணை ஆசிரியராகவும் பொறுப்பேற்றுச் செயல் பட்டனர்.

1966ஆம் ஆண்டு வெளிவந்த முதல் இதழில், Tamil Culture இதழின் மேலாண்மை ஆசிரியர் பொறுப்பைச் சென்னை இலொயோலா கல்லூரியைச் சேர்ந்த அருள்திரு. இஞ்ஞாசி இருதயம் அடிகளார் ஏற்றுக் கொள்வதைக் காணுகின்றோம். தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் உறுப்பாகவே இதழ் தொடர்ந்து வெளிவரும் என்னும் குறிப்பையும்[10] காணுகின்றோம்.

ஆனால் 1966ஆம் ஆண்டுக்குப் பின் இவ்விதழ் வெளிவர வில்லை என்பது வருந்தற்குரியது. ஏற்கனவே 1960, 1962, 1965 ஆகிய ஆண்டுகளில் இதழ் வெளிவராமலிருந்ததுண்டு. ஆயினும் அது புத்துயிர் பெற்றது போலப் புதிய மேலாண்மை ஆசிரியரின் பொறுப்பில் எவ்விதத் தடங்கலுமின்றித் தொடர்ந்து வெளிவரும் என்று பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் அது பொய்யாய்ப் பழங்கதையாய் மாறிவிட்டது.

அடிகளாரோ, Tamil Culture இதழின் வெளியீட்டு உரிமை யைப் பெற்றிருந்த தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தாரோ இதுபற்றி என்ன முயற்சிகளை மேற்கொண்டனர் என்பதற்கு எத்தகைய ஆதாரமும் கிடைக்கவில்லை.

தமிழாய்வுத் துறையில் விடிவெள்ளியாக வலம் வந்து உலக அரங்கில் தமிழுக்கு உரிய சிறப்பிடத்தைப் பெற்றுத் தர வகை செய்த இவ்விதழ் பன்னிரண்டு ஆண்டுக் காலம் வெளி வந்தபோது, அது ஆற்றிய பணிகள் அளப்பரியன. அது வெளிவராமல் நின்ற போது பல தமிழாய்வாளர்கள் மிகவே வருந்தினர். அதன் பணியை யார் தொடர்வரோ என ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

### புதிய இதழ்

அந்த எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. என்ன காரணத் தாலோ Tamil Culture இதழைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலையில், புதிய ஓர் ஆய்வு இதழைத் தொடங்கவேண்டுமென்று

10. Tamil Culture, Vol. xii, No. 1, 1966, p. 3

சென்னை உலகத் தமிழ் மாநாட்டின்போது கூடிய அறிஞர்கள் முடிவு செய்தனர்.[11]

### அடிகளாரே முதன்மை ஆசிரியர்

Journal of Tamil Studies என்னும் புதிய இதழ் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் சார்பில் வெளிவந்தது. இம்முயற்சிக்குப் பக்க பலமாக இருந்தது தனிநாயகம் அடிகளாரே என்பதில் ஐய மில்லை. தனிநாயகம் அடிகளாரை முதன்மை ஆசிரியராகக் கொண்டே இவ்விதழை வெளியிட மன்றம் முடிவு செய்தது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. பேரா. வி. அய். சுப்பிர மணியம் துணை முதன்மை ஆசிரியராகவும், திரு. ஏ. சுப்பையா இணை ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டனர். அதோடு உலகின் பல்வேறு நாடுகளிலும் நடந்து வரும் தமிழ் ஆய்வுகளை இப்புதிய இதழோடு தொடர்புபடுத்தும் வகையில் முனைவர் எம். ஆந்திர னோவ் (ரஷ்யா), முனைவர் ஆர். இ. ஆஷர் (பிரிட்டன்); முனைவர் ஆல்பர்ட் பிராங்க்ளின் (அமெரிக்க ஐக்கிய நாடு), முனைவர் கே. எல். யானர்ட் (ஜெர்மனி), முனைவர் ஏ. ஜெய ரத்தினம் வில்சன் (இலங்கை), முனைவர் கமில் சுவலபில் (செக்கோஸ்லாவாகியா) ஆகிய அறிஞர்கள் ஆசிரியர் குழு உறுப்பினர்களாக[12] நியமிக்கப்பட்டனர். தங்கள் பகுதியிலுள்ள அறிஞர்களுடன் தொடர்பு கொண்டு புதிய இதழுக்கு ஆய்வுக் கட்டுரைகளைப் பெற்றுத் தரும் பொறுப்பினை இவர்கள் ஏற்றுக் கொண்டனர். தமிழ் ஆய்வு இதழாக இருந்தாலும் இந்தியவியல், திராவிடவியல் தொடர்பான கட்டுரைகளும் இதழில் இடம்பெறும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் வெளியிட்டு வந்த Journal of Tamil Studies, இனி புதிதாக நிறுவப்பட்டுள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் வெளியீடாகப் பதிப்பிக்கப்படும் என்னும் அறிக்கை, அடிகளாரின் கையொப்பத்துடன் 1970ஆம் ஆண்டின் அக்டோபர் (இரண்டாம்).இதழில்[13] வெளிவந்தது.

---

11. Journal of Tamil Studies; Vol. 1, No. 1, Part I Ap. 1969; p. 2
12. Ibid Part-2, p. 112
13. Idem, Vol. II, No. 2, Part 1, Oct, 1970, P. v

ஆகவே அடிகளாரின் ஆசிரியப் பொறுப்பில் நான்கு இதழ்களே வெளிவந்தன.

இவற்றுள் முதல் இதழ் இரு பகுதிகளையும், மொத்தம் 323 பக்கங்களையும் கொண்டதாக வெளிவந்தது. அதில் முதல் பகுதியில் இடம் பெற்றிருந்த கட்டுரைகளின் விவரம் பின்வருமாறு:

| ஆசிரியர் | கட்டுரை | பக்கங்கள் |
|---|---|---|
| தனிநாயகம் அடிகளார் | இருபதாண்டுக் காலத் தமிழ் ஆய்வுகள் | 20 |
| எம். பி. எமனோ | கோட்டா மொழியில் உயிரெழுத்துப் பெயர்வு | 15 |
| கார்ல் மெங்கெஸ் | திராவிட-ஆல்டயிக் மொழிகள் தொடர்பு | 6 |
| ஷயிம் ராபின் | எபிரேய மொழியின் மறுமலர்ச்சி | 20 |
| ராபர்ட் ஹார்ட்க்ரேவ் | சாதி மாற்றம் பற்றிய புதிய கற்பனைக் கதை | 29 |
| ராஜேஸ்வரி அம்பலவாணர் | மலாயாவில் தமிழ்க் கல்வி 1920-41 | 26 |
| கே. கே. பிள்ளை | வரலாற்றுக்கு ஆதாரமாகும் தமிழ் இலக்கியம் | 24 |
| ஆர். நாகசாமி | தமிழ் நாட்டில் கட்டடக் கலை | 17 |
| எஸ். செல்வநாயகம் | தமிழ் இலக்கியத்தில் வட்டாரச் சிந்தனை | 12 |
| ஆர்னோ லேமான் | கிறித்துவக் கலை வரலாற்றுக்கு ஒரு தென்னிந்தியரின் பங்களிப்பு | 2 |

**இரண்டாம் பகுதி**

முதல் இதழின் இரண்டாம் பகுதி பல செய்திகளைக் கொண்ட ஒரு தொகுதியாக 137 பக்கங்களுடன் அமைந்துள்ளது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் அமைப்பு விதிகள், மன்றம் பற்றிய பிற செய்திகள் ஆகியவை நான்கு பக்கங்களிலும், இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டு அழைப்பு, தமிழ் ஆய்வுகள் என்னும் கட்டுரை. சென்னை மாநாடு பற்றிய ஒரு மதிப்பீடு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் பற்றிய குறிப்புக்கள், திட்டம்,

அறிக்கை ஆகியவை 83 பக்கங்களிலும், செய்திகள் 15 பக்கங்களிலும், இதழ் பற்றிய அறிவிப்புக்கள் மூன்று பக்கங்களிலுமாக அமைந்துள்ளன.

சரியான ஒழுங்குமுறையில்லாமல் இப்பகுதி தொகுக்கப்பட்டிருப்பதைக் காணும்போது இது அடிகளாரின் கைவண்ணமாகத் தெரியவில்லை. இப்பகுதி (93 பக்.) இணை ஆசிரியர் திரு. ஏ. சுப்பையாவால் சேர்க்கப்பட்டதாக எண்ணத் தோன்றுகிறது.

**சிறப்பிதழ்**

1970ஆம் ஆண்டு மேத்திங்களில் வெளிவந்த இதழ் 'சிந்துச் சமவெளி எழுத்து' பற்றிய சிறப்பிதழாக 291 பக்கங்களில் 11 கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது. இது திராவிடப் பண்பாட்டை மதிக்கும் அனைவராலும் போற்றிப் பாதுகாக்கப் பட வேண்டிய ஒரு கருத்துக் கருவூலம் என்பதில் ஐயமில்லை.

அடிகளார் ஆசிரியராக இருந்து வெளியிட்ட இதழ்களில் அவர் எழுதிய இரண்டு கட்டுரைகளைக் காணுகின்றோம்.

**முதல் கட்டுரை**

முதல் இதழின் முதல் கட்டுரையாக அடிகளார் வரைந்த 'இருபதாண்டுக் காலத் தமிழ் ஆய்வுகள்'[14] அமைந்துள்ளது. அடிகளார் தம் முதல் உலகத் தமிழ்த் தூதுப் பயணத்தை மேற்கொண்ட 1949-50ஆம் ஆண்டுகளை நினைவில் கொண்டு பார்க்கும் போது அடிகளாரின் தமிழ்த் தூதுப் பணிக்கும் இருபது வயது என்பது தெளிவாகிறது. முறையான தமிழ் ஆய்வுகளுக்கு அடிகளாரே முன்னோடி என்பதை நினைவில் கொண்டால் அவ்வகையிலும் இக்கட்டுரைத் தலைப்பு பொருத்தமானதே என்பது புலப்படும்.

**இருபதாண்டுக் காலத் தமிழ் ஆய்வுகள்**

தாம் முன்னர் தொடங்கி நடத்திய Tamil Culture இதழைப் பற்றித் தம் கட்டுரையின் தொடக்கத்திலேயே குறிப்பிடும் அடிகளார், அவ்விதழின் குறைநிறைகளை நடுவுநிலை நின்று நோக்குகின்றார்.

கடந்த இருபதாண்டுக் காலத்தில், உலகில் பல்வேறு அறிஞர்களும் ஆராய்ச்சி நிலையங்களும் பல்கலைக் கழகங்களும் தமிழ்

14. Idem, Vol. 1, No. 1, Part 1969, Pp. 1-19

ஆய்வில் கவனம் செலுத்தத் தொடங்கியிருப்பதைக் குறிப்பிடும் அடிகளார், இத்துறையில் புதுச்சேரியிலுள்ள இந்தியவியல் பிரெஞ்சு நிறுவனம், பாரீசிலுள்ள தொலை கிழக்கு நாடுகள் கல்லூரி ஆகியவை மிகப் பயனுள்ள வகையில் பணியாற்றி வருவதைக் குறிப்பிடுகின்றார். சிவாகமங்களையும் பிற பக்தி இலக்கியங்களையும் ஆய்வு செய்தல், மொழி பெயர்த்தல் எனப் பலவகைப் பணிகள் இந்நிறுவனங்களில் நடந்தேறியுள்ளன.

முந்திய நூற்றாண்டுகளில் இந்தியவியல் இடம் பெற்றிருந்த எட்டு அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் வடமொழி, பாலி, பிராகிருதம் போன்ற பழைய மொழிகளுக்குத்தான் இடமிருந்ததே யொழிய தமிழ் போன்ற மொழிகளுக்கு இடமளிக்கப்படவில்லை. ஆனால் இன்று (1969) பதினெட்டுக்கு மேற்பட்ட பல்கலைக் கழகங்களிலும். மிகப் பல கல்லூரிகளிலும் தமிழ் கற்பிக்கப்பட்டு வருகின்றது என்பதை அடிகளார் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். இதனாலும் சென்னையிலுள்ள இந்தியவியல் அமெரிக்க நிறுவனத் தாலும் அமெரிக்கர்களிடையே தமிழாய்வு வளர்ச்சி கண்டுள்ளது எனலாம்.

லண்டன், ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ், லைடன், சார்லஸ், உப்சாலா பல்கலைக் கழகங்களில் நீண்ட காலமாகவே தமிழ் இடம் பெற்றுள்ளது. அண்மைக்காலத்தில், மலாயா, ஹைடல்பெர்க், போன், ஸ்டாக்கோம் பல்கலைக் கழகங்களில் தமிழ் இடம் பெற்றுள்ளது. பேரா. கமில் சுவலபில், பேரா. ஆர்னோ லெமான் போன்றோரும் லெனின்கிராட், மாஸ்கோ நகர்களிலுள்ள கிளாஸோவ், ஆந்திரனோவ், பியட்கோர்ஸ்கி போன்ற தமிழ் ஆராய்ச்சியாளர்களும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தமிழ்த் துறை ஆய்வு வளர்ச்சி காண உழைத்துள்ளனர். ஆஸ்திரேலியா, கானடா, தென் அமெரிக்கா, இஸ்ராயேல், இத்தாலி, ஜப்பான், பிலிப்பீன்ஸ் நாடுகளில் தமிழ்க் கல்வியும் ஆய்வும் தொடக்க நிலையிலுள்ளமையையும் அடிகளார் குறிப்பிடுகின்றார்.

இந்தியாவில் தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் நடை பெற்றுவரும் தமிழ் ஆய்வுகளையும் அடிகளார் விளக்குகின்றார். தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்களிலும் கேரளா, கர்நாடகா, பெங்களூர், மைசூர், ஓஸ்மானியா, திருப்பதி, டில்லி பல்கலைக் கழகங்களிலும் தமிழ் ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. சென்னையில் பேரா. மு. வரதராசனார், பேரா.

கே. கே. பிள்ளை, அண்ணாமலையில் பேரா. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், கேரளத்தில் பேரா. வி. அய். சுப்பிரமணியம், டில்லியில் பேரா. கே. ஆறுமுகம் போன்றோர் பல ஆய்வுத் திட்டங்களை வகுத்துப் பணியாற்றி வருகின்றனர். அதோடு இலங்கையில் பேராதனை, கொழும்பு, வித்யோதயா பல்கலைக்கழகங்களும் மலாயாப் பல்கலைக் கழகமும் தமிழ்த் துறையில் ஆற்றிவரும் ஆய்வுப் பணிகளையும் அடிகளார் விளக்குகின்றார்.

ஒரு காலத்தில் தமிழ் மொழியும் இலக்கியமுமே தமிழ் ஆய்வுக் களமாக இருந்த நிலை இன்று மாறி, தமிழ்ச் சமுதாய வரலாறு, தமிழ்ப் பண்பாடும் நாகரிகமும், பண்பாட்டு மானுடவியல், நாட்டார் வழக்காற்று இலக்கியங்கள், திராவிட மொழியியல், தமிழ்க் கவின் கலைகள், சமயம், மெய்யியல் எனப் பல துறைகளைத் தழுவியும் இணைத்தும் தமிழ் ஆய்வு நடைபெற்று வருவதை அடிகளார் மகிழ்ச்சியுடன் எடுத்துரைக்கின்றார்.

மலாயா, மௌரீஷஸ், ஃபீஜி, கரீபியன் தீவுகள் ஆகிய பல்வேறு நாடுகளில் குடியேறி வாழும் தமிழர்களைப் பற்றிய ஆய்வுகளும், தமிழ்ப் பாடத் திட்டங்களில் பழைய இலக்கியங்களோடு தற்கால இலக்கியங்களையும் கற்பிப்பதும் ஆய்வு செய்வதும் இன்று வழக்குக்கு வந்துவிட்டன.

தமிழ்ச் சமூகவியல் உலகச் சமூகவியலுக்கும், தமிழ் வரலாறு உலக வரலாற்றுக்கும், தமிழ் இலக்கியம் உலக இலக்கியத்துக்கும், தமிழ் இசை உலக இசைக்கும், தமிழ் மனித நேயம் உலக மனித நேயத்துக்கும் வளம்சேர்த்து உலகப் பல்கலைக் கழகங்களில் தனக்குரிய இடத்தைப் பெற வேண்டுமாயின் அதற்குரிய ஆய்வுகள் தமிழ் மண்ணில் இடம் பெற்றாக வேண்டுமென அடிகளார் வலியுறுத்துகின்றார். தமிழ் மண்ணில் மலரும் தமிழ் ஆர்வமே உலக அளவில் தமிழ் ஆர்வத்தை வளர்க்கும். வெளிநாட்டு அறிஞர்களின் ஆய்வுக்குத் தேவையான ஆதாரங்களைத் தமிழ் நாட்டு அறிஞர்களே தேடிக் குவிக்க வேண்டும் என்றெல்லாம் எதிர்காலத்தில் ஆற்றப்பட வேண்டிய பணிகளை அவர் எடுத்தோதுகின்றார்.

மொழியியலைப் போலவே சமூகவியல், மானுடவியல், பலதுறை ஒப்பியல், கலைகள், தொன்மையியல், வெளிநாட்டுத் தமிழர், தமிழ்ப் பண்பாடு, தமிழ் வரலாறு ஆகிய பல துறைகளில் நாம் கவனம் செலுத்தியாக வேண்டும்.

வகுப்புப் பாடங்களை முக்கிய நோக்கமாகக் கொண்ட பல்கலைக்கழகங்கள் இத்தகைய ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள இயலாவிடினும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் போன்றவை இத்தகைய புதிய துறைகளில் ஆராய்ச்சிகள் நடைபெற வழிவகுக்க வேண்டுமெனத் தம் கட்டுரையில் அடிகளார் வலியுறுத்தினார்.

'மார்ட்டினீக் நாட்டில் தமிழர் குடியேற்றம்'[15] என்னும் தலைப்பில் அடிகளார் எழுதிய கட்டுரை இரண்டாம் இதழில் இடம் பெற்ற 50 பக்கக் கட்டுரையாகும். ஆனால் இக்கட்டுரையில் காணப்படும் கருத்துக்களை இந்நூலில் வேறோர் அதிகாரத்தில் கூறிவிட்டதால் இங்கு அவற்றைத் திருப்பிக் கூறவில்லை.

### தொல்காப்பியம்

இதழின் பொறுப்பினை அடிகளார் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைத்தபின் புதிய பொறுப்பாளர்களால் வெளியிடப்பெற்ற முதல் இதழில் (செப்டம்பர் 1972) 'தொல்காப்பியம்' மிகப் பழைய ஆவணம்'[16] என்னும் தலைப்பில் அவர் வரைந்த கட்டுரை குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியத்தின்மீது மிகுந்த பற்றுக் கொண்டவர் அடிகளார். தொல்காப்பியத்தைத் தம் கைகளில் ஏந்தி விரித்துப் படிக்கும்போது தம் உள்ளத்தில் தனிப்பெரும் மகிழ்ச்சி எழுவதாக அடிகளார் யாழ்ப்பாணத் தமிழ்த் திருவிழாவில் (1951) குறிப்பிட்டார். தொல்காப்பியம் ஓர் இலக்கண நூல் மட்டுமல்ல, அது வாழ்க்கை நூலுமாகும் என்பதாலேயே அடிகளார் அதன்மீது பற்று மிகக் கொண்டார் எனலாம். தொல்காப்பியத்தில் அணியிலக்கணமும் இலக்கியத் திறனாய்வு முறைகளும் இடம் பெற்றிருப்பதைப் பெரிதும் பாராட்டுவார் அடிகளார்.

அகத்திணையியலில் இடம்பெற்றுள்ள கைக்கிளையும் பெருந்திணையும் பின்னர் சேர்க்கப்பட்டவை என்பது அடிகளார் கருத்து. முதலில் நான்கு அல்லது ஐந்து திணைகளாகவே அகம் வகுக்கப்பட்டது எனவும், பின்னர் கைக்கிளையும் பெருந்திணையும் சேர்க்கப்பட்டது எனவும், அதன் பின்னரே புறம் ஏழு திணைகளாக வகுக்கப்பட்டது எனவும் அடிகளார் கருதுகின்றார். பழங்குடி

15. Idem, Vol. 1 No. 2 Part 1, 1969, Pp. 75-123
16. Idem, Sep. 1972, Pp. 61-70

மக்களிடையே இன்றும் வழக்கிலுள்ளதைப் போலத் திருமணத்துக்கு முன்பே தமிழ்ச் சமுதாயத்தில் உடற்கலவி இடம் பெற்றிருக்கலாமென்றும் அடிகளார் குறிப்பிடுகின்றார்.

உள்ளமும் உடலும் ஒன்றை ஒன்று தழுவி இயங்கும் இன்றைய Psychosomatic வழக்காறே மெய்ப்பாட்டியலில் இடம் பெற்றுள்ளது என்பது அடிகளார் கருத்து. முதுமொழிகள், விடுகதைகள், மந்திரம், நகைச்சுவை, நாடகம், உரைநடை, உரையாடல் எனப் பலவகை இலக்கியங்களுக்கும் தொல்காப்பியம் இலக்கணம் வகுப்பதை வியந்து போற்றுவார் அவர்.

செய்யுளியலில் தொல்காப்பியர் கூறும் யாப்பு வகைகள் பல வழக்கிறந்துவிட்டன என்றும் நீண்ட நாள் வழக்கிலுள்ள தமிழ் மொழியில் வழக்கிறந்து விட்ட சில சொற்களுக்குப் பொருள்கூறி விளக்கும் கட்டாயம் தொல்காப்பியர் காலத்திலேயே ஏற்பட்டு விட்ட நிலையை 1500 முதல் 1610 ஈறாகவுள்ள நூற்பாக்கள் எடுத்துரைக்கின்றன[17] என்றும் எழுதுகின்றார் அடிகளார். தொல்காப்பியத்தில் காணும் இலக்கிய வழக்குகள் பல பிற்கால இலக்கியங்களில் காணப்படாமையால் தொல்காப்பியம் மிகப் பழைய நூல் என்பது அடிகளார் கருத்து. கி.பி. பத்தாம் நூற்றாண்டுக்கும் பதினாறாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றிய தொல்காப்பிய உரையாசிரியர்கள் பல வழக்குகளை விளக்க முடியாத நிலையையும் அவர் குறிக்கின்றார்.

தொல்காப்பியச் செய்யுளியல் பல இலக்கிய வகைகளைத் தொகுத்துக் கூறுவதேனும், அது புலவர்களின் கற்பனையையும் சிந்தனைகளையும் கட்டுப்படுத்துவதில்லை என்பார் அடிகளார். சங்கத் தொகை நூல்களில் அமைந்துள்ள பாடல்களைவிட நீண்ட பாடல்களுக்கும், பக்தி, ஒழுக்கம், இசைப்பாடல், நாடகம் போன்றவற்றுக்கும் இலக்கணம் கூறும் நூல்கள் தொல்காப்பியர் காலத்தில் இருந்தும் பின்னர் அழிந்துவிட்டனவோ, அல்லது அவற்றைக் கூறும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் சில பகுதிகள்தான் மறைந்துவிட்டனவோ[18] என ஐயுறுகின்றார் அவர். தொல்காப்பியத்துக்கும் சங்க இலக்கியங்களுக்குமிடையில் சில நூற்றாண்டுகள் கடந்து விட்டமையால் தொல்காப்பியச் செய்யு

---

17. Ibid. p. 67.
18. Ibid. p. 68

ளியலில் சில பகுதிகள் சங்க இலக்கியத்திலேயே பின்பற்றப்படாம லிருக்கும் நிலையையும் அடிகளார் குறிக்கின்றார்.

தொல்காப்பியம் இலக்கண—மொழியியல் நூலாக மட்டுமின்றி நிலவியல், சமூக மானுடவியல், பண்பாட்டுச் சுற்றுப்புறச் சூழலியல், பண்பாட்டு மாற்றம் ஆகியவற்றுக்குமுரிய கருத்துக் கருவூலமாகத் திகழ்கின்றது. தொல்காப்பியம் கூறும் திணைகள், அவற்றுக்குரிய மரங்கள், மனிதச் சுற்றுப்புறச் சூழல், திணைக்குரிய தொழில்கள், சமுதாய வகுப்புக்கள், ஒவ்வொரு திணைக்குமுரிய அழகியல் வாழ்க்கை ஆகியவற்றையெல்லாம் அன்றைய உரை யாசிரியர்களைவிட நவீன மொழியியல், பண்பாடு பற்றிய தற்காலக் கொள்கைகளின் துணைகொண்டு இன்றைய அறிஞர்கள் பொருத்தமாக விளக்கலாம் என்பார் அடிகளார்.

தொல்காப்பியத்தில் படியெடுப்போர் செய்த பிழைகள் காரண மாகவும், பிராமணர்களின் சமுதாய மதிப்பீடுகளும் இலக்கியக் கொள்கைகளும் மதிப்புயர்ந்து விட்ட இடைக்காலத்தில் இடம் பெற்ற இடைச் செருகல்கள் காரணமாகவும் தொல்காப்பியத்தில் பாடபேதங்கள் மிகுந்துவிட்டன[19] என்று கூறும் அடிகளார், பல நூற்றாண்டுகளாக ஓலைச் சுவடியாக இருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே அச்சு வடிவம் பெற்ற நூலில் அத்தகைய பாட பேதங்கள் கட்டாயம் ஏற்பட்டிருக்க வேண்டும் என வலியுறுத்துகின்றார்.

தம் கட்டுரையின் முடிவில் தொல்காப்பியத்துக்கும் வடமொழி இலக்கண நூல்களுக்குமுள்ள தொடர்பைப் பற்றியும் அடிகளார் ஆராய்கின்றார்.

தொல்காப்பியப் பாயிரம் 'ஐந்திறம் நிறைந்த தொல் காப்பியன்' என்னும் வரியில் குறிப்பிடும் 'ஐந்திறம்' பாணினிக்கு முந்திய காலத்தது என்றும், அது பாணினி இலக்கணத்தைவிட எளிமையானதும் பரவலானதுமாகும் என்று பலர் கூறுவர் என்றும் அடிகளார் குறிக்கின்றார். வடமொழி இலக்கணக் கொள்கை களைத் தழுவியே தொல்காப்பியர் எழுதினார் என்றும், காலங் காலமாக வழக்கிலிருந்த தமிழ் இலக்கணக் கொள்கைகளையே தொல்காப்பியர் தக்க மாற்றங்களுடன் தம் நூலில் இடம்பெறச்

19. Ibid. p. 69

செய்தார் என்றும் இரு கருத்துக்கள் உண்டு. வடமொழியிலக்கணத்தைச் சார்ந்தது தொல்காப்பியம் என்பது ஆதாரமற்ற கருத்து என்பதை எடுத்துரைக்கும் அடிகளார், தமிழ் இலக்கண இலக்கிய ஆசிரியர்கள் வடமொழியையும் பிராகிருதத்தையும் நன்றாக அறிந்திருந்தனரேனும், தமிழ் மொழி தன் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் வடமொழியைச் சார்ந்திருக்கவில்லை[20] என வலியுறுத்தியுள்ளார்.

அடிகளார் தாம் நிறுவிய Journal of Tamil Studies இதழில் எழுதிய கடைசிக் கட்டுரை இதுதான். அதன்பின் அவர் அவ்விதழில் எக்கட்டுரையும் எழுதவில்லை என்பதும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் பொறுப்பேற்றபின் இதழின் ஆசிரியர் குழுவில் கூட அவர் இடம் பெற்றிருக்கவில்லை என்பதையும் இங்குக் குறிப்பிட்டாக வேண்டும்.

20. Ibid

# உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்

தமிழ் மொழியியல், இலக்கியம், தொன்மையியல், பண்பாட்டியல், சமூக மானுடவியல் எனப் பல துறைகளைப் பற்றி ஆய்வு மேற்கொள்ளவும், ஆய்வுக் கல்வியை வழங்கவும், பட்டங்கள் வழங்கவும் தகுதி மிக்க உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அமைப்பதைப்பற்றிச் சென்னைத் தமிழ் மாநாட்டின் போது (1968) விவாதிக்கப்பட்டது. பூனாவிலுள்ள தக்காணக் கல்லூரியின் பட்ட மேற்கல்வியியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராகிய முனைவர் எஸ். எம். காத்ரே 'உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் அமைப்புக் கூறுகள்' என்னும் தலைப்பில் மாநாட்டுக்காக எழுதிய கட்டுரை, அவர் மாநாட்டில் கலந்துகொள்ளாததால், முனைவர் பி.எஸ். பிலிகிரி அவர்களால் மாநாட்டில் படிக்கப் பட்டது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் மொழியியல், இலக்கியமும் பிரதி ஆய்வியலும், தொன்மையியலும் பண்பாடும், சமூக—மானுடவியல் என்னும் நான்கு துறைகளைக் கொண்டு, ஒவ்வொரு துறைக்கும் பேராசிரியர், இணைப் பேராசிரியர், விரிவுரையாளர்கள் எனப் பல நிலைகளில் அமைந்த ஆசிரியர் குழாத்தினை உடையதாக அமைந்து செயல்பட வேண்டுமென்பதும், முதுகலைப் பட்ட வகுப்புக்களும் முனைவர் பட்ட ஆய்வுகளும் நிறுவனத்தில் இடம் பெற வேண்டுமென்பதும் முனைவர் காத்ரே தம் கட்டுரையில் வழங்கிய கருத்துக்கள். வெளியிலிருந்து பகுதி நேரப் பேராசிரியர்களும், ஆராய்ச்சியாளர்களும் வந்து நிறுவனப் பணிகளிலும் ஆய்வுகளிலும் கலந்து கொள்ளவும் அக்கட்டுரை வழிகாட்டியது. தொன்மையியல், மொழியியல், மானுடவியல் பகுதிகளுக்குத்

தேவையான ஆய்வுக் கூடங்களும், தரமான நூலகமும் நிறுவனத்தில் இடம்பெற வேண்டுமென்றும் கட்டுரை சுட்டிக் காட்டியது.[1]

தமிழ்நாட்டில் அமைக்கப்படவிருக்கும் இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்குத் தமிழக அரசு ஆதரவு வழங்குமெனினும் பிறநாடுகளிலிருந்தும் நிதியுதவி பெறலாம் என்பதையும் அக்கட்டுரை கோடிட்டுக் காட்டியது. நிதியுதவி வழங்கும் எல்லா அமைப்புகளுக்கும் பிரதிநிதித்துவம் வழங்குவதாக நிறுவனத்தின் ஆட்சிக் குழு அமைய வேண்டுமென்பதை அக்கட்டுரை வலியுறுத்தியது. ஆசிரியர்களாக 32 பேரும், ஆராய்ச்சியாளர்களாக 78 பேரும், நிர்வாகத்துறையில் 32 பேரும் பணிபுரியக் கூடிய நிறுவனமாக அமைந்தால்தான் அது முறையாகப் பணியாற்ற முடியும் என்பது முனைவர் காத்ரேயின் கருத்து.

இக்கட்டுரை படிக்கப்பட்ட பின் தமிழக முதல்வர் மாண்புமிகு சி. என். அண்ணாதுரை, கல்வியமைச்சர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன், ராஜா சர் முத்தையா செட்டியார், பேரா. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், யுனெஸ்கோ இந்தியத் தேசிய ஆணையத்தின் சார்பாகத் திரு கே. சுப்பிரமணியம் ஆகியோர் கருத்துத் தெரிவித்தனர்.[2]

இந்நிறுவனம் பயிற்சிக்கும் ஆராய்ச்சிக்குமுரிய நிறுவனமாக இருக்க வேண்டுமேயன்றிப் பட்டம் வழங்கும் நிறுவனமாக இருக்கக் கூடாதென்று முத்தையா செட்டியார் வலியுறுத்தினார்.

இந்நிறுவனம் எல்லாத் திராவிட மொழிகளைப் பற்றியும் அவற்றின் கிளை மொழிகளைப் பற்றியும் ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென்றும், நிறுவனத்தின் எல்லாத் துறைகளும் தொடக்கத்திலிருந்தே அமைக்கப்படாமல் உலகின் பல நாடுகளிலும் நடைபெறும் தமிழ் ஆய்வுகளை ஒருங்கிணைக்கும் ஒரு மைய அமைப்பாகத் தொடக்கத்தில் அமைந்து, பின் தேவைக் கேற்ப விரிவுபடுத்தப் பெறுதல் நலமென்றும் பேரா. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் கருத்துத் தெரிவித்தார்.

---

1. Proceedings of the second International conference Seminar of Tamil Studies; R.E. Asher (ed.) pp. 139-146.
2. Ibid. pp. 146-164.

நிறுவனம் ஜெனீவாவில் அல்லது பாரிசில் அமைக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்திய திரு. கே. சுப்பிரமணியம், யுனெஸ்கோ போன்ற பன்னாட்டு அமைப்புக்களுடனும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்துடனும் தொடர்பு கொண்டு செயல்பட அது உறுதுணையாக இருக்கும் என்று தெளிவுபடுத்தினார்.

நிறுவனம் சென்னையிலேயே நிறுவப்பட வேண்டுமென்றும், அதனால் தமிழகத்தின் மூன்று பல்கலைக் கழகங்களுடனும் அந் நிறுவனம் இணைந்து செயல்பட இயலுமென்றும் கூறிய மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் பிரெஞ்சு அக்காதெமியைப் போல ஒரு தமிழ்ச் சங்கம் அமைக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

இந்நிறுவனம் ''பட்டங்கள் வழங்கும்'' கல்வி நிலையமாக அமையக் கூடாதென்று தெளிவாகக் கூறிய தமிழக முதல்வர் மாண்புமிகு அண்ணாதுரை, தமிழக அரசு இத்திட்டத்திற்கு உதவி செய்யத் தயங்காதென்றும் எடுத்துரைத்தார்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அமைக்கப்பட வேண்டு மென்பதே மாநாட்டின் ஒத்த முடிவு என்பதால் யுனெஸ்கோவின் சென்னை மாநில ஆணையம் இதுபற்றிய பத்தாண்டுத் திட்டம் ஒன்றினை வரைவதற்காக 19 பேர் கொண்ட குழுவை அமைத்தது இக்குழுவில் தனிநாயகம் அடிகளாரும் உறுப்பினராக இடம் பெற்றார்.[3]

இக்குழு வரைந்த விரிவான திட்டத்தை இந்திய அரசு ஒரு தீர்மானமாக யுனெஸ்கோ பொதுப் பேரவைக்குச் சமர்ப்பித்தது. இத்தீர்மானம் யுனெஸ்கோ பொதுப் பேரவையில் விவாதிக்கப் படும்போது இதனை ஆதரிக்க வேண்டுமென்று அடிகளார் மலேசியக் கல்வி அமைச்சர் மாண்புமிகு இஞ்ச்செ முகமது கீர் ஜொஹாரி, சிங்கப்பூர்க் கல்வி அமைச்சர் மாண்புமிகு ஓஸ் பாஸ் பூன் ஆகியோருக்கு எழுதி அவர்களின் உதவியைப் பெறும் முயற்சி களை மேற்கொண்டார்[4] என்பது குறிப்பிடத்தக்கது. இத் தீர்மானம் நிறைவேறியபின், யுனெஸ்கோ வழங்கிய நிதியுதவி யோடு திரு. அ. சுப்பையா பதினான்கு நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, அங்குப் பல்கலைக் கழகங்களோடும் நிறுவனங் களோடும் தொடர்பு கொண்டு உலகத் தமிழ் ஆராய்ச்சி

3. Ibid. p. 160
4. வே. அந்தனிஜான் அழகரசன்; முன்சுட்டியது; பக். 95-98

நிறுவனம் ஆற்றக் கூடிய பணிகளைப்பற்றியும் அவற்றுக்கு எத்தகைய வரவேற்பு உண்டு என்பதைப்பற்றியும் ஆராய்ந்து யுனெஸ்கோவுக்கு ஓர் ஆய்வு அறிக்கை வழங்கினார்.[5]

அதன்பின் மூன்றாண்டுக்குரிய விரிவான திட்டத்தை வரைவதற்காக யுனெஸ்கோ நியமித்த பன்னாட்டுப் பிரதிநிதிகள் குழுவிலும் அடிகளார் இடம் பெற்றார். இக்குழுவின் தலைவராகப் பேரா. ஃபீலியோசாவும் ஒருங்கிணைப்பாளராகத் திரு. ஏ. சுப்பையாவும் நியமிக்கப்பட்டனர்.

இதற்கிடையில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் மேலாண்மைக் குழுவுக்கும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்துக்குமிடையில் தொடர்பினை எளிதாக்கும் முறையில் பேரா. ஃபீலியோசா, பேரா. கே. கே. பிள்ளை, தனிநாயகம் அடிகளார், பேரா. வி. அய். சுப்பிரமணியம், திரு. ஏ. சுப்பையா ஆகிய ஐவரைக் கொண்ட குழுவை மன்றம் நியமித்தது.[6]

பாரீஸ் மாநாட்டில் தொடக்கவுரையாற்றிய யுனெஸ்கோ மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு), முனைவர் மால்கம் ஆதிசேஷையா தன் உரையின்போது உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் பற்றியும் குறிப்பிட்டார்.[7]

பாரீஸ் மாநாட்டின் இறுதி அமர்வுக்குத் தலைமை தாங்கிய அடிகளார் அதுபோது ஒரு வேண்டுகோள் விடுத்தார். 1971-ஆம் ஆண்டில் யுனெஸ்கோ பொதுப் பேரவை நடைபெறும்போது, சென்னையில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஏற்படுத்தும் தீர்மானத்தை இந்தியா முன் மொழிய, அதைப் பிரான்சு ஆதரித்து வழிமொழிய வேண்டும் எனப் பிரெஞ்ச் தேசிய ஆணையத்துக்குப் பரிந்துரைக்கும் தீர்மானத்தை அவையினர் ஒருமனதாக நிறைவேற்ற வேண்டுமென்னும் வேண்டுகோள் அது.[8] அவ்வாறே அத்தீர்மானம் அவையினரால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஐந்தாம் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்தபோது உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அமைக்கப்பட்டுச் செயல்படத் தொடங்கிவிட்டது. யாழ்ப்பாணம் மாநாட்டின் தொடக்கவுரையில்,

---

5. Journal of Tamil Studies, Vol 1, No. 2, part II, 1969, Pp. 7-38
6. Ibid. p. 2
7. Proceedings of the Third International Conference Seminar, pp. 5-6 8. Ibid. p. 257

"உலக அளவில் தமிழ் ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காகவே யுனெஸ்கோ நிதியுதவியுடன் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சென்னையில் ஏற்படுத்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் ஆதரவு நல்கியது. இத் திட்டத்துக்குத் தமிழக அரசும் யுனெஸ்கோ இந்தியத் தேசிய ஆணையமும் உதவிபுரிந்தன. இந்நிறுவனம் சிறிய அளவில் தன் பணியைத் தொடங்கியுள்ளது. எனினும் இது உலக நிறுவனமாக வளரும் என்னும் நம்பிக்கை எமக்கு உண்டு. வெளிநாட்டு அறிஞர்கள் அதிகமாகத் தேடும் வாய்ப்புக்களை இத்தகைய நிறுவனங்கள் மூலமாகவே நாம் வழங்க இயலும். பல்கலைக் கழகங்கள் பட்டங்களை வழங்குவதில் கவனம் செலுத்திக் கொண்டு, ஆராய்ச்சியைப் பட்ட மேற்கல்வி நிறுவனங்களிடம் விட்டுவிடும். ஆகவேதான் இந்த நிறுவனம் உண்மையில் உலகளாவிய நிறுவனமாக அமைய வேண்டுமென ஆவல் கொண்டுள்ளோம்"[9]

என்று தெரிவித்தார்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தமிழோடு தொடர்புள்ள பல்வேறு துறைகளிலும் உயர் ஆய்வுகளை மேற்கொண்டு உலக அறிஞர்களால் ஏற்று மதிக்கப்படுவதாக அமைய வேண்டுமென்பதே அடிகளாரின் வேணவா என்பதில் ஐயமில்லை. உலகத் தமிழ் ஆய்வுத் துறையில் அடிகளார் தம் உலகப் பயணங்கள், தொடர்புகள், கட்டுரைகள், விரிவுரைகள், நூல்கள், முத்திங்கள் இதழ், அரையாண்டு இதழ் என்று பலவகையிலும் தொடர்ந்து ஆற்றிவந்த பணிகளே உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமாக வடிவம் பெற்றன என்பார் பேரா. வேலுப்பிள்ளை. "அடிகளாரே உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதல் இயக்குநராக நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது பல அறிஞர்களின் எண்ணம். உலக அளவில் நிறுவனத்துக்குத் தேவையான செல்வாக்கை அடிகளார் பெற்றுத் தந்திருப்பார்"[10] என்பது வேலுப்பிள்ளையின் கருத்து. ஆனால் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தொடங்கப் பெற்ற பின். அடிகளார்க்கு அதில் எத்தகைய பொறுப்பும் வழங்கப்படவில்லை என்பது வருந்தற்குரியதாகும்.

9. Proceedings of the Fourth International Conference Seminar of Tamil Studies, S. Vithianandan (Ed.) Jaffna, 1980, p. xx
10. Velupillai, A., 'His Impact on Dravidian Studies', Tamilaram, p. 49

# தேடிக்கண்ட செல்வங்கள்

பல பழைய தமிழ் நூல்கள் மறைந்துவிட்ட கொடுமையையும், அவற்றுள் சிலவற்றைத் (பல எனலாமோ?) தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத ஐயர் தமிழகமெங்கும் சுற்றித் திரிந்து கண்டெடுத்துப் பல ஏட்டுச் சுவடிகளை ஒப்பு நோக்கியபின் திருந்திய பதிப்புகளை வெளியிட்டுத் தமிழுக்குப் புது வாழ்வு வழங்கியதையும் நாம் மறக்க இயலாது. சாமிநாத ஐயர் இல்லையேல் சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, மணிமேகலை, பத்துப்பாட்டு, புறநானூறு, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், பெருங்கதை, புறப்பொருள் வெண்பாமாலை போன்ற பல பழந்தமிழ் நூல்கள் அழிந்து போயிருக்கும் என்பது உறுதி.

அவ்வாறே பதினாறாம் நூற்றாண்டிலும், அதன் பின்னரும் தமிழகத்தில் சமயப் பணியாற்ற வந்த மேனாட்டுக் கிறித்துவ அறிஞர் சிலர் இயற்றிய தமிழ் இலக்கணம், அகராதி, உரைநடை நூல்கள் போன்றவை மறைந்து கிடந்த சூழ்நிலையில் தனிநாயகம் அடிகளார் அவற்றைத் தேடும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டார். ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுக்குச் சென்ற போதெல்லாம் அந்நாடுகளிலுள்ள நூலகங்களுக்குச் சென்று தமிழ் நூல்களைத் தேடுவதை வழக்கமாகக் கொண்டார். அம்முயற்சியில் வெற்றி பெற்று, மறைந்து கிடந்த பல நூல்களைத் தமிழ் உலகுக்கு அறிமுகப்படுத்தினார்.

போர்த்துக்கல் நாட்டு லிஸ்பன் நகரிலுள்ள தேசிய நூலகம், பெலம் நகரிலுள்ள இனவியல் அருங்காட்சியகம் (Museu Etnologico), கடல் கடந்த நாடுகளின் வரலாற்றுத் தொல்பொருட்

காட்சியகம் (Arquivo Historico do Ultramar), பிரான்சு நாட்டுப் பாரீஸ் நகரிலுள்ள தேசிய நூலகம், சொர்போன் பல்கலைக்கழக நூலகம், உரோமை நகரிலுள்ள மறைபரப்புப் பணிப் பேராய நூலகம், அமெரிக்க ஐக்கிய நாட்டு ஹார்வர்ட் பல்கலைக்கழக நூலகம் போன்ற பல நூலகங்களுக்கு அடிகளார் சென்று நூல்களைத் தேடினார். அடிகளார் தம் அரிய முயற்சி காரணமாகக் கண்டுபிடித்த முக்கியமான நூல்களைப் பற்றி விரிவாகக் காண்போம்.

### தமிழ் மொழி இலக்கணக் கலை
### (Arte da Grammatica da Lingua Malabar)

முதல் ஐரோப்பியத் தமிழ் அறிஞர் என்று போற்றப்படத்தக்க என்ரீக்கோ என்றீக்கஸ் அடிகளார் தாம் சார்ந்த யேசுசபைத் தலைவராகிய புனித இஞ்ஞாசியாருக்கு 6-11-1550 அன்று வ. உ. சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள புன்னைக்காயல் என்னும் ஊரிலிருந்து எழுதிய மடலில்,

அ) தமிழ் மொழி இலக்கணக் கலை

ஆ) தமிழ் அகராதி

என்னும் இரு நூல்களைத் தாம் எழுதி முடித்துள்ளதாகக் குறிப்பிடுகின்றார்.[1] இவையிரண்டும் அச்சேறாத நூல்கள். இவையே ஐரோப்பியர் ஒருவரால் தமிழ்த் துறையில் இயற்றப்பட்ட முதல் நூல்கள். இவற்றுள் அகராதி நமக்கு இதுகாறும் கிடைக்கப் பெறவில்லை.

ஆனால் 'தமிழ் மொழி இலக்கணக் கலை' என்னும் நூலை அடிகளார் லிஸ்பன் தேசிய நூலகத்தில் 1954ஆம் ஆண்டு கண்டு பிடித்தார்.

கையெழுத்துப் படியில் 160 பக்க அளவில் போர்த்துக்கேய மொழியில் எழுதப்பட்ட நூல் இது. இலத்தீன் மொழியிலக்கண அடிப்படையில் தமிழை ஆராய்ந்த என்ரீக்கஸ் அடிகளார் அவ்வடிப் படையிலேயே தமிழ் இலக்கண நூலை யாத்துள்ள பாங்கினைத் தனிநாயகம் அடிகளார் காட்டுகின்றார். தமிழ் எடுத்துக்காட்டுகள் தமிழ் எழுத்திலும் ஐரோப்பிய எழுத்திலும் எழுதப்பட்டுள்ளன.

1. Thani Nayagam, X.S., Tamil Manuscripts in European Libraries; Tamil Culture, Vol. III, No. 3-4, Oct. 1954, p. 220

இந்நூலிலுள்ள பல எடுத்துக்காட்டுக்களில் புன்னைகாயல் என்னும் ஊர் குறிப்பிடப்படுவதால் இந்நூல் புன்னைக்காயலில் எழுதப்பட்டது என நாம் ஊகிக்கலாம். என்ரீக்கஸ் அடிகளார் இவ்வூரையே தம் தலைமையிடமாகக் கொண்டிருந்தார் என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

இந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் குறிப்புக்களுடன் அச்சேற்றும் முயற்சியில் அமெரிக்க ஐக்கிய நாட்டு ஜீன் ஹைன் (Jeanne Hein) அம்மையார் ஈடுபட்டிருந்ததாக அறிகிறோம்.[2] அப்பதிப்பு வெளியாகிவிட்டதா என்பதை அறிந்திட இயலவில்லை. இந்த அம்மையார் மதுரைத் தமிழ் மாநாட்டின்போது இவ்விலக்கண நூலைப்பற்றி வழங்கிய கட்டுரையில் இவ்விலக்கண நூலை முதன் முதலாகக் கண்டுபிடித்தவர் தனிநாயகம் அடிகளாரே என்பதை மறவாமல் குறிப்பிடுகின்றார்.[3]

**கார்த்தில்யா (Cartilha)**

இதுதான் முதன் முதலில் அச்சேறிய தமிழ் நூல், ஆனால் அது தமிழ் எழுத்துக்களைக் கொண்டு அச்சிடப் பெறாமல், தமிழ்ச் சொற்கள் ஐரோப்பிய எழுத்துக்களில் பெயர்த்தெழுதப் பெற்றதாக, சொல்லுக்குச் சொல் போர்த்துக்கேய மொழிபெயர்ப்புடன் வெளியாகியது. பெலம் நகரிலுள்ள இனவியல் அருங்காட்சியகத்தில் ஓர் இரும்புப் பெட்டியில் மிகவும் பத்திரமாக இந்நூல் பாதுகாக்கப்பெற்று வருகிறது.

'ஒரு கிறிஸ்துவன் தன் மீட்புக்காக அறிய வேண்டிய அனைத்தையும் சுருக்கமாக வழங்குவதாக'க் கூறும் இந்நூல் 38 பக்கங்களைக் கொண்டது, 'போர்த்துக்கல் மன்னராகிய மூன்றாம் அருளப்பரின் ஆணைப்படி' அச்சிடப்பட்டது. இதன் கையெழுத்துப் பிரதி போர்த்துக்கல் நாட்டு ஒப்போர்த்தோ நகராட்சி நூலகத்தில் இருப்பதாகத் தமக்குக் கூறப்பட்டதை அடிகளார் தம் கட்டுரையில்[4] குறிக்கின்றார்.

---

2. ஜீன் ஹைன் அம்மையார், பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன் (தூத்துக்குடி) அவர்களுக்கு 20-4-1979 அன்று எழுதிய மடல்.
3. Proceedings of the Fifth International Conference Seminar of Tamil Studies, p.1-66
4. Thani Nayagam, X.S., 'The First Books Printed in Tamil', Tamil Culture, Vol. VII, No. 3, July 1958, p. 293

பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையில் சமயப் பணியாற்றிய 'சுவாம் தெ வில்லா கோந்தே' (Joam De Villa Conde) என்னும் துறவியின் மேற்பார்வையுடன் இந்நூலை இயற்றியவர்கள் விசெந்தெ தெ நாசரத் (Vicente De Nazareth), ஹோர்கே கர்வால்யோ (Jorge Carvalho), தோமே தா க்ரூஸ் (Thome Da Crúz) ஆகிய மூன்று தமிழர்கள் என்பதை அறியும் போது நம் உள்ளம் பெருமிதம் கொள்கிறது.

16ஆம் நூற்றாண்டில் 'போர்த்துக்கல்லில் அச்சேறிய நூல்களின் ஆய்வடங்கல்' (Bibliografia Das Obras Impresas Em Portugal no Secolo xvi) என்னும் நூலில் தாம் கண்ட மற்றொரு செய்தியையும் அடிகளார் தம் கட்டுரையின் மூலம் நம்மோடு பகிர்ந்து கொள்கிறார். 'புகழ் மிக்க அச்சுக்கலை' (Da Famosa Arte Da Imprimissao) என்னும் நூலை எழுதுவதற்காகக் குறிப்புகள் தேடிக் கொண்டிருந்த அமெரிக்கோ கோர்த்தஸ் பின்ட்டோ என்பவர் பெலம் இனவியல் அருங்காட்சியகத்தின் இயக்குநர் பேராசிரியர் மனுவேல் ஹெலெனோ என்பவரைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருக்கும்போது, போர்த்துக்கேய நூல் ஆய்வடங்கல்' (Bibliografia Lusitana) என்னும் தொகுப்பில் குறிப்பிடப் பட்டுள்ள ஓர் அரிய நூலைத் தாம் தேடிக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். ஹெலெனோ தாம் இரும்புப் பெட்டியில் பூட்டி வைத்துப் பத்திரமாகப் பாதுகாத்து வரும் அரிய நூலை அவரிடம் காட்ட, அதுவே தாம் தேடிக் கொண்டிருந்த அரிய நூலாகிய Cartilha என்பதைப் பின்ட்டோ கண்டறிந்தார்.

1554ஆம் ஆண்டில் அச்சிடப் பெற்ற இந்நூலின் ஒளிப்படப் பிரதியை அடிகளார் பெற முயன்றும் அது இயலாமற் போயிற்று. எனினும் அது புதுச்சேரியிலுள்ள பிரெஞ்சு இந்தியவியல் நிறுவனத்தால் இப்போது வெளியிடப்பட்டிருக்கிறது.

**சுவிசேஷ விரித்துரை**

இலங்கையில் பணியாற்றிய கொன்சால்வஸ் துறவியார் இயற்றிய 'சுவிசேஷ விரித்துரை' என்னும் நூலின் கையெழுத்துப் படிகள் இரண்டினைக் 'கடல் கடந்த நாடுகளின் வரலாற்றுப் தொல் பொருட்காட்சியக'த்தில் தாம் கண்டதாக அடிகளார் தெரிவிக்கின்றார்.

**தமிழ்—போர்துக்கேய அகராதி**

அந்தாம் தெ ப்ரேயென்சா (Antam De Proenca 1625-1666) என்னும் யேசுசபைத் துறவி இயற்றிய தமிழ்-போர்த்துக்கேய

அகராதியின் கையெழுத்துப் படியைப் பாரீசிலுள்ள தேசிய நூலகத்தில் அடிகளார் கண்டெடுத்தார்.[5] இது தமிழ்-போர்த்துக்கேய அகராதி, போர்த்துக்கேய-தமிழ் அகராதி என இரு வேறு தலைப்புக்களுடன் இரு நூல்களாகக் காணப்பட்டது. எனினும் இரண்டும் இணைந்த ஒரு நூல் கேரளத்திலுள்ள அம்பலக்காடு என்னும் ஊரில் 30-7-1679 அன்று அச்சிடப் பெற்றது என்பதை வத்திக்கான் நூலகத்தில் அந்நூலின் அச்சுப் பிரதியைக் கண்ட போது அடிகளார் உணர்ந்தார். 'போர்த்துக்கேயப் பொருள் விளக்கத்துடன் கூடிய இத்தமிழ் அகராதி மதுரை மறைப்பணிக் களத்தின் சமயத் தொண்டரும் யேசுசபையினருமாகிய அந்தாம் தெ ப்ரோயன்சா அடிகளால் இயற்றப்பட்டது. இது 30-7-1679 அன்று அச்சிடுவோராகிய இஞ்ஞாசி அச்சாமணி என்பவரால் அம்பலக்காட்டிலுள்ள மலபார் மறைமாநிலத்தின் தமிழ் அச்சகத்தில் பதிப்பிக்கப் பெற்றது' எனப் போர்த்துக்கேய மொழியில் எழுதப்பெற்ற குறிப்பு நூலின் முதல் பக்கத்தில் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் இஞ்ஞாசியோ புருனோ (1579-1659) அடிகளால் ஒரு தமிழகராதி தொகுக்கப்பட்டது என்னும் குறிப்பினைப் ப்ரோயன்சா அடிகளார் தம் முன்னுரையில் தருகின்றார். அவ்வகராதி அச்சிடப் பெற்றதா இல்லையா என்பதை நாம் அறிவதற்கில்லை. அதன் கையெழுத்துப்படியும் கிடைக்கவில்லை.

ஆகவே நாமறிந்த அளவில் முதன் முதல் அச்சேறிய தமிழ் அகராதி ப்ரோயன்சா அடிகளார் எழுதியதே. இதனை ஒளிப் படம் எடுத்து, ஒளிப்படங்களையே நூலாக அச்சிட்டுத் தனிநாயகம் அடிகளார் வெளியிட்டார்[6]. இதன்மூலம் 16ஆம் நூற்றாண்டின் கத்தோலிக்க சமயத் துறவிகள் மேற்கொண்டிருந்த அச்சுப் பணி எத்தகையதாக இருந்தது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

ப்ரோயன்சா அடிகளார் இறந்து பதின்மூன்று ஆண்டுகளுக்குப்பின், அதாவது 1679ஆம் ஆண்டில்தான் இந்த அகராதி அச்சிடப்பட்டிருக்கிறது. இஞ்ஞாசியோ புருனோ அடிகளால் முன்பு தொகுக்கப்பட்ட அகராதியிலிருந்தும், தாம் தமிழ் கற்க

---

5. Thani Nayagam, X.S., 'Tamil Manuscripts in European Libraries'; op. cit. p. 223.
6. **Antao de Proenca's Tamil-Portuguese Dictionary, A. D. 1679**, Prepared for publication by Xavier S Thani Nayagam (Kuala Lumpur, 1966)

உதவியாக இருந்த தத்துவபோதகர் (1577-1656), மனுவேல் மார்ட்டின்ஸ் (1797-1656) போன்ற யேசுசபைத் துறவிகளின் நூல்களை ஆராய்ந்தும் திரட்டிய சொற்களைக் கொண்டு இந்த அகராதியைத் தொகுத்ததாகக் கூறும் ஆசிரியர், என்ரீக்கோ என்ரீக்கஸ் அடிகளாரின் 'அடியார் வரலாறு' என்னும் நூலிலிருந்தும் தாம் சொற்களைத் தொகுத்திருப்பதாகத் தம் முன்னுரையில் தெளிவுபடுத்துகின்றார்[7]. ப்ரோயன்சா தம் அகராதியில் சொற்களை வரிசைப்படுத்துவதற்குத் தமிழ் நெடுங்கணக்கைப் பயன்படுத்தாமல் போர்த்துக்கேய அகர வரிசையையே பயன்படுத்துவதைக் காணுகின்றோம். துணைச் சொற்களைத் தவிர்த்து 16, 546 சொற்கள் இந்நூலில் இடம் பெற்றிருப்பதாகத்[8] தனிநாயகம் அடிகளார் கணக்கிட்டுக் கூறியுள்ளார். நூலின் அட்டையில் 'தமிழ் அச்சகம்' என்று குறிக்கப்பட்டிருப்பதால் மலையாள மொழிக்குத் தனி அச்சகம் இருந்திருக்கும் என நாம் ஊகிக்கலாம். மெய்யெழுத்துக்கள் புள்ளி பெறாமலும், ரகரம் கீழ்வளைவு (ர-ா) இல்லாமலும், உயிர்மெய் எழுத்துக்கள் குறில் நெடில் வேறுபாடு இல்லாமலும், நகரம் ரகரம் போலும் அமைந்திருப்பது பதினேழாம் நூற்றாண்டில் தமிழ் எழுதப்பட்ட முறையைக் காட்டுகிறது என்கிறார் அடிகளார்.[9]

தனிநாயகம் அடிகளார் இந்த அகராதியை ஒளிப்படப் பதிப்பு முறையில் அச்சிட்டு 1966ஆம் ஆண்டு முதல் உலகத் தமிழ் மாநாட்டின்போது வெளியிட்டார். எனினும் இந்நூலை அறிமுகம் செய்து 1964ஆம் ஆண்டிலேயே ஒரு கட்டுரை[10] வெளியிட்டார். இந்த ஆய்வுக் கட்டுரையினை 1964ஆம் ஆண்டு டில்லியில் நடைபெற்ற உலகக் கீழ்த்திசை அறிஞர் மாநாட்டிலும் அடிகளார் படித்து வழங்கினார்.

### தம்பிரான் வணக்கம்

என்ரீக்கோ என்ரீக்கஸ் பாதிரியாரும் புனித இராயப்பரின் மனுவேல் (Manoel De S Pedro) அடிகளாரும் இணைந்து மொழிபெயர்த்த இந்நூல் 1578ஆம் ஆண்டு கேரளத்திலுள்ள கொல்லம் என்னும் ஊரில் அமைந்திருந்த மீட்பர் கல்லூரியில் அச்சாகியது.

7. Ibid. pd. 11-13
8. Ibid. p. 9
9. Ibid Pp 9-110
10. Thani Nayagam, X.S., Antao De Proenca's Tamil-Portuguese Dictionary, 1679- An Introduction, Tamil Culture, Vol. xi, No. 2, Apr.—June 1964, pp. 117-127

இதன் பிரதி ஒன்றே ஒன்றுதான் இப்போது கிடைக்கப்பெறுகிறது. இப்பிரதி அமெரிக்க ஐக்கிய நாட்டு ஹார்வர்ட் பல்கலைக் கழக நூலகத்தில் உள்ளது. அதன் ஒளிப்படப் பிரதியினை அடிகளார் பெற்று அது பற்றி ஆராய்ந்து Tamil Culture இதழில் எழுதிய போதுதான்[11] தமிழகம் இந்நூலைப் பற்றி அறிய வந்தது.

'கிறித்துவப் போதனை' (Doctrina Christam) என்பதுதான் மூல நூலின் பெயர். இதனைத் 'தம்பிரான் வணக்கம்' என்றே மொழிபெயர்ப்பாசிரியர் இருவரும் தமிழாக்கம் செய்தனர்.

இந்நூல் 16 பக்கங்களை உடையது. இந்தியாவில் அச்சேறிய முதல் தமிழ் நூலாக நமக்குக் கிடைப்பது இந்த நூல்தான். கத்தோலிக்கக் கிறித்துவர்கள் தங்கள் வழிபாட்டின்போது பயன்படுத்தும் மந்திரங்களும், கத்தோலிக்கச் சமயப் போதனைகளின் சுருக்கமும் இந்நூலில் காணக் கிடக்கின்றன. 1578ஆம் ஆண்டில் கொல்லத்தில் உண்டாக்கிய அச்செழுத்துக்களே இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**கிரிசித்தியானி வணக்கம்**

மார்க்கொசு சொரிசி (Marcos Jorge) பாதிரியார் எழுதிய (Doctrina Christam) என்னும் நூலின் தமிழாக்கம் இது. மொழிபெயர்த்தவர் என்ரீக்கஸ் அடிகளாரே.

122 பக்கங்களுடைய இந்நூல் கொச்சியில் இருந்த இறையன்னை கல்லூரியில் 14-11-1579 அன்று அச்சிடப்பட்டது. இந்நூலின் ஒரு பிரதி பிரான்சு நாட்டிலுள்ள சொர்போன் பல்கலைக் கழக நூலகத்தில் இருந்தது. பின் அது எப்படியோ அங்கிருந்து மறைந்துவிட்டது. அப்பிரதி சொர்போனில் இருந்தபோது எடுக்கப்பட்ட ஒளிப்படப் பிரதி தனிநாயகம் அடிகளார்க்குத் தூத்துக்குடி ஆயர் மேதகு பிரான்சிஸ் திபூர்சியஸ் ரோச் ஆண்டகையிடமிருந்து கிடைத்தது[12]. இந்தப் பிரதியினை அடிகளார் அமெரிக்க ஐக்கிய நாட்டு ஹார்வர்ட் பல்கலைக் கழகத்துக்குக் கடனாகக் கொடுக்க அவர்களும், அதன்பின் வேறு பலரும் அதை ஒளிப்படம் எடுத்துத் தங்கள் நூலகத்தில் இன்று பத்திரமாகப்

11. Thani Nayagam, X.S., 'TheFirst Books Printed in Tamil' Op. Cit. pp. 293-294
12. Ibid Pp. 294-295

பாதுகாத்து வைத்திருக்கின்றனர். ஆகவே, இந்நூல் நமக்குக் கிடைக்க வழிவகுத்தவர் தனிநாயகம் அடிகளாரே.

வினா விடை முறையிலமைந்த இந்தச் சமயக் கல்வி நூலின் போர்த்துக்கேய மூலம் 1566ஆம் ஆண்டில் லிஸ்பன் நகரில் வெளியிடப்பட்டது. அந்நாளில் இது புகழ்பெற்ற நூலாகவும் பெரிதும் வழக்கிலிருந்த நூலாகவும் விளங்கியது. Doctrina Christam என்னும் ஒரே பெயரைக் கொண்ட இரு நூல்கள் போர்த்துக்கேய மொழியில் இருந்தன என நாம் அறிகிறோம். ஆனால் பெயர் ஒன்றாயினும் 'தம்பிரான் வணக்கம்', 'கிரிசித்தியானி வணக்கம்' என இரு வேறு பெயர்களுடன் என்ரீக்கஸ் அடிகளார் இவற்றை மொழிபெயர்த்த காரணம் நமக்கு விளங்கவில்லை. ஒருவேளை அவை இரு வேறு நூல்கள் என்பதைச் சுட்டிக்காட்டவே இரு வகையாக மொழிபெயர்த்திருக்கலாம். 'கிரிசித்தியானி வணக்கம்' நூலின் முகவுரையில் 'கிரிசித்தியானிகள் படிப்பினை' என்னும் தமிழாக்கமும் இடம்பெற்றுள்ளது. இதுவே மூலத்துக்கு ஏற்ற மொழிபெயர்ப்பாக அமைந்துள்ளது.

தென்பாண்டிக் கடற்கரையோரத்தில் வாழ்ந்து வந்த பரதவ மக்களிடையே பணியாற்றிய என்ரீக்கஸ் அடிகளாரின் நூல்களை அச்சிட அம்மக்கள் பண உதவி வழங்கியதால் கிரிசித்தியானி வணக்கம் என்னும் நூலை அவர்களுக்கு நன்கொடையாக வழங்குவதாக என்ரீக்கஸ் அடிகளார் தம் முன்னுரையில்[13] குறித்துள்ளார்.

### அடியார் வரலாறு (Flos Sanctorum)

பல வரலாற்று நூல்கள் இந்நூலைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தாலும் யார் கண்ணுக்கும் அகப்படாத இந்நூலை வத்திக்கான் நூலகத்தில் தனிநாயகம் அடிகளார் கண்டுபிடித்தார். ''வத்திக்கான் நூற் கூடத்திலுள்ள பண்டை இந்திய நூல்கள் யாவற்றையும் ஆராய்ந்து செல்லும்பொழுது இஸ்பானிய முகவுரையுள்ளதும் 666 பக்கங்கள் கொண்டதுமாகிய பெரிய நூல் ஒன்றையும் ஆராய்ந்தேன். இதுவே அறிஞர் பல ஆண்டுகளாகத் தேடிய Flos Sanctorum எனப்படும் ''திருத்தொண்டர் திருமலர்' என்னும் நூலென்று அகச் சான்றுகள் பலவற்றிலிருந்து துணிந்தேன். நான் ஐரோப்பாவுக்குப் பன்முறை சென்றதால் ஏற்பட்ட பொருட் செல

13. இராசமாணிக்கம், ச., (பதிப்.) வணக்கம் (தூத்துக்குடி, 1963) ப. 6

விற்கும் எடுத்த முயற்சிக்கும் இந்நூலொன்றைக் கண்டு கொண்டதே போதிய கைம்மாறாகும் எனக் கருதுகின்றேன். அப்பொழுது நான் அடைந்த மகிழ்ச்சியை ஆராய்ச்சியில் ஈடுபடுவோரே அறிவர்'' என அவ்வரிய நூலைக் கண்டுபிடித்த முறையினையும், அதனால் தாம் அடைந்த அளவற்ற பெரும் மகிழ்ச்சியையும் அடிகளார் தெரிவிக்கின்றார்.[14]

இந்நூலை இயற்றியவரும் என்ரீக்கோ என்ரீக்கஸ் அடிகளாரே. டியேகோ தெல் ரொசாரியோ எழுதிய ''புனிதரின் பூச்செண்டு'' என்னும் நூலிலிருந்தும், லூயிஜி லிப்போமானோ அடிகள் இயற்றிய 'பழங்காலப் புனிதர்கள் நூற்றறுபதின்மர் வரலாறு' என்னும் நூலிலிருந்தும், சுவக்கீன் பெரியோனியோ துறவியார் இயற்றிய 'அப்போஸ்தலர்கள் வரலாறும் பணிகளும்' என்னும் நூலிலிருந்தும் பல பகுதிகளைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்துத் தமிழில் மொழிபெயர்த்து இந்நூலை என்ரீக்கஸ் அடிகளார் இயற்றியுள்ளார்.[15]

சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள புன்னைக்காயல் என்னும் ஊரில் 1586ஆம் ஆண்டு இந்நூல் அச்சிடப்பட்டது. இதனால் தமிழ் மண்ணில் அச்சிடப்பட்ட முதல் தமிழ் நூல் என்னும் பெருமை இந்நூலுக்குரியது. தம்பிரான் வணக்கமும் கிரிசித்தியானி வணக்கமும் கேரளத்திலுள்ள கொல்லத்திலும் கொச்சியிலும் அச்சானவை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மூன்று நூல்களுமே 1578ஆம் ஆண்டுக் கொல்லத்தில் செய்யப்பட்ட அதே தமிழ் அச்சுக்களைக் கொண்டு இயற்றப்பட்டவை என்பதைக் காணும்போது ஒரே தமிழ் அச்சகம் முதலில் கொல்லத்திலும், பின் கொச்சியிலும், அதன்பின் புன்னைக்காயலிலும் இடம் மாற்றி மாற்றி அமைக்கப்பட்டது என ஊகிக்க இடமிருக்கிறது. யேசு சபையாரின் அன்றைய பொருளாதார நிலைமையில் மூன்று வெவ்வேறு அச்சகங்களை அவர்கள் நிறுவியிருக்க இயலாது என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

தமிழ் மண்ணில் அச்சிடப்பெற்ற இந்த முதல் தமிழ் நூலைக் கண்டுபிடித்து வெளிக் கொணர்ந்த பெருமை தனிநாயகம் அடிகளார்க்கு உரியது. இந்நூல்

---

14. தனிநாயக அடிகள், ஒன்றே உலகம், பக். 129
15. அண்டிறீக்கு அடிகளார், அடியார் வரலாறு. இராசமாணிக்கம், ச., (பதிப்.) (தூத்துக்குடி, 1967), பக்.

'அண்டிரீகு அடிகளார் இயற்றிய
Flos Sanctorum
என்ற
அடியார் வரலாறு'

என்னும் தலைப்பில் ச. இராசமாணிக்கம் அடிகளாரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1967ஆம் ஆண்டு தமிழ் இலக்கியக் கழகத்தினரால் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டிருக்கிறது.

'அடியார் வரலாறு' என்றும், 'திருத்தொண்டர் திருமலர்' என்றும் பல பெயர்களால் குறிப்பிடப்படும் இந்நூலுக்கு அண்டிரீக்கு அடிகளார் இட்ட தமிழ்ப் பெயர் என்ன என்பதை நாம் அறிவதற்கில்லை. ஏனெனில் நூலின் பெயரைக் குறிக்கும் முகப்புப் பக்கங்கள் நமக்குக் கிடைக்கவில்லை.

ஆசிரியர் ஸ்பானிஷ் மொழியில் எழுதியுள்ள முன்னுரையில் ''புனிதர்களின் வரலாறு!'' (La Vida De Los Santos) என்றே குறித்துள்ளார். எனினும் இந்நூல் பொதுவாக (Flos Sanctorum) என்னும் இலத்தீன் பெயராலேயே குறிக்கப்பட்டு வந்துள்ளது என்பது நினைவு கூர்தற்குரியது.

**அடிகளாரின் முயற்சி இல்லையெனில்...**

தனிநாயகம் அடிகளார் இத்தகைய பழந்தமிழ் நூல்களைத் தேடும் முயற்சியில் ஈடுபடவில்லையெனில் இவ்வரிய நூல்களைத் தமிழுலகம் இழந்திருக்க வாய்ப்புண்டு. பதினாறாம் நூற்றாண்டின் தமிழ் நடை, அச்சுக் கலை, மேனாட்டுத் தமிழறிஞர்களின் அரிய முயற்சிகள் ஆகியவை பற்றிய பல உண்மைகளைத் தமிழகம் உணரத் தனிநாயகம் அடிகளாரின் அரும்பணி உதவுகின்றது.

# தெள்ளமுதத் தமிழ் நூல்கள்

தமிழ்த்தூது, ஒன்றே உலகம் என்னும் இரு தமிழ் நூல்களையே அடிகளார் எழுதியதாக அறிகின்றோம். அவர் ஆற்றிய அறக்கட்டளைச் சொற்பொழிவு 'திருவள்ளுவர்' என்னும் நூலாக வெளியிடப்பட்டிருக்கிறது.

## முதல் நூல்

இவற்றுள் 'தமிழ்த்தூது' தான் அடிகளார் இயற்றிய முதல் தமிழ்நூல். இது தமிழ்த்தூது, சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு, மலரும் மாலையும், காப்பிய கவிஞர் வீரமாமுனிவர், தமிழ் நாட்டின் ஆசிரியர் வேதநாயகம் பிள்ளை, செந்தமிழ் வளர்ச்சி என்னும் ஆறு கட்டுரைகளைக் கொண்ட ஒரு தொகுப்பாகும்.

உலகத் தமிழ்த் தூதுப் பயணம் முடிந்தபின் அதைப்பற்றித் 'தமிழ்த் தூது' என்னும் பெயரில் அடிகளார் ஒரு கட்டுரை எழுதினார். இது 1951ஆம் ஆண்டு யாழ்ப்பாணத் தமிழ்த் திருவிழா மலரிலும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'சத்திய வேத பாதுகாவலன்' என்னும் கத்தோலிக்க சமய வார இதழிலும் வெளி வந்தது.

1951ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் யாழ்ப்பாணத்தில் நடத்திய தமிழ்த் திருவிழாவில் 'சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு' என்னும் பொருள்பற்றி அடிகளார் உரையாற்றினார். இவ்வுரை 'சத்திய வேத பாது காவலன்' வார இதழில் 3-5-1951, 10-5-1951, 17-5-1951 31-5-1951 ஆகிய தேதிகளில் தொடர்ந்து வெளிவந்தது.

அடிகளார் எழுதிய 'மலரும் மாலையும்' என்னும் கட்டுரை ,தமிழ் ஓசை' (தொகுதி 2, 1952) இதழில் வெளிவந்ததாகும்.

'தமிழின் வளர்ச்சி' என்னும் தலைப்பில் 'சத்திய வேத பாது காவலன்' 1-11-1951, 8-11-1951, தேதியிட்ட இதழ்களில் தொடர்ச்சியாக வெளிவந்த கட்டுரை, பின்னர் 'செந்தமிழ்' வளர்ச்சி' என்று பெயர்மாற்றம் பெற்றுத் 'தமிழ்த்தூது' நூலில் இடம் பெற்றது.

## பல பதிப்புக்கள்

இவற்றோடு பல்வேறு சூழல்களில் அடிகளார் எழுதிய பிற கட்டுரைகளும் சேர்ந்து 'தமிழ்த் தூது' என்னும் நூலாக 1952ஆம் ஆண்டு முதல் பதிப்பாகவும், 1959ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பாகவும் வெளிவந்தன. இது உயர்நிலைப் பள்ளிகளில் துணைப்பாட நூலாகப் பயன்படுத்தப்படுவதற்குரிய அரசாணை யைப் பெற்றிருந்தது. தமிழ்த்தூது, சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு ஆகிய இரு கட்டுரைகளையும் கொண்டு 'தமிழ்த்தூது என்னும் பெயர் தாங்கி. பதிப்பகத்தின் பெயரோ, நூல் வெளிவந்த ஆண்டு பற்றிய குறிப்போ இல்லாமல் அடிகளாரின் பெயரில் ஒரு நூல் வெளிவந்தது. பின் அட்டையில் தமிழ் இலக்கியக் கழக நூற்பண்ணை பற்றிய விளம்பரம் இருப்பதால் இது தமிழ் இலக்கியக் கழக வெளியீடே எனக் கொள்ளலாம். மூன்றாம் பதிப்பு எமக்குக் கிடைக்கவில்லை.

1952, 1959ஆம் ஆண்டுப் பதிப்பில் காணும் 'செந்தமிழ் வளர்ச்சி'யைத் தவிர்த்த பிற கட்டுரைகளுடன் 'தமிழரும் அவர்தம் கவின் கலைகளும்', 'தமிழ்கூறும் நல்லுலகம்' ஆகிய இருவேறு கட்டுரைகளைச் சேர்த்துத் 'திருத்திய நான்காம் பதிப்பு' 1962ஆம் ஆண்டில் பாரி நிலையத்தினரால் வெளியிடப் பெற்றது.

## தமிழ்த் தூது

ஏறக்குறைய ஈராண்டுக் காலமாக (1949-50) அடிகளார் பல்வேறு நாடுகளில் பயணம் செய்து தமிழ்த் தூது நிகழ்த்திய பூாங்கினை இக்கட்டுரை விளக்குகின்றது.

பெரும்பாலும் உலக நாடுகள் தமிழ் மொழியைப் பற்றி அறிந்திராத நிலையை இப்பயணமே அடிகளார்க்கு உணர்த்திற்று என்பதை இக்கட்டுரை மூலம் அறிகின்றோம். உலகின் பல்வேறு நாடுகளிலும் தமிழர் வாழ்ந்துவரும் உண்மையை அடிகளார்

அறிந்து உலகுக்கு உணர்த்தவும் இக்கட்டுரை உதவிற்று. அவ்வாறு வாழும் தமிழர் பல்வேறு தமிழ் ஒலிப்பு முறைகளைக் கையாண்டு வருவதை அறிந்த அடிகளார் "ஆங்கிலத்துக்கு பி.பி.சி.யின் ஒலிப்புப் பொதுநிலை விதியாயிருத்தல் போல், தமிழிற்கும் யாதானுமொரு பொதுநிலை ஒலிப்பு வேண்டும்"[1] என அக் கட்டுரையில் வலியுறுத்துகின்றார்.

வேற்று நாடுகளில் குடியேறியிருக்கும் தமிழர், தமிழை மறப்பதற்கு அவர்கள் சூழ்நிலை காரணமாக இருப்பதால் அந்நாடுகளின் மொழிகள் வாயிலாகவும் தமிழைப் பரப்ப வேண்டும் என்பது அடிகளாரின் கருத்து. மலாயா போன்ற நாடுகளில் தமிழர்கள் தாய் மொழிப்பற்றுடன் வாழ்ந்து வருவதைக் கண்டு மகிழ்ந்தார் அவர்.

தமிழ்த் தூதுக்காக வேற்றுநாடுகள் செல்வோர் வள்ளுவர் கூறுவதைப் போன்று அறிவு, ஆளுமை, கல்வி ஆகிய மூன்று பண்புகளிலும் முதன்மை சான்றவராய் இருத்தல் வேண்டுமென்பார் அடிகளார். "இயற்கையாகிய அறிவும், கண்டார் விரும்பும் தோற்றப் பொலிவும். பலரோடும் பலகாலும் ஆராயப்பட்ட கல்வியும் என நன்கு மதித்தற்கேதுவாய இம்மூன்றன் செறிவுடையவன் அவ்வினைக்குச் செல்லுதல் வேண்டும். அவ்வண்ணம் அப்பண்பு அமையப் பெற்ற தூதர், அவ்வேற்றுநாடுகளில், அவ்வேற்று மொழியை நன்றாகப் பேச அறிந்த மேடைக் கலை வல்லுநராய் இருத்தல் வேண்டும் என்பது ஒருதலை. வேற்று நாட்டினரிடை, அவர் முறையில் அவர் பழக்க வழக்கங்களின் படியே அவர் பேசுவது போல் அவர் மொழியைப் பேசி, அவர் உண்பது போல் அவர் உணவை உண்டு, அவருடன் பழகுதல் வேண்டும்"[2] என்று தமிழ்த் தூதர்களுக்குத் தேவையான திறன்களைத் தொகுத்துக் கூறுகிறார் அடிகளார்.

இத்திறன்களை அடிகளார் நிறைவாகக் கொண்டிருந்ததாலேயே தற்காலத்தில் சிறந்த தமிழ்த் தூதராக அடிகளாரால் விளங்கிட முடிந்தது என்பது மறுக்க இயலாத உண்மை.

---

1. தனிநாயக அடிகள், தமிழ்த்தூது; ப. 4
2. மேற்படி பக். 20-21

**சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு**

1951ஆம் ஆண்டுச் சித்திரைத் திங்களில் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த தமிழ்த் திருவிழாவில் மேற்குறித்த தலைப்பில் நிகழ்த்திய சொற்பொழிவே அடிகளார் இலங்கையில் நிகழ்த்திய முதல் சொற்பொழிவாகும். [3]

பழைய பரமேஸ்வரா கல்லூரி மைதானத்தில் அமைக்கப் பட்டிருந்த பெரிய பந்தலில் தமிழ் விழா மிகச் சிறப்பாக நடை பெற்றது. இவ்விழாவில் அடிகளார் மதிய அமர்வில் முதல் சொற் பொழிவாளர். சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளை தலைவர். அவர் நண்பகல் உணவுக்குப்பின் விழாப் பந்தலுக்குத் திரும்பிவரச் சுணங்கி விட்டது. தலைவர் வரும்வரை நிகழ்ச்சி களைத் தள்ளி வைக்கலாம் என்று பலரும் கருத்துத் தெரிவித்தனர். ''மாநாட்டு நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி நேரடியாகவே அஞ்சல் செய்து கொண்டிருக்கிறது. அமர்வு தொடங்கத் தாமத மானால் எதை அஞ்சல் செய்வது?'' என்று இலங்கை வானொலி யின் அன்றைய நிகழ்ச்சி அதிகாரியாகிய திரு. பொ. சிவபாத சுந்தரம் கேட்டு, அமர்வினை உரிய நேரத்தில் தொடங்கச் செய்தார். அமர்வின் முதல் பேச்சாளராகிய தனிநாயகம் அடிகளார் தலைவரின்றியே பேசத் தொடங்கினார்.

''அசைவு ஆட்டமின்றி, முழக்கம் குழப்பமின்றி இன்பத் தமிழுரை நிகழ்த்தினார். சபையில் சலசலப்பில்லை. அமைதி யான கலகலப்பு. மக்கள் மனதில் குதூகலிப்பு.

'என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே'

என்று சிகரம் வைத்தாற்போல் அடிகளார் முடிவுரை நவின்ற போது மக்கள் பெருந்திரள் கைகொட்டி ஆரவாரித்தது. முகங்கள் மலர்ந்தன. கரங்கள் குவிந்தன. சிரங்கள் தாழ்ந்தன. மகிழ்ச்சிக் குரல் எழுப்பின. எழுந்த குரல் வானைப் பிளந்து அப்பாலும் சென்றது. இடையில் மாநாட்டுத் தலைவர் இரா. பி. சேதுப் பிள்ளை மேடையில் வந்து அமர்ந்து அமைதியாக அடிகளாரின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார். அடிகளார் பேசி முடித்ததும் சேதுப்பிள்ளை எழுந்தார்.

---

3. மேற்படி ப. 25; அணையா விளக்கு; ப. 25

'இது தனிநாயகம் அல்லவா? இதற்கு ஒரு சபாநாயகமும் வேண்டுமா?' என்றாரே. மகிழ்ச்சி ஆரவாரத்தால் மண்டபம் அதிர்ந்தது.''[4] என அவ்விழாவில் கலந்துகொண்ட வித்துவான் எஃப். எக்ஸ். சி. நடராசா எழுதியுள்ளார்.

இச்சொற்பொழிவு பேராசிரியர் கல்கியையும் அடிகளார்பால் ஈர்த்தது.

''தாயுமானவரின் அருள்வாக்கில் குறிப்பிட்ட தெய்வம் ஏன் தமிழ்த் தெய்வமாக இருக்கக் கூடாது? அல்லது நாம் ஏன் அவ்விதம் வைத்துக் கொள்ளக் கூடாது? யாழ்ப்பாணத் தமிழ்த் திருவிழாவில் பூஜ்யர் தனிநாயகம் என்னும் பாதிரியார் இனிய தமிழில் சொற்பொழிவு ஆற்றியபோது எனக்கு மேற்கண்டவாறு தோன்றியது. இந்தப் பாதிரியார் யாழ்ப்பாணத்தவர். தூத்துக்குடியில் வசிக்கின்றார். உலகமெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்து எங்கும் தமிழின் பெருமையை எடுத்துச் சொல்லிவிட்டுத் திரும்பியிருக்கின்றார். அடடா! எவ்வளவு அழகாக, ஒவ்வொரு சொல்லையும் நிறுத்து அமைத்து அழகிய தமிழ்நூல் எடுத்துக்காட்டுக்களுடன் அவர் சொற்பொழிவு ஆற்றினார்!

'என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே'

என்று அவர் சொற்பொழிவை முடித்த பாணி எவ்வளவு நன்றாயிருந்தது!''[5] என்று இச்சொற்பொழிவைப் பற்றிப் பேராசிரியர் கல்கி எழுதியதை 'தெய்வ தரிசனம்' என்னும் நூலில் காணலாம்.

யாழ்ப்பாணத் தமிழ்த் திருவிழாவில் அடிகளார் நிகழ்த்திய விரிவுரையே அறிவார்ந்த பேச்சாளராக அடிகளாரை உலகுக்கு அறிமுகப்படுத்தியது எனலாம்.

### ஒன்றே உலகம்

சங்க இலக்கியங்களின் சிறப்பியல்புகளுள் 'ஒன்றே உலகம்' என்னும் உயரிய மனப்பான்மை பரவியிருப்பது அடிகளாரின் உள்ளத்தைக் கவர்ந்த ஒன்று. இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழறிஞர்கள் இதனை இனிதுணர்ந்து, தாங்கள் உணர்ந்ததை,

---

4. அணையா விளக்கு; பக். 25, 66
5. மேற்படி ப. 65

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" (புறம் 192)

"பெரிதே உலகம் பேணுநர் பலரே" (புறம் 207)

"எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" (புறம் 206)

"யாதானும் ஊராமால் நாடாமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு" (குறள் 397)

என்று உயர்ந்த சொல் வடிவில் உரைத்துள்ளமையைச் சங்க கால நூல்களில் கண்டுமகிழ்ந்தார். இவ்வுயர்பண்பு தமிழர்க்கு எங்ஙனம் அமைந்தது என்று எண்ணிப் பார்த்த அடிகளார்,

"யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயர்ந்த'

அதன் பயனாகவும், மொழிபெயர் தேயங்கட்கும் கடல் கடந்து வேற்றுநாடுகட்கும் சென்றதன் பயனாகவும், மூவேந்தருடன் குறுநில மன்னர்க்கும் பிறநாட்டு மன்னர்க்கும் உண்டான தொடர்பின் பயனாகவுமே அவர் இத்தகைய பரந்து விரிந்த மனப் பான்மையையும் நோக்கங்களையும் பயின்றறிந்தும் வளர்த்தும் கொண்டனராதல் வேண்டும்"[6] என்று விளக்குகின்றார்.

## இக்காலத் தன்மை

எக்காலத்தும் எந்நாட்டவர்க்கும் இலக்கியம் சுவை அளிக்க வல்ல தன்மையை 'முக்காலத்திலும் ஒத்தியல் தன்மை' என்று பண்டையாசிரியரின் சொற்றொடராலும், இக்காலத்திற்கேற்ப 'இக்காலத் தன்மை' (Modernity) என்றும் குறிப்பிடும் அடிகளார், இத்தன்மையைச் சங்க இலக்கியத்தின் மற்றொரு சிறப்பியல்பாகக் கருதுகின்றார். அதனாலேயே சங்க இலக்கியங்கள் என்றும் குன்றா இளமையுடன், புதுமையும் பசுமையும் அழகும் பொலிவும் புதிய கருத்தும் பெற்று இன்பம் பெருக்கி வருகின்றன என்பார் அவர்.[7]

## பொறை

ஒருலக மனப்பான்மையும் அதற்கு அடிப்படையான பரந்த நோக்கமும், கண்ணோட்டம் அல்லது பொறை (Tolerance) என்னும் மற்றொரு சிறப்பியல்புக்கும் காரணமாயின.

---

6. தனிநாயக அடிகள், தமிழ்த்தூது, ப. 31
7. மேற்படி

"நம் தொகை நூல்கள் பல்வேறு சமயக் கோட்பாடுகளையும் அரசியல் தத்துவக் கொள்கைகளையும் தம்முள் முரண்படும் பழக்க வழக்கங்களையும் காட்டுவன. இச் செய்யுட்களை இயற்றியவர் ஒரு குலத்தார் அல்லர்; ஓர் இனத்தார் அல்லர்; ஓர் இடத்தார் அல்லர்; அந்தணர் சிலர்; அரசர் பலர்; வணிகர் பலர்; வேளாளர் பலர்; இரவலரும் உளர்; புரவலரும் உளர்; ஆண்பாலாரும் உளர், பெண்பாலாரும் உளர். ஐந்திணைத் தலை மக்களும் உளர்; நிலைமக்களும் உளர், வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டனர் உள்ளனர்; வெவ்வேறு வாழ்க்கை நிலை கொண்டவர் உள்ளனர். கூடல், உறையூர், கருவூர் முதலான பேரூர்களில் பிறங்கியவர் உளர்; அரிசில் ஆலங்குடி முதலாக, வெள்ளூர் வேம்பற்றூர் ஈறாகச் சிற்றூர்களில் திகழ்ந்தவரும் உளர்"[8]

எனச் சங்க காலப் புலவர்களுக்கிடையே பிறப்பாலும் இடத்தாலும் தொழிலாலும் நிலையாலும் நிலவிய வேறுபாடுகளைத் தொகுத்துக் கூறும் அடிகளார், இவற்றின் நடுவிலும் பொறையுடைமை நிலவிய பாங்கினை வியந்து போற்றுவார்.

### பக்தியின் மொழி

இவ்வாறே தமிழ், பக்தியின் மொழியாக விளங்கும் தன்மையை

'யாம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல; நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்'

என்னும் பரிபாடல் வரிகள் போன்றவற்றால் விளக்குவார்.

### நற்பண்புகள்

போரும் தூதும் வாணிகமும் விளங்கிய தமிழ்நாட்டில் நேர்மை, நீதி, நடுவுநிலைமை, உண்மை, வீரம் போன்ற நல்லியல்புகள் தலைசிறந்து நிற்றலை அடிகளார் பாராட்டுவார்.[9] 'இரக்கம், அன்பு என்பன செல்வமும் வீரமும் உடையவர்பால் சுரக்கும் இரு பண்புகள்' என்பது அடிகளார் எண்ணம்.

இயற்கை அழகை எடுத்துக் கூறும்பொழுது தமிழ்ப்புலவர் நீதியை அடிப்படைக் கருத்தாகக் காட்டுவதைத் தம் உரையில் சுட்டுகின்றார் அடிகளார். 'மலர்கள் நறுமணம் கமழுதற்கும், ஆற்றிடைநீர் தெளிவுற்றிருப்பதற்கும், இன்னும் இவை போன்ற

8. மேற்படி ப. 32, 9. மேற்படி ப. 35

இயற்கை நலங்கள் எல்லாம் சிறப்பதற்கும் மன்னன் செங் கோன்மையே காரணம் என்பர் சங்க நூற்புலவர் பெருமக்கள்'[10] என வியக்கின்றார் அவர்.

**கல்வியே காரணம்**

நிறையும், நீதியும் சங்க காலத்தில் நிறைந்து நிலவுவதற்குக் கல்வியறிவே அடிப்படைக் காரணம் என்பார் அடிகளார்.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை (குறள் 400)

என்று வள்ளுவரும்,

கல்வி தறுதண் இசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே (தொல். 1203)

என்று தொல்காப்பியரும்,

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே (புறம் 132)

என்று பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும் இக் கருத்தை எடுத்தோதியிருப்பதை அடிகளார் குறிப்பிடுகின்றார்.

> "இலக்கியம் வளர்ந்தெழுவதற்கு நிலைக் களனாக உதவும் பொருள்கள் மக்களும் இயற்கையுமே. இவ்விரு பகுதிகளையும் பிரித்து, இயற்கையை விடுத்து மக்களைப் பற்றியும், அல்லது, மக்களை விடுத்து இயற்கையைப் பற்றியும் புலவர் பாடுவரேல், அவ்விலக்கியம் குறைவுள்ள இலக்கியமாகவே விளங்கும்... தமிழ்ப் புலவரோ தம் புலமைத் திறனைக் காட்டுதற்கு முதற் பொருளாக மக்களையும் துணைப்பொருளாக இயற்கையையும் எடுத்துக் கொண்டனர். இயற்கையைத் தானும் தமிழ்ப் புலவர் கையாண்ட முறையில் வேறு எம்மொழிப் புலவரும் கையாண்டிலர்"[11]

என்று அடிகளார் கூறும் வரிகளில் சங்ககாலப் புலவர்கள் இயற்கை யோடு இயைந்த மனிதரைப் பற்றிப் பாடியதை நாம் எளிதாக உணரலாம்.

**தீராத தாகம்**

இயற்கையை ஆழ்ந்து ஆராய்ந்தறிவதுடன் மக்கள் உள்ளத்தை யும் மிக நுண்ணியதாக ஆய்ந்து, உளநூல் பயிற்சி மிக்கோராயும்,

10. மேற்படி ப. 37 11. மேற்படி பக். 44-45

உள்ளதை உள்ளவாறே கூறும் இயல்புடையாராயும் சங்கப்புலவர் திகழ்ந்த பெருமையைத் தம் உரையில் அடிகளார் விளக்குகின்றார்.

இத்தகைய பெருமைமிக்க தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பு, தமிழ்க் கலை, தமிழ் வரலாறு முதலியவற்றை உலகில் பரப்ப வேண்டும் என்பது அடிகளாரின் பெருவிருப்பம். அவ்வாறு உலகில் பரப்பி,

> "ஹோமரின் ஒடிசியையும் வெர்ஜிலின் இலியதையும் மக்கள் போற்றுவதுபோல, இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தை—ஒப்புயவர்வற்ற முத்தமிழ்த் தொடர்நிலைச் செய்யுளை—உலகம் போற்றுமாறு நாம் செய்தல் வேண்டும். கொன்பூசியஸ், செனக்கா முதலாய நீதிநூல் ஆசிரியர்களை உலக மாந்தர் எங்ஙனம் அறிந்து படிக்கின்றனரோ அங்ஙனமே திருவள்ளுவரையும் அவர்கள் அறிந்து படிக்குமாறு நாம் செய்வித்தல் வேண்டும். சாபோ, எலிசபெத் பிரௌனிங், ஷேக்ஸ்பியர் முதலானோரின் காதற்பாக்களை மக்கள் காதலித்துப் படித்து இன்புறுவதே போல, நம் அகத்துறை இலக்கிய நூல்களையும் அன்னார் படித்து இன்புறும் புதிய நாள் உதிக்க வேண்டும். உலக இலக்கியத் திரட்டு (Anthology of World Classics) என்னும் பெருந்தொகை நூல்களில் நம் இலக்கிய நூல்களும் இடம்பெறும் பெருமை அடைவித்தல் வேண்டும். மேற்றிசைக் கண்ணும் கீழ்த்திசைக் கண்ணுமுள்ள பல்கலைக் கழகங்கள் தமிழ்க் கலைகளின் தனித்தன்மையை உலகிற்கு உணர்த்துமாறு செய்வித்தல் வேண்டும்"[12]

என்று தாம் விரும்புவதை அடுக்கிக் கூறுவார் அடிகளார். சங்க இலக்கியங்களின் சிறப்பியல்புகளை அடிகளார் தெளிவாக உணர்ந்து தம் சிந்தனையில் இருத்தியதாலேயே இவ்வாறு அவரால் கூற முடிந்தது.

**மலரும் மாலையும்**

இக்கட்டுரை 'தமிழ் ஓசை' (தொகுதி 2, 1952)யில் வெளிவந்ததாக அறிகின்றோம். ஆயினும் இத்'தமிழ் ஓசை' பற்றி எதுவும் அறிவதற்கில்லை. அது இந்தியாவில் வெளியிடப்பெற்றதா, இலங்கையில் வெளியிடப்பெற்றதா என்பதைக் கூட அறிந்திட இயலவில்லை.

---

12. மேற்படி பக். 49-50

### இயற்கை வாழ்க!

தமிழர் தங்கள் நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் எனப் பிரிக்கும்பொழுது அவற்றுக்கு இயற்கை சார்ந்த பெயர்களை இட்டதை இக்கட்டுரையில் போற்றுகின்றார் அடிகளார். பன்னிரு ஆண்டுகட்கு ஒரு முறை மலை நாட்டில் பூக்கும் குறிஞ்சிப் பூவைக் கொண்டு மலையும் மலை சார்ந்த இடமும், கோடைக் காலத்தில் இலைகளும் கிளைகளும் வாடாமல் நிற்கும் பாலை மரத்தைக் கொண்டு பாலைத் திணையும், வெண்மை நிறமும் சிறந்த மணமும் கொண்ட முல்லை மலரைக் கொண்டு காடும் காடு சார்ந்த இடமும் பெயர் பெற்று விளங்கும் பெற்றிமையை அடிகளார் விளக்குகின்றார்.[13]

தமிழ்ப் புலவரின் உவமைகள் பல வியக்கத் தக்கன. பாடினி யின் சிவந்த மெல்லிய உள்ளங்கால், வேட்டைக்குச் சென்று நீர் வேட்கை மிகுந்த களைப்புற்ற நாயின் நாவினை ஒக்கும் என்று ஒரு புலவரும், வாகைப்பூ மயிலின் கொண்டையை ஒத்தது என்று மற்றொரு புலவரும், நாரை 'பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன பவளக் கூர்வாய்' உடையது என்று பிறிதொரு புலவரும், காந்தள் இதழ்கள் குவிந்திருப்பது இறை வழிபாடு செய்யும் இனிய மகளிரின் கை போல உள்ளது என்று இன்னொரு புலவரும் கூறியுள்ளவற்றைக் கற்றறிந்த அடிகளார்,

> "மலர்களையும் மரங்களையும் செடிகளையும் கொடி களையும் எண்ணிறந்த இயற்கைப் பொருள்கள் பிறவற்றையும் தத்தம் மதி நுட்பத்தினால் கையாண்டு அவர் கூறியுள்ள உவமைத் திறன்கள் சிறப்புடையன"[14]

என்பார்.

### மலர்களும் வாழ்வும்

மலர் வழிபாடு திராவிடப் பண்பாட்டுக்கு உரியது என்பது அடிகளாரின் எண்ணம். முருகப் பெருமான் வழிபாடு இயற்கை யுடன் கலந்த வழிபாடாக இருப்பதையும், இயற்கை அழகு தோன்றுமிடங்களே முருகப்பெருமான் விரும்பும் இடங்கள் என்பதையும் குறிப்பிடும் அடிகளார்,

> "முருகனை வழிபடுவோர் சிவந்த மலர்கள் கொண்டே வழிபட்டு வந்தனர். கடம்பின் மலர்மாலை அணிபவன்

---

13. மேற்படி பக். 53-55  14. மேற்படி ப, 59

அவன். வெட்சி மாலையும் விரும்புவான். அவனை வழிபடும் ஆடவரும் மகளிரும் அவனைப் போலச் சிவந்த மலர்களை அணிந்தே வருவர். இவ்வாறே முல்லை நிலத்தில் திருமாலை முல்லை மலர் கொண்டு வழிபட்டு வந்தனர். நிலத்தின் தெய்வத்தை வழிபடுதற்கு நிலத்தில் தோன்றிய மரம் செடிகளின் மலர்களையும் தழைகளையும் கையாண்டனர்''[15]

என்று தமிழர்தம் தெய்வ வழிபாடு இயற்கையோடு இயைந்ததாக விளங்கிய முறைமையினை விளக்குவார்.

''மெல்லிணர்க் கொன்றையும் மென்மலர்க் காயாவும்
புல்லிலை வெட்சியும் பிடவும் தளவும்
முல்லையும் குருந்தும் கோடலும் பாங்கரும்
கல்லவும் கடத்தவும் கமழ்கண்ணி மலைந்தனர்''

என்று கலித்தொகையிலும்,

''அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவும்
தலைநாட் செருந்தி தமனிய மருட்டவும்
கடுஞ்சூல் முண்டகம் கதிர்மணி கழாஅலவும்
நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவும்''

என்று சிறுபாணாற்றுப்படையிலும் வரும் வரிகளில் தமிழ் மக்கள் மலர்களுக்கும், மரங்களுக்கும் இட்ட அழகிய பெயர்கள் ஓசையினிமையுடன் அமைக்கப்பட்டிருப்பதை அடிகளார் சுட்டிக் காட்டி மகிழ்கின்றார்.

அகவொழுக்கத்துக்கும் புறவொழுக்கத்துக்கும் தமிழர்கள் மலர்களையும் மாலைகளையும் பயன்படுத்திய முறைமையினைக் கோடிட்டுக் காட்டும் அடிகளார்,

''சங்க இலக்கியத்தில் அகத்துறை புறத்துறைகளில் உவமிக்கப்படும் மலர்களை இதுகாறும் நன்கு ஆராய்ந்தார் அல்லர் தமிழ் அறிஞர். அவற்றைத் தக்கவாறு ஆராய்ந்துணர்ந்து பண்டைத் தமிழ்ச் செய்யுட்களை இன்னும் பலர் பன்மடங்கு சுவை நுகரச் செய்வதே தமிழ்நூலும் செடிநூலும் கற்ற அறிஞர் பெருங்கடமையாகும்''[16]

என்று எதிர்காலத்தில் இத்துறையில் ஆற்றப்பட வேண்டிய ஆய்வுப் பணிகளையும் குறித்துக் காட்டுகின்றார்.

---

15. மேற்படி ப. 61
16. மேற்படி ப. 68

**காப்பியக் கவிஞர் வீரமாமுனிவர்**

1948ஆம் ஆண்டில் எழுதப்பட்டதாக நூலில் குறிக்கப் பட்டிருக்கும் இக்கட்டுரை எந்நூலில் அல்லது இதழில் இடம் பெற்றிருந்தது என அறியக் கூடவில்லை.

பெரும்புகழ் பெற்ற இலத்தீன் மொழிக் கவிஞர் வெர்ஜில் பிறந்த மாந்துவா மாவட்டத்திலேயே வீரமாமுனிவரும் பிறந்தார் என்பதைச் சுட்டித் தம் கட்டுரையைத் தொடங்கும் அடிகளார், பெரும்பாலும் பரவலாக அறியப்பட்ட செய்திகளையே இக் கட்டுரையில் தொகுத்துத் தருகின்றார்.

ஆயினும் கட்டுரையின் இறுதிப் பகுதியில் சில புதிய செய்தி களை அவர் வழங்குகின்றார்.

வெர்ஜில் என்னும் இலத்தீன்மொழிக் கவிஞரையும் தாந்த்தே, தாஸ்ஸோ முதலிய இத்தாலிய மொழிக் கவிஞர்களையும் தமிழ் அன்னைக்கு அறிமுகப்படுத்திய பெருமை வீரமாமுனிவருடையது எனக் கூறும் அடிகளார், தாஸ்ஸோ இயற்றிய 'எருசலேமின் விடுதலை' (Gerusalemme Liberata) தேம்பாவணியில் இருப தாவது படலத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பதைச் சுட்டுகின்றார்.[17] அவ்வாறே முனிவர் தாம் இயற்றிய 'தொன்னூல் விளக்கம்' என்னும் இலக்கண நூலில், மேலை நாட்டுக் கிரேக்கரும் உரோமரும் யாத்த அணி முறையையும் சொல்வன்மை இலக்கணத் தையும் பயன்படுத்தியுள்ளார் எனக் குறிப்பிடுகின்றார்.[18]

அவ்வாறே தாந்த்தே இயற்றிய Divina Commedia என்னும் இலக்கியத்தில் காணப்படும் சில கருத்துக்களை

''உருவில்லான் உருவாகி உலகிலொரு மகனுதிப்பக்
கருவில்லாக் கருத்தாங்கிக் கன்னித்தாய் ஆயினையே'',

''உந்தையை ஈன்று நீ ஒருவர்க் கீங்கரும்
வந்தையோ டன்னையும் மகளும் ஆயினை,
கனியரும் பயனொடு கலந்த பூவினைத்
தனியருள் கன்னியும் தாயும் ஆயினை''

என்னும் இடங்களில் வீரமாமுனிவர் அமைத்துப் பாடியிருக் கின்றார் என்பார்[19] அடிகளார்.

---

17. மேற்படி ப. 81, 18. மேற்படி ப. 73
19. மேற்படி ப. 82

### தமிழ் நாட்டின் ஆசிரியர் வேதநாயகம் பிள்ளை

இக்கட்டுரையில் வேதநாயகனாரைப்பற்றிப் பலரும் அறிந்த செய்திகளையே அடிகளார் தொகுத்துக் கூறுகின்றார். புதிய செய்திகள் இக்கட்டுரையில் இடம்பெற்றிருப்பதாகத் தெரியவில்லை.

### தமிழரும் அவர்தம் கவின்கலைகளும்

இக்கட்டுரையைப் பற்றியும் முழுமையாக அறிவதற்கில்லை. 1953ஆம் ஆண்டில் இலங்கை மட்டக் களப்பில் வாலிபர் சங்கத்தார் தமிழ்விழா ஏற்பாடு செய்ததாகவும், அவ்விழாவில் 'தமிழ்மக்களும் அவர்களின் கலைகளும்' என்னும் பொருள்பற்றி அடிகளார் உரையாற்றியதாகவும் அடிகளாரின் நண்பர் வித்துவான் எஃப். எக்ஸ். ஸி. நடராசா எழுதியுள்ளார்.[20] இவ்வுரையே 'தமிழரும் அவர்தம் கவின்கலைகளும்' என்னும் தலைப்பில் 'தமிழ்த்தூது' நூலில் இடம்பெற்றது என நாம் நம்புதற்கு இடமுண்டு. அடிகளார் தம் முக்கிய விரிவுரைகளை (ஐரோப்பியரைப் போல) எழுதிப் படித்து வழங்கும் பழக்கமுடையவர் என்பதை நோக்கும் போது இந்நம்பிக்கை வலுப் பெறுகின்றது. மேலும், இக்கட்டுரை முதலில் உரையாக வழங்கப்பட்டதே என்பதை அகச் சான்றுகளாலும் உணரலாம்.

### அறுபத்துநான்கு மட்டுமா?

'எண்ணெண் கலையும் இசைந்துடன் போக' என்னும் சிலப்பதிகார வரி 'ஆய கலைகள் அறுபத்து நான்கு' என்பதைச் சுட்டுவதைத் தம் கட்டுரையில் காட்டும் அடிகளார், தமிழ் நூல்களில் அறுபத்துநான்கு கலைகளையும் வெவ்வேறு முறையில் பெயரிட்டுக் கூறுவதையும் குறிக்கின்றார். வாழ்க்கையில் கவின் கலைகள் இடம் பெற்றிருப்பதோடு,

> "எங்கு அனுபவம் உள்ளதோ அங்குக் கலையும் இருத்தல் கூடும். அழகுடன் சேர்ந்த அனுபவமே கலையாக மாறுகின்றது. செய்யுள் இயற்றுவதும் ஒரு கலை, செப்பமாய் நெய்யிட்டு முடிசீவுவதும் ஒரு கலை. கல்லினைச் செதுக்கி, உருவாக்குவதும் ஒரு கலை. பென்சிலைச் சீவுவதும் ஒரு கலை. ஓவியம் எழுதுவது ஒரு கலை; ஒப்பாரி பாடுவதும் ஒரு

20. அணையாவிளக்கு, ப. 25

கலை. இசைபாடுவதும் ஒரு கலை, வசை பேசுவதும் ஒரு கலை. யாழினை மீட்டுவதும் ஒரு கலை; யாழ்ப்பாணக் கறிகள் சமைப்பதும் ஒரு கலை. நடனம் ஆடுவதும் ஒரு கலை; நகைச்சுவை வளர்ப்பதும் ஒரு கலை. கோயில் அமைப்பதும் ஒரு கலை, கோனார் பால் கறப்பதும் ஒரு கலை''[21]

என்று தற்காலத்தில் கலைகள் இன்னும் பெருகியிருப்பதனை அடிகளார் சற்றே நகைச்சுவையுடன் விளக்குவார்.

### தவறான தமிழாக்கம்

Fine Arts என்னும் ஆங்கிலத் தொடரைத் தமிழில் 'நுண்கலைகள்' எனத் தவறாக மொழி பெயர்ப்பதைச் சுட்டும் அடிகளார், இப்பொருளை விளக்கும் பிரெஞ்சு மொழித் தொடரையும் இத்தாலிய மொழித் தொடரையும் சான்றாகக் காட்டி, 'கவின் கலைகள்' (அழகுக் கலைகள்) என வழங்குவதே சாலவும் பொருந்தும் என்கிறார்.

### வளர்ச்சியும் தளர்ச்சியும்

தமிழகத்தில் முற்காலத்தில் பலவகைக் கலைகளும் வளர்ந்து ஏற்றம் பெற்றிருந்த நிலை குறித்து வியப்பும், அக்கலைகள் இன்று குன்றியிருக்கும் நிலை குறித்து வருத்தமும் கொள்கிறார் அடிகளார்.

### சமயமும் கலையும்

தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் சமயத் தொடர்புடையன வாக அமைந்தமை போலவே கலைகளின் வளர்ச்சிக்கும் தமிழ் நாட்டில் பண்டுதொட்டு வரும் சமயங்களே காரணம் என்பார் அடிகளார்.

> ''நம் இலக்கியத்துக்கும் மொழிக்கும் பக்திச்சுவை எவ்வாறு இயல்பாயுள்ளதோ, அவ்வாறே நம் கலைகள் பத்தியின் விளைவால் தம் அருங்கனிகளைக் கொடுத்திருக்கின்றன. தமிழ்மொழி பத்தியின் மொழியாயின், தமிழ்க் கலைகளும் பத்தியின் கலைகளே''[22]

என அவர் தெளிவுபடக் கூறுகின்றார்.

---

21. தனிநாயக அடிகள், தமிழ்த்தூது; பக். 96-97
22. மேற்படி ப. 113,

**மிகச் சிறந்தவை**

> "நம் கலைகள் உலக வரலாற்றிலேயே மிகவும் சிறந்தவை. பாரெங்கும் தேடிப் பார்த்தாலும் நம் சிற்பத்திற்கும் படிவ உருவக் கலைக்கும் நாட்டியத்திற்கும் இணையான கலைகளைக் காண்பது அரிது"[23]

என்பது அடிகளாரின் நம்பிக்கை.

இயல்வாய்மை (Realism) தமிழ்க் கலைகளின் இயல்பு என்பது அடிகளார் கருத்து.

> "தமிழர் பண்பாட்டிற்கும் பிறர் பண்பாட்டிற்கும் இஃதோர் அடிப்படையான வேற்றுமை. தமிழ்க் கலைகள் இயல்வாய்மையைத் தழுவி வளர்ந்தவை; இயற்கையுடன் நெருங்கிய ஒற்றுமையுள்ளவை. இவ்வுண்மை நம் கட்டடக் கலையில் மிகத் தெளிவாகின்றது. நாட்டியத்திலோ பெரிதும் புலனாகின்றது. ஏன்? தமிழ்ப் பெண்கள் அணியும் அணிகலன்களின் பெயர்களையே பாருங்கள் : தோடு, இலை, அரசிலை, குழை ஓலை, கொந்தளவோலை, கொடி, தாலக்கொடி இவை யாவும் இயற்கையுடன் ஒற்றுமைப்பட்ட பெயர்கள். நம்மவர் செம்பினாற் செய்த ஆடவல்லார் உருவங்களின் தத்துவம் எத்துணை இயல்வாய்மையுடையது!"[24]

எனத் தமிழ்க் கலைகளில் இயல்வாய்மை இழைந்து செல்வதை அவர் விளக்குவார். இக்காலத்தில் தமிழ்க் கலைகள் அனைத்தும் மிக்க தாழ்நிலையுற்றிருப்பதால் அவற்றின் மறுமலர்ச்சி இன்றியமையாது வேண்டப்படுவதாகும் என அவர் வலியுறுத்துகின்றார்.

**தமிழ் கூறும் நல்லுலகம்**

தமிழ்ப்பண்பாடு உலகின் பல்வேறு நாடுகளில் பரவியிருப்பதைப் பற்றி எழுதப்பெற்ற இக்கட்டுரை எந்நூலில் அல்லது இதழில் வெளியானது என்பதை அறியக் கூடவில்லை. 1955ஆம் ஆண்டில் ஆசியா நிறுவனத்தின் நிதியுதவி பெற்று மலாயா, இந்தோனேசியா, கம்போடியா, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு அடிகளார் ஆய்வுப் பயணம் மேற்கொண்டதாக அறிகின்றோம்.[25] அப்பயணத்தின் பின்னரே இக்கட்டுரை எழுதப் பட்டிருக்க வேண்டுமென்று அகச் சான்றுகளால் நாம் அறியலாம்.

---

23. மேற்படி
24. மேற்படி பக். 113-114
25. அணையாவிளக்கு; ப. 'க'

இக்கட்டுரை 'தமிழ்த்தூது' நூலின் நான்காம் பதிப்பில் மட்டுமே இடம் பெற்றுள்ளது என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

**சுமத்திரா**

இந்தோனேசிய நாட்டுச் சுமத்திராவில் வாழ்ந்து வரும் 'காரோபட்டாக்' வகுப்பினரின் உட்பிரிவினராகிய 'சிம்பிரிங்' என்போர் தம்மைச் சோளியர், சேரர், பாண்டியர், கலிங்கர் என்று வகுத்திருக்கின்றனர். சாவகத்தில் (ஜாவா தீவில்) 'தியங்' சமவெளியிலுள்ள கோயில்கள் பலவும், 'பனத்தரான்' கோயிலும், கணபதி அகத்தியரின் கணக்கற்ற சிலைகளும் திராவிட மக்களின் கட்டடச் சிற்பக் கலைகளை ஒட்டியே அமைக்கப்பெற்றவை. கபல் (கப்பல்), வாடை, சுக்கு, இஞ்சி, கஞ்சி, கொத்துமல்லி, குதிரை, கூடை, பெட்டி, பிட்டு, தாலி, அம்மா, அக்கா, மாமா, தம்பி போன்ற பல தமிழ்ச்சொற்கள் இந்தோனேசிய மொழியில் வழங்கிவருகின்றன. இவ்வாறு இந்தோனேசிய நாட்டில் தாம் கண்ட தமிழ்த் தொடர்புகளை இக்கட்டுரையில்[26] அடிகளார் விளக்குகின்றார்.

**வியட்நாம்**

வியட்நாமில் துரானில் இருக்கும் பழம் பொருட்சாலையில் உள்ள நந்திகள், பல மாவட்டங்களில் உள்ள சிவலிங்கம் அமைந்த கோயில்கள், அம்கோர்ட்வாட் அம்கோர்தொம் என்னும் கிரேமர் பெருநகரிலும் கட்டடத்திலும் சுவர்கள்மீது செதுக்கப்பட்டிருக்கும் இராமாயண மகாபாரத வரலாற்றுச் செய்திகள் ஆகியவற்றைக் கண்டு அடிகளார் வியப்புற்றார். அங்குள்ள கட்டடங்கள், சிலைகள், யானை உருவங்கள் ஆகிய பலவற்றில் பல்லவர் கட்டடச் சிற்ப முறைகளைக் கண்ட அடிகளார், க்ரேமேர் இனத்தில் அரசரின் பெயர்கள் வர்மன் என்னும் விகுதியைக் கொண்டிருப்பதைக்கண்டு வியந்தார். அம்கோர் என்னும் சொல் நகர் என்னும் திராவிடச் சொல்லின் திரிபு என்பது அடிகளாரின் கருத்து.

**தாய்லாந்து**

தாய்லாந்தில் இன்றும் பிராமணர்கள் வாழ்ந்து வருவதையும் அங்குள்ள கோயில் அமைப்பும் வழிபாடும் தென்னிந்தியக் கோயில் அமைப்புக்களையும் வழிபாட்டு முறைகளையும் தழுவி அமைந்ததாக அவர்களின் அரச குரு கூறியதையும் அடிகளார் அறிந்து மகிழ்ந்தார்.

---

26. தனிநாயக அடிகள், தமிழ்த்தூது; பக். 116-117

> "தம் மன்னரின் முடிசூட்டு விழாவில் பாடிவரும் செய்யுட்களை அவர்கள் பாடிய பொழுது தமிழ் என்று அறியாது அவர் பாடும் 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதியை' என்னும் திருவெம்பாவைப் பாட்டைக் கேட்டுப் பெருவியப்பு எய்தினேன்".[27]

என்று அடிகளார் எழுதுகின்றார்.

**ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள்**

அமெரிக்க ஐக்கிய நாட்டில் எமெனோ, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பரோ, பாரீஸ் நகரில் ஃபீலியோசா, மெல் ஜெர்மனியில் லேமன், செக்கோஸ்லாவாக்கியாவில் சுவலபில், லெனின் கிராடில் ரூடின், இலண்டன் பல்கலைக்கழகத்தில் மார், ஆஷர், மாஸ்கோப் பல்கலைக்கழகத்தில் ஆந்திரனோவ், பியர்த் கோஸ்கீ என உலகின் பல்வேறு நாடுகளிலும் பலர் தமிழ் ஆய்வில் ஈடுபட்டு வருவதைத் தம் கட்டுரையில் அடிகளார் தொகுத்துக் கூறுகின்றார்.

தமிழ்கூறு நல்லுலகம் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களை மட்டுமல்ல, தமிழ் ஆய்வில் ஈடுபட்டிருக்கும் பிறநாட்டு அறிஞர் பெருமக்களையும், தமிழரோடு தொடர்புள்ள கலைகளைக் கொண்ட நாடுகளையும் தன்னகத்தே கொண்டது என்பது தனிநாயகம் அடிகளாரின் எண்ணம் போலும்!

## 2. ஒன்றே உலகம்

பலமுறை உலகச் சுற்றுப் பயணங்களை மேற்கொண்ட அடிகளார் ஆங்காங்குத் தாம் கண்டனவற்றையும் கேட்டனவற்றையும் தமிழ் மணம் கமழும் இனிய கட்டுரைகளாக வரைந்தார். தாம் சென்ற நாடுகளிலுள்ள புதுமைகளோடு, சிறப்பாகத் தமிழும் தமிழரும் பற்றிய செய்திகள் அந்நாடுகளில் உள்ளனவா என ஆராய்ந்து அவற்றைத் தவறாது தம் கட்டுரைகளில் குறிப்பிட்டார். இக்கட்டுரைகளைத் தொகுத்து 1963ஆம் ஆண்டில் சென்னை பாரிநிலையத்தின் வாயிலாக 'ஒன்றே உலகம்' என்னும் நூலாக அடிகளார் வெளியிட்டார். பல திருத்தங்களோடு இந்நூலின் இரண்டாம் பதிப்பை 1974ஆம் ஆண்டில் சென்னை தேநோபிலி ஆராய்ச்சி நிலையத்தின் வாயிலாக அவர் வெளியிட்டார்.

---

27. மேற்படி ப. 119

'யாதும் ஊரே' என்னும் சங்க கால இலக்கியத் தொடரைத் தம் வாழ்வின் கோட்பாடாகக் கொண்டொழுகிய அடிகளார் தம் உலகச் சுற்றுப் பயண நூலுக்கு அத்தொடரைத் தழுவி 'ஒன்றே உலகம்' என்று பெயரிட்டது பொருத்தமே. இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்ப வேறுபடும் மனித குலத்தின் எண்ணங்களையும் பழக்க வழக்கங்களையும் சமுகப் பண்பாடுகளையும் விளக்கும் இந்நூலில் அடிகளார் உலக ஒருமைப்பாட்டையும் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றார்.

### நோக்கம்

பழந்தமிழ் நூல்களைத் தேடுதல், தமிழ்ப் பண்பாட்டுத் தொடர்புள்ள இடங்களுக்குச் சென்று ஆராய்தல், தமிழ்மக்கள் குடியேறி வாழும் நாடுகளுக்குச் சென்று ஆராய்தல், தமிழாய்வில் ஈடுபட்டிருக்கும் தமிழரல்லாத அறிஞர்களைச் சந்தித்தல், தமிழின் சிறப்பறியாத பிறநாட்டு அறிஞர்களுக்குத் தமிழில் தொன்மையையும் சிறப்பியல்புகளையும் எடுத்துரைத்தல் என்னும் பல நோக்கங்களுடன் அடிகளார் உலகச் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டார் என்பதை இந்நூல் நமக்கு உணர்த்துகின்றது. அத்துடன் தாம் சென்ற நாடுகளின் சிறப்பியல்புகளையும் பழக்க வழக்கங்களையும் வரலாற்றையும் அடிகளார் நமக்கு விளக்குகின்றார்.

### ஐரோப்பாவில் பழந்தமிழ் நூல்கள்

#### பாரீசு

பாரீசு நகரிலுள்ள தேசிய நூலகத்தில் ஏறக்குறைய ஆயிரம் பழைய தமிழ் ஏடுகளும் கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன என்றும், 'அவற்றுள் சில இந்தியாவிலேயே கிடைக்காத படிகளும் ஏடுகளுமாம்'[28] என்றும் அடிகளார் குறிப்பிடுகின்றார். பண்டைக் காலத்தில் முதல் முதலாக ஐரோப்பியர் யாத்த இலக்கணங்களும் கையெழுத்துப் பிரதிகளும் இந்நூலகத்தில் இருப்பதைக் குறிப்பிடுவதோடு, அங்குச் சரளிப் புத்தகம், மாணிக்கவாசகர் பிள்ளைத் தமிழ், புதுச்சேரி அம்மன் பிள்ளைத்தமிழ் போன்ற நூல்களையும் கண்டதாகத் தெரிவிக்கின்றார்.

#### வத்திக்கான்

தமிழ்நாட்டில் முதல் முதல் அச்சிடப்பெற்ற திருத்தொண்டர் திருமலர் (Flos Sanctorum) என்னும் அரிய நூலை அடிகளார் வத்திக்கான் நூலகத்திலேயே கண்டெடுத்தார். அந்நூலின்

28. தனிநாயக அடிகள், ஒன்றே உலகம், ப. 96

பெயரைக் குறிப்பிடும் முன் அட்டை முதலியவை கிடைக்கப் பெறாவிடினும் ஆசிரியர் ஸ்பானிஷ் மொழியில் இயற்றியிருந்த முன்னுரையையும் நூலின் உள்ளடக்கத்தையும் கொண்டே இந்நூல் Flos Sanctorumதான் என்று அடிகளார் துணிந்தார். இவ்வாறே பதினேழாம் நூற்றாண்டில் அந்தாம் ப்ரோயென்சா அடிகளார் தொகுத்த தமிழ்-போர்த்துகேய அகராதியையும் அடிகளார் வத்திக்கான் நூலகத்தில் கண்டார்.[29] அதனை முதல் உலகத் தமிழ் மாநாட்டின்போது (1966) அடிகளார் மீண்டும் பதிப்பித்து வெளியிட்டார்.

### போர்த்துக்கல்

போர்த்துக்கல் நாட்டில் அடிகளார் பல அரிய தமிழ் நூல்களைக் கண்டு மகிழ்ந்தார். 1554ஆம் ஆண்டில் உரோமை எழுத்தில் அச்சிடப் பெற்ற Cartilha என்னும் தமிழ் நூல், என்ரீக்கஸ் அடிகளார் போர்த்துக்கேய மொழியில் இயற்றிய தமிழ் இலக்கண நூலின் கையெழுத்துப்படி போன்ற அரிய நூல்களை லிஸ்பன் நகரில் அடிகளார் கண்டார்.[30]

### ஆலந்து

டச்சுக்காரர் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் ஆட்சி புரிந்த காலத்தில் தமிழ் நாட்டைப் பற்றிய பல குறிப்புகளையும் தம் நாட்டுக்கு அனுப்பினர் என்றும், அவை ஆலந்து நாட்டு நூலகங்களில் பாதுகாக்கப்பெற்று வருகின்றன என்றும் அடிகளார் தெரிவிக்கின்றார்.[31]

### பிறநாட்டுத் தமிழறிஞர்

#### சோவியத் நாட்டில்

சோவியத் ஒன்றகத்தில் தமிழ் ஆராய்ச்சி செய்து வந்த நால்வரை அடிகளார் நேரில் சந்தித்து மகிழ்ந்தார். திருக்குறளையும் சிலப்பதிகாரத்தையும் ரஷ்ய மொழியில் பெயர்த்துள்ள கிளாசோவ் (இவர் தம்மைக் கண்ணன் என அழைத்துக் கொள்வார்), தமிழ் இலக்கண நூலையும் வேறு திராவிட மொழிகளின் இலக்கண நூல்களையும் ரஷ்ய மொழியில் இயற்றிய அந்துரோநோவ், தேவாரம் திருவாய்மொழி முதலிய இலக்கியங்களில் ஆய்வு செய்து பக்தி சித்தாந்தம் ஆகியவை பற்றி எழுதிய

---

29. மேற்படி பக். 129-130, 30. மேற்படி பக். 146-147
31. மேற்படி ப. 159

பியத்கோர்ஸ்கி, லெனின்கிராடு பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையில் சிறந்து விளங்குபவரும் தமிழ்-ரஷ்ய அகராதியைத் தொகுத்தவரும் தமிழரைப் போலவே தமிழ் பேச வல்லவருமாகிய ரூதின் என்னும் செம்பியன் ஆகிய நான்கு தமிழறிஞர்களையும் அடிகளார் ரஷ்யாவில் சந்தித்தார்.[32]

### ஜெர்மனி நாட்டில்

அவ்வாறே (கிழக்கு) ஜெர்மனியிலுள்ள மார்ட்டின் லூதர் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவரும், தாயுமானவர் பாடல்களையும் தேவாரத்தையும் செர்மன் மொழியில் பெயர்த்தவருமாகிய முனைவர் ஆர்னோ லேமன் என்பவரை அடிகளார் மாஸ்கோவில் சந்தித்து வருங்காலத்தில் ''இருவரும் தமிழ்த் துறையில் ஒத்துழைப்பதென்று'' ஒப்பந்தம் செய்தார்.[33] பத்தொன்பதாம் நூற்றாண்டினராகிய பிரடெரிக் ரூக்கர்ட் என்னும் ஜெர்மானியப் பெரும்புலவர் நான்கு மாதத்தில் தமிழைக் கற்று, மிகவும் பயனுள்ள இலக்கணத்தையும் அகராதியையும் யாத்து வழங்கிய செய்தியை அடிகளார் தம் ஜெர்மனிப் பயணத்தின்போது அறிந்து வியந்தார்.

### தமிழ்ப் பண்பாட்டுத் தொடர்புள்ள இடங்கள்

தாய்லாந்து, வியட்நாம், இந்தோனேசியா, கம்போடியா ஆகிய நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டுத் தொடர்புள்ள இடங்கள் மிகுந்து விளங்குவதை விளக்கித் 'தமிழ்கூறும் நல்லுலகம்' என்னும் கட்டுரையில் அடிகளார் வரைந்துள்ளதை முன்னரே கண்டோம்.

### வியட்நாம்

வியட்நாமில் போநகர் என்னும் குன்றின் மேல் உள்ள கட்டடங்களில் மாமல்லபுரத்துச் சிற்பக் கலைத் தொடர்பினையும், மீஷான் என்னுமிடத்தில் பல்லவ மன்னர்கள் கட்டிய கோயில்களின் பான்மையினையும், வியட்நாமின் கிழக்குப் பகுதியில் சாம்பர் கட்டிய தனிக் கோபுரங்களில் மாமல்லபுரக் கோபுர மரபினையும் அடிகளார் கண்டு வியந்தார்.

### பர்மா

பர்மாவிலுள்ள இரங்கூனில் தமிழர் ஏற்பாடு செய்த இரு பெரும் கூட்டங்களில் அடிகளார் சொற்பொழிவாற்றினார்.

---

32. மேற்படி ப. 63
33. மேற்படி

அங்குத் தமிழ்ப் புத்தகக் கடைகள், செய்தித் தாள்கள், பல்வேறு சமயக் கோயில்கள் ஆகியவற்றைக் கண்ட அடிகளார், அங்குள்ள தமிழ் மக்களின் இறந்த கால மாண்பையும் எதிர்கால அச்சத்தையும் பற்றி அறிந்தார். பண்டுதொட்டுப் பல நாடுகளுக்கும் சென்ற தமிழர்,

> "தம் இலக்கியங்களையும் பண்பாட்டையும் வரலாற்றையும் கலைகளையும் குடியேறிய நாடுகளின் மொழிகள் வாயிலாகப் புலப்படுத்தியிருந்தால், இன்று சில கீழ்த்திசை நாடுகளில் விரும்பப்படாத குடிகளாக உரிமையற்று வாழ வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது"[34]

என்று பர்மாத் தமிழர் நிலையைக் கண்டபோது அடிகளார் எண்ணினார்.

**இந்தோனேசியா**

இந்தோனேசியாவிலுள்ள சுமத்திரா, ஜாவா, களிமந்தான் ஆகிய தீவுகளுக்குக் கி. பி. முதல், இரண்டாம் நூற்றாண்டுகளில் சென்ற தமிழர் சிறு குடியிருப்புக்களை இப்பகுதிகளில் நிறுவியிருந்தனர் என்றும், மணிமேகலைக் காப்பியத்திலிருந்தும், இந்தோனேசியாவில் காணப்பெறும் வடமொழி தமிழ்க் கல்வெட்டுக்களிலிருந்தும் இக்குடியேற்றம் பற்றி அறியமுடிகிறது என்றும் அடிகளார் கூறுகின்றார்.[35] பணத்தைத் துணை என்றும், காப்பாளரைக் 'காவலர்' என்றும், கவியைத் 'தோழன்' என்றும், மதிப்பை 'நிலை என்றும், சுங்கவரியைச் 'சுங்கே' என்றும், கொடியைத் தாலி என்றும், இந்தோனேசிய மக்கள் வழங்குவதை அடிகளார் அறிந்தார். இந்தோனேசியாவில் இந்து சமயம் பரவியிருந்ததைப் பற்றி அறிந்த அடிகளார் பிரம்பனான் என்னும் இந்து ஆலயத்தைப் பற்றியும் நமக்கு அறிவிக்கின்றார். சிறுசிறு ஆலயங்களாக நூற்றைம்பது ஆலயங்கள் ஒரு பெரும் கோபுரத்தைச் சூழ்ந்து அங்கு அமைக்கப்பட்டுள்ளன. இராமாயண மகாபாரதத்துக் கதைகள் அவ்வாலயங்களில் சிற்ப வடிவில் செதுக்கப்பட்டுள்ளன என்றும், அங்குச் செதுக்கப்பட்டுள்ள தலைவரின் முகங்கள் இந்திய உயர்குலத்து மக்களை ஒத்து விளங்குகின்றன என்றும் அடிகளார் எழுதுகின்றார்.

ஜாவாவின் நடுப் பகுதியில் அமைந்திருக்கும் தீபெக் பீடபூமியில் பீமா கோயில், அர்ச்சுனன் கோயில் என அழைக்கப்படும்

34. மேற்படி ப. 218 35. மேற்படி ப. 225

கோயில்களையும், அகத்தியரும் சிவபெருமானும் ஏடுகளுடன் குருக்கள் வடிவில் காட்சியளிக்கும் சிலைகளையும் அடிகளார் கண்டார்.

இந்தோனேசியாவின் ஏனைய தீவுகள் பெரும்பாலும் இசுலாத்தைத் தழுவியிருக்க, பாலித் தீவு மக்கள் இந்து சமயத்தைத் தழுவியிருப்பது கண்டு வியந்தார் அடிகளார். பாலி மொழியில் கோயிலைக் 'கூயில்' என்னும் சொல்லால் அழைப்பதையும் அவர் அறிந்து தெரிவிக்கின்றார்.[36]

## மொரீஷஸ் தீவு

ஏழு இலட்சம் மக்களைக் கொண்ட மொரீஷஸ் தீவில் ஏறக் குறைய ஐந்து இலட்சம் மக்களைக் கொண்ட இந்திய வகுப்பினரும், அவர்களுள் ஒரு இலட்சம் தமிழ் மக்களும் வாழ்ந்து வருகின்றனர் இத்தீவில் பிரெஞ்சுப் பண்பும் ஆங்கிலப் பண்பும் கலந்த ஒரு கலப்புப் பண்பாடு இடம் பெற்றுள்ளது. புதுவை, தஞ்சைப் பகுதிகளிலிருந்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் தமிழர் மொரீஷஸில் குடியேறினர். 1810ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் மொரீஷஸ் தீவினைக் கைப்பற்றியபோது மொரீஷஸ் மக்கள் கையொப்ப மிட்டிருந்த விசுவாசப் பத்திரத்தில் சவிரிமுத்து, சின்னத்தம்பி, துரைச்சாமி, என்று பலர் தமிழிலேயே கையொப்பமிட்டிருந்ததை அடிகளார் கண்டார்.

இந்தியா விடுதலை பெற்றதும் மொரீஷஸ் போன்ற நாடுகளில் வாழும் இந்தியரிடையே கலையிலும் பண்பாட்டிலும் மறுமலர்ச்சி தோன்றி, பண்பாட்டு முறையில் முன்னோரின் பழக்க வழக்கங் களைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்னும் மனப் பான்மை வளர்ந்துள்ளமையையும், பெண்களிடையே புடவை அணியும் வழக்கம் பரவி வருவதையும் அடிகளார் நமக்குத் தெரிவிக் கின்றார்.

மொரீஷஸ் மக்கள் இந்தியாவைப்பற்றி அறிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டியதாக அடிகளார் குறிப்பிடுகின்றார். திரையரங்குகளில் திரைப்படத்தை நிறுத்திவிட்டு அதற்குப் பதிலாக விரிவுரையாற்றுமாறு தம்மைச் சில இடங்களில் அம்மக்கள் கேட்டுக் கொண்டதையும் அடிகளார் தெரிவிக் கின்றார். 'இந்தியப் பண்பாட்டின் சிறப்பு', 'மக்களின் உடன்

36. மேற்படி ப. 228

பிறப்பாளர் தன்மை' 'கல்வியின் நோக்கங்கள்' என்னும் தலைப்புக் களில் ஆங்கிலத்திலும், 'தமிழ்ப் பண்பாடும் இலக்கியமும்' பற்றித் தமிழிலும் அடிகளார் அங்கு உரையாற்றினார்.

மொரீஷஸின் பழைய வரலாற்றினை ஆராய்ந்த அடிகளார் 1861ஆம் ஆண்டில் அங்கு வெளியிடப்பெற்ற பிரெஞ்சுச் செய்தித் தாள்கள் தமிழ் எழுத்தில தமிழ் விளம்பரங்களைப் பதிப்பித்துள்ளன என்பதையும், 1968ஆம் ஆண்டில் ஒரு தமிழ்ச் செய்தித்தாள் அந்நாட்டில் பதிப்பிக்கப்பட்டது என்பதையும் குறிப்பிடுகின்றார்· அங்குள்ள தமிழ் மக்களிடையே சாதி வேற்றுமை இருப்பதையும் அடிகளார் வழியாக நாம் அறிகின்றோம்.

## 3. திருவள்ளுவர்

சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளை தம் அன்னையார் சொர்ணம்மாள் அவர்களின் நினைவாகச் சென்னை, அண்ணா மலைப் பல்கலைக் கழகங்களில் சொர்ணம்மாள் நினைவுச் சொற் பொழிவு அறக் கட்டளைகளை நிறுவினார். 1961ஆம் ஆண்டு இவ்விரு பல்கலைக் கழகங்களிலும் தனிநாயகம் அடிகளார் அறக் கட்டளைச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1961ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் ஆற்றிய மூன்று சொற்பொழிவுகள் 'திருவள்ளுவர்' என்னும் பெய ரோடு அறுபது பக்க நூலாக அப்பல்கலைக் கழகத்தாரால் 1967ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றுள்ளன.

அடிகளார் சொல்லாராய்ச்சியைவிட இலக்கியத்தில் பொருளா ராய்ச்சியையே பெரிதும் விரும்புவார் என்பதை நாம் அறிவோம். ஆகவே இந்நூலில் வள்ளுவர் காட்டும் ஒழுக்கவியலைக் கிரேக்கரும் உரோமியரும் புத்தரும் காட்டும் ஒழுக்கவியலோடு அவர் ஒப்பிட்டு நோக்கும் பாங்கினைக் கண்டு வியப்பதற்கில்லை.

### வள்ளுவரும் கிரேக்க ஒழுக்கவியலும்[37]

சாக்ரெட்டீசுக்கு முன்பு வாழ்ந்த கிரேக்க அறிவியல் வாதிகள் (Sophists) ஒழுக்கமென்பது சமூக வாழ்வைத் தர்மத்துக்கேற்ற வாறு இனிது ஆற்றுப்படுத்தும் ஒரு கருவியென்றும் ஒவ்வொரு வனும் தன்னால் இயன்றவாறு தான் விரும்பிய இன்பங்களைச் சுவைக்க இயலும் என்றும், தருணத்துக்கேற்றவாறு ஒழுக்கம் மாறும் என்றும் கூறிவந்தனர்.

37. தனிநாயக அடிகள், திருவள்ளுவர்; அண்ணாமலை நகர், 1967, பக். 1-24

ஆனால் இன்பமே ஒழுக்கத்தின் நோக்கமாயினும் இவ்வின்பம் மனத்தின் (பகுத்தறிவின்) இன்பமாக இருத்தல் வேண்டுமென்பது சாக்ரெட்டீசின் கருத்து.

'நிக்கோமக்கியன் ஒழுக்கவியல்' என்னும் நூலில் இன்பமே ஒழுக்கத்தின் நோக்கமென்றும், மனநலத்துடன் இயங்கவேண்டு மென்றும் அரிஸ்தோத்தில் கூறுவார்.

பகுத்தறிவால் மக்கள் அடையும் இன்பத்தைத் திருக்குறளும் அறத்தின் நோக்கமாக இயம்புகிறது. செயல்கள் இன்பம் பயப்பன, இனியன, உவப்பன என்றும், திருக்குறள் கூறும் ஐம்புலன்களால் வரும் இன்பத்தோடு, தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாயின் இன்பம் புலனுக்கும் உயிருக்கும் இன்பமாக அமைவதையும் வள்ளுவர் கூறுவார்.

அறச் செயல்களை மீண்டும் மீண்டும் செய்வதால் அறப் பயிற்சி இயல்பாகவே வரும் என்றும், இரு பக்கமும் சாராமல் எதிர்ப் பண்புகளுக்கு நடுவில் நிற்கும் தன்மையது அறம் என்றும் அரிஸ் தோததில் கூறுவார். வேண்டிய மக்களுக்கு வேண்டிய காலத்தில் வேண்டிய அளவுக்குக் கொடுத்தலே ஈகை, அது ஊதாரித் தன்மைக்கும் உலோபியின் தன்மைக்கும் இடையில் நிற்பது என்பார் அவர்.

திருக்குறளோ அறப் பண்புக்கு எல்லை வகுக்காமல் அறத்தைச் செயலின் நிறைவாகவும் உயர்ந்த உச்ச நிலையாகவும் காட்டு கின்றது. தன்னை விற்றுக்கூட ஒப்புரவு செய்தல் வேண்டும் என்பார் வள்ளுவர். 'அன்பிற்குமுண்டோ அடைக்கும் தாழ்' என அவர் வினவுவார்.

இவ்வாறே மிகைபடக் கூறலுக்கும் தன்னையே இகழ்வதற்கும் இடையில் தோன்றுவதே வாய்மை என்னும் பண்பு என்பார் அரிஸ் தோத்தில். வள்ளுவரோ வாய்மையின் உச்ச நிலையைக் கூறினாரேயன்றி, அஃது இரு எதிர்ப் பண்புகளுக்கு நடுவிலியங்கும் என்று கூறவில்லை.

ஒழுக்கமுள்ள மக்களாகவும் உயர்ந்த செயல்களில் ஈடுபடும் குடிகளாகவும் ஆக்குவதே அரசியல் துறையின் நோக்கம் என்பார் அரிஸ்தோத்தில். மக்கள தமக்கு வேண்டிய அறத்துறை நலன் களை அறியாதவராதலின் அரசு அவர்களைச் செம்மையான நெறி யில் வற்புறுத்தி நடத்துதல் வேண்டுமென்பார் பிளாத்தோ,

வள்ளுவரோ அரசுக்கேற்ற அறத்தைக் கூறும்போது அரசு அறத்தை வலியுறுத்திக் கற்பித்தல் வேண்டுமென்றும், அறமற்ற அரசில் தனி மக்களும் அறத்தில் குன்றுவர் என்றும் கருதுகின்றார்.

பிளாத்தோவின் அரசில் மக்களின் தனி வாழ்க்கைக்கு வாய்ப்புக்கள் இல்லை. அவரது அரசியலில் மக்களுக்குத் தத்தம் குடிமை நிலைக்கு ஏற்றவாறு தொழில்கள் விதிக்கப்படும். காவலர் என்னும் முதல் வகுப்பினர்க்குத் தமக்கெனச் சிறப்பான சொத்துரிமை இல்லை. மனைவியரும் கணவரும் பிள்ளைகளும் பொதுமையாகவே பொது இல்லங்களில் வாழ்ந்து வருவர். குறிக்கப்பெற்ற நாட்களிலேயே பெண்டிருடன் ஆடவர் கலந்து கொள்வர். உயர்ந்த பண்புகளுள்ள ஆடவர் உயர்ந்த பண்புகள் படைத்த பெண்டிருடன் அரசு குறித்த காலத்தில் கலந்து உயர்ந்த பண்புள்ள சிறுவரைப் பெற்றெடுக்க முயல்வர். குழந்தைகள் யார் தம் பெற்றோரென அறியாமல், அரசின் குழந்தைப் பாசறைகளில் அரசியற் செவிலியரால் வளர்க்கப்படுவர். அரசின் சேவையும், பணியும், அரசுக்காக நன்மக்களைப் பெறுவதுமே குடிகளின் இலட்சியமென்று பிளாத்தோ கூறுகின்றார்.

வள்ளுவரோ மக்களைத் தனி மக்களாகவே (individuals) கருதி, தனி மக்கள் குடிகளின் கடமைகளைப் பொதுநலத்துக்காவும் நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார். திருக்குறள் காட்டும் ஆட்சியில் மக்கள் அரசின் அடிமைகளாக அமைவதில்லை.

தம் அரசு வலிமை பெறுவதற்காக மனை வாழ்க்கையையும் மக்களால் வரும் இன்பத்தையும் அழிக்கின்றார் பிளாத்தோ காட்டை அமைத்து அது நாடாகும் என அவர் நம்புகின்றார்.

வள்ளுவரோ தம் அரசில் களவியல் இன்பம், கற்பியல் இன்பம், மக்கட்பேறு, செல்வம் ஈட்டுதல், விருந்தோம்பல் போன்ற இன்பங்களுக்கும் அறங்களுக்கும் பெரும் இடம் வகுத்துள்ளார். மனையற வாழ்க்கையை அரசியல் கட்டுப்படுத்தக் கூடும் என ஒருக்காலும் உடன்பட்டிருக்க மாட்டார் வள்ளுவர்.

பிளாத்தோவின் அரசியலில் வகுப்பு வேற்றுமைகள் பல உண்டு. காவலர் வகுப்பு, படைவீரர் வகுப்பு, தொழிலாளர் வகுப்பு என மூன்று வகுப்புக்களாகப் பிரிப்பார் பிளாத்தோ. குடிகள் தம் பிறப்பால் இவ்வகுப்புக்களுக்கு உரியவராகின்றனர். பொன்னை (பொற்குணங்களை)த் தம் உடலமைப்பில் மிகுதியாகக்

கொண்டவர் பொன் வகுப்பில் இருக்கின்றனர் என்றும், வெள்ளியைத் தம் உடலமைப்பில் கொண்டவர் வெள்ளி வகுப்பில் சேர்ந்தவர் என்றும், இரும்பையும் பித்தளையையும் தம் உடம்பில் கொண்டவர் இரும்பு, பித்தளை வகுப்பில் சேர்ந்தவர் என்றும் வகுப்பு வேற்றுமைக்குச் சமாதானம் கூற முடியும் என்பார் பிளாத்தோ. சில வேளைகளில் பித்தளைப் பெற்றோருக்குப் பொன் கலந்த புதல்வன் தோன்றக்கூடும். இவ்வாறு வகுப்புக்கு மாறுபட்ட குணங்களுடன் புதல்வர் தோன்றுவாராயின், குணங்களுக்கு ஏற்றவாறு அப்புதல்வர் உயர்வகுப்பு ஏறவும் அல்லது தாழ்ந்த வகுப்புக்கு இறங்கவும் வேண்டும். இத்தகைய வகுப்பு மாற்றம் அரிதாகவே நிகழக் கூடும். பெரும்பாலும் ஒரு வகுப்பில் பிறந்தவர் அவ்வகுப்பிலேயே வாழ்ந்து தொழில்புரிந்து உயிர் நீப்பர். தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு குடியுரிமைகள் இல்லை. கல்வியுரிமைகளும் இல்லை. அவர்கள் ஒழுக்க வாழ்க்கைக்கு உரியவர்களாகவும் கருதப்பட்டிலர். ஏனெனில் ஒருவன் தன் தொழிலிலிருந்து பொருள் வருவாய் பெறுவானாயின் அவன் அறநெறி வாழ்க்கைக்கு உரியவன் அல்லன் என்பார் அரிஸ்தோத்தில்.

மாறாக, திருக்குறளில் நாம் மிகவும் பரந்த மனப்பான்மையைக் காண்கின்றோம். திருவள்ளுவர் குடிமையையும் குலத்தையும் போற்றினாரேனும், கல்வியையும் உயர்வையும் ஒழுக்க வாழ்க்கையையும் எவருக்கும் மறுத்தாரல்லர். ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என மதித்த வள்ளுவர், சாதிக்கொரு ஒழுக்கம் என்பதை மறுத்தார். வகுப்பு வேற்றுமைகளைக் கடந்து மக்களனைவரும் மேன்மேலும் முன்னேற்றம் அடைதல் கூடுமென்றும், அவர்களுக்கு முன்னோரிடமிருந்தும் சூழ்நிலையிலிருந்தும் சில குணங்கள் வந்தடைந்தாலும், மக்கள் தம் முயற்சியால் அத்தீய குணங்களை அகற்றுதல் கூடுமென்றும் வள்ளுவர் வற்புறுத்துகின்றார்.

கிரேக்கரே பண்புடையவர்கள், ஏனையோர் பண்பற்றவர்கள் என்பது பிளாத்தோ, அரிஸ்தோத்தில் ஆகிய இருவரின் கொள்கை. துறைமுகத்துக்கு வரும் வேற்றுநாட்டார் தம் தொடர்பால் கிரேக்கக் குடிகளைக் கெடுக்கக்கூடும் என்னும் அச்சத்தால் அரசின் தலைநகர் கடலிலிருந்து ஐந்து கல் தொலைவிலிருக்க வேண்டுமென்பார் அரிஸ்தோத்தில்.

பல வகை மக்களும், பல நாடுகளும், பல பண்புகளும், பல மொழிகளும் உலகத்தில் உள்ளதால் இவையனைத்தையும் கற்பதற்கு வாழ்நாள் போதாது. நாடுகள் அனைத்தும் என் நாடு, ஊர்கள் அனைத்தும் என் ஊர். எனவே அவற்றைப் பற்றிப் பயிலக் கூடிய கல்விக்கு எல்லையில்லை என்று 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' மனப்பான்மையை வள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

தனி மனிதன் தன் சூழ்நிலைக்கும் அரசுக்கும் ஏற்ப ஒழுக்கத்தை உருவாக்கிக் கொள்ளல் கூடும் என்பார் அரிஸ்தோத்தில். வள்ளுவரோ எங்கும் என்றும் எவராலும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய அடிப்படையான ஒழுக்கக் கொள்கைகளை எடுத்தோதுகின்றார்.

பிளாத்தோ அறிவும் அறமும் ஒரு பொருட் சொற்கள் எனக் கருதி, ஒருவனுக்கு அறத்தைப் பற்றிய அறிவு இருந்தால் அவ்வறத்தைக் கடைப்பிடிப்பான் என்கிறார். வள்ளுவரோ அறம் வேறு, அறிவு வேறு என்று பிரித்து, அறத்தைப் பற்றிய அறிவு இருப்பினும் ஒருவன் அவ்வறத்தைக் கடைப்பிடிக்காமல் இருத்தல் கூடும் என்பார்.

பிளாத்தோவின் அரசு இவ்வுலகில் அமையினும் அது விண்ணுலகில் இருக்கும் ஓர் அரசின் நிழலும் படியுமாகும். உண்மையான உலகம் மேலுலகிலேயே உண்டு. இங்கிருக்கும் உயிர்களும் பொருட்களும் மேலுலகில் இருக்கும். உயிர்கள், பொருட்களின் நிழற்படம் இவ்வுலகில் இருக்கும். ஒவ்வொரு பொருளுக்கும் அவ்வுலகில் குற்றமற்ற முதல்பொருள், மூலப் பொருள் ஒன்று உண்டு. எனவே நிறைவு மேலுலகத்தில்தான் உண்டு. இவ்வுலகில் உள்ளவையெல்லாம் குறைவு படைத்தவை.

வள்ளுவரோ மேலுலகில் இருக்கும் ஓர் அரசினைப் படம் பிடித்து இவ்வுலகில் நிறுவ முயலவில்லை. திருக்குறளின் அரசு இவ்வுலகினுக்கே உரிய அரசு, திருக்குறளில் அரசின் நிறைவினை மாந்தர் இவ்வுலகிலேயே அடைந்து விடுகின்றனர்.

கிரேக்கத் தத்துவ ஞானிகளின் நூல்களை வள்ளுவர் நூலுடன் ஒப்பிடும்போது கிரேக்க ஞானிகள் மெய்யுணர்வு வல்லுநர்கள் போல் பொருளை ஆராய்கின்றனர். வள்ளுவரோ ஒழுக்க இயல் வல்லுநர் போல் ஆராய்ந்து, ஆசான்போல் மக்கள் கடைப்பிடிக்க

வேண்டிய அறங்களைக் கூறுகின்றனர். ஆயினும் திருக்குறள் காட்டும் ஒழுக்க இயலுக்கும் கிரேக்க நூல்கள் காட்டும் மெய்யுணர்வு போன்ற வளம் பெற்ற மெய்யுணர்வே அடிப்படையாக இருந்திருத்தல் வேண்டும் என்பது தனிநாயகம் அடிகளாரின் துணிபு.

### வள்ளுவரும் உரோமிய ஒழுக்க இயலும்[38]

பண்டை உரோமிய ஒழுக்க இயலை ஸ்டாயிக் வாதமும் எபிக்யூரஸ் வாதமும் எடுத்தோதும் முறையோடு வள்ளுவரின் ஒழுக்கவியலை இப்பகுதியில் ஒப்பீடு செய்கின்றார் அடிகளார்.

எபிக்யூரஸ் அறத்தையும் இன்பத்தையும் ஒன்றாகவே கருதினார். அறநெறிக்கு மாறாக நடந்து கொள்ளுதல் தவறன்று. ஆனால் அத்தகைய ஒழுக்கம் சமூகத்தின் வழக்கத்துக்கு மாறாக இருப்பதால் சமூகச் சட்டங்களையே நாம் கடைப்பிடித்தல் வேண்டும். அவற்றை மீறுங்கால் சமூகம் நம்மைக் கண்டித்தல் அல்லது எள்ளுதல் செய்யக்கூடும் என நாம் அஞ்சுகின்றோம். அவ்வச்சம் நம் மனநிலையை அழிக்கின்றது. ஆதலால் நம் மனநிலை கலங்காதிருக்குமாறு சமூக வழக்க ஒழுக்கங்களை நாம் கடைப்பிடித்தல் வேண்டும்.

வள்ளுவர் வினைத் தூய்மையோடு மனத் தூய்மையையும் போற்றுகின்றார். நல்லொழுக்கத்தில் ஈடுபடுவதற்குக் காரணம் சமூகத்தின் கண்டிப்பும் ஏளனமும் அன்று. அறம் முறையாதலால் அதைக் கடைப்பிடித்தல் வேண்டும். 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறம்' (34), 'உள்ளற்க உள்ளம் சிறுகுவ' (798) என்பார் வள்ளுவர். திருக்குறளில் ஐம்புலன்களின் இன்பமும் உண்டு, மனத்தின் இன்பமும் உண்டு. ஆனால் இன்பமும் அறமும் ஒரு பொருட்கிளவிகள் அல்ல. ஒருவன் இன்பத்துக்காக அறம் செய்வதில்லை. அறம் செய்வதால் இன்பத்தையும் பயனாகப் பெறுகின்றான். அறத்துக்கும் இன்பத்துக்கும் இருக்கும் தொடர்பு காரண காரியத் தொடர்பு.

எபிக்யூரஸ் வாதம் பேதைமையையும், செல்வம் ஈட்டுதலையும், சிற்றின்பங்களையும் விளக்குவதற்குக் காரணம் அவற்றின் பொருளில்லாத் தன்மையே. இவ்வாதத்தில் உயர்ந்த கொள்கை

38. மேற்படி பக். 25-44

களுக்கும், கடமைக்கும், அதன் செயல்களுக்கும், தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்தலுக்கும், பொது நலனுக்காக நம்மையே கொடுப்பதற்கும் இடமில்லை.

ஆனால் திருக்குறளிலோ ஒப்புரவு பெரிதும் இடம் பெறுகின்றது. வாழ்க்கை பிறர்க்கெனவே அமைதல் வேண்டும். திருக்குறள் களவியலையும் கற்பியலையும் போற்றுகின்றது. இல்லறத்தில் இனிது வாழ்பவர் விருந்தோம்புவதிலும், ஈகையிலும், பிறர் நலம் தேடுவதிலும் தம் வாழ்க்கையைச் செலவிடுவர்.

மன நலம் இன்பமென்று கூறிய எபிக்யூரஸ் வாதிகளும், மன நலம் அறம் என்று கூறிய ஸ்டாயிக் வாதிகளும் பற்றற்று வாழ்வதே குறிக்கோளென்று போற்றினர். பற்றுக்கள் இருப்பவர் தீய ஒழுக்கத்தில் ஈடுபடுவராதலின் பற்றுக்கள் விலக்கப்படவேண்டும். இரக்கமுள்ளவன் இரக்கத்தின் பொருட்டு நீதிக்கும், நடுவு நிலைக்கும், மனத்துக்கும் மாறாக நடத்தல் கூடுமாதலால் இரக்கத்தையும் களைதல் வேண்டும். பற்றுக்கள் இல்லாமையே செல்வம் என்று கூறும் ஸ்டாயிக் வாதிகள் உலக இயற்கைக்கு ஒற்றுமை உண்டென்றும், உலக இயற்கைப் பொருட்கள் அனைத்தும் இவ்வொற்றுமையால் பிணிக்கப்பட்டிருக்கின்றன என்றும், ஆகவே மக்கள் இவ்வொற்றுமையைப் பாராட்டி ஒழுகுதல் வேண்டும் என்றும் கற்பித்தனர்.

உலக ஒற்றுமையும் உயிர்களின் ஒற்றுமையும் திருக்குறளில் நன்கு துலங்குகின்றன. ஆனால் இவ்வுலக ஒற்றுமையும் மக்களின் ஒற்றுமையும் மக்களின் முயற்சியால் செம்மையுறல் கூடும் என்னும் கருத்தையும் திருக்குறள் தெளிவுடன் கூறுகின்றது. முன்னரே இயற்கையால் நிலைநிறுத்தப் பெற்ற ஒற்றுமையைத் தழுவுவது அன்று திருக்குறள். மேலோர் இவ்வுலகில் விரும்பும் ஒற்றுமையை உருவாக்கிக்கொண்டு செல்வதே திருக்குறளின் அற முயற்சி. திருக்குறளில் அன்பும் அறமும் ஒப்புரவும் இவ்வொற்றுமையை உருவாக்குகின்றன.

ஞானிகளையே இலட்சிய மனிதராக ஸ்டாயிக் வாதிகள் கருதினர். அத்தகைய ஞானி நடுவுநிலைமையையும், மனம் கலங்காமையையும், நொதுமல் தன்மையையும் சிறப்பாகக் கொண்டவன், அவன் துன்பத்தால் வருந்துவதும் இல்லை, இன்பத்

தில் மகிழ்வதும் இல்லை. அவன் பற்றுக்களை அறுப்பவன், தீயவை செய்யாதவன், உயிர் துறப்பதற்கு அஞ்சாதவன், இடுக்கண்ணால் இடர்ப்படாதவன்.

திருவள்ளுவர் காட்டும் இலட்சிய மனிதனே சான்றோன். இவ்வுலகம் உண்டெனில் அது சான்றோர் இருப்பதால் தான் உண்டு. ஓர் ஊர் வாழ்வதற்கேற்ற இடமாக இருத்தல் வேண்டு மெனின் அங்கே சான்றோர் பலர் இருத்தல் வேண்டும். சான்றோர் தம் பண்புகளில் குன்றுவாரெனில் உலகமே தன் தாங்கும் தன்மை யில் குன்றும். சான்றாண்மை என்பது எல்லா நற்குணங்களும் நிறைந்ததாகும்.

ஸ்டாயிக் வாதிகளின் இலட்சிய மனிதர்கள் ஒருசிலரே. அவர்கள் துறவிகள் போலத் தம் இல்லங்களில் தனிமையாக வாழ்ந்து வருவர். திருக்குறளின் சான்றோர் பலர். ஒவ்வொரு மனிதனும் சான்றோனாதல் கூடும். ஒவ்வொரு தாயும் தன் மகன் சான்றோனாகுதல் கூடும் என்று எதிர்பார்ப்பாள். தன் மக்களைச் சான்றோராக்குதல் ஒவ்வொரு தந்தைக்கும் கடனாகும். தமிழ்ச் சான்றோர் இல்லறப் பண்பு உடையோராக மக்கள் நடுவில் வாழ்பவர்.

ஸ்டாயிக் வாதியாகிய ஞானிக்கும் தமிழ்ச் சான்றோனுக்கும் ஒற்றுமைப் பண்புகள் பல உள. இருவரும் அடக்கமும் நடுவு நிலைமையும் கொண்டவர். இருவரும் புறங்கூறார், பயனில சொல்லார், வெகுளார், நிலையாமை உணர்வார், உயிர் துறக்க அஞ்சார். மானம், பெருமை, பண்புடைமை, சான்றாண்மை படைத்தவர்.

மக்கள் ஒழுக்க இயலில் மேன்மேலும் உயர்தல் கூடும் என்பது ஸ்டாயிக் வாதிகளின் கொள்கை. ஒழுக்கச் சட்டத்தைக் கடைப் பிடிப்பது கடமை. அறத்தைச் செய்வது மனிதனின் கடமை.

திருக்குறளிலும் கடமை போற்றப்படுகிறது. நல்லொழுக்கத் தால் செல்வம் வருதல் கூடும், உயர்ந்த புதல்வர் தோன்றுவர், புகழ் அமைகின்றது. ஆயினும் புகழின் பொருட்டு மனிதன் நல்லொழுக் கத்தில் வாழ்வதில்லை. கடமையும் அவன் அறத்துக்குக் காரண மன்று. அறத்தின் தன்மையே காரணம். அறமே அறம் செய்ய வற்புறுத்துகின்றது. மேல் உலகம் இன்றெனினும் ஈதலே நன்று (குறள் 222). அவ்வாறே நல்லொழுக்கத்தில் முன்னேறுவது

சமூகம் பல காலமாக அடைந்த ஒரு கருத்தாகத் திருக்குறளில் (135, 137, 596) இடம் பெறுகின்றது.

ஸ்டாயிக் வாதிகள் உலகில் ஒற்றுமை இருப்பதாகக் கண்டு மக்கள் அனைவரும் ஒரே குலத்தவர் என்றும், எல்லா உயிர்களும் தொடர்புடையன என்றும் கூறினர். ஒன்றே குலம் என்னும் மனப் பான்மை மேல்நாட்டுச் சிந்தனை வரலாற்றில் முதன்முதல் ஸ்டாயிக்வாதிகளால் போற்றப்படுகின்றது.

> ''எல்லா மக்களின் நாடுகளும் என் தாய் நாடு என்றும், என் நாடு எல்லா மக்களுக்கும் தாய்நாடு என்றும் நாம் கருதுதல் வேண்டும்''

என்று செனக்காவும்,

> ''நான் பகுத்தறிவும் கூட்டுறவும் உடையவன்; நான் அன்டோனைனஸ் என்பதால் உரோமுக்கு உரியவன், நான் மனிதன் என்பதால் உலகுக்கு உரியவன்''

என்று மார்க்கஸ் ஔரேலியஸும் கூறியுள்ளனர்.

உலக மாந்தரின் ஒற்றுமைத் தன்மை திருக்குறளில் மிகவும் அழகாகக் கூறப்பெற்றுள்ளது. இதனை என்றுமுள்ள உண்மை போல் வள்ளுவர் கூறுகின்றார். மக்கள் அனைவரும் மக்கள் தன்மையை வளர்க்க வேண்டுமென்று மக்களுக்காக அவர் எழுதிய நூல் திருக்குறள்.

மக்கள் அனைவரையும் ஒரே குலத்தவராகக் கருதுவதோடு, உயிர்கள் அனைத்தையும் மக்களோடு சேர்த்து ஒரே குலத்தவை என்று கருதும் பண்பும் திருக்குறளுக்கும் ஸ்டாயிக்வாதிகளுக்கும் பொதுவானதாகும்.

எல்லா உயிர்களையும் போற்றுவது ஒழுக்க இயலில் மிகவும் உயர்ந்த பண்பு. ஸ்டாயிக்வாதிகள் உயிர்களைப் பேணினராயினும் புலால் உண்பதைக் கைவிடவில்லை. திருக்குறளோ செனக்காவுக்கும் மார்க்கஸ் ஔரேலியஸுக்கும் புலப்படாத பண்புகளைக் கற்பிக்கிறது என்பதை,

> ''அறவினை யாதெனிற் கொல்லாமை'' (321)
>
> 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்'' (322)
>
> ''தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
> இன்னுயிர் நீக்கும் வினை'' (327)

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்" (260)

என்னும் குறட்பாக்களால் அறிகின்றோம்.

உரோமையர் சொல்வன்மை, நட்பு, காதல் ஆகியவை பற்றி யாத்த இலக்கியங்களைத் திருக்குறளுடன் ஒப்பிட்டு நோக்குதல் கூடும். காதலையும் நட்பையும் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்கள், தன்னலம் கருதாமல் பிறர் நலத்துக்காகத் தம்மை முற்றும் நல்கும் வாழ்க்கையை வற்புறுத்துகின்றன. நட்பிலும் காதலிலும் பெரும்பாலும் உரோமையப் பெரியோர் தன்னலத்தையும் முன்னேற்றத்தையுமே கருதுகின்றனர். ஒருவன் தன் ஆளுமையை நன்றாகச் செம்மைப்படுத்துவதற்கு நட்பு பயன்படுகிறது என்றும், ஒருவன் தன் வாழ்க்கையில் பெறக் கூடிய இன்பங்களில் நட்பு ஒன்றென்றும் வரையறுத்துள்ளனர் உரோமையர். பழைமை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் நட்பைப் பாராட்டும் முறையை உரோமையரின் இலக்கியத்திலோ அரிஸ்தோத்திலின் நூல்களிலோ காண்பது அரிது.

உரோமையரின் காதல் இலக்கியத்தை வள்ளுவரின் காமத்துப் பாலுடன் ஒப்பிடுங்கால், வள்ளுவரின் கருத்துக்கள் உரோமையரின் கருத்துக்களைவிடப் பன்மடங்கு உயர்ந்தவையாக இருப்பதைக் காண்கின்றோம்.

உரோமையர் தங்கள் நீதி நூல்களில் தம்மவரின் பெருமையையும் எடுத்துக்காட்டுக்களையுமே பெரிதும் போற்றுகின்றனர். நாம், நம்மவர் என்னும் செருக்குடன் உரோமைய ஆசிரியர் உரோமையருக்குப் பயன்படும் வகையில் எழுதுகின்றனர். ஆனால் வள்ளுவரோ எல்லா உலகுக்கும் எல்லா மக்களுக்கும் பயன்படும் முறையில் தமிழ், தமிழ்நாடு என்னும் குறிப்பே இல்லாமல் உலகெல்லாம் தழுவுவதற்குரிய பான்மையில் தம் நூலை யாத்துள்ளார்.

### வள்ளுவரும் புத்தரின் ஒழுக்க இயலும்[39]

புத்த சமயம் அடிப்படையாகத் துறவிகளுக்கென்றே வகுக்கப் பெற்ற சமயம். உலகில் வாழ்பவர்கள் பிற்காலத்திலேயே புத்த சமய அமைப்பில் இடம்பெற்றனர். புத்தரின் அறவுரைகளும்

39. மேற்படி, பக். 45-60

அவற்றை விளக்கிய நூல்களும் துறவறமே ஈடேற்றத்துக்கு (நிர்வாணத்துக்கு) ஏற்ற வழி என்று வலியுறுத்தின. வள்ளுவரோ துறவறத்தை இணையற்ற வாழ்க்கை நிலையாகக் கூறினாரா யினும், இல்லறத்தையே நன்றாக விளக்கி, இல்லறமே துறவுக்கு உறுதுணையாக நிற்பது என்பதை நிலைநாட்டுகின்றார். எனவே வள்ளுவரின் நூல் இல்லறத்தின் சாசனமாக விளங்க, புத்த நூல்கள் துறவறத்தின் சாசனமாக விளங்குவதைக் காண் கின்றோம்.

சாதி வேற்றுமையை ஒழிக்கவேண்டுமென்று வலியுறுத்திய புத்தர், பிராமணர்களின் வழிபாட்டு முறைகளையும் வேள்வி செய்யும் திட்டங்களையும் மறுத்ததோடு, பிராமணர் தனி வகுப்பைச் சார்ந்தவர் என்றும் மற்றெல்லா வகுப்பினரையும்விட உயர்ந்தவரென்றும் பிராமணர் கூறுவதைக் கண்டித்ததையும் புத்த நூல்களில் காணுகின்றோம்.

பிராமணர் அல்லாதாரைப் பிராமணர் விலக்கி வைத்த காலத்தில், தாழ்ந்த குலத்தவரையும் தங்கள் மடங்களில் துறவி களாக ஏற்றுக்கொண்ட புத்த தருமம் விரிந்த மனப்பான்மையை வளர்த்தது. தேரி தாத்தா, தேரா தாத்தா என்னும் புத்த சமயத் தொகை நூல்களிலுள்ள செய்யுட்களை யாத்தவர்கள் பல்வேறு வகுப்புகளைச் சார்ந்தவர்களாவர். ‘ஆரிய வழி’, ‘ஆரிய உண்மை’, ‘ஆரிய ஒழுக்கம்’ என்று புத்தர் கூறும்போது ‘ஆரிய’ என்னும் பெய ரெச்சத்துக்கு ‘உயர்ந்த, ஒழுக்கத்தில் சிறந்த’ என்னும் பொருளையே அவர் கொண்டாரன்றி ஒரு சாதியையோ வகுப்பையோ அவர் குறிப்பிட்டாரல்லர்.

புத்த நூல்கள் கூறும் இலட்சிய மனிதன் முனி அல்லது பண்டிதன். அவன் அன்னத்தைப் போலவும், மயிலைப் போலவும் சமூகத்தின் வாழ்க்கையைத் துறந்து காடுகளிலும் வனங்களிலும் தனி வாழ்க்கையில் ஈடுபட்டு வருபவன். வள்ளுவரின் இலட்சிய மனிதனோ உலகில் வாழ்ந்து இல்லறத்தில் தன் மனைவி மக்களுடன் அற வாழ்க்கையிலும் அன்பிலும் கல்வியிலும் அரசியலிலும் ஈடுபட்டு வருபவன்.

இல்லறத்திலும் துறவறத்திலும் கடைப்பிடிக்க வேண்டிய உயர்ந்த நெறிகளை வள்ளுவரும் புத்த நூல்களும் கூறுகின்றன. பிராமணர்கள் தாம் ஆகமங்களைப் பிழையின்றி ஓதியும் வேள்வி களைச் செய்தும் வந்ததால் தாம் அந்தணர் என்று கருதப்படுவதாக

நினைத்தனர். வள்ளுவரோ 'எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்' மனிதர் அந்தணராவர் என்று வலியுறுத்தினார். 'ஒழுக்கத்தால் சிறந்தவனே அந்தணன்' என்று பன்முறை வள்ளுவர் கூறுவதைக் காண்கின்றோம்.

கொல்லாமையே சிறந்த நெறியென்றும், உண்மையான வேள்வி உள்ளத்தின் இச்சைகளை வேள்வி செய்வதே என்றும், பொய் கூறாமையும் கள்ளுண்ணாமையும் சிறந்த அறமென்றும் 'தருமபதம்' என்னும் புத்த நூல் வற்புறுத்துகின்றது. வள்ளுவரும் இவ்வறநெறிகளையே அறிவுறுத்தினர். தம்மையே பன்முறை கழுவிக்கொண்டால் அல்லது முடியை நீத்தால் அதனால் தூய்மையை அடைவதாக எண்ணினர் வைதிக சமயத்தார். ஆனால் அகத் தூய்மையே சிறந்த தூய்மை என்று வள்ளுவரும் தருமபதம் நூலாசிரியரும் வற்புறுத்துகின்றனர்.

தாம் கொலை செய்யாது பிறர் கொலை செய்த விலங்குகள், பறவைகள் முதலியவற்றின் புலாலை உண்ணலாம் என்பது பண்டு தொட்டு வரும் புத்த சமயக் கொள்கை. புலாலை அறவே மறுத்தவராகிய குறளாசிரியர் புத்த தருமத்தைத் தழுவியவரல்லர் என்பதற்கு இதுவே சான்றாகும்.

புத்த தருமம் உலக வாழ்க்கையை நோய் என்றும், இந் நோய்க்குக் காரணம் ஆசை என்றும், ஆசையை அறுப்பதே வாழ்க்கையின் நோக்கமென்றும் கூறியது. வள்ளுவரோ உலகம் கவர்ச்சியுடையது, வாழ்க்கை இன்பம் பயப்பது, இல்லறம் மேன்மையுடையது என்று வற்புறுத்துகின்றார்.

வள்ளுவர் போற்றுமளவுக்கு அன்பையும் நட்பையும் புத்தரும் அவருடைய துறவிகளும் போற்றவில்லை. ஒவ்வொருவரும் எல்லா உயிர்கள் பாலும் அளவுகடந்த அன்பு பூண்டொழுகுதல் வேண்டுமென வற்புறுத்தும் புத்தர் பெருமான், உலகம் துக்கமும் துன்பமும் நிறைந்தது என்றும் வலியுறுத்துகின்றார். வள்ளுவர் சான்றோனைப் பற்றித் தீட்டிய குறட்பாக்களில் அவனுக்கு அன்பு இன்றியமையாததென்றும், அவன் எல்லா உயிர்களையும் போற்றுவதுடன் நண்பரைப் பேணியும் எல்லாருடனும் சிரித்து மகிழ்ந்தும் வாழ்தல் வேண்டுமென்றும் கூறுகின்றார்.

புத்த தருமம் பல வகுப்பினரைத் துறவிகளாக மடங்களில் ஏற்றுக் கொண்டதன்றிச் சாதி வேற்றுமைகளைப் பொது

மக்களிடையே நீக்குவதற்கு வள்ளுவரைப் போல் திட்டமாகக் கூற வில்லை. பெண்கள் துறவிகளாவதை முதலில் விரும்பாத புத்தர் பெருமான் பிற்காலத்தில் பெண்களுக்கும் உயரிய துறவினை ஏற்பாடு செய்தார். ஆனால் பெண் துறவிகள் எப்போதும் ஆண் துறவிகளுக்குக் கீழ்ப்படிந்தும், அவர்களிடமிருந்து சமய உரை களைக் கற்றும் வரவேண்டுமென்று விதித்தார். வள்ளுவரோ பெண்களுக்குச் சமநிலை அளித்துக் காதலிலும் அன்பிலும் புத்த தருமத்தில் இல்லாத உயர்ந்த நிலையை வகுக்கின்றார்.

இவ்வாறு கிரேக்க, உரோமிய, பௌத்த ஒழுக்கவியல்களைத் திருவள்ளுவரின் ஒழுக்கவியலோடு ஒப்பீடு செய்யும் சிறந்த நூலாக அடிகளாரின் 'திருவள்ளுவர்' அமைந்துள்ளது.

# ஆங்கிலத்திலும் ஆராய்ச்சி

தமிழில் புலமை பெறுவதற்கு முன்னரே தனிநாயகம் அடிகளார் ஆங்கிலத்தில் புலமை நிரம்பப் பெற்றிருந்தார். தமிழில் எழுதத் தொடங்குவதற்கு முன்னரே அவர் ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கிவிட்டார். மாணவப் பருவத்திலேயே அவர் ஆங்கிலத்தில் கட்டுரைகள் பல வடித்ததுண்டு.

தமிழை உலக அரங்குக்கு எடுத்துச் செல்வதற்கு அவரது ஆங்கிலப் புலமை உற்ற துணையாக அமைந்தது. தமிழில் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியது போலவே இவர் ஆங்கிலத்திலும் பல கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளார்.

## 1. முதல் முனைவர் பட்ட ஆய்வேடு

அடிகளார் உரோமை நகரில் தம் குருத்துவப் பயிற்சியை முடித்தபின், ஓராண்டுக் காலம் சமய வரலாற்று ஆராய்ச்சியில் ஈடுபட்டு 'கார்த்தேஜ் மறை மாநிலக் குருகுலம்' (The Carthagenian Clergy) என்னும் ஆய்வேட்டை எழுதினார்.

### இரு பதிப்புக்கள்

இதன் முதல் பதிப்பு 1947ஆம் ஆண்டில் இந்தியாவிலும், இரண்டாம் பதிப்பு 1950ஆம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் வெளியாயின. இரண்டு பதிப்புகளுமே தமிழ் இலக்கியக் கழக வெளியீடாக அமைந்திருந்தன. ஆய்வேட்டின் முதற்பதிப்பினைத் தம் அமெரிக்கப் பயணத்தின்போது பல நூலகங்களில் கண்டபோது வியப்புக் கொண்டதாகவும், பல

அமெரிக்க நண்பர்கள் ஊக்குவித்ததாலேயே இரண்டாம் பதிப்பினை அமெரிக்க ஐக்கிய நாட்டில் அச்சிட்டு வெளியிடுவதாகவும் தம் முன்னுரையில் அடிகளார் கூறுகின்றார்.[1]

### பன்மொழிப் புலமை

அடிகளாரின் பன்மொழிப் புலமையை இந்த ஆய்வேட்டிலேயே நாம் கண்டு வியக்கின்றோம். இலத்தீன் மொழியிலுள்ள மூல நூல்களைத் தவிரக் கருவிநூற் பட்டியலில் ஆறு இலத்தீன் நூல்களும், பதினொரு ஆங்கில மொழி நூல்களும், முப்பத்தொரு பிரெஞ்சு மொழிநூல்களும், ஏழு செர்மன் மொழி நூல்களும், ஆறு இத்தாலிய மொழிநூல்களும், ஒரு ஸ்பானிஷ் மொழி நூலும் இடம் பெற்றிருப்பதைக் காணும்போது இருபத்தாறு வயதில் ஆறுமொழிகளில் வல்லுநராகவும் அம்மொழி நூல்களை எடுத்தாளும் திறமிக்கவராயும் அவர் திகழ்ந்ததை நாம் காண முடிகின்றது. நூல் முழுவதிலும் அவரது வீறுமிக்க ஆங்கில நடையின் அழகையும் எளிமையையும் நுண்மையையும் பொருத்தமான சொற்களைக் கையாளும் திறனையும் நாம் கண்டு மகிழலாம். அடிகளாரின் ஆங்கில நடையை 'மிகச் சிறந்த செம்மையான ஆங்கில நடை' என அமெரிக்கர்கள் பாராட்டியது குறிப்பிடத்தக்கது.

### நூல் கூறும் கருத்துக்கள்

நூலின் முதற்பகுதி கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் கார்த்தேஜ் மறைமாநிலத் திருச்சபையில் இடம் பெற்றிருந்த ஊழல்களையும் அவற்றைக் களைந்திட ஆயர் சிப்ரியன் மேற்கொண்ட முயற்சிகளையும் தொகுத்துக் கூறுகின்றது. உரோமை, அலெக்சாந்திரியா. எருசலேம் நகர்களைப் போலக் கார்த்தேஜ் கத்தோலிக்க சமயத்தின் முக்கிய நகரமாக இருந்த காலம் அது.

கி. பி. 249ஆம் ஆண்டில் உரோமைப் பேரரசராக முடிபுனைந்த தேசியஸ் (Decius) மன்னர் தம் நாட்டு மக்கள் மரபுத் தெய்வங்களை வழிபட்டு அவர்களுக்குப் பலி செலுத்த வேண்டுமென்றும், அவ்வாறு ஒழுகத் தவறுவோர் கடுமையான தண்டனைகளுக்கு ஆளாவர் என்றும் ஆணை பிறப்பித்தார். உயிருக்கு அஞ்சிய பலர் (குருக்களும் கூட) கிறித்துவ சமயத்தைப் புறக்கணித்து, மன்னரின் ஆணைக்கு அடி பணிந்தனர். ஆயர் சிப்ரியன் மன்னரின்

1. X. S. Thani Nayagam; The Carthagenian Clergy; Tuticorin; 1950; p. ix

ஆணையை எதிர்த்ததால் அவரைக் கொல்ல முயற்சிகள் நடந்தன. ஆகவே அவர் மறைவிடத்தில் பதுங்கி வாழ்ந்து கொண்டு தம் எதிர்ப்பைத் தொடர்ந்தார். மறைமாவட்டத்தையும் வழிநடத்தி வந்தார். ஏறக்குறைய ஈராண்டுக் காலம் தொடர்ந்த மறைவு வாழ்க்கையின்போது கார்த்தேஜ் மறை மாவட்டத்து மக்கள் உற்ற துயர்களையும், பலர் தங்கள் சமயத்தை மறுத்ததையும், தாம் அருகிருந்து மக்களை ஆற்றுப்படுத்த இயலாத நிலையையும் கண்டு அவர் மிகவே துயருற்றார். அக்காலத்தில் பல பிரச்சினைகளை அவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தேசியஸ் மன்னர் இறந்த பின் சிப்ரியன் கார்த்தேஜூக்குத் திரும்பினார்; ஆனால் கிறித்துவ ரல்லாத பலரின் வெறுப்புக்கும் பகைமைக்கும் ஆளாகிய அவர் கி. பி. 258ஆம் ஆண்டில் நாடு கடத்தப்பட்டார். பின் அடுத்த ஆண்டிலேயே அவர் கொல்லப்பட்டார்.

புனித சிப்ரியன் தாமே எழுதிய நூல்களும், மடல்களும், அன்று கார்த்தேஜில் ஆளுநர்களாக விளங்கியோரின் ஆட்சிக் குறிப்புக் களும் அடிகளாருக்கு இவ்வாய்வேட்டை எழுதுவதில் துணை நின்றன.

கார்த்தேஜ் மறைமாவட்டத்திலும் அதை அடுத்திருந்த மறை மாவட்டங்களிலும் சமய எதிர்ப்பு நேர்ந்தபோது கத்தோலிக்கத் திருமுறை எவ்வாறெல்லாம் செயல்பட்டது என்பதனை அடிகளார் மிக நுணுக்கமாக விளக்குகின்றார். தம்மோடு பணியாற்றியவர்களெனப் புனித சிப்ரியன் தம்மடல்களில் குறிப்பிடும் குருக்கள், சமயத் தொண்டர்கள் ஆகியோரின் பெயர் களையும் அவர்களைப் பற்றிய விவரங்களையும் தம் நூலில் அடிகளார் தொகுத்துக் கூறும் திறம் வியத்தற்குரியது. அன்றையக் கார்த்தேஜ் திருச்சபையில் வாழ்ந்த வறிய மக்களின் நிலையையும் அவர் விளக்கத் தவறவில்லை.

**சிறந்த வரலாற்று நூல்**

சுருங்கக் கூறின் ஆப்பிரிக்கக் கண்டத்து வட பகுதியில் மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த கத்தோலிக்கத் திருமறையின் ஆயர்கள், குருக்கள், சமயத் தொண்டர்கள், மக்கள் ஆகிய அனைவரையும் பற்றிய பல வரலாற்றுக் குறிப்புக்களை அகழ்ந் தெடுத்து, ஆய்ந்து, தொகுத்து, மிக அரிய நூலாகத் தனிநாயகம் அடிகளார் இதனைப் படைத்துள்ளார் எனலாம்.

## 2. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை

### பல பதிப்புக்கள்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இலக்கிய முதுகலைப் பட்டத்துக்காக (எம்.லிட்.) அடிகளார் எழுதிய ஆய்வேடு Nature in Ancient Tamil Poetry என்னும் தலைப்பில், தமிழ் இலக்கியக் கழகத்தால் 1952ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றது. இது பின்னர் 'சங்க காலத் தமிழில் இயற்கைக் கவிதை' (Nature Poetry in Tamil : The Classical Period) என்னும் தலைப்பில் சிங்கப்பூரி லிருந்து 1963ஆம் ஆண்டிலும், 'நிலப் பாகுபாடும் கவிதையும்' : சங்கத் தமிழ் இலக்கியத்தில் இயற்கை பற்றிய ஆய்வு' (Land Scape and Poetry : A Story of Nature in Classical Tamil Poetry) என்னும் தலைப்பில் 1966ஆம் ஆண்டு பம்பாய் ஆசிய வெளியீட் டகத்தின் சார்பிலும் வெளியிடப் பெற்றது.

### இயற்கையும் வாழ்க்கையும்

சங்ககாலத் தமிழ் மக்களின் வாழ்க்கை இயற்கையோடு இயைந்ததாக அமைந்திருந்த பாங்கினை இந்நூலில் அடிகளார் பற்பல சான்றுகளுடன் விரிவாக எடுத்துரைக்கின்றார்.

தமிழ்நாடு காடும் மலையும் வயலும் கடற்கரையும் ஆகிய பலவகை நிலப் பகுதிகளைக் கொண்டிருக்கும் உண்மையும் அவ்வப் போது மழை அருகிப் பாலைபோல் இருக்கும் தன்மையும் கருதியே ஐந்திணை வகுக்கப்பட்டது; ஒவ்வொரு திணையிலும் இடம்பெறும் செடிகொடி மரங்களும் விலங்குகளும் மனிதரும் அத்திணைக்கு உரியவரானதோடு, திணைக்கு உரிய ஒழுக்கத்தையும் கடவுளின் இயல்பையும் ஒவ்வொரு திணைக்கும் ஏற்றவாறு பண்டைத் தமிழர் கணித்த பான்மையை அடிகளார் இந்நூலில் வியந்து போற்றுகின்றார்.

இலைதழை ஆடைகளையும், மலர்களையும், மாலைகளையும், சங்க காலத் தமிழர் தம் அன்றாட வாழ்வில் பயன்படுத்திய தன்மையும் அடிகளாரின் உள்ளம் கவர்ந்த ஒன்றாகும். தமிழரின் வாழ்வில் இயற்கை சிறப்பிடம் பெற்றிருந்ததையும், இயற்கையோடு இயைந்த வாழ்வாகச் சங்ககாலத் தமிழா வாழ்வு அமைந்திருந்தது என்பதையுமே இது காட்டுகிறது என்பார் அவர்.

### உவமைச் சிறப்பு

சங்க இலக்கியங்களில் காணப்படும் உவமைகளின் இயல் வாய்மை (realism) அவரது நெஞ்சத்தைக் கொள்ளை கொண்டது. இயற்கைப் பொருட்களே—மலர், மலை, ஆறு, நகர், செடி, கொடி, மரம், விலங்கு, மழை, நீர்—சங்க இலக்கியங்களில் உவமைகளாக எடுத்தாளப் பெற்றுள்ளன. இறால் மீனின் கண் வேப்பம் பூவுக்கும், பெண்ணின் பாதம் வேட்டைக்குச் சென்று களைத்து வீடு திரும்பும் வேட்டை நாயின் நாவுக்கும், காந்தள் மலர் பெண்களின் கைக்கும், குவளைமலர் பெண்களின் கண்ணுக்கும் உவமை யாக்கப்படுவதில் உள்ள பொருத்தத்தையும் இயல் வாய்மையையும் அவர் பெரிதும் போற்றி மகிழ்கின்றார்.

### வரலாறு வகுக்கலாம்

சங்க இலக்கியங்களில் காணப்படும் வரலாற்றுக் குறிப்புக் களைத் தக்க முறையில் ஆராய்ந்து கணிப்பதால் தமிழக வரலாற்றினைத் தொகுக்க முடியும் என்று அடிகளார் திண்ணமாக எண்ணினார். நன்னன், திண்ணன், நெடுஞ்செழியன், ஆதன் இளந்திரையன் என்னும் பல மன்னர்களைப் பற்றிய குறிப்புகளும் சங்க நூல்களில் மலிந்துள்ள தன்மையை அவர் ஆராய்கின்றார்.

### போரிலும் ஒழுக்கம்

சங்க காலத் தமிழரின் வாழ்வில் ஒழுக்கம் சிறப்பிடம் பெற்றிருந்தமையை அடிகளார் கண்டு வியக்கின்றார். போர்கள் கூட ஒழுக்கமான முறையில் அன்று நிகழ்ந்ததைப் பாராட்டும் அவர், ஆநிரை கவர்தல் போன்றவை வேறு இனங்களிடையே காணப் பெறாத போரியல் ஒழுக்கம் எனச் சுட்டுகின்றார்.

### அறமே தலையாயது

அறம் சங்க காலத்தில் பெரிதும் போற்றப்பட்டதாகும். தனி மனிதரும் சமுதாயமும், ஏன், மன்னர்களும் கூட அற வழி ஒழுகினால்தான் நாடு சிறக்கும் என்னும் நம்பிக்கை அன்று சிறந்து பொலிந்ததைச் சங்க இலக்கியங்கள் விளக்குகின்றன. இத்தகைய கருத்துக்களையெல்லாம் அடிகளார் தக்க சான்று காட்டித் தம் நூலில் நிறுவுவதைக் காண்கின்றோம்.

### உலகில் சிறந்த செய்யுட்கள்

சிறப்புக் குன்றிய காலத்து இலக்கியங்களே நமக்கு இன்று கிடைத்துள்ள சங்க நூல்களென்றும், சிறப்புமிக்க பழந்தமிழ்

நூல்கள் பல அழிந்துவிட்டன என்றும் அடிகளார் தம் நூலின் முன்னுரையில் எடுத்துரைக்கின்றார். எனினும் சங்க இலக்கியங்களின் சிறப்பு நம்மை வியப்பிலாழ்த்துவன என்று போற்றும் அடிகளார், புறநானூற்றில் காணப் பெறும் இயற்கைச் செய்யுள்கள் உலக இலக்கியத்தின் இயற்கைச் செய்யுள் தொகுப்பில் இடம் பெறத் தக்கவை எனத் துணிந்து கூறுகின்றார்.

## நூலின் சிறப்பு

தமிழறியாத மாந்தர்க்குத் தமிழின் சிறப்பினை உணர்த்தவே இந்நூலைத் தாம் எழுதியதாக நூலின் முன்னுரையில் அடிகளார் குறிப்பிடுகின்றார். இத்துறையில் எழுதப்பட்ட மிகச் சிறந்த நூல் என்று முனைவர் கமில் சுவலபில் அவர்களால் பாராட்டப் பெற்ற இந்நூல் அடிகளார் உயிர் வாழ்ந்த போதே மூன்று பதிப்புக்களைக் கண்டது என்பதே இதன் சிறப்பை நிலைநாட்ட வல்ல உண்மையாகும்.

## உண்மைப் புலமை

தமிழ் ஆராய்ச்சி இன்றும் பெரும்பாலும் சொல்லாட்சிச் சிறப்பையும் உவமை நயத்தையும் அணியழகையும், சந்த ஒழுங்கையும் விளக்கிக் காட்டுவதாக அமைந்திருக்கும் நிலையை நாம் காணுகின்றோம். ஆனால் அடிகளாரோ இலக்கியத்தின் இதயத்தை—மனதை—புரிந்து கொள்ள முயன்றார் என்பதை இந்நூல் தெளிவாக்குகின்றது. அணியழகும், சந்த நயமும் மிகுதியாக இடம் பெறாத சங்க இலக்கியங்களே அடிகளாரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. ஏனெனில் அவை உண்மையான கவித்துவத்தைக் கொண்டவை, மனித அனுபவத்தின் வெளிப்பாடாக அமைந்தவை என்பது அடிகளாரின் கணிப்பு,

"பண்டிதர்களும் வித்துவான்களும் செய்யுள் இலக்கணத்தை ஓரளவு அறிந்திருக்கலாம். ஆனால் கவிஞனுக்குரிய நெஞ்சம் ஆயிரத்தில் ஒருவருக்குத்தான் சித்திக்கும். சங்க காலப் புலவர் சிலர் நான்கே நான்கு வரி மாத்திரம் பாடியிருக்கிறார்கள்; புகழையும் தேடிக் கொண்டார்கள்" என அடிகளார் கூறுவது நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

# 3. பழந்தமிழ் இலக்கியத்தில் கல்விச் சிந்தனைகள்

### மீண்டும் முனைவர் பட்டம்

அடிகளார் இலங்கைப் பல்கலைக் கழகப் பணியினின்று விடுப்புப் பெற்றுக் கொண்டு 1955-57ஆம் ஆண்டுகளில் இலண்டன் பல்கலைக் கழகத்தில் கல்வித்துறையில் ஆய்வு மேற்கொண்டார். அங்குப் பேராசிரியர் ஜோசப் லாவெரீஸ் அவர்களை வழிகாட்டியாகக் கொண்டு Educational Thought in Ancient Tamil Literature என்னும் தலைப்பில் தம் முனைவர் பட்ட ஆய்வேட்டை எழுதிக் கல்வித் துறையில் முனைவர் பட்டம் பெற்றார். இந்நூல் அச்சிடப் பெறவில்லை என்பதை நாம் இங்குக் குறிப்பிட வேண்டும்.

இதிகாசக் காலம் தொடங்கி அசோக மன்னர் காலம் வரையில் வட இந்தியாவில் கல்வி வளர்ந்த வகையினையும், குறிஞ்சி நிலத்தில் அகவன் மக்கள் மூலம் கல்வி பரவிய காலம் தொடங்கித் திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலைக் காலம் வரை தமிழகத்தில் கல்வி வளர்ந்த பாங்கினையும் ஏழு அதிகாரங்களில் அடிகளார் தக்க சான்றுகளுடன் விளக்குகின்றார். தமிழ், ஆங்கில மொழி நூல்களோடு கிரேக்கம், இலத்தீன், இத்தாலியன், பிரெஞ்சு, ஜெர்மன் மொழி நூல்களையும் அவர் தம் ஆய்வுக்குத் துணையாகக் கொண்டுள்ள பாங்கினை நாம் இந்நூலில் கண்டு மகிழலாம்.

### சமயம் சாராக் கல்வி

பாலி, வடமொழிச் சமுதாயங்களில் சமயங்களைச் சார்ந்ததாகக் கல்வி அமைந்திருக்க, பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் சமயம் சாராததாகவே கல்வி அமைந்திருப்பதை அடிகளார் தம் ஆய்வில் சுட்டிக் காட்டுகின்றார். எத்தகைய எல்லையும் வரையறையும் இல்லாமல் ஆண், பெண் ஆகிய இருபாலாரும். எத்தகைய வாழ்க்கை நிலையினையும், தொழிலினையும் கொண்டோரும் கல்வி கற்கும் நிலை பழந்தமிழகத்தில் நிலவிய பாங்கினை அவர் பெருமையுடன் சுட்டி மகிழ்கின்றார்.

### அகவன் மக்கள்

தொடக்கக் காலத்தில் அறிவும், பண்பாடும் மிகுதியும் பரவாத குறிஞ்சி நிலத்தில் அகவன் மக்களே ஆசிரியர்களாகவும், வாழ்க்கை வழிகாட்டிகளாகவும் விளங்கினர் என்பது அடிகளார் துணிபு. தன்னை விஞ்சி நின்ற இயற்கை ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதனின் அச்சத்தைப் போக்கவும், மந்திரம் ஓதி நோய் தீர்க்கவும்,

கொள்ளைகளைத் தவிர்க்கவும், வளத்தைப் பெருக்கவும், நிமித்திகம் கூறவும் வல்லாராக விளங்கிய அகவன் மக்களே குறிஞ்சித் திணைச் சமுதாயத்தில் தொடக்க காலத்தில் மதிக்கப் பட்டோராக விளங்கினர். அகவல் சடங்கு முறையில் பயன்பட்ட அகவலோசையும் அகவற்பாவும் பழந்தமிழ்ப் பாவினமாகிய அகவற்பாவாக மாறின என்றும், பாடலில் காணும் 'அடி' என்னும் சொல்தானும் அகவன் மக்களின் ஆடலுக்கும் தாளத்துக்கும் அகவற்பாவுக்குமுள்ள தொடர்பினைக் குறிப்பது என்றும் அவர் கருதுகின்றார்.

### பாணரின் சிறப்பு

நாகரிகமும் பண்பாடும் வளர வளரச் சமுதாயத்தில் அகவன் மக்களின் சிறப்புக் குன்றி, பாணர்களின் மதிப்பு உயரத் தொடங் கிற்று. முல்லை, மருத நிலங்களில் கிராம அமைப்புக்களும் கிராம வட்டாரத் தலைவர்களும் (குறுநில மன்னர்களும்) இடம் பெற்ற போது அத்தகு தலைவர்களைப் போர்களின் போதும் போர் களுக்குப் பின்னும் புகழ்ந்து பாடுவோராகப் பாணர் சிறந்து பாடல், ஆடல், இசை, கவிதை வல்லவராக விளங்கினர். பாணர் என்னும் சொல் தானும் 'பண்' என்னும் சொல்லை அடிப்படை யாகக் கொண்டு பிறந்தது என்பதைச் சுட்டிக்காட்டும் அடிகளார், இப்பாணர்கள் பெரும்பாலும் வறுமையால் ஊர் ஊராக அலைந்து திரிந்தனர் என்றும், சில அரசவைப் பாணர்கள் புகழும் செல்வமும் பெற்றனர் என்றும் விளக்குகின்றனர். இவர்களின் பாடல்கள் பெரும்பாலும் வாய்மொழி இலக்கியங்களே எனினும் அவற்றின் வழியாக அன்றைய சமுதாயத்தில் கல்வி பரவியது என அடிகளார் துணிகின்றார். அவர்களிடையே பெரும்பாணர், சிறுபாணர் என்னும் இருபெரும் பிரிவுகளும், யாழ்ப்பாணர் போன்ற சிறு பிரிவுகளும் இருந்தன என்றும் அவர் விளக்குகின்றார். சிறந்த தலைவர்களை—சான்றோர்களைப் புகழ்ந்து பாடிய பாணர்கள் புகழுக்குரிய முழு மனிதர்கள்—வீரமும் அறமும் ஒழுக்கமும் நிறைந்த சான்றோர்கள்—பிறரால் பின்பற்றத்தக்கவர்கள் என்பதை வலியுறுத்தினார்; அத்தகையோரைப் புகழ்ந்து பாடுவதே தகுதி என்று நிலைநாட்டினார்.

### புலமையின் தலைமை

அடுத்து எழுத்து இலக்கியங்கள் முதன்மை பெற்றபோது, பாணர்களின் சிறப்புக்குன்றி, புலவர்களின் மதிப்பும் சிறப்பும்

விஞ்சி நிலைக்கத் தொடங்கியது. அத்தகைய சமுதாயத்தில் செல்வம் கொழித்த நிலையில் புலவர்கள் மன்னர்களுக்கே ஆசிரியர் களாகவும் அறிவுரை கூறுவோராகவும் மாறுகின்றனர். அத்தகைய அறிவாண்மையும், புலமையும், ஒழுக்க உயர்வும் புலவர்களின் உரிமையாக விளங்கின. அறிவும் ஒழுக்கமும் புலமையும் மிக்க புலவர்கள் சமுதாயத்தில் கல்வியையும் அறத்தையும் ஒழுக்கத்தை யும் வளர்ப்போராக மாறினர். சங்க இலக்கியங்கள் இந்நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன என்பார் அடிகளார்.

### சமயத்தைக் காணோம்

பழந்தமிழ் இலக்கியத்தில் தெய்வங்கள் பற்றிய குறிப்புக்கள் உண்டெனினும், சமய அமைப்புக்கள் பற்றிய குறிப்புக்களைக் காண இயலவில்லை. சமயத் துறவியர், குருக்கள் இனம் போன்ற அமைப்புக்களையும் அன்று காண இயலவில்லை.

### கல்வியும் கேள்வியும்

புலவர்களே அறமும் ஒழுக்கமும் கற்பிப்போராக விளங்கினர்; மன்னர்களுக்கும் மக்களுக்கும் கற்பிப்போராக அவர்கள் பொலிந் தனர். கல்வி, கேள்வி என்னும் இருவகையில் ஒருவனின் அறிவும், புலமையும் சிறந்ததையும் அக்கால இலக்கியங்கள் காட்டுகின்றன என்பார் அடிகளார்.

### சமய அறிஞர்கள்

இதை அடுத்த காலத்தில் மெய்யுணர்வாளர்களும் சமய அறிஞர்களும் கல்விக்குப் பொறுப்பேற்பதைத் திருக்குறளும், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களும் விளக்கு கின்றன.

### முழுக் கல்வி

இவ்வாறு பழந்தமிழ்க் கல்வி அகவல் மக்கள், பாணர், புலவர், மெய்யுணர்வாளர், சமய அறிஞர் ஆகியோரின் தலைமையில் நடை பெற்ற முறையினையும், அன்றையக் கல்வி ஏட்டுக் கல்வியாக மட்டும் அமையாமல் வாழ்வின் எல்லாத் துறைகளையும் தழுவிய கல்வியாக அமைந்திருந்ததையும் அடிகளார் தம் ஆய்வேட்டில் விளக்குகின்றார்.

### பல நிலைப் புலவர்கள்

மன்னர், மருத்துவர், கணியர், பாணர், தச்சர், கொல்லர், குயவர் எனப் பல நிலை மக்களும் அன்று புலவர்களாக விளங்கி

யதையும், தொகை நூல்களில் காணப் பெறும் 459 புலவர்களுள் 22 பேர் பெண்பாற்புலவர்களாக விளங்கியதையும் அடிகளார் சுட்டி மகிழ்கின்றார்.

## இளமையில் கல்வி

கல்வி எப்பருவத்தில் தொடங்கியது என்பது பற்றிய குறிப்பினை நாம் பழந்தமிழ் நூல்களில் காண இயலாவிடினும் 'கல்லா இளமை' போன்ற தொடர் கல்வி இளமையிலேயே தொடங்கியது என்பதைக் குறிப்பால் உணர்த்துகின்றது என்பார் அடிகளார்.

## கற்கை நன்றே

'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்றும், 'கற்றோர் ஒளியோர்' என்றும் புறநானூறு கூறுவதைக் கொண்டு அன்றையத் தமிழ்ச் சமுதாயம் கல்விக்குச் சிறப்பிடம் வழங்கியிருந்த பான்மையினை நமக்கு அடிகளார் உணர்த்துகின்றார்.

## பாட நூல்

பழந்தமிழ் நாட்டில் கல்வி பயிலும் மாணாக்கருக்கு இலக்கணம், இலக்கியம், செய்யுளியல், வாழ்க்கைமுறை, ஒழுக்கம் ஆகிய அனைத்தையும் கற்பிக்கும் பாட நூலாகவும் கல்வித்துறை நூலாகவும் தொல்காப்பியம் விளங்கியது என்பது அடிகளாரின் துணிபு.

## அறிவுக்குச் சான்றுகள்

இம்மூன்று நூல்களுமே பட்ட ஆய்வேடுகளாக இருப்பினும், அவை சமயமும் இலக்கியமும் சார்ந்த நூல்களாக இருப்பினும், மூன்று நூல்களும் அடிகளாரின் அறிவாண்மைக்கும், ஆராய்ச்சித் திறனுக்கும், பன்மொழிப் புலமைக்கும் தக்க சான்றாக விளங்குவன என்பதில் ஐயமில்லை.

## தொகுத்து வழங்கிய தொண்டு

தமிழ்த் தொடர்புடைய மூன்று நூல்களைத் தொகுத்து அடிகளார் ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளார். உலக அரங்கில் தமிழின் சிறப்பை நிலைநாட்ட இவை உறுதுணையாக அமைந்துள்ளன என்பதில் ஐயமில்லை.

### 1. தமிழியல் நூல்கள் ஆய்வடங்கல் (A Reference Guide to Tamil Studies : Books)

தமிழியல் பற்றிய நூல்கள் பல நூற்றாண்டுக் காலமாகவே ஐரோப்பிய மொழிகளில் வெளிவந்துள்ளன. ஆர்வமின்மை காரணமாகவோ, அம்மொழிகளை அறியாமை காரணமாகவோ, அத்தகு நூல்கள் வெளிவந்ததைக்கூட அறியாமை காரணமாகவோ என்னவோ தமிழ்கூறு நல்லுலகில் இச்செய்திகள் பரவவில்லை. மேலை நாடுகளில்கூடத் தமிழியல் ஆர்வலர்களைத் தவிர பிறர் இவற்றை அறிந்திருக்க வாய்ப்பில்லை.

ஐரோப்பிய மொழிகளில் தமிழ்பற்றி வெளிவந்த நூல்களைப் பற்றிய குறிப்புக்களையெல்லாம் தொகுத்து ஒரு நூலாக வெளியிட அடிகளார் விரும்பினார். மலாயாப் பல்கலைக்கழக இந்தியத் துறையின் பணியாகவே இதனைச் செய்யப் பல்கலைக்கழகம் நிதியுதவி வழங்கியது[1]. 1961ஆம் ஆண்டில் தொடங்கிய இத் தொகுப்புப் பணி 1963ஆம் ஆண்டில் நிறைவு பெற்றதாயினும்[2] 1966ஆம் ஆண்டிலேயே மலாயாப் பல்கலைக் கழக வெளியீடாக இத்தொகுப்பு நூல் வெளியாகியது.

---

1. X. S. Thani Nayagam; A Bibliographical Guide to Tamil Studies, Tamil Studies Vol. ix, No. 4, 1961, p. 333
2. S. Singaravelu; A Preliminary Report on the Survey of Progress in Tamilology, Tamil Culture Vol. xi, No. 1, 1964; p. 107

122 பக்கங்களைக் கொண்ட இத்தொகுப்பில் 1355 நூல்களைப் பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. ஆசிரியர் பெயர், நூலின் தலைப்பு, அச்சிட்டோர் விவரம், நூலின் பல பதிப்புக்கள், வெளிவந்த ஆண்டு ஆகிய விவரங்களை நாம் இந்நூலில் காணலாம். இந்நூல் தொகுப்பில் இந்தியா, இலங்கை, இங்கிலாந்து, ஸ்வீடன், பிரான்சு, ஆலந்து, ரஷ்யா, செக்கோஸ்லாவாகியா ஆகிய நாடுகளைச் சார்ந்த பதினெட்டு அறிஞர்கள் உதவியுள்ளனர். இலத்தீன், ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மன், போர்த்துக்கேயம், ரஷ்யன், போலிஷ், செக், மலாய், வடமொழி, ஸ்லோவாக், இத்தாலியம், ஸ்வீடிஷ் ஆகிய பல மொழிகளில் தமிழியல் தொடர்பாக வெளிவந்த நூல்கள் பற்றிய குறிப்புக்களை நாம் இந்நூலில் காணலாம். இலக்கியம், மானுடவியல், தொன்மையியல், கலை, கல்வெட்டியல், சமூக வரலாறு, பண்பாடு, நாகரிகம், இலக்கிய வரலாறு, இலக்கியத் திறனாய்வு, இலக்கணம், அகராதியியல், மொழியியல், ஒப்பியல், சமயமும் தத்துவமும், பயண நூல்கள், ஆய்வடங்கல் எனப் பல துறை நூல்களும் இதில் சுட்டப்பட்டுள்ளன.

தமிழாய்வில் ஈடுபடுவோர்க்கு இத்தொகுப்பு நூல் மிக்க பயன் தரவல்லது என்பதில் ஐயமில்லை. தமிழியல் பற்றி இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளின் ஆய்வடங்கல் ஒன்றைத் தொகுப்பதிலும் அடிகளார் ஈடுபட்டிருந்தார். ஆனால் அத்தொகுப்பு நூல் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

## 2. வெளிநாடுகளில் தமிழ்க் கல்வி (Tamil Studies Abroad)

உலகில் பல பல்கலைக் கழகங்களில் தமிழ் கற்பிக்கப்பட்டு வருகிறது. தமிழாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழகம் தவிர்த்த பிற இந்திய மாநிலங்களிலும், பிற நாடுகளிலும் தமிழ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதை இந்நூலிலுள்ள பதினைந்து கட்டுரைகளும் விளக்குகின்றன. பிரான்சு, ஆலந்து, செர்மனி, பிரிட்டன், செக்கோஸ்லாவாகியா, சோவியத் ஒன்றியம், அமெரிக்க ஐக்கிய நாடுகள், மலேசியா, ஆஸ்திரேலியா, நியுஸ்லாந்து, இத்தாலி, ஹங்கேரி, ஜப்பான், போர்த்துக்கல், ஸ்பெயின், ஸ்வீடன், சுவிட்சர்லாந்து, இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் நிகழ்ந்து வரும் தமிழ் ஆய்வுகள் பற்றிய விவரங்களை இந்நூலில் காணலாம்.

268 பக்கங்களைக் கொண்ட இந்நூலைத் தனிநாயகம் அடிகளார் தொகுத்து உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் சார்பில் 1968ஆம் ஆண்டு வெளியிட்டார்.

ஐரோப்பிய நாடுகள் பதினாறாம் நூற்றாண்டு முதல் தமிழகத்துடன் தொடர்பு கொண்டிருந்ததை நாம் அறிவோம். போர்த்துக்கல் நாட்டிலிருந்து வந்து தமிழகத்தில் சமயப் பணி புரிந்த என்றீக்கஸ் அடிகளார் தமிழ் இலக்கணமும் தமிழ் அகராதியும் இயற்றி, முதல் ஐரோப்பியத் தமிழ் அறிஞர் என்று புகழ் பெற்றார். பின் தத்துவ போதகர், வீரமாமுனிவர், சீகன்பால்கு, தே நூர்சு, போப், கால்டுவெல் எனப் பல அறிஞர்கள் தமிழைப் பயின்றனர். தமிழில் ஆய்வு நிகழ்த்தினர்.

முதல் தமிழ் உரை நடை நூல், முதல் தமிழ் அகராதி, முதல் புனைகதை நூல் எனப் பல 'முதல்' பணிகளைப் புரிந்த பெருமை ஐரோப்பியத் தமிழ் அறிஞர்களுக்கு உரியது.

அன்று தொடங்கிய தமிழ்த் தொடர்பு இன்றும் ஐரோப்பிய நாடுகளில் நிலைநின்று தழைத்திருப்பதை இத்தொகுப்பு நூல் நமக்கு விளக்குகின்றது.

பல பழைய, புதிய தமிழ் நூல்கள் இன்றும் செர்மன், பிரெஞ்சு, செக், ரஷ்யன் முதலிய ஐரோப்பிய மொழிகளில் பெயர்க்கப் பட்டுள்ளன. பல அமெரிக்க, ஐரோப்பியப் பல்கலைக் கழகங்களில் தமிழ் கற்பிக்கப்பட்டு வருகின்றது. சில பல்கலைக் கழகங்களில் தமிழ்த் துறை தனித் துறையாக அமைந்து செயல்படுகின்றது. தமிழில் ஆய்வு செய்து முதுகலை, முனைவர் பட்டங்களைப் பெற வும் பல அமெரிக்க, ஐரோப்பியப் பல்கலைக் கழகங்களில் வாய்ப்பு உண்டு.

பல ஆண்டுகளாக அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் தமிழ் ஆய்வு நடைபெற்று வருவதையும், இன்று அந்நாடுகளில் தமிழ் ஆய்வின் நிலை என்ன என்பதையும் நாம் அறிந்துகொள்ள இந்நூல் உதவுகின்றது.

தமிழின் சிறப்பையும் சீர்மையையும் இன்றைய உலகம் அறிந்து போற்ற வேண்டும் என்னும் தணியாத தாகம் கொண்டு பணியாற்றிய அடிகளார் இந்நூலைத் தொகுத்து வெளியிட்டதில் வியப்பதற்கொன்றுமில்லை.

### 3. தமிழ்ப் பண்பாடும் நாகரிகமும் (Tamil Culture and Civilization)

அடிகளார் மலாயாப் பல்கலைக் கழகத்தில் பணி புரிந்தபோது மாணவர்களுக்குக் கற்பித்த பாடங்களுள் 'தமிழ்ப் பண்பாடும்

நாகரிகமும்' என்பதும் ஒன்று. அத்தலைப்பில் தமிழ் வரலாறு, இலக்கியம், மொழியியல், கவின்கலைகள், அரசியல்-சமூக வாழ்வு, வணிகம், சமயம் எனப் பல பிரிவுகளில் அடிகளார் பாடம் நடத்துவார். தம் மாணவர்கள் இவைபற்றி விரிவாகக் கற்றறிய வேண்டுமென்பதற்காகப் பல நூல்களை மேற்கோளாகக் காட்டுவார். அந்நூல்களைப் படிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்துவார்.

தமிழ்த் தொடர்பாக ஆங்கிலத்தில் பலரும் எழுதியுள்ள நூல்களிலிருந்து சிறந்த பகுதிகளைத் தொகுத்து இந்நூலை வெளியிடுவதற்கு, அடிகளார் பல்கலைக்கழகத்தில் நடத்திய பாடமே காரணமாயிற்று.

எம். இரத்தினசாமி, சுனித்தி குமார் சட்டர்ஜி, வி.அய். சுப்பிரமணியம், மு. வரதராசனார், தனிநாயகம் அடிகளார், தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், அ. சிதம்பரநாதச் செட்டியார், பி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர், பி.டி. சீனிவாச ஐயங்கார், சர். பி. அருணாசலம் போன்ற இந்திய, இலங்கை ஆசிரியர்களும் ஆல்ஃபிரட் நோஃப், அமரி தெ ரியன்கூர், லெயோனார்து கோட்ரெல், அலெக்சாண்டர் ரீ, கமில் சுவலபில், எம். பி. எமனோ, தாமஸ் பர்ரோ, ழான் ஃபீலியோசா, பெரில் தெ ஸோட்டே, ஆல்பர்ட் ஷ்வைட்சர், ஹைன்ரீஹ் ஃஸிம்மர், சார்லஸ் ஃபாப்ரி, மார்ட்டிமர் வீலர். ஹீராஸ் அடிகள் பல மேலை நாட்டு ஆசிரியர்களும் எழுதிய நூல்களிலிருந்தும் கட்டுரைகளிலிருந்தும் ஐம்பத்து மூன்று பகுதிகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

இனப் பெயர்ச்சி, ஆரியர் காலத்துக்கு முந்திய நாகரிகம், வரலாற்றுக் காலத்துக்கு முந்திய தென் இந்தியா, திராவிட மொழிகள், வடமொழியில் திராவிட மொழிச் சொற்கள், தென்கிழக்கு ஆசியாவில் தமிழும் வடமொழியும், சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகள், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள், தென் இந்தியக் கலைகள், திராவிடக் கட்டடக் கலை, இசை, நடனம், மூவேந்தர்கள், கடல் வணிகம், நகர-கிராம வாழ்வியல், முருகப் பெருமான், சைவம், சமணம், பௌத்தம், ஆரியரும் திராவிடரும் எனப் பல தலைப்புக்களைக் கொண்டதாக இத்தொகுப்பு அமைந்துள்ளது.

தமிழ்ப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் பற்றி அறிய விரும்புவோர்க்கு இந்நூல் ஒரு கருத்துச் சுரங்கமாக விளங்குகிறது.

# யாமறிந்த மொழிகளிலே

அடிகளார் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை மிக்கவராக, அவ்விருமொழிகளையும் எளிதாகவும் இனிதாகவும் கையாளும் திறம் பெற்றிருந்தார் என்பதை நாம் ஏற்கனவே விளக்கி யுள்ளோம்.

## பிரெஞ்சுப் புலமை

அடிகளார் பிரெஞ்சு மொழியில் வல்லவர் என்பதை அவரது முனைவர் பட்ட ஆய்வேடுகள் எளிதாக மெய்ப்பிக்கின்றன. 1939ஆம் ஆண்டு எழுதிய சமயவியல் முனைவர் பட்ட ஆய்வேட்டின் கருவி நூற்பட்டியலில் முப்பத்தொரு பிரெஞ்சு நூல் களும், 1957ஆம் ஆண்டு எழுதிய கல்வித்துறை முனைவர் பட்ட ஆய்வேட்டின் கருவி நூற்பட்டியலில் முப்பத்தாறு பிரெஞ்சு நூல் களும் இடம் பெற்றுள்ளன.

அவர் பாரீஸ் நகரிலுள்ள பிரான்சுக் கல்லூரியில் சிறிது காலம் பேராசிரியராகப் பணியாற்றினார்.[1] ஆகவே அக் கல்லூரியில் பிரெஞ்சு மொழியில் விரிவுரைகள் ஆற்றினார் என்பது தெளிவு.

1964ஆம் ஆண்டு சூலைத் திங்களில் அடிகளார் மொரீஷஸ் தீவுக்குச் சென்றிருந்தபோது, அந்நாட்டு வானொலி மூலமாகப் பிரெஞ்சு, ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் உரை யாற்றினார்[2] என அறிகின்றோம்.

---

1. Filliozat Jean, 'Father Thani Nayagam and his Work : The Creation of IATR' Tamilaram, p. 39
2. Tamil Culture, Vol. xi, No. 3, Jul Sept. 1964, p. 292

### ஜெர்மன் அறிவு

அடிகளார் செர்மன் மொழியினை அறிந்திருந்தார் என்பது உறுதி. ஏனெனில் 1939ஆம் ஆண்டு எழுதிய முனைவர் பட்ட ஆய்வேட்டில் ஏழு செர்மன் நூல்களையும், 1957ஆம் ஆண்டு ஆய்வேட்டில் பதினெட்டு செர்மன் நூல்களையும் அவர் கருவி நூற்பட்டியலில் குறிக்கின்றார். அவற்றிலிருந்து பல அடிக் குறிப்புக்களையும் கையாண்டுள்ளார்.

12-5-1964 அன்று செர்மன் நாட்டு ஹாம்பர்க் பல்கலைக் கழகத்தின் தத்துவ இயல் துறையில் 'இந்தியவியல் ஆராய்ச்சியில் திராவிடப் பண்பாட்டின் இடம்' என்னும் விரிவுரையாற்றியதாக[3] அறிகின்றோம். இவ்வுரையினை அடிகளார் செர்மன் மொழியில் ஆற்றினாரா என்பது உறுதியாகத் தெரியவில்லை. ஆனால் அடிகளார் செர்மன் மொழியினை அறிந்தவர் என்பதாலும், செர்மனி நாட்டுப் பல்கலைக் கழகங்களில் பயிற்றுமொழி செர்மன் மொழியே என்பதாலும் அடிகளார் தம் விரிவுரையினைச் செர்மன் மொழியில் ஆற்றியிருக்க வேண்டும் என ஊகிப்பதில் தவறில்லை.

### இத்தாலிய மொழித் திறன்

அடிகளார் தாம் உரோமையில் ஆறாண்டுக் காலம் (1934-39) சமயக் கல்வி பயின்றபோது இத்தாலிய மொழியினைச் சிறப்பாகப் பயின்றார். தம் இரு முனைவர் பட்ட ஆய்வேடு களிலும் மொத்தம் பதினைந்து இத்தாலிய நூல்களை அவர் கருவி நூல்களாகப் பயன்படுத்தியிருப்பதைக் காணுகின்றோம்.

1971ஆம் ஆண்டில் அவர் இத்தாலிய நாட்டு நேப்பிள்ஸ் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் (Visiting Professor) பணியாற்றியதாகவும், அவ்வமயம் அவர் நோயுற்று இலங்கைக்குத் திரும்பியதாகவும், அதன்பின் அவர் தம் பயணங்களைக் குறைத்துக் கொண்டு பெரும்பாலும் யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருந்த தாகவும்[4] அடிகளாரின் தங்கை மகன் திரு. ராஜன் பிலிப்புப் பிள்ளை எழுதியுள்ளார். ஆகவே இத்தாலிய மொழியில் பல்கலைக் கழக அளவில் விரிவுரைகள் நிகழ்த்துமளவுக்கு அவர் ஆற்றல் பெற்றிருந்தார் என்பது தெளிவு.

---

3. அந்தனி ஜான் அழகரசன், வே., முன்சுட்டியது பக். 56-57
4. Rajan Philipupillai, A. Biographical Sketch, Op. cit., p. 10

**ஸ்பானிஷ் மொழியாற்றல்**

அடிகளார் தமது சமயவியல் முனைவர் பட்டத்துக்காக எழுதிய ஆய்வேட்டில் ஸ்பானிஷ் மொழி நூல் ஒன்றைக் கருவி நூலாகப் பயன்படுத்தியுள்ளார். இதனால் அவர் தம் உரோமை வாழ்க்கையின்போது ஸ்பானிஷ் மொழியினைப் பயின்றார் என எளிதில் ஊகிக்கலாம்.

தம் கல்வியியல் முனைவர் பட்ட ஆய்வேட்டிலும் அவர் ஸ்பானிஷ் மொழி நூல்கள் இரண்டினைப் பயன்படுத்தியுள்ளதை அவ்வேட்டின் கருவிநூற்பட்டியல் காட்டுகின்றது.

தம் முதல் உலகத் தமிழ்த்தூதுப் பயணத்தின் போது (1949-50) ட்ரினிடாட், ஜமெய்க்கா, மார்த்தினிக், மெக்சிகோ, எக்குவதோர், அர்ஜென்ட்டீனா, பிரேஸில், சிலி முதலிய தென் அமெரிக்க நாடுகளில் ஒரு திங்கள் அளவாகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அடிகளார் உரையாற்றியதை அறிவோம். அதுபோது அவர் 'தென் இந்தியாவின் பண்பாட்டு மரபு' (La herencia Cultural de la India del Sur), 'தென் இந்தியாவில் இலக்கியமும் கத்தோலிக்க மறையும்' (La Literature yel Catolicismo enla India del Sur) என்னும் இரு தலைப்புக்களில் உரையாற்றியதை ஸ்பானிஷ் நாளிதழ் ஒன்றின்மூலம்[5] நாம் அறிகின்றோம்.

இச்சான்றுகள் அடிகளாரின் ஸ்பானிஷ் மொழியறிவை நமக்குப் புலப்படுத்துகின்றன.

**போர்த்துக்கேய மொழிப் புலமை**

அடிகளார் போர்த்துக்கேய மொழியையும் கற்றறிந்திருந்தார் என்பதை அவர் அந்தாம் ப்ரோயென்சா அடிகளாரின் தமிழ்—போர்த்துக்கேய அகராதியை வெளியிட்டதன் மூலம் அறிகின்றோம். அவ்வகராதியைப் பற்றி அவர் எழுதிய அறிமுகக் கட்டுரை[6] இதனை உறுதிப்படுத்துகின்றது.

தம் அகராதிக்குப் ப்ரோயென்சா அடிகளார் எழுதிய போர்த்துக்கேய முன்னுரையை அடிகளாரும் பேராசிரியர் எட்கர்

---

5. La prensa, 21-9-1950, p. 3
6. X. S. Thani Nayagam, Antao de Proenca's Tamil-Portuguese Dictionary, 1679, An Introduction. Tamil Culture Vol. xi, No. 2, Apr. Jun. 1964, pp. 117-127

நோல்ட்டனும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளனர்.[7] அம்மொழிபெயர்ப்புப் பணிக்குத் தம் உதவி அடிகளார்க்குத் தேவைப்படவில்லை என்றும், அடிகளாரே முழுப் பணியினையும் செய்துவிட்டுக் கூட்டாசிரியராகத் தம் பெயரை வெளியிட்டுச் சிறப்புச் செய்தார் என்றும் பேரா. எட்கர் நோல்ட்டன் எழுதியுள்ளார்.[8]

பேரா. நோல்ட்டன் போர்த்துக்கேய மொழியினை நன்றாக அறிந்தவர். அகராதியின் முன்னுரையைத் தம் உதவியின்றியே அடிகளார் மொழிபெயர்த்தார் என்று அவரே கூறுவதால் அடிகளாரின் போர்த்துக்கேய மொழியாற்றல் நமக்குத் தெளிவாகின்றது.

## ரஷ்ய மொழியறிவு

அடிகளார் ரஷ்ய மொழியினையும் கற்றார். 1960ஆம் ஆண்டு ரஷ்ய நாட்டு மாஸ்கோ நகரில் கீழ்த்திசை அறிஞர்களின் 25ஆம் உலக மாநாடு நடைபெற்றபோது, அம்மாநாட்டில் கலந்து கொண்டு ஆய்வுக்கட்டுரை வழங்குமாறு அடிகளார் அழைக்கப் பெற்றார். அவ்வழைப்பினை ஏற்ற அடிகளார் அவ்வாறே ரஷ்யா சென்று மாநாட்டில் கலந்துகொண்டு 'அகவன் மக்களும் கவிதையும்' என்னும் ஆய்வுக் கட்டுரை வழங்கியதோடு, ரஷ்ய நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்றார். தமிழாராய்ச்சியில் வல்ல ரஷ்யத் தமிழறிஞர் நால்வரை (Glassov என்னும் கண்ணன், அந்த்ரனோவ், பியட்கோவ்ஸ்கி, ரூதின் என்னும் செம்பியன்) அடிகளார் நேரில் சந்தித்து மகிழ்ந்தார்.

இப்பயணத்தைப் பயனுள்ள பயணமாக்கிக் கொள்ள விரும்பிய அடிகளார் அதற்காக ரஷ்யன் மொழியைப் பயின்றார். ரஷ்யாவுக்குச் செல்லுமுன் அடிகளார் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்குச் செல்ல வேண்டியிருந்ததால், அந்நாட்டிலேயே அவர் ரஷ்ய மொழியைப் பயின்றார். ''ரஷ்ய மொழியின் வரி வடிவு கிரேக்க மொழியின் வரிவடிவை அறிந்த எனக்கும் சலிப்பை உண்டாக்கியது. ஆனால் ரஷ்யாவுக்குச் செல்வேன் என்ற நம்பிக்கை தோன்றியதும், அங்குள்ள மக்களுடன் ஒரு சிறிதேனும் உரையாடவேண்டுமென்ற

7. Ibid. pp. 128-134
8. Edgar, C. Knowlton, Jr., 'Appreciation of a Many-Faceted man', Tamilaram, p. 72

கருத்துடன் அம்மொழியைப் பயிலத் தொடங்கினேன். ஐக்கிய அமெரிக்காவில் வாழ்ந்த ரஷ்யர் ஒருவர் என் விடுதி அறைக்கு வந்து முதற் பாடங்களைக் கற்பித்தார். அத்துடன் ரஷ்ய மொழி பயிற்றும் இசைத்தட்டுக்களைப் பெற்று ஓய்வு நேரத்தில் அம்மொழியைப் பயின்று வந்தேன்'' என்று அடிகளாரே தாம் ரஷ்ய மொழியைப் பயின்ற பான்மையினை[9] உரைக்கின்றார்.

## இலத்தீன் மொழிப் புலமை

தம் குருத்துவப் பயிற்சியின்போது அடிகளார் இலத்தீன் மொழியினை நன்றாகக் கற்றார். அன்று உரோமையில் கல்வி பயிலச் செல்வோர் இலத்தீன் மொழியினை நன்றாக அறிந்திருக்க வேண்டும். ஏனெனில் உரோமைப் பல்கலைக்கழகங்களில் இலத்தீன் மொழியே அண்மைக்காலம் வரையில் பயிற்றுமொழி யாக அமைந்திருந்தது.

அடிகளார் உரோமையில் மாணவராக இருந்தபோது, தங்கள் விவிலியப் பேராசிரியராகிய ஜே. ராமோஸ் அடிகளாரின் விரிவுரை களைக் குறிப்பெடுத்து அதனைத் தொகுத்து 73 பக்க நூலாக இலத்தீன் மொழியில் தனிச் சுற்றுக்காக வெளியிட்டதை[10] அறிகின்றோம்.

அடிகளார் தமக்கு எழுதிய மடல்களில் இலத்தீன் மொழியைப் பயன்படுத்தியதாக முனைவர் கமில் சுவலபில்[11] எழுதுகின்றார்.

## பிற மொழியறிவு

மேற்குறித்த மொழிகளைத் தவிர எபிரேயம், கிரேக்கம், வடமொழி, மலாய், சிங்களம் ஆகிய மொழிகளையும் அறிந்திருந் தார் என 'அணையா விளக்கு' என்னும் தொகுப்பு நூல் கூறுகின்றது.[12]

அடிகளார் பதினைந்து மொழிகளை அறிந்தவராகவும் முப்பது மொழிகளைப் பயன்படுத்த வல்லவராகவும் திகழ்ந்தார் என

---

9. தனிநாயக அடிகள்; ஒன்றே உலகம், பக். 60-61
10. அமுதன் அடிகள் (தொகு), தனிநாயகம் அடிகளார் நினைவு மலர், திருச்சிராப்பள்ளி, 1992 பக். 34
11. V. Kamil Zvelabil, The Spiritual Father of the IATR; Tamilaram; p. 41
12. அணையா விளக்கு, ப. 'கே'

மேதகு ஆயர் குலேந்திரன் கூறுவதை[13] ஏற்றுக்கொள்ளுமளவுக்குத் தக்க ஆதாரங்கள் எமக்குக் கிடைக்கவில்லை. மேதகு குலேந்திரன் அவர்கள் இதற்கு மூன்றாண்டுகளுக்குப் பின்னர் அடிகளாரைப் பற்றி எழுதிய கட்டுரையில் அடிகளார் அறிந்திருந்த மொழிகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடாமல், அவர் 'பல மொழிகளை அறிந்திருந்தார்' என்று மட்டும் எழுதியிருப்பதால்[14] அவரே தம் கருத்தினை மாற்றிக் கொண்டார் எனக் கருதவும் இடமுண்டு.

அடிகளார் அறிந்திருந்த மொழிகள் எத்தனை என்றோ, இவையிவை என்றோ என உறுதியாக வரையறுத்துக் கூற இயலாவிட்டாலும் மேற்குறித்த ஒன்பது மொழிகளை அவர் நன்கு கற்றிருந்தார் என்பது உறுதி.

தமிழ் அறிஞர்களிடையில் இத்தனை மொழிகளைக் கற்று அவற்றையெல்லாம் தம் தமிழ்த்தூதுப் பணிக்குப் பயன்படுத்திக் கொண்டவர் அடிகளாரைத் தவிர வேறெவருமிலர் என நாம் துணிந்து கூற முடியும்.

---

13. Bishop S. Kulandran; Fr. X. S. Thani Nayagam; தொண்டன், மட்டக்களப்பு; 1980; ப. 9
14. S. Kulandran, 'He put Tamil on the world map' Tamilaram; p. 61

# பற்பல பணிகள்

அடிகளார் பல்கலைக் கழகப் பேராசிரியர் பணியோடு இன்னும் பல பணிகளையும் ஏற்றுச் செயல்பட்டு வந்தார். அவையனைத்தையும் இங்குத் தொகுத்து வழங்குதல் நலம் பயக்கும் எனக் கருதுகின்றோம்.

| | |
|---|---|
| 1940-45 | துணைத் தலைமையாசிரியர், புனித தெரசாள் உயர்நிலைப்பள்ளி, வடக்கன்குளம் (தமிழ்நாடு) |
| 1948 | தமிழ் இலக்கியக் கழகத்தை நிறுவுதல் |
| 1949-50 | உலகத் தமிழ்த் தூதுப் பயணம் |
| 1952 | இலங்கையில் தமிழ்ப் பண்பாட்டுச் சங்கத்தை நிறுவுதல்; 'தமிழ்ப் பண்பாடு' (Tamil Culture) இதழைத் தொடங்குதல் |
| 1952-61 | இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கல்வித் துறையில் விரிவுரையாளர் |
| 1954 | சென்னையில் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தை நிறுவுதல் |
| 1961 | அமெரிக்க ஐக்கிய நாடு, கனடா, செர்மனி, இத்தாலி, ஸ்காண்டிநேவியா, ரஷ்யா ஆகிய நாடுகளில் மூத்தோர் கல்வி பற்றிய ஆய்வுப் பயணம். |
| 1961 | சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் |
| 1961-69 | மலாயாப் பல்கலைக் கழகத்தில் இந்தியத் துறைத் தலைவர், பேராசிரியர் |

| | |
|---|---|
| 1964 | ஜெர்மனி நாட்டில் விரிவுரைகள் ஆற்றுவதற்காக மேற்கொண்ட பயணம் |
| | உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை நிறுவுதல்; அம்மன்றத்தின் பொதுச் செய லாளர் |
| 1965 | அக்டோபர்—டிசம்பர்; மலாயாப் பல்கலைக் கழகத்தின் கலைப் புலத்தின் தற்காலிகத் தலைவர் |
| 1966-67 | பல்கலைக் கழகக் கலைப்புலத் தலைவர் |
| 1966 | முதல் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் அமைப்புக் குழுத் துணைத் தலைவர், மாநாட்டு இணைத் தலைவர் |
| 1969 | மலாயாப் பல்கலைக் கழகப் பணியினின்று ஓய்வு பெறுதல். |
| 1970 | பாரீஸ் நகரில் பிரான்சுக் கல்லூரியில் இணைப் பேராசிரியர் |
| 1971 | நேப்பிள்ஸ் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் (Visiting Professor) |

இன்னும் இலங்கை அரசின் சாகித்திய மண்டலத்தின் உறுப்பின ராக 1961 வரையிலும், சென்னை மாநில அரசின் தமிழ் வளர்ச்சிக் கழக உறுப்பினராக 1963 வரையிலும், சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில—தமிழ் அகராதிக் குழுவின் உறுப்பினராக 1963—வரை யிலும், சென்னை அரசின் குழந்தைகள்—மூத்தோர் பாடநூல் குழுவின் தலைவராக 1964 வரையிலும் அடிகளார் பணியாற்றி யிருக்கின்றார்.

மலாயாப் பல்கலைக்கழகப் பேராசிரியராகப் பணிபுரிந்த போது,

| | |
|---|---|
| 1961-63 | இசுலாமியக் கல்விக் குழுவில் உறுப்பினர் |
| 1961-64 | மலாயாப் பல்கலைக் கழகக் கல்வித் துறைப் பாடக் குழுவில் கலைப்புல உறுப்பினர், கல்வித் துறையின் கலைக்குழு உறுப்பினர் |
| 1961-66 | பல்கலைக் கழகப் பேராசிரியர் பெருமன்ற உறுப்பினர் |
| 1961-66 | இலக்கிய ஆணைக் குழு உறுப்பினர் |
| 1961-66 | பல்கலைக் கழக மாணவர் நல ஆணையத்தில் உறுப்பினர் |
| 1961-69 | மலாயா நாட்டு உயர்நிலை, கேம்பிரிட்ஜ் மேனிலை வகுப்புக்களின் தமிழ்த் தேர்வாளர் |

1963-64 உளவியல், மானிடவியல், சமூகவியல், மெய்யியல், அரசியல். ஆட்சியியல், மொழியியல் துறைகளில் பாடத் திட்டக் குழு உறுப்பினர்

1964-67 கீழைத் தேய அறிஞர்களின் மன்றத்தில் மலேசியக் கிளைத் துணைத் தலைவர்.

என மேலும் பல பொறுப்புக்களை அடிகளார் ஏற்றுச் சிறப்பாகப் பணிபுரிந்தார்.

1952-1966 ஆண்டுகளில் Tamil Culture இதழின் முதன்மை ஆசிரியராகவும் 1969-70 ஆண்டுகளில் Journal of Tamil Studies இதழின் முதன்மை ஆசிரியராகவும் அடிகளார் அளப்பரிய தொண்டு புரிந்தார்.

மேலும், பல ஆசிய, ஐரோப்பிய, அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் தமிழ் இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு பற்றிய சிறப்புரைகளை அவர் நிகழ்த்தியுள்ளார். இந்தியா, இலங்கை, இங்கிலாந்து, மலேசியா, இத்தாலி, அமெரிக்க ஐக்கிய நாடு எனப் பல நாடுகளின் தொலைக்காட்சியிலும் வானொலியிலும் உரை நிகழ்த்தியுள்ள அடிகளாரின் சிறப்புக் கட்டுரைகளை உலக நாடுகளின் பல இதழ்கள் வெளியிட்டு மகிழ்ந்தன.

# பண்பாட்டின் இலக்கணம்

தனிநாயகம் அடிகளார் மிகச் சிறந்த பண்பாளர் என்பதை அவரை அறிந்த அனைவருமே ஏற்றுக் கொள்வர். "இன்பமாய்ப் பேசுவார், பண்புடன் பழகுவார், பணிவுடன் தொண்டாற்று வார்"[1] என்று அவரது அடக்கத் திருப்பலியில் மறையுரை நிகழ்த்திய மதுர நாயகம் அடிகளார் கூறியது முற்றிலும் பொருந்தும். "தமது தலைமுறையின் மாபெரும் தமிழர் அவர்; ஏனெனில் தம் மொழி, பண்பாடு ஆகியவற்றின் சிறப்பைத் தமிழ் மக்களுக்கு உணர்த்துவதில் அவர் பெருந்துணையாக இருந்தார்"[2] என்று திரு. ஜேம்ஸ் இரத்தினம் கூறுவது மிகையன்று.

## நட்பு

அடிகளார்க்கு உலக நாடுகள் பலவற்றிலும் நண்பர்கள் உண்டு. பலமொழி பேசுவோரும் அடிகளார்க்கு நண்பர்களாக இருந்தனர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் பொன் மொழியைத் தம் வாழ்வில் அவர் கடைப்பிடித்து வாழ்ந்தவர் என்பதை உலகளாவிய அவரது நண்பர்கள் தொகையே மெய்ப்பிக்க வல்லது. ஆங்கில நாட்டவராகிய வின்சென்ட் க்ரோனின், சி.ஆர். பாக்ஸர், ஆர். இ. ஆஷர், ஜே. ஆர். மார், ஆல்பர்ட்டீன் கோர், பிரான்சு நாட்டவராகிய ழான் ஃபீலியோசா, ஃபிரான்சுவா க்ரோ, அமெரிக்க ஐக்கிய நாட்டவராகிய லியோ நோய்டெக்கர், எம். பி. எமனோ, கிளாரன்ஸ் கிளிக், எட்கர் நோல்ட்டன், கார்ல் மென்ஜெஸ், செக்கோஸ்லாவாக்கிய நாட்டு கமில் சுவலபில், இலங்கையராகிய சு. வித்தியானந்தன். க. கைலாசபதி, கா. சிவத்

1. அணையா விளக்கு, பக். 3
2. மேற்படி, பக். 73

தம்பி, சி. ஜே. எலியசர், தந்தை செல்வா, ஜி. ஜி பொன்னம்பலம், எம். திருச்செல்வம், அருள்திரு. ஜோக்கிம் பிள்ளை, ஆயர் தியோகுப் பிள்ளை, ஆயர் குலேந்திரன், ஏ. ஜே. வில்சன், நீதிபதி தம்பையா, வீரகேசரி வென்செஸ்லாஸ், ஜேம்ஸ் இரத்தினம், கு. நேசையா, எம். எம். உவைஸ், எஃப். எக்ஸ். சி. நடராசன், ஆயர் சி. எல். விக்கிரம சிங்க, பெட்ரம் பாஸ்தியாம் பிள்ளை, இந்தியராகிய அ. சிதம்பர நாத செட்டியார், ஏ. சுப்பையா, வி. அய். சுப்பிரமணியம், இரா. பி. சேதுப்பிள்ளை, அருள்திரு. ச. இராசமாணிக்கம், இரா. முத்துக்குமாரசுவாமி, வ. சுப்பையா பிள்ளை, சுவாமி அமலதாசன், பேராயர் அருளப்பா என அவரது நண்பர் பட்டியல் மிக நீண்டதாகும்.

தம் நண்பர்களை அவர் மிகவும் மதித்தார். அவர்களுடன் உரிமையோடு பழகினார். மலாயாப் பல்கலைக் கழகத்திலிருந்து ஓய்வுபெற்று இலங்கைக்குத் திரும்பியபோது, பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்த முனைவர் ஏ. ஜெயரத்தினம் வில்சன் அவர்களுடன் ஓராண்டுக்குமேல் தங்கியிருந்தார்[3]. அதன் பின்னர் அவர் யாழ்ப்பாணத்தில் தம் ஓய்வு காலத்தைச் செலவிட்டார்.

தம் நண்பர்களைச் செல்லமாகப் பெயர் சொல்லி அழைப்பதை அடிகளார் மிகவும் விரும்புவார். தத்துவபோதகரின் வாழ்க்கை வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதிய ஆங்கில எழுத்தாளராகிய வின்சென்ட் க்ரோனின் அவர்களை ஆங்கில முறைப்படி வின்ஸ் என்றும்[4] அவர் மிகுந்த உரிமையுடன் அழைப்பார்.

அடிகளாரைச் சந்திக்கும் மனிதர் அனைவரும் அவரைத் தமது நண்பராகக் கொள்ள வேண்டுமென விரும்பும் அளவுக்கு அவரது பண்பு நலன்கள் அமைந்திருந்தன என்பார் எட்கர் நோல்ட்டன்.[5]

நண்பர்களுக்கு உதவுவதிலும் விருந்தோம்பலிலும் அடிகளார்க்கு நாட்டம் மிகுதி. 1964ஆம் ஆண்டு டில்லியில் நடந்த கீழைத் தேய அறிஞர்களின் உலக மாநாட்டில் தம் நண்பர் கமில் சுவலபில் கலந்து கொள்ள வேண்டுமென்று அடிகளார்

3. A. Jeyaratnam Wilson 'Priest, Scholar and Patriot', Tamilaram, pp. 32-33
4. Cronin Vincent, A Witness to Christ, Tamilaram p. 18
5. Edgar, C. Knowlton, Jr., Appreciation of a many-faceted man, Tamilaram, p. 72

விரும்பினார். சுவலபிலும், அடிகளாரும் நேரில் சந்திக்காமல் கடிதத் தொடர்பு மூலமே நட்புப் பூண்டிருந்த காலம் அது. எனினும் மாநாட்டில் சுவலபில் கலந்து கொள்வதற்குத் தேவையான பொருளுதவிக்கு அடிகளார் ஏற்பாடு செய்தார்.[6]

**விருந்தோம்பல்**

அடிகளாரின் விருந்தோம்பல் பண்பு உலகப் புகழ்பெற்றது எனலாம். அதைப் பற்றி முனைவர் கமில் சுவலபில், பேரா. எஸ். அரசரத்தினம், எமனோ, க்ரோனின், பேராசிரியர்கள் பெர்ட்ரம் பாஸ்தியாம் பிள்ளை, கே. இந்திரபாலா, எட்கர் நோல்ட்டன் எனப் பல நாட்டு அறிஞர்களும் பாராட்டியிருக்கின்றனர். அவரது நண்பர்களுள் பெரும்பாலோர் கல்வித்துறையைச் சார்ந்தவர்கள் என்பதும், அவர்களை விருந்துக்கு அழைத்து வயிற்றுக்கு உணவோடு செவிக்கும் அறிவுக்கும் விருந்து படைப்பதில் அடிகளார் வல்லவர் என்பதும் இங்குத் குறிப்பிடத் தக்கவை.

**அறிவாண்மை**

அடிகளாரின் பொழுதுபோக்கு, புத்தகங்களைப் படிப்பதே என்பதில் ஐயமில்லை. தொடர்ந்து படித்துத் தம் அறிவையும் ஆராய்ச்சியையும் வளர்த்துக் கொள்வதில் அவர் ஈடிணையற்றவர்.

அடிகளாரின் அறிவாண்மையே உலக அறிஞர்கள் நடுவில் அவருக்குச் சிறப்பிடம் பெற்றுத் தந்தது என்பது குறிப்பிடத் தக்கது. தமிழ் ஆராய்ச்சியே அடிகளாரின் களம் என்றாலும் நாடகம், இசை, வரலாறு, சமயம், ஓவியம், சிற்பம் எனப் பல துறை வல்லுநராகவும் அவர் திகழ்ந்தார். எனவே அவர் எத்துறையைப் பற்றிப் பேசினாலும் உரையாடினாலும் கூடியிருந்தோர் மெய்ம்மறந்து செவிமடுத்து மகிழ்வது வழக்கம்.

**நகைச்சுவை**

தம் நண்பர்களோடு உரையாடும்போது அடிகளார் நகைச்சுவை மிக்கவராக இருப்பார். ஆனாலும் அவரது நகைச்சுவை கூடப் பெரும்பாலும் அறிவுசார்ந்ததாகவே இருக்கும்.

தூத்துக்குடி மறைமாவட்டத்தில் அடிகளார் பணியாற்றிய போது அம்மறைமாவட்டப் பொருளாளர் ஒருமுறை அவருக்கு

6. K. V. Zvelebil; op. cit., p. 42

எழுதிய கடிதத்தை முடிக்கும்போது 'கிறிஸ்துவில் உங்கள் அடிமை என்று அக்கால வழக்கப்படி எழுதிக் கையொப்பமிட்டிருந்தார். அடிகளார் அவருக்குப் பதில் எழுதும்போது, 'கிறிஸ்துவில் என் அடிமைக்கு' என்று தம் மடலைத் தொடங்கியிருந்தார்.[7]

28-4-1880 அன்று யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவாற்றினார் அடிகளார். தாம் அணிந்திருந்த புதிய காலணிகளை வீரசிங்கம் மண்டபத்தினுள் நுழையுமுன் கழற்றி வெளியே வைத்துவிட்டுச் சென்றார். சொற்பொழிவு முடிந்து வெளியே வந்தபோது காலணிகளுள் ஒன்று காணாமற் போய் வேறொரு காலணி வைக்கப்பட்டிருந்தது. அடிகளார் தாம் கடைசிக் காலத்தில் தங்கியிருந்த பண்டத் தரிப்பு தியான இல்லத்துக்குத் திரும்பியபோது, அங்குள்ள கன்னியர்களைப் பார்த்துக் "கன்னியர்களே, என் கால் ஒன்று காணாமல் போய்விட்டது" என்று சொல்லிக் காலணி அணியாத காலைக் காட்டிச் சிரித்தாராம்[8].

## நாவன்மை

அடிகளாரின் நாவன்மை உலகப் புகழ் பெற்றதாகும். உலகின் பல்வேறு நாடுகளில் பொது மேடைகளிலும் ஆலயங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் கருத்தரங்குகளிலும் மாநாடுகளிலும் அவர் உரையாற்றியுள்ளார். கேட்பதற்குச் சுவையான இனிய குரலில், தக்க ஏற்ற இறக்கங்களுடன், மகிழ்ச்சி தரும் வகையில் சொற்பொழிவாற்ற வல்லவர் அடிகளார். அவர் உணர்ச்சியைக் தூண்டும் பொதுமேடைப் பேச்சாளர் அல்லர். என்றாலும் ஒரு மணி நேரத்துக்கு மேல் பேசினாலும் அவையோரின் ஆர்வம் குன்றாத நிலையில் உரையாற்ற வல்லவர்.

பேசுவதற்குமுன் தக்க முறையில் தயாரிப்பை மேற்கொள்வது அடிகளாரின் வழக்கம். முக்கியமான உரைகளை முழுமையாக எழுதிப் படித்து வழங்குவதும் அவரது வழக்கம். ஆகவே அவரது உரைகள் கட்டுரை வடிவம் கண்டு நூல்களில் இடம் பெற்றது உண்டு.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் திறம்பட உரை நிகழ்த்த வல்லவராகிய அடிகளார், தம் அவையினருக்கேற்றவாறு

---

7. வே. அந்தனிஜான் அழகரசன்; முன்சுட்டியது; ப. 111
8. மேற்படி ப. 110

பிரெஞ்சு, ஸ்பானிஷ், இத்தாலியம் ஆகிய மொழிகளிலும் உரையாற்றியது உண்டு.

தேவைக்கேற்றவாறு முன் தயாரிப்பு இல்லாமல் அடிகளார் உரையாற்றுவது உண்டு. அத்தகைய உரைகளும் சுவைமிக்கனவாகவே அமைந்திருக்கும்.

அடிகளாரின் தேர்ந்த சொல்லாட்சியும், தெளிவான ஒலிப்பு முறையும் அனைவரின் மதிப்பையும் பெறவல்லவை யாகும். தாம் கற்றறிந்த மொழிகளைச் செம்மையாகக் கையாளும் திறம் அவருக்குக் கைவந்த கலை.

### திட்டமிட்ட செயல்பாடு

எதைச் செய்தாலும் அதைத் தக்க முறையில் திட்டமிட்டுச் செயல்படுத்துவது அடிகளாரின் வழக்கம். மலாயாப் பல்கலைக் கழகத்தில் இந்தியத் துறையை வளர்ப்பதிலும், தாம் முன்னின்று நடத்திய கோலாலம்பூர் பாரிஸ் மாநாடுகளை நடத்துவதிலும் மேலாண்மைத் திறனோடும், நுணுக்கமான செயல்களைக் கூடத் திட்டமிட்டும் அவர் செயல்பட்ட பான்மை அனைவரையும் வியப்பிலாழ்த்தியதாகும்.

சிக்கல்கள் எழுந்தபோதும் சிரித்த முகத்தோடு அவற்றை எதிர்கொண்டு, அடிப்படைக் கோட்பாடுகளை விட்டுக் கொடுக்காமலே சமாளித்து விடும் திறம் அடிகளார்க்கு உண்டு. இத்திறமை கோலாலம்பூர், சென்னை, பாரீஸ், யாழ்ப்பாணம் உலகத் தமிழ் மாநாடுகளின்போது தெளிவாகப் புலப்பட்டது.[9]

"பலரையும் ஈர்த்து இணைத்து உன்னதமான பணிகளில் அவர்களை ஈடுபடுத்துதல், மற்றவர் தயங்கும் பொறுப்புக்களைக்கூட ஏற்றுக்கொண்டு அற்புதமான திறமையோடு நிகழ்த்திக் காட்டும் தெய்வீகத் திறமை ஆகியவை அடிகளாரிடம் இருந்தன"[10] என்று தமிழ்ப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேரா. வி. அய். சுப்பிரமணியம் கூறுவது மிகவும் பொருத்தமாகும்.

### ஆராய்ச்சித் திறன்

சமயவியல், தமிழ் இலக்கியம், கல்வி ஆகிய துறைகளில் பட்டம் பெற்றவரேனும் அடிகளார் வரலாறு, நிலவியல், மானுடவியல், பண்பாட்டியல், அரசியல் ஆகிய துறைகளிலும் வல்லவராக விளங்கினார்.

---

9. M. B. Emeneau, 'A man of the world; Tamilaram, p. 27
 Jr. E. C. Knowlton; Ibid; p. 73
10. V. I, Subramanian; op. cit; p. 43

பலதுறை வல்லுநராக விளங்கியதாலேயே தமிழ் ஆய்விலும் பல துறைகளையும் இணைத்துப் பணியாற்ற அவரால் முடிந்தது. கடந்த காலத்தையும் நிகழ் காலத்தையும், மேனாட்டு நூல்களையும் இணைத்தும் ஒப்பிட்டும் நோக்க அவரால் இயன்றது. தமிழர் வாணிகம், மேலை நாட்டு நிலவியல் நூல்களும் தமிழ்நாட்டு இடப் பெயர்களும், கடாரம் எங்கே?, தமிழாய்வு: அன்றும் இன்றும், தெற்காசிய—தென்கிழக்காசியக் கலை, சமயமும் கலையும், சமயமும் பண்பாடும், மனித நேயக் குறிக்கோள்கள், தமிழ்ப் பண்பாடும் நாகரிகமும், குவாடலூப்பே மார்த்தினீக் நாடுகளில் தமிழர் குடியேற்றம், சங்க இலக்கியத்தில் கல்விச் சிந்தனை, சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு, தமிழர் தம் கவின்கலைகள், பழந்தமிழ் இலக்கியம், மேற்கு ஐரோப்பிய நாடுகளில் உயர்நிலைக் கல்வி, தமிழ்ப் பால பாடங்களில் சொல்லாட்சியும் உள்ளடக்கமும், தமிழ் இலக்கியத்தில் கத்தோலிக்கர் பணி, இலங்கையில் மொழி யுரிமைகள், மலரும் மாலையும், தமிழ் அச்சேறிய முதல் நூல்கள், ஐரோப்பிய நூலகங்களில் தமிழ்க் கையெழுத்துச் சுவடிகள் என அவரது எழுத்துப் படைப்புக்களின் தலைப்பை நோக்கும்போதே அடிகளாரின் பல்துறை அறிவு நமக்கு எளிதில் புலப்படும்.

அறிஞர்களுக்கிடையில் அவர் ஒரு முனிவர், துறவி என்று பலர் அவரைப் போற்றியது மிகவும் பொருத்தமே. அவரது அறிவாற்றலாலும் ஆளுமைத் திறத்தாலும் ஈர்க்கப்பட்ட ஒருவர் "இவரைப் போன்ற ஒரு குருவே போப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்"[11] என்று கூறியது நினைவுக்கு வருகிறது.

கருத்து வேற்றுமைகளை அடிகளார் மதித்துப் போற்றியவர். கத்தோலிக்கரல்லாத கிறித்துவர்கள், இந்துக்கள், இசுலாமியர், பௌத்தர், சிங்களவர் எனப் பலரோடும் நட்புறவு பாராட்ட வல்லவர் அவர். வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருப்போர் மீது அவர் என்றுமே கசப்புக் கொண்டிருந்ததில்லை.

### எளிமை

கற்றுத் தேர்ந்த பேரறிஞர் எனப் புகழ் பெற்றவரேனும் அடிகளார் அனைவருடனும் எளிதாகப் பழக வல்லவர்.

1958-ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்க் கலை விழாவுக்கு அடிகளாரை அழைப்பதற்காக அவரது இல்லத்

11 V. Cronin, op. cit; p. 19

துக்குச் சென்றபோது, அடிகளாரை முதல் முறையாகச் சந்திக்க விருந்ததால் தாம் சற்றே கலக்கமுற்றிருந்த நிலையில், அடிகளார் தங்களை மாணவர்களாயிற்றே என ஒதுக்காமல் மிகுந்த அன்புடன் வரவேற்றுப் பழகினார்[12] என்பார் பேரா. கே. இந்திரபாலா.

தாம் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத் துறையில் பணியாற்றத் தொடங்கிய காலத்தில் அடிகளாரை முதன் முறையாகச் சந்தித்ததை நினைவுகூரும் பேரா. பெர்ட்ரம் பஸ்தியாம் பிள்ளை, தம்மைச் சந்தித்த உடனேயே அடிகளார் தம் கலக்கத்தைப் போக்கிவிட்டதை[13] எடுத்தோதுகின்றார்.

மலாயாப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையில் சிறப்பு நிலைப் பேராசிரியராகப் பணியாற்றச் சென்ற தம்மை, வேறு துறையைச் சார்ந்தவராயிற்றே என்றெல்லாம் எண்ணாமல் அடிகளார் மாடிப் படியேறி வந்து தம் அறையிலேயே தம்மைச் சந்தித்து வரவேற்புத் தெரிவித்த நாகரிகத்தை[14] விதந்து கூறுவார் பேரா. எட்கர் நோல்ட்டன்.

அடிகளார் சினந்து பேசியதை யாரும் கேட்டதில்லை. அனைவரிடமும் இனிமையாக, எளிமையாகப் பேசிப் பழகியதையே பலரும் கூறுவர்.

**மன்னிக்கும் மாண்பு**

அடிகளார்க்கு ஒரு துறவிக்குரிய மதிப்புக் கூடத் தராமல் அவரைத் 'திருத் தனிநாயகம்' என்று குறிப்பிட்ட ஞா. தேவநேயப் பாவாணர், அடிகளார் 'தமிழ் வளர்ச்சிக்கென்று உலகத் தமிழ்ப் பேரவையைத் தோற்றுவித்ததாகத் தெரியவில்லை' என்றும் 'அயல் நாட்டார்க்குத் தமிழைப் பற்றியிருந்த உயர்வான எண்ணம் வரவரத் தாழ்ந்துபோனதே முக்கருத்தரங்கு மாநாடுகளின் விளைவாகும்' என்றும், 'வணிகப் புலவரும் தமிழறியாத வருமே திருத் தனிநாயகத்தின் துணைவர்' என்றும், 'தமிழைக் கெடுக்கும் உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடுகள்' என்றும் தம் 'தமிழர் வரலாறு' என்னும் நூலில்[15] எழுதியுள்ளார். ஆனால் அடிகளார் பாவாணரைப் பற்றி மதிப்புக் குறைவாக எவரிடமும்

---

12 K. Indrapala, 'sage and scholar, Venerable and profound...', Tamilaram, p. 69

13 Bastiam Pillai Bertram, 'Father Thani Nayagam—My Impressions', Tamilaram, p. 64

14 E.C., Jr. Knowlton, op. cit. p. 71

15 ஞ. தேவ நேயன், முன்சுட்டியது; பக். ௩௬0-௩௬௭

பேசியதில்லை. பாவாணரின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலிறுக்கவுமில்லை. 'உண்மை ஒருநாள் வெளியாகும்' என்னும் உறுதியான நம்பிக்கை அடிகளார்க்கு இருந்தது.

**முன்னேற்றச் சிந்தனைகள்**

கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்த குருக்கள், வழக்கமாகச் செய்துவரும் மறைப்பணிகளைவிட்டு அரசினர் பல்கலைக் கழகத்தில் அடிகளார் பணியாற்றச் சென்றதும், தமிழ்ப் பணியினைத் தம் உயிர் மூச்சாகக் கொண்டு உழைத்ததும் பலருக்குப் புரியாத புதிர். "கடவுளுக்குப் பணிந்து தன் பண்பாட்டுக்காகவும் தன் நாட்டுக்காகவும் ஒருவன் தன் ஆற்றல்களையும் நேரத்தையும் செலவிடுவது தன்னலமற்றதும் உன்னதமானதுமாகும்."[16] என்று அடிகளார் 1955-ஆம் ஆண்டு கொழும்பில் ஆற்றிய ஓர் உரையில் குறிப்பிட்டது அவரது பண்பாட்டுப் பணிக்குரிய விளக்கமாகவே அமைந்துள்ளது. மனித மேம்பாட்டுக்காக மனித நேயத்தோடு ஆற்றும் எல்லாப் பணிகளுமே இறைவனுக்கு உகந்த பணியாகும் என்று அடிகளார் உறுதியாக நம்பினார்.

தம் காலத்தை விஞ்சிய முன்னேற்றக் கருத்துக்களைக் கொண்டவராக அடிகளார் விளங்கினார் என்பதற்கு அடிகளாரின் எழுத்துக்களில் நாம் பல சான்றுகளைக் காண முடியும். சமயத் துறையிலும் ஆராய்ச்சித் துறையிலும் அடிகளார் புரட்சிகரமான சிந்தனைகளைக் கொண்டிருந்தார். அதனாலேயே கடவுள் ஏற்புக் கொள்கை, மறுப்புக் கொள்கை என்னும் கொள்கைகளைக் கொண்டிருந்த இருவகைத் தமிழறிஞரிடையேயும் அவர் மதிப்போடு விளங்கினார். அவரது கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள் கூட அடிகளாரின் முன்னேற்றச் சிந்தனைகளை மதித்தனர் என்பதில் ஐயமில்லை. க. கைலாசபதி, கா. சிவத்தம்பி போன்ற அறிஞர்கள்கூட அவரை 'அறிஞர்களுக்கு நடுவில் ஒரு முனிவர்' 'அறிஞர்—துறவி'[17] என்று மதித்துப் போற்றினர்.

பழமைவாதத்தில் ஊறியிருந்த தமிழ் அறிஞர்களை அறிவியல் முறையிலும் பகுப்பாய்வு முறையிலும் சிந்திக்கவும் ஆராய்ச்சி செய்யவும் தூண்டிச் செயல்படுத்திய பேரறிஞர் அவர்.

---

16 X. S. Thani Nayagam; Tamil culture—Its past, Its present and its future with special reference to Ceylon; Tamil culture Vol. IV, No. 4, 1955, p. 364

17 K. Kailasapathy; 'A sage among scholars'; Tamilaram, p. 50
Karthikesu Sivathambi; He Responded to the call of Indian Historiography; Ibid; p. 55

# மறைவில் நிறைவு

மலாயாப் பல்கலைக் கழகப் பணியினின்று அடிகளார் 1969ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். ஐம்பத்தாறு வயதிலேயே அடிகளார்ஓய்வுபெற்றமைக்குரிய காரணம் தெரியவில்லை. "உலகம் சுற்றுதலை நிறுத்தும்படிக் கேட்டனர் பல்கலைக்கழக ஆட்சி பீடத்தினர். அடிகளார் மறுத்தார். பதவியும் துறந்தார்"[1] என்பார் வித்துவான் எஃப். எக்ஸ். ஸி நடராசா. இது உண்மை தானா என்பது தெரியவில்லை. வேறெவரும் அடிகளார் ஓய்வு பெற்றமைக்குரிய காரணத்தைக் குறிக்கவுமில்லை.

ஓய்வுபெற்றபின், 1970ஆம் ஆண்டு பாரீசிலுள்ள பிரான்சுக் கல்லூரியிலும், 1971-ஆம் ஆண்டு நேப்பிள்ஸ் பல்கலைக் கழகத்திலும் சிறப்புப் பேராசிரியராகப் பணி புரிந்தார்.

உடல் நலம் குன்றியவராய் ஐரோப்பாவிலிருந்து திரும்பியபின் அடிகளார் கண்டி பேராதனையில் பேரா. ஏ. ஜே. வில்சனுடன் ஓராண்டளவாகத் தங்கியதாக அறிகின்றோம்.[2]

அதன்பின் அடிகளார் யாழ்ப்பாணத்தில் வாழத் தொடங்கினார். அன்றைய யாழ்ப்பாணம் ஆயராக விளங்கிய மேதகு தியோகுப்பிள்ளை அடிகளாரின் நண்பர்; உரோமையில் ஒரு சாலை மாணாக்கர். அவர் வளலாயில் உள்ள தம் விடுமுறை இல்லத்தில் அடிகளார் தங்கி வாழ ஏற்பாடு செய்தார். 1972-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 1979-ஆம் ஆண்டு ஜூலை வரை அடிகளார் வளலாயில்[3] தங்கியிருந்தார்.

---

1 அணையா விளக்கு; ப. 28
2 A. Jayarathan wilson; Priest, Scholar and Patriot; op. cit; p. 32
3 வே. அந்தனிஜான் அழகரசன்; முன்சுட்டியது; ப. 100

இக்காலத்திலும்கூட அடிகளார் வாளாவிருக்கவில்லை. பல்கலைக் கழகப் பணியிலிருந்துதான் அவர் ஓய்வு பெற்றாரே யன்றி, தமது தமிழ்ப் பணியினின்று அவர் ஓய்வு பெறவில்லை. யாழ்ப்பாணம் கல்லூரியின் சிறப்புப் பேராசிரியராகவும், பின் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராகவும்[4] அடிகளார் பணியாற்றினார்.

அமெரிக்கரும், யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற கல்வியாளராக விளங்கியவரும், யாழ்ப்பாணம் கல்லூரியின் முன்னாள் முதல்வரு மாகிய முனைவர் பங்க்கர் அடிகளார் நினைவுச் சொற்பொழிவு களை 1972-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அடிகளார் நிகழ்த்தி னார். 'தமிழர்தம் மனித நேயக் கோட்பாடுகள்' என்னும் பொருள் பற்றி அவ்வமயம் அடிகளார் பேசினார்.[5]

1973-ஆம் ஆண்டில் பாரீஸ் நகரில் நடைபெற்ற கீழைத்தேய அறிஞர்களின் உலக மாநாட்டில் அடிகளார் கலந்துகொண்டார்

1974-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டை நடத்துவதில் இலங்கைத் தமிழ் அறிஞர்களுக்கு வலக் கரமாகவும், மாநாட்டு அமைப்புக் குழுவில் இணைச் செயலராகவும் விளங்கியதோடு, மாநாட்டில் தொடக்கவுரையும் ஆற்றினார் அடிகளார்.

யாழ்ப்பாணம் மாநாட்டின்போது நடைபெற்ற வன்செயல் களால் அடிகளார் தாங்கொண்ணாத் துயருற்றார். அதன்பின் பொது நிகழ்ச்சிகளில் அடிகளார் மிகுதியாகக் கலந்துகொள்ள வில்லை.[6]

1979-ஆம் ஆண்டு ஜுலை முதல் பண்டத்தரிப்பு என்னுமிடத் திலுள்ள தியான இல்லத்தில் அடிகளார் வாழ்ந்துவந்தார். அவரது உடல்நலம் குன்றியிருந்ததே இதற்குக் காரணமாகலாம். அவ் வில்லத்துக்குப் பொறுப்பேற்றிருந்த திருக்குடும்பக் கன்னியர்கள் அடிகளாரை நன்கு ஓம்பிவந்தனர். கன்னியர்க்கு ஆங்கிலமும்,

4 Tamilaram; p. 85
5 Ibid p. 10
6 வே. அந்தனி ஜான் அழகரசன்; முன் சுட்டியது; பக். 100-101

அப்பகுதியிலுள்ள இளம் பெண்களுக்குத் தமிழ் இலக்கியமும் கற்றுக் கொடுத்தார் அவர்.[7]

1979ஆம் ஆண்டு டிசம்பரில் அடிகளாரின் உடல் நலம் தேறியது. அவ்வமயம் இலங்கையில் அவசரகாலச் சட்டத்தின் காரணமாகத் தமிழ் மக்கள் அனுபவித்த துயரத்தைக் கண்டு மனம் நொந்த அடிகளார் பொதுக்கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து தம் கருத்துக்களை வெளியிட விரும்பினார்.

தாம் விரும்பியவாறே 10-1-1980 அன்று யாழ்ப்பாணம் நகர மன்றத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அடிகளார் உரை நிகழ்த்தினார்.[8] யாழ்ப்பாணம் உலகத் தமிழ் மாநாட்டின்போது தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சியின் நினைவு நாள் அது.

அதே ஆண்டு ஏப்ரல் 26-ஆம் நாளன்று 'தந்தைக்கு அஞ்சலி, என்னும் நூலைத் தந்தை செல்வா நினைவிடத் திறப்பு விழாவின் போது வெளியிட்டு உரையாற்றினார் அடிகளார். பின் 27, 28 ஆகிய இரு நாட்களிலும் தந்தை செல்வநாயகம் நினைவுச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். முதல் நாள் 'தமிழர் பண்பாடும் அதன் சிறப்பியல்புகளும்' என்னும் பொருள்பற்றித் தமிழிலும், மறுநாள் 'தமிழ்த்துறை ஆய்வுகள்—இன்றுவரை, இனி' (Tamil Studies : Retrospect and Prospect) என்னும் தலைப்பில் ஆங்கிலத்திலும் உரையாற்றினார். தமிழ்ச் சொற்பொழிவுக்குப் பேரா. கு. நேசையாவும், ஆங்கிலச் சொற்பொழிவுக்குப் பேரா. சு. வித்தியானந்தனும் (யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணை வேந்தர்) தலைமையேற்றுச் சிறப்பித்தனர்.[9]

முதல் நாள் சொற்பொழிவின் இறுதியில் நன்றியுரை யாற்றியவர் இலங்கைப் பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம். 'இந்தத் தலைப்பில் இத்தகைய விரிவுரை யாற்றும் தகுதி வேறெவருக்கும் இல்லை. இனி நீண்ட காலத்துக்கு இத்தகைய பேரறிஞர் ஒருவரை நாம் காண இயலாது'[10]

---

7 மேற்படி பக். 102-103
8 Tamilaram, p. 77
9 Ibidem
10 Ibidem

என்று அவ்வமயம் அவர் கூறினார். ஆடாமல் அசையாமல் அடிகளாரின் சொற்பொழிவைச் செவிமெடுத்த அவையினர் அக் கூற்றைத் தயக்கமின்றி ஏற்றுக்கொண்டனர்.

1980-ஆம் ஆண்டு மேத் திங்களில் வேலணையில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில் அடிகளார் கலந்துகொண்டு, பேரா. கா. பொ. இரத்தினம் எழுதிய 'தமிழ்மறை விருந்து' என்னும் நூலை வெளியிட்டு உரையாற்றினார். அடிகளார் கலந்துகொண்ட இறுதிப் பொது நிகழ்ச்சி இதுவே.[11]

அதன் பின் அடிகளாரின் உடல் நலம் குன்றத் தொடங்கியது. ''என் உடல் நலம் நன்றாக இல்லை''[12] என்று தம் நண்பர் சி. ஆர் பாக்ஸர் அவர்களுக்கு அடிகளார் எழுதினார்.

அவரது உடல் நலம் முன்னேற்றம் காணவில்லை. 1-9-1980 அன்று மாலை 6-30 மணியளவில் அடிகளார் உயிர்நீத்தார்.

அடிகளாரின் மறைவு கேட்டுத் தமிழ் உலகம் கண்ணீர் சிந்திக் கலங்கியது. யாழ்ப்பாணம் மறைமாவட்டத் தலைமைக் கோவிலில் வைக்கப்பட்டிருந்த அவரது சடலத்துக்குக் குருக்களும் கன்னியரும் தமிழ் அறிஞர்களும் அரசியல் தலைவர்களும் தமிழ்ப் பொது மக்களும் அஞ்சலி செலுத்துவதற்காகத் திரண்டு வந்தனர்.

3-9-1980 அன்று யாழ்ப்பாணம் ஆயர் மேதகு தியோகுப் பிள்ளையின் தலைமையில் பல குருக்கள் சேர்ந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுத்தபின் அடிகளாரின் உடல் அடக்கம் செய்யப் பட்டது. திருப்பலியின்போது மதுரநாயகம் அடிகள் மறையுரை நிகழ்த்தினார்.

அடக்கச் சடங்குகளின் பின், பேராலயத் திறந்தவெளி அரங்கில் பேரா. கு. நேசையாவின் தலைமையில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் யாழ்ப்பாணம் ஆயர் தியோகுப் பிள்ளை, பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு. வித்தியானந்தன், யாழ் மாநகர முதல்வர் ஆகிய பெருமக்கள் கலந்துகொண்டனர்.

---

11 வே. அந்தனி ஜான் அழகரசன்; முன் சுட்டியது; ப. 105

12 C. R. Boxer; 'A citizen of the world'; Tamilaram; p. 25

பாராளுமன்ற உறுப்பினர் அ. அமிர்தலிங்கம் இரங்கலுரை யாற்றினார்.

உலகப் பற்றினை அறுத்த துறவியாகிய தனிநாயகம் அடிகளார் மனித நேயத்தை மறந்ததில்லை. மொழிப்பற்றும் இனப்பற்றும் நாட்டுப்பற்றும் மனிதப் பற்றும் கொண்டவராகவே அவர் வாழ்ந்தார், பணியாற்றினார்.

'கடந்த ஆயிரம் ஆண்டுகளில் தனிநாயகம் அடிகளாரைப் போலத் தமிழுக்குத் தொண்டாற்றியவர் வேறு எவருமிலர்'[13] என மேதகு ஆயர் சபாபதி குலேந்திரன் எழுதியது இவ்வமயம் நினைவுக்கு வருகிறது.

13 Rt. Rev. S Kulandran; 'He put Tamil on the world Map'; Tamilaram; p. 61

# தனிநாயகம் அடிகளாரின் எழுத்தோவியங்கள்

1 ' My Favourite Hero in History, Napoleon",
Bottled Sunshine, 2 (11), Nov. 9, 1928 p. 5

2 "Nature from Sunset till Dawn",
Bottled Sunshine, 22 (12), Dec. 9, 1928 pp. 5-6

3 "The Saviour of Civilisation",
Bottled Sunshine, 3 (5), June 10, 1929 pp. 6-7

4 "The College Avenue by Moonlight",
Bottled Sunshine, 3 (8), July 27, 1929 p. 4

5 "A Plea for carving on Desks",
Bottled Sunshine, 3 (9), Aug. 9, 1929 p. 6

6 "The Scout Jamboree",
Bottled Sunshine, 3 (12), Oct. 1, 1929 p. 5

7 "Stray Thoughts on School life",
Bottled Sunshine, 3 (12), Nov. 11, 1929 p. 4

8 "Bottled Sunshine, A Restrospect",
Bottled Sunshine, 4 (1), Feb. 25, 1930 pp 3-4

9 "The Health Week",
Bottled Sunshine, 4 (2), March, 1930 pp. 3-4

10 "Sons of Erin in North Lanka",
Bottled Sunshine, 4 (3), March 17, 1930 pp. 3-4
& 12 (3), March 17, 1941 p. 9

11 "Conservatism in Jaffna",
Bottled Sunshine, 4 (4), May 26, 1930 pp. 3-4

12 "Loyalty",
Bottled Sunshine, 4 (5), June 9, 1930 p. 6

13 "O Pretty Moon",
Bottled Sunshine, 4 (6), June 24, 1930 p. 6

14 "Interesting Places in Ceylon",
Bottled Sunshine, 4 (8), Aug. 8. 1930 pp. 3-4

15 "Sermons in Stones, Books in the Running Brooks",
Bottled Sunshine, 4 (9), Sep. 39, 1930 p. 3

16 "The Lotuses Bloom",
Bottled Sunshine, 4 (9), Sep. 30, 1930 p. 6

17 "The Parting of the Ways",
Bottled Sunshine, 4 (11), Dec. 5, 1930, pp. 3-4

18 Max Pamberton (pseud.) "The Hound of Heaven",
The Messenger of the Sacred Heart for Ceylon,
11 (5), Oct. 1933, & 11 (6), Nov. 1933, pp. 213-216

19 Max Pemberton (pseud.) "Sea Shells",
The Messenger of the Sacred Heart for Ceylon,
11 (7), Dec 1933, pp 257-260

20 Max Pemberton (pseud.) "A Square Mile of Waterfalls",
The Messenger of the Sacred Heart for Ceylon,
11 (8), Jan. 1934, pp 292-295

21 Max Pemberton (pseud.) "A Peep into Childhood Lane",
The Messenger of the Sacred Heart for Ceylon,
11 (10), March 1934, pp. 323-326

22 M. Pemberton (pseud.) "Lead Kindly light",
*The Messenger of the Sacred Heart* for Ceylon
11 (10), March 1934, pp 352-356

23 M. Pemberton (pseud.) "Poor thief of Song",
The Messenger of the Sacred Heart for Ceylon,
11 (11), April 1934, pp. 375-378

24 M. Pemberton (pseud.) "The Run-Stealers",
The Messenger of the Sacred Heart for Ceylon,
11 (12), May 1934, pp. 414-417

25 M. Pemberton (pseud.) "A Shower of Rain",
The Messenger of the Sacred Heart for Ceylon,
12 (2), July 1934, pp. 491-493

26 M. Pemberton (pseud.) "A Borrowed Idea",
The Messenger of the Sacred Heart for Ceylon,
12 (3), Aug. 1934, pp. 534-536

27 M. Pemberton (pseud), "Thomsonian Cameos", The Messenger of the Sacred Heart for Ceylon, 12 (4), Sep. 1934, pp. 571-574

28 M. Pemberton (pseud.) "The Path to Rome", The Messenger of the Sacred Heart for Ceylon,
12 (7), Dec. 1934, pp. 672-675,
12 (11), Apirl 1935,, pp. 822-823,
12 (12), May 1935, pp. 852-853

29 Franciscus. Rev. Xavier Stanislaus (i.e. Rev. Fr. X. S. Thani Nayagam) Editor, Apocalipsis Schematica explanatio Romae : Catholic Book Agency 1938, (iv), 73 p. Latin

30 The Carthagenian Clergy, Tamil Literature Society, Tuticorin, 1950 (2nd. Ed.)
112, p. Thesis (D.D.) *Pontifical Urban University*, Rome, 1939.

31 "The Cricketer's Poet", Bottled Sunshine, 12 *(6), July 23, 1941* pp. 152-154

32 "The Poetry of Kayts" The Anthonian : Magazine of St. Anthony's College, Kayts 1942/43

33 "The Power and the Glory", Bottled Sunshine, Father Long Jubliee Number June 1945 pp. 74-79 (Sermon preached on the *occasion* of the *Silver Jubilee* of the late Rev. Fr. T.M.F. Long, former Rector, St. Patricks college, Jaffna on 25 June 1945) Reprinted Bottled Sunshine, special number, 1946, pp. 13-20 *Again* reprinted as "The Power and the Glory of the Priesthood", St. Joseph's Catholic Press, Jaffna 1980 6p.

34 "Don Eugenius Pacelli", St. Patrick's Annual, 1949, pp. 7-10

35 Nature in Ancient Tamil Poetry : concept and Interpretation, Tuticorin; Tamil Literature Society, 1953. xxii 185 p. [Thesis (M.Litt.) Annamalai University, Annamalai Nagar. 1949]

36 "This Quarterly Review",
Tamil Culture, 1 (1), Feb. 1952, pp 1-8

37 "The Survival of Tamil Culture", Tamil Culture,
1 (2), June-Aug. 1952, pp 97-103

38 "The ethical interpretation of nature in ancient Tamil poetry", Tamil Culture, 1 (3 & 4), Sept. Dec. 1952, pp. 186-196

39 "Catholic religious art in South India',,
Liturgical Arts, 22 (1), Jan-Mar, 1953, pp. 28-29

40 "The Tamils said it all with flowers",
Tamil Culture, 2 (2), Apirl-June 1953, pp 164-175

41 "Inadequacy of Literature in the Swabasha",
The Times of Ceylon, Nov. 6, 1953; p. 6, Col. 3-6

42 "The Catholic contribution to Tamil literature",
Catholic Christmas Annual, 1953, pp. 22-24

43 "Swabasha; the Indian experiment;',
The Times of Ceylon, Feb. 8, 1954; p. 6, Col. 3-6

44 "Tamil manuscripts in European libraries",
Tamil Culture, 3 (3 & 4), Oct-Dec. 1954, pp. 219-228

45 "This journal of the academy",
Tamil Culture, 4 (1), Jan-Mar. 1955, pp. 1-11

46 "Tamil cultural influences in South East Asia",
Tamil culture, 4 (3), Jul-Sept. 1955, pp. 203-220

47 "Tamill Culture: its past, its present and its future with special reference to Ceylon", Tamil Culture, 4 (4), Oct-Dec. 1955, pp 341-364. Reprinted. Tamil culture: its present and its future with special reference to Ceylon", Colombo: Tamil cultural society, 1955, 24p.

48 "Ancient Tamil literature and the study of ancient Indian education", Tamil culture, 5 (1). Jan-March 1956, pp. 1-15.

49 "The educators of early Tamil Society",
Tamil Culture, 5 (2), Aprii-June 1956, pp. 105-119

50 "Language rights in Ceylon". Tamil Culture, 5 (3), July-Sept. 1156, pp 217-230

51 Language and Liberty in Ceylon: a symposium (Ed.), Colombo: The Book centre, 1956, vi 36 p.

52 'A seminal period of Indian thought", Tamil Culture, 6 (1), Jan-Mar. 1957, pp. 4-18; & 6 (3), July-Sept. 1957, pp. 235-245

53 "Ancient Tamil Poet-educators", Tamil Culture, 6 (4), Oct-Dec. 1957, pp. 273-285

54 Educational thought in ancient Tamil literature, ix. 482 p (Thesis [ph.d] University of London, 1957)

55 "The Philosophic stage of development in Sangam literature", Tamil Culture, 7 (1), Jan-Mar. 1951, pp. 1-15.

56 "The Vocabulary and content of Tamil Primers and first readers", Journal of the National Education Society of Ceylon, 8 (3). July-Sept, 1959 pp. 208-230

57 "The first books printed in Tamil", Tamil Culture, 7 (3), July-Sept. 1958, pp. 288-308

58 "The Tamil Development and Research Council", Tamil Culture, 8 (1), Jan-Mar, 1959, pp.1-3

59 "The Scope of Adult Education", The Ceylon Journal of Historical and Social Studies, 2 (2), July-Dec. 1959, pp. 148-159

60 "Earliest Jain and Buddhist Teaching in the Tamil Country," Tamil Culture, 8(4), Oct-Dec. 1959, pp. 337-349

61 "Educator Typology in Ancient Tamii Literature", International Congress of Orientalists, XXVth, MOSCOW, 1960, Vol. 4, p. 242-252.

62 "The Philosphy and Practice of Teacher Education", Journal of the National Education Society of Ceylon, 9 (1), Nov. 1960, pp. 52-55

63 "Aspects of Tamil Humanism". Annals of Oriental Research of the University of Madras, Vol. XVII, 1960-1961, pp. 1-25
(Sornammal Endowment lecture, Feb. 1961)

64 "The Ideal of the Expanding Self",
Annals of Oriental Research of the University of Madras, Vol. XVII, 1960-1961, pp. 26-53
(Sornammal Endowment Lecture, Feb. 1961)

65 "Aspects of Secondary Education in Western Europe", Journal of the National Education Society of Ceylon, 10 (1), March-Sep. 1961, pp. 68-77

66 "Doctor R.P. Sethupillai",
Tamil Culture, 9 (3), July-Sep. 1961, pp 217-229

67 "A Bibliographical Guide to Tamil Studies",
Tamil Culture, 9 (4), Oct-Dec. 1961, pp. 333-334

68 "The Thirukkural and Greek Ethical Thought",
Dr. R. P. Sethupillai Silver Jubilee Commemoration Volume, 1961, Madras, Asian printers pp. 73-80

69 "Religion and Culture",
Malayan Times Souvenir, June 16, 1962, p. 8
(University of Malaya's Convocation Supplement)

70 "Indian Thought and Roman Stoicism", An Inaugural Lecture delivered on 14th December, 1962 at the University of Malaya. Kuala Lumpur; University of Malaya. 1963 23 p. Reprinted "Indian Thought and Roman Stoicism", Tamil Culture, 10 (3), July-Sep. 1963, pp. 1-36

71 "Regional Nationalism in Twentieth Century Tamil Literature", Tamil Culture, 10 (1), Jan- March 1963, pp. 1-23

72 "The Bibliography of Tamil Studies".
Tamil Culture, 10 (1), Jan-March 1963, pp. 98-108

73 "The Novelist of the City of Madras",
Tamil Culture, 10 (2), April-June 1963, pp. 1-18

74 "The Typology of Ancient Indian Education", Paedagogica Historica, 3 (2), April-June 1963, pp. 353-377

75 "Nature and the Natural in Kalyanasundarar", Tamil Culture, 10 (4), Oct-Dec. 1963, pp. 1-20

76 Nature Poetry in Tamil : The Classical Period, Singapore: Dewan Bahasadan Kebudayaan Kebangsaan 1963, xvii, p. 153

77 "Antao De Proenca's Tamil-Portuguese Dictionary, 1679; An Introduction", Tamil Culture, 11 (2), April-June 1964, pp. 117-127

78 with Knowlton Jr. Edgar C., "Preface to the Tamil-Portuguese Dictionary 1679", Tamil Culture, 11 (2), April-June 1964, pp. 128-134

79 "Puisi Perchintaan India Purba", *Penulis, 3 (4), O gos-Disember 1964, pp. 10-15 (Malay)*

80 "Classical Love Poetry in Tamil", Siam Society Felicital tion Volume of South East Asian Studies, Presented to Prince Dhani Nivat, Bangkok, Vol. 2, Nov. 1965, pp. 261-268

81 Joint-Editor, Conference of the Malaysian Society of Orientalists, 1st, Kuala Lumbur, 1965: The Cultura-Problems of Malaysia in the Context of South-East Asia' edited by S. Takdir Alisjahbana. Xavier S. Thani Nayagam and Wang Gungwu Kuala Lumpur : The Malaysian Society of Orientalists, 1965

82 "Ideals and values common to South and South-East Asian Cultures", Proceedings of the Malaysian Society of Orientalists, 1st 1965, pp. 80-89

83 "Chairman's Introductory Remarks", Proceedings of the International Conference Seminar of Tamil Studies 1st., Kuala Lumpur, April 1966, (Kuala Lumpur, 1968) Vol. 1, pp 3-5

84 "The Identification of Kataaram", Proceedings of the International Conference Seminar of Tamil Studies 1st., Kuala Lumpur, April 1966, (Kuala Lumpur, 1968) Vol. 1, pp. 67-71.

85 "Apperception in Tamil Literary Studies", Proceedings of the International Conference Seminar of Tamil Studies, 1st, Kuala Lumpur, April 1966, (Kuala Lumpur, 1968), vol. 1, pp. 120-128. Reprinted Tamil Culture, 12 (2 & 3), April-Sep. 1966, pp. 181-192

86 "Ancient Tamil Poetry", Eastern Horizon, 5 (7), July 1966, pp. 12-22; 5 (8) Aug. 1966, pp. 45-53

87 Editor, "Antao De Proenca; Tamil-Portuguese Dictionary", The Hague : Brill 1966 lv, 494 p.

88 Translator, Preface to the Tamil-Portuguese Dictionary 1679.,

Translated by Edgar C. Knowlton Jr. and Xavier S. Thani-Nayagam, Kuala Lumpur; University of Malaya. 1966, 10 p

89 Landscape and Poetry : A study of Nature in Classical Tamil Poetry, Bombay : Asia Publishing House, 1966 vii, 151 p.

90 A Reference Guide to Tamil Studies: Books, Kuala Lumpur, University of Malaya. 1966, vi, 122p.

91 "The Period of Ethical Literature in Tamil : Third Century to the Seventh century A.D." Pracidanum - Indian, Iranian and Indo-European Studies. Presented to Professor F.B.J. Kuiper on his 60th birthday. The Hague : Mouton, 1967, pp. 601-614

92 "Patterns of Studenthood in Ancient India", Paedagogica Historica, 8 (2), July-Dec 1968, pp. 477-506

93 Tamil Trade, உலகத் தமிழ் மாநாடு விழாமலர் சென்னை, 1968, pp. E. 29-32

94 Proceedings of the First International Conference Seminar of Tamil Studies, Kuala Lumpur-Malaysia (ed) April 1966, Kuala Lumpur, IATR 1968 2 Vols.

95 "Tamil Migrations to Guadeloupe and Martinique 1853-1883", Proceedings of the International Conference Seminar of Tamil Studies 2nd., Madras, Jan. 1968 (Madras, 1971) Vol. 2 pp. 369-376

96 Tamil Studies Abroad : A Symposium (Ed.), Kuala Lumpur, Sharikat Malayan Printers, 1968, vii, 269 p.

97 "Tamil Studies Elsewhere", Tamil Studies Abroad: A Symposium, Kuala Lumpur, Sharikat Malayan Printers, 1968 pp. 224-246

98 "Two Decades of Tamil Studies", Journal of Tamil Studies, 1 (1), April 1969, pp. 1-19

99 "Tamil Emigration to the Martinique", Journal of Tamil Studies 1 (2), Oct. 1969, pp. 75-123.

100 "The Study of Contemporary Tamil Groups : A Survey", Proceedings of the International Conference Seminar of Tamil Studies 3rd, Paris, 1970, Pondicherry, 1973 pp. 215-223

101 Compiler, Tamil Culture and Civilization : Readings : The Classical Period, London : Asia Publishing House, 1970 X 233p

102 "Tolkappiyam: The Earliest Record", Journal of Tamil Studies, No. 1, Sep. 1972, pp. 61-70

103 Tamil Humanism : The Classical Period. Jaffna : Bastian Press, 1972, pp. 1-22 (Bunker Memorial Lecture-1972)

104 "The Humanistic Scene", Tamil Humanism : The Classical Period, Jaffna : Bastian Press, 1972, pp. 40-57 (Bunker Memorial Lecture-1972)

105 "The Humanistic Ideals", Tamil Humanism : The Classical Period, Jaffna : Bastian Press, 1972, pp. 58-60 (Bunker Memorial Lecture-1972)

106 Joint-Editor with Gros Francois-Proceedings of the Third International Conference Seminar of Tamil Studies, Paris 1970. Pondicherry : IATR, 1973, xvi ,279 p.

107 "Religion and culture", Religious and Social issues, 4 (4), 1975, pp. 1-13

108 "Religion and society", Religious and Social Issues, 4 (4), 1975, pp. 14-21

109 "Religion and Tamil Culture", Religious and Social Issues, 4 (4), 1975, pp. 22-26

110 "Religion and Art", Religious and Social Issues, 4 (4), 1975, pp. 27-35

111 "The Art of South East Asia" Journal of Royal Asiatic Society (Sri Lanka), vol. XIX (New Series), 1975, pp. 49-61

112 Research in Tamil Studies : Retrospect and Prospect, Jaffna : Thanthai Chelva Memorial Trust, 1980, 15 p. (Chelvanayakam Memorial Lecture-1980).

113 "பன்னிரண்டாம் பத்திநாதர்", சத்தியவேத பாதுகாவலன், 74 (15), சித்திரை 21, 1949 : 3 நிர. 1-2

114 தமிழ்த் தூது, இலங்கைத் தமிழ் விழா மலர், யாழ்ப்பாணம் திருமகள் அச்சகம், 1951 ப. 84-95. மறுபதிப்பு :
"தமிழ்த் தூது", சத்தியவேத பாதுகாவலன்,
76 (29), ஆடி 26, 1951 : 7 நிர. 1-2;
76 (30), ஆவணி 2, 1951 : 7 நிர. 1-3
76 (31), ஆவணி 9, 1951 : 7 நிர. 1-3
76 (32), ஆவணி 16, 1951 : 7 நிர. 1-3
தமிழ்த் தூது, தூத்துக்குடி : தமிழ் இலக்கியக் கழகம், 1952 110 ப.
தமிழ்த் தூது: கட்டுரைக் கொத்து; திருத்திய நான்காம் பதிப்பு சென்னை, பாரி நிலையம், 1962, 126 ப.

115 "சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு", சத்தியவேத பாதுகாவலன்,
76 (17), வைகாசி 3, 1951 : நிர. 1-3,
76 (18), வைகாசி 10, 1951 : 5 நிர. 2-4
76 (19), வைகாசி 17, 1951 : 5 நிர. 2-4
76 (21), வைகாசி 31, 1951 : 7 நிர. 1-4

116 "பிற மொழிக் கலப்பால் ஒரு மொழி சிதையவே செய்யும் : தமிழில் உரையாடுகையில் தனித் தமிழ் மொழியைக் கையாள வேண்டும்",
சத்தியவேத பாதுகாவலன், 76 (19), வைகாசி 17, 1951 : 7 நிர. 1-3

117 "தமிழின் வளர்ச்சி", சத்தியவேத பாதுகாவலன்,
76 (43), கார்த்திகை 1, 1951 : 3 நிர. 3-4 ; 5 நிர. 2
76 (44), கார்த்திகை 8, 1951 : 3 நிர. 3-4

118 "அரிச். அகுஸ்தினின் புகழ் உரை நூல்", சத்தியவேத பாதுகாவலன்,
76 (46), கார்த்திகை 22, 1951 : 3 நிர. 3-4
77 (8), மாசி 28, 1952 : 3 நிர. 3-4

119 "மலரும் மாலையும்", தமிழ் ஓசை, தொகுதி 2, 1952

120 "கீழ்த்திசை நாடுகளில் அச்சுக்கண்ட முதல் நூல்கள் தமிழ் நூல்களே", சத்தியவேத பாதுகாவலன், 79 (7), மாசி 18, 1954 : 2 நிர. 1-2

121 நம் மொழியுரிமைகள், 3ஆம் பதிப்பு, கண்டி: நந்தன் பதிப்பகம் 1961, 14 ப. (தமிழ்ப் பண்பாட்டுச் சங்கம். 1956)

122 "தமிழ்ச் செல்வங்கள்", கல்கி : தீபாவளி மலர், 1956 : பக். 89-93

123 "முதல் அச்சேறிய தமிழ் நூல்கள்", கல்கி : தீபாவளி மலர், 1958 : பக். 188-192

124 "ஒற்றுமை அமெரிக்கா", இளங்கதிர், தொகுதி 11, 1958-59 பக். 88-89

125 "முதிர்ந்தோர் கல்வியின் விரிவு" சமூக மஞ்சரி 1 (2) ஆடி-மார்கழி 1960 : பக். 60-77

126 "திருக்குறளும் கிரேக்க ஒழுக்க இயலும்", கலைப்பூங்கா, 1 (1), தை-ஆனி 1961 : பக். 65-77

127 "கல்வியின் நோக்கங்கள்", கல்வி : இலங்கைத் தேசியக் கல்விக் கழகச் சஞ்சிகை, சித்திரை 1963, பக். 50-59

128 "மலேசியாவின் தமிழ் எழுத்தாளரும் அவர்களின் பணியும்", தமிழ் நேசன், ஜூன் 9, 1963, பக். 9

129 வீரமாமுனிவர் (1680-1747), கலைக்களஞ்சியம் 1963, தொகுதி 9, : பக். 449-451

130 ஒன்றே உலகம். சென்னை, பாரி நிலையம், 1966, 230 ப.

131 கல்கியின் வரலாற்று நாவல்கள், எழுத்தாளர் கல்கி; கா. பொ. இரத்தினம் பதிப்பித்தது. சென்னை : பழனியப்பா பிரதர்ஸ், 1966, பக். 63-88

132 திருவள்ளுவர், அண்ணாமலை நகர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1967 ப. 60 (சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவு-மாசி 1961)

133 மேலைநாட்டு நிலஇயல் நூல்களும் சங்ககால ஆராய்ச்சியும்'', அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு நிகழ்ச்சிகள் 2வது, சென்னை, சனவரி, 1968. (சென்னை 1971) தொகுதி 3, ப. 7-13

134 ''தமிழ் மொழியின் வேர் இயல்'', ஈழநாடு, ஆனி 1, 1971 : 2, 11 நிர. 3 : 12 நிர. 1-2

135 தமிழர் பண்பாடும் அதன் சிறப்பியல்புகளும், யாழ்ப்பாணம் : தந்தை செல்வா ஞாபகார்த்த அறங்காவற் குழு, 1980, 32 ப. (செல்வநாயகம் நினைவுச் சொற்பொழிவு-சித்திரை 1980)

136 ''சங்க இலக்கியத்தில் விரிவாகும் ஆளுமையின் இயல்பு'', ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு மலர், மதுரை-சனவரி 1981, பக். 69-76

137 ''வீரமாமுனிவர் : தமிழாராய்ச்சிக்குப் பங்களிப்பு செய்த ஐரோப்பியரில் தலைமகன்'', வீரகேசரி, வார வெளியீடு, 5-10-1980, பக்-13

# கருவி நூற்பட்டியல்

## அ) நூல்கள்


அண்டிறீக்கு அடிகளார், அடியார் வரலாறு. இராசமாணிக்கம், ச., (பதிப்), தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி, 1967

அந்தனி ஜான் அழகரசன், வே., தனிநாயக அடிகளின் வாழ்வும் பணியும், தங்கம் பதிப்பகம், மட்டு நகர், 1984

அமுதன் அடிகள், உலகெல்லாம் தமிழ் முழக்கம், விடியல் பதிப்பகம், பாளையம், 1992

இரத்தினம், கா. பொ., தமிழ் உணர்ச்சி, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1985

இராசமாணிக்கம், ச., (பதிப்.) வணக்கம், தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி, 1963

சச்சிதானந்தன், க , எனது யாழ்ப்பாணமே, காந்தளகம், சென்னை, 1980

தமிழண்ணல் இராம. பெரிய கருப்பன், சு. குழந்தை நாதன் (பதிப்.), உலகத்தமிழ், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1981

தனிநாயக அடிகள், ஒன்றே உலகம், தே நொபிலி ஆராய்ச்சி நிலையம், சென்னை, 1974

……தமிழ்த்தூது, தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி, முதல் பதிப்பு, 1952

……தமிழ்த்தூது, பாரி நிலையம், சென்னை, திருத்திய நான்காம் பதிப்பு, 1962

…… தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும், தந்தை செல்வா அறங்காவற்குழு, யாழ்ப்பாணம், 1980

……திருவள்ளுவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அண்ணாமலை நகர், 1967

தேவநேயன் ஞா., 'தமிழர் வரலாறு', நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி, 1972

வித்தியானந்தன், சு., (பதிப்.), நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகள், அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளை, கொழும்பு, 1977

## ஆ) கட்டுரைகள், கவிதைகள்

அப்துஸ் ஸமது, அ.ஸ., தமிழுக்கு ஓர் அணிகலன், அணையா விளக்கு, கல்முனை, 1980

அமிர்தலிங்கம், அ., இரங்கலுரை, அணையா விளக்கு, கல்முனை, 1980

அமுதன் அடிகள், தமிழ்ப் பேரறிஞர் தனிநாயகம் அடிகளார், தமிழ் மாருதம், பொதி 2, ஏடு 1, மதுரை, ஏப்ரல், 1992

அமுதன் அடிகள், அகரம் திரவியராஜ், சரித்திரம் படைத்த சாதனை நாயகன், தனிநாயகம் அடிகளார் நினைவு மலர் திருச்சிராப்பள்ளி, 1992

அமுது, தனிநாயகம் அடிகளார் சிரிக்கிறார், தனிநாயக அடிகளார் மாட்சி நயப்பு மலர், யாழ்ப்பாணம், 1981

இரத்தினம், கா. பொ., தனிநாயக அடிகளார் மாட்சி நயப்பு மலர், யாழ்ப்பாணம், 1981

சாலை இளந்திரையன், தனிநாயக அடிகளார் மாட்சி நயப்பு மலர், யாழ்ப்பாணம், 1981

ஞானி, பண்டித, தனிநாயக அடிகளார் மாட்சி நயப்பு மலர், யாழ்ப்பாணம், 1981

தனிநாயக அடிகள், சங்க இலக்கியத்தில் விரிவாகும் ஆளுமையின் இயல்பு, ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு விழா மலர், மதுரை, 1981

......தமிழ்த்தூது. இலங்கைத் தமிழ் விழா மலர், யாழ்ப்பாணம், 1951

......முதல் அச்சேறிய தமிழ் நூல்கள், கல்கி தீபாவளி மலர், சென்னை, 1958

நடராசா, என். எக்ஸ். ஸி., அடிகளார் தனிநாயகம், அணையா விளக்கு. கல்முனை, 1980

நாவண்ணன், தனிநாயக அடிகள் மாட்சி நயப்பு மலர், யாழ்ப்பாணம், 1981

நிர்மலா இராசரெத்தினம், தமிழும் தனிநாயகமும், தனிநாயகம் அடிகளார் நினைவு மலர், திருச்சிராப்பள்ளி, 1992

நீக்கிலஸ், யே., ஆசியுரை, தனிநாயக அடிகளார் மாட்சி நயப்பு மலர், யாழ்ப்பாணம், 1981

பெனடிக்ரா வஸ்தியாம்பிள்ளை, தமிழ்த்தாயின் தனிப்பெருமை கண்ட தனியன் தனிநாயகம் அடிகளார், தனிநாயக அடிகளார் மாட்சி நயப்பு மலர், யாழ்ப்பாணம், 1981

மதுரநாயகம் அடிகள், இறுதிச் சடங்குத் திருப்பலித் திருவுரை, அணையா விளக்கு, கல்முனை, 1980

வித்தியானந்தன், சு., தன்னை நன்றாகத் தமிழ் செய்த தமிழ்த் தூதுவர் தனிநாயக அடிகள், அருள்திரு. தனிநாயக அடிகளார் நினைவுமலர், யாழ்ப்பாணம், 1981.

# நேர் காணல்

| | |
|---|---|
| திருமதி. மேரிப்பிள்ளை நாகநாதன், திருச்சிராப்பள்ளி | 10-1-92 |
| திருமதி. நிர்மலா இராசரத்தினம், திருச்சிராப்பள்ளி | 10-1-92 |
| திருமதி. மங்கையர்க்கரசி பஸ்தியாம்பிள்ளை, திருச்சிராப்பள்ளி | 10-1-92 |
| அருள்திரு. எஸ். ஜே. எம்மானுவேல், கொழும்பு | 10-1-92 |
| அருள்திரு. அண்டன் மத்தியாஸ், கொழும்பு | 30-7-92 |
| திரு. வென்சஸ்லாஸ், கொழும்பு | 10-8-92 |
| திரு. அ. தேவராசன், கொழும்பு | 10-8-92 |
| திருமதி. புஷ்பம் எம்மானுவேல், கொழும்பு | 11-8-92 |
| திருமதி. மனோகரி அல்லஸ், கொழும்பு | 11-8-92 |
| பேரா. கா. பொ. இரத்தினம், சென்னை | 06-12-92 |
| திருமிகு. இரா. முத்துக்குமாரசாமி, சென்னை | 06-12-92 |
| திருமிகு இரா. நமச்சிவாயம், சென்னை | 06-12-92 |
| அருள்திரு. எஸ். இராசமாணிக்கம், சென்னை | 08-12-92 |
| சுவாமி அமலதாசன், சமயபுரம் | 09-12-92 |

# BIBLIOGRAPHY

## BOOKS

ARUNACHALAM, M. (Ed.), **Proceedings of the Fifth International Conference Seminar of Tamil Studies,** 3 Vols., International Association of Tamil Research, Madras, 1981.

ASHER, R.E., (Ed ), **Proceedings of the Second International Conference Seminar of Tamil Studies,** 3 Vols., International Association of Tamil Research, Madras, 1971.

FILLIOZAT, JEAN (Ed.), **Un Catechisme tamoul du XVI siecle en lettre latines,** Institue Francais D' Indologie, Pondicherry, 1967.

MUTHURAJ, J. G., **A Bibliography of Christian Writings in Tamil in the libraries of U K. and Europe,** Tamil Theological Book club, Madurai; 1986.

RAJAN PHILIPUPILLAI (Ed.), **Tamilaram,** Jaffna. 1983.

THANI NAYAGAM, Xavier, S., (Ed.), **Antao de Proenca's Tamil Portuguese Dictionary A. D. 1679,** University of Malaya, Kuala Lumpur 1966.

............... **A Reference Guide to Tamil Studies : Books,** University of Malaya Press, Kuala Lumpur. 1966.

............... **Educational Thought in ancient Tamil Literature,** (unpublished Ph.D. thesis,) University of London, 1957.

...............**Nature in Ancient Tamil Poetry,** Tamil Literature Society, Tuticorin, 1952.

..............., **Nature Poetry in Tamil – The classical period** Dewan Bhahasa Dan Kebudayaan Kebangnaan, Singapore; 1963.

..............., et al. (Ed.), **Proceedings of the First International Tamil Conference Seminar,** Kuala Lumpur, 1966.

..............., & Francois Gros (Ed.) **Proceedings of the Third International Conference Seminar**, Institute Francais D' Indologie, Pondicherry, 1973.

..............., **Research in Tamil Studies**, Thanthai Chelva Memorial Trust, Jaffna, 1980.

THANI NAYAGAM, X. S., (Ed.), **Tamil Culture and Civilization**, Asia Pubishing House, Bombay; 1970

..............., **Tamil Studies Abroad**, The International Association of Tamil Research, Kuala Lumpur, 1968.

..............., **The Carthagenian Clergy**, Tamil Literature Society, Tuticorin, 1950.

VITHIANANDAN, S. (Ed.), **Proceedings of the Fourth International Conference Seminar of Tamil Studies**, International Association of Tamil Research, Jaffna, 1980.


## ARTICLES


ARASARATNAM, S., 'Xavier S. Thani Nayagam: His Malaysian Years (1961-1970'), **Tamilaram**, Jaffna 1983, pp. 34-38

ASHER, R. E., 'IATR : The Outcome of his Original Inspiration and Sustained Interest', **Tamilaram**, Jaffna, 1983, pp. 45-46

BASTIAMPILLAI, Bertram, 'Father Thani Nayagam—My Impressions', **Tamilaram**, Jaffna, 1983, pp. 64-65

BOXER, C.R., 'A Citizen of the World', **Tamilaram**, Jaffna, 1983, pp. 25-26

CRONIN, Vincent, 'A Witness to Christ', **Tamilaram**, Jaffna, 1983, pp. 18-19

EDIWEERA, Sarachchandra, 'Reminiscences of Fr. Thani-Nayagam —The Peradeniya Years', **Tamilaram**, Jaffna, 1983, pp. 30-31

EMENEAU, M.B., 'A Man of the World', **Tamilaram**, Jaffna, 1983, p. 27

FILLIOZAT, Jean, 'Father Thani Nayagam and his Work : The Creation of the IATR', **Tamilaram**, Jaffna, 1983, pp. 39-40

INDRAPALA, K., 'Sage and Scholar, Venerable and Profound...', **Tamilaram**, Jaffna, 1983, pp. 69-70

JEYARATNAM Wilson, A., 'Priest, Scholar and Patriot' **Tamilaram**. Jaffna, 1983, pp. 32-33

KAILASAPATHY, K., 'A Sage Among Scholars', **Tamilaram**, Jaffna, 1983, pp. 50-53

KARTHIKESU Sivathamby, 'He Responded to the Call of Indian Historiography', **Tamilaram**, Jaffna, 1983, pp. 54-56

KULANDRAN, S., RT. REV., 'He Put Tamil on the World Map', **Tamilaram**, Jaffna, 1983, pp. 61-62

KNOWLTON, Edgar, C , Jr., 'Appreciation of a many-faceted Man', **Tamilaram** Jaffna, 1983, pp. 71-73

NESAIAH, K , 'Like a Seer of Old, Yet Different', **Tamilaram**, Jaffna, 1983, pp. 76-77

RAJAN Philipupillai, 'A Biographical Sketch', **Tamilaram**, Jaffna, 1983, pp. 1-11

RUTNAM, James, T., 'Soft-Spoken Apostle of Humanism', **Tamilaram**, Jaffna, 1983, pp. 78-79

SUBRAMONIAM, V.I., 'His Long-lasting Revolution in Tamil Studies', **Tamilaram**, Jaffna, 1983, pp. 43-44

THANI NAYAGAM, Xavier, S., 'A Bibliographical Guide to Tamil Studies', **Tamil Culture**, Vol. IX, No. 4, Madras, Oct-Dec. 1961, pp. 333-334

.............., 'Antao de Proenca's Tamil-Portuguese Dictionary, 1679', **Tamil Culture**, Vol. XI, No. 2, Madras, April-June 1964, pp. 117-127

.............., 'Indian Thought and Roman Stoicism', **Tamil Culture**, Vol. X, No. 3, Madras, July-Sept. 1963, pp. 1-36

.............., and Edgar C. Knowlton, Jr., 'Preface to the Tamil Portuguese Dictionary, 1679', **Tamil Culture**, Vol. XI, No. 2, Madras, April-June 1964, pp. 128-134

..............., 'Tamil Cultural Influences in South East Asia' **Tamil Culture,** Vol IV, No. 3, Madras, July 1955, pp. 203-220

..............., 'Tamil Culture—its past, its present, its future with special reference to Ceylon', **Tamil Culture,** Vol. IV, No. 4, Madras, October 1955, pp. 341-364

..............., 'Tamil Emigration to the Martinique' **Journal of Tamil Studies,** Vol. I, No. 2, Part I, Madras, October 1969, pp. 75-123

THANI NAYAGAM, Xavier,S., 'Tamil Manuscripts in European Libraries', **Tamil Culture,** Vol. III, No. 3-4, Madras, Oct, 1954, pp. 219-228

..............., Tamil Trade, **உலகத் தமிழ் மாநாடு விழாமலர்,** சென்னை, 1968, பக். 29-32

..............., 'The First Books Printed in Tamil', **Tamil Culture,** Vol. VII, No. 3, Madras, July 1958, pp, 288-308

..............., 'This Journal of the Academy', **Tamil Culture,** Vol. IV, No. 1, Madras, January 1955, pp. 1-11

..............., 'Tolkappiam—The Earliest Record', **Journal of Tamil Studies,** 1, Madras, September 1972, pp. 61-70

..............., 'Two Decades of Tamil Studies', **Journal of Tamil Studies,** Vol. I, No. 1, Part I, Madras, April 1969, pp. 1-20

UWISE, M.M., 'A Veteran Scholar', **Tamilaram,** Jaffna, 1983, pp. 82-83

VELUPILLAI, A., 'His Impact on Dravidian Studies" **Tamilaram,** Jaffna, 1983, p. 49

WILSON, A.J., 'The Dedicated Patriotism of Father Thani Nayagam', **Tamilaram,** Jaffna, 1983, pp. 84-85

ZVELEBIL, Kamil, V., 'The Spiritual Father of the IATR', **Tamilaram,** Jaffna, 1983, pp. 41-42

# சிறப்புச் சொல்லகராதி


அந்தனி ஜான் அழகரசன் 35
அப்துல் ஸமது, அ ஸ, 37
அம்பலவாணர், சி. 8
அமிர்தலிங்கம், அ. 37, 39
அரசரத்தினம், எஸ். 72
அரவிந்தர், 52
அரிஸ்தோத்தில், 158
அருணாசலம், சர்.பி. 181
அலெக்சாண்டர், பி.சி., 99
அழகப்பச் செட்டியார் ,107
ஆந்திரனோவ், எம்., 102
ஆய், 76
ஆய்கர் இயனோன்ஸ்கி, 34
ஆரோக்கியசாமி. மு., 98
ஆறுமுக நாவலர், 92
ஆறுமுகம், கே. 113
ஆஷர், ஆர்.இ. 49, 66, 72, 73
இங்வே ஃப்ரைக்கோம் 82
இந்திரவர்மன், 21
இரத்தினம், க.பொ. 57, 58 ,59, 60, 61,62
இராகவன், சி எம்., 98
இராசமாணிக்கனார், அ., 100
இராசேந்திரன், 17
இராமச்சந்திர தீட்சிதர்,பி.ஆர், 181
இராமசாமி ஐயர், சர்.சி.பி., 106
இராமநாதன், லெ.ப.கரு., 72
இராமன், ஏ.வி.. 107
இராமாயணம், 20,52
இராமானுசர். 53
இராஜாஜி. 106
இஸ்மாயில் ஹுசைன், 51
உவைஸ், எம்.எம்., 74
எஃப்லெக்ரான், 98
எட்கர் நோல்ட்டன், 49, 100
எபிக்யூராஸ் 160
எமனோ, எம்.பி. 52, 74, 81,94, 100
என்றீக்கோ என்றிக்கஸ், 18
ஐங்குறுநூறு 123
ஓடிசி 141
கணியன் பூங்குன்றனார் 26
கம்ப்ஸ்டன், 83
கமில் சுவலபில், 52, 66, 67
கயவர்மன், 21
கருமுத்து தியாகராசச் செட்டியார், 107
காங்குலி, 83
காத்ரே, 118
கார்த்திவ்யா 125
கார்ல் மெங்கெஸ் 49
கிளாரன்ஸ் க்னிக் 49
கிர சந்தேச 28
கைலாசபதி, க. 191
சங்கமித்ரா 29
சங்கரர் 53
சம்பந்தன், வி டி., 70
சவரிமுத்து 154
சர்நிக்கொலாஸ் 43
சாக்ரெட்டீசு 155
சாரங்கபாணி, கோ. 45
சாலமன் பண்டாரநாயகன் 30
சிங்காரவேலு, எஸ்., 22
சிதத் சங்கரவா 29
சிதம்பரனார், வ.உ., 124
சிலப்பதிகாரம் 20,52,123
சிவத்தம்பி 191-192
சின்னத்தம்பி 154
சிராக், ஏ.. 107
சீவகசிந்தாமணி 123
சீனிவாச ஐயங்கார் 181
சுந்தரவடிவேலு, நெ.து., 79
சுப்பிரமணியம், எஸ்,, 41
சுப்பிரமணியம், சி., 63
சுப்பிரமணியம், வி.அல்., 57, 66, 72,99,107
சுப்பையா, ஏ., 73
சுவாமி நல்லூர் பிரகாசம் 92
சுனித்திகுமார் சட்டர்ஜி, 91
சூரியவர்மன் 21
செல்வநாயகம், திரு,வி, 63
செனாக்கா 163
சேதுப்பிள்ளை, இரா.பி, 100
சேம்சு இரத்தினம் 87
தங்கராசா, கே.சி., 87
தம்பிரான் வணக்கம் 129
தம்பையா, எச். டபிள்யு 86
தமிழ்மறை விருந்து 202
தர்மகீர்த்தி 29
தர்மபாலர் 29

தாந்தே 144
தாமஸ் பர்ரோ 52, 66,67
தாஸ்ஸோ 144
திக்நாதர் 29
தியோகுப் பிள்ளை 202
திருக்குறள் 18,156
திருத்தொண்டர் திருமலர் 130
திருமூலர் 40
திருவருட்பா 48
திருவாசகம் 18,19,48
திரு. வி.க. 103
திருவெம்பாவை 19
துங்கு அப்துல் ரகுமான் 51, 65
துப்போன் 83
துரைச்சாமி 154
தெ.பொ.மீ 19,42,49,66,67,98, 107,119
தேசியஸ் 170
தொல்காப்பியர் 115
தொன்னூல் விளக்கம் 144
நடராசா எஃப் எக்ஸ், சி. 137
நமசிவாயர், கி. 87
நாலடியார் 18
நாவண்ணன் 37
நிக்கோமக்கீயன் ஒழுக்கவியல் 156
நீக்கிலஸ், யே., 36
நீலகண்ட சாத்திரி, கே.ஏ., 54
நெடுநகர் பண்டித ஞானி 36
நேசையா, கு., 39, 202
ப்ரோன்ஸ்வெல்ட் 28
பத்துப்பாட்டு 123
பதிற்றுப்பத்து 123
பரிபாடல் 123
பாக்ஸர், சி.ஆர்., 24
பாஷம், ஏ.எல்., 52
பி.பி.சி. 17
பிரான்சுவாக்ரோ 85
பிலிகிரி, பி.எஸ்., 118
பிள்ளை, கே.கே., 75,99,107
பிளாத்தோ 159
புட்பகம் 17
புத்ததத்த மகாதேரோ 29
புறநானூறு 123
புறப்பொருள் வெண்பாமாலை 123
புனிதம் திருச்செல்லம் 87
புனிதரின் பூச்செண்டு 131
பெரிடேல் கீத் 52
பெருங்கதை 123
போதிதர்மா 29
போப் ஐயர் 18, 98
மகாபாரதம் 52
மகாவம்சம் 27
மகேஸ்வரி பாலக்கிருட்டிணன் 87
மணவாள இராமானுசம், எஸ்.ஜி. 99
மணிமேகலை 123
மதுரநாயகம் அடிகள் 202
மயிலேறு, சி.ஆர். 99,101
மலரும் மாலையும் 41
மாக்ஸ்ம்யுல்லர் 52
மாணிக்கவாசகம், வி. 63
மார்க்குஸ் அவுரேலியஸ் 24, 163
மால்கம் ஆதிசேஷையா 80
ராஜன் பிலிப்புப்பிள்ளை 36
ராஜா சர்முத்தையா செட்டியார் 119
ரைஸ் டேவிட்ஸ் 52
வசுதியாம் பிள்ளை, பி.ச., 36,83
வரதராசன். மு. 49,66,100
வள்ளுவர் 156, 159
விட்டுணு புராணம் 21
வித்தியானந்தன். சு. 65,86,87
விபுலானந்த அடிகள் 92
வில்சன், ஏ.ஜே. 38,199
வீரசோழியம் 29
வீரமாமுனிவர் 18
வெர்ஜில் 105
வேதநாயகம் பிள்ளை 133
வையாபுரிப்பிள்ளை, எஸ். 98
ழான் ஃபீலியோசா 23, 62, 66, 67, 73,80,94
ழீல் ப்ளோக் 80
ழீலியன் வென்சோன் 52, 80
ஜான் ரஸ்கின் 52
ஜெய்ன், ஆர்.கே., 83
ஜோக்கிம்பிள்ளை 192
ஹாப்கின்ஸ் 52
ஹீராஸ் 181
ஹெர்மன் ஓல்டென்பெர்க் 52
ஹோமர் 141

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

## நிறுவன அறக்கட்டளைச் சொற்பொழிவு வெளியீடுகள்

| | |
|---|---|
| இஸ்லாம் வளர்த்த தமிழ் | 15 00 |
| தமிழரின் தாயகம் | 10 00 |
| உ.வே.சா. சங்க இலக்கியப் பதிப்புகள் | 10 00 |
| இனிக்கும் இராசநாயகம் | 50 00 |
| பாவாணரும் தனித்தமிழும் | 12 00 |
| தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வுகள் | 10 00 |
| உ.வே.சா. காப்பியப் பதிப்புகள் | 10 00 |
| விவிலியம் திருக்குறள் சைவசித்தாந்தம் | 20 00 |
| அகலமும் ஆழமும் | 12 00 |
| செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார் | 15 00 |
| உ.வே.சா. இலக்கணப் பதிப்புகள் | 12 00 |
| மகாமதிப்பாவலர் | 11 00 |
| உலக முதன் மொழி தமிழ் | 12 00 |
| மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை | 15 00 |
| தமிழ் தந்த வ.உ.சி. | 15 00 |
| உ.வே.சா. ஒரு தமிழ் வாழ்வு | 15 00 |
| வண்ணக் களஞ்சியப் புலவரின் குத்பு நாயகம் | 15 00 |
| மு.வ. புதினங்களில் தமிழ் — தமிழினம் | 20 00 |
| பாவாணர் ஆய்வு நெறி | 22 00 |
| கிறித்தவமும் தமிழகமும் | 15 00 |
| நாமக்கல் கவிஞர் கவிதைகள்-தேசியம், காந்தியம் | 16 00 |
| தமிழில் அறிவியல்—அன்றும் இன்றும் | 25 00 |
| இதழாளர் ஆதித்தனார் | 26 00 |
| காந்தியப் பெருந்தலைவர் காமராசர் | 20 00 |
| மலையாளக் கவிதை | 15 00 |
| நாட்டுப்புறப் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள் | 18 00 |
| நாட்டுப்புறவியலில் உளவியல் பார்வை | 14 00 |
| தொல்காப்பியப் பதிப்புகள் | 27 00 |
| தமிழும் பிராகிருதமும் | 12 00 |
| இலக்கியச் சிந்தனையாளர் டி. என். சேஷாசலம் | 12 00 |
| அறிவியல் தமிழ் - இன்றைய நிலை | 12 00 |
| எட்டாந் திருமுறை | 22 00 |
| தொல்காப்பியச் சிந்தனைகள் | 18 00 |
| தமிழும் குறியியலும் | 17 00 |
| படைப்போர் இலக்கியம் | 22 00 |
| அழகியல் | 10 00 |
| கம்பன் எழுத்தச்சன் இராமாயணங்கள் | 25 00 |
| எண்பதுகளில் தமிழ்ப் புனைகதைகளில் பெண்ணியம் | 18 00 |